A SHORT HISTORY

OF

MODERN TIMES

—CEYLON & WORLD—

From 1796 to the Present Day

BY

S. PETER

ILLAVALAI CONVENT TRAINI[illegible]

PUBLISHERS

S. S. SANMUGANATHAN & SONS

JAFFNA.

1939

தற்கால சரித்திரச் சுருக்கம்

— இலங்கையும் உலகமும் —

1796 தொடக்கம் இன்று வரையும்

உயர்தர வகுப்புகட்கும் ஆசிரியமாணவர் வகுப்பு கட்கும் உபயோகமாகும் பொருட்டு எழுதப்பெற்றது.

3.75
PET

ஆக்கியோன்:
எஸ். பீற்றர்,
இளவாலைக் கன்னியர்மடப் போதனுகழகம்.

GNANAPRAGASAR LIBRARY ★ N.C. NALLUR SWAMI

018299

பிரசுரிப்பவர்கள்:
எஸ். எஸ். சண்முகநாதன் அன் சன்ஸ்
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

1939.

All Rights Reserved. விலை ரூபாய் 1. 25.

PRINTED AT
SRI SANMUGANATHA PRESS.
JAFFNA.

S. Peter

முகவுரை.

தற்கால சரித்திரத்தைப் படித்தற்கேற்ற தமிழ்நூ லொன்றை எழுதியுதவும்படி இந்நூலை அச்சிடுவோர் கேட்டுக்கொண்டமையால் இதனை எழுதியுள்ளேம். இதனகத்துப் பிழைகளுண்டேல் அவற்றைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று அறிஞரைத் தாழ்மையுடன் கேட்கின்றேம்.

S. Peter.

மாதகல்,
11-4-39.

பொருளடக்கம்.

	பக்கம்
1-ம் அதிகாரம். புரட்சிக்காலம் ...	1
அமெரிக்க புரட்சி ...	1
பிரான்சிய புரட்சி ...	4
நெப்போலியன் பொனெப்பாட்	10
கைத்தொழிற் புரட்சி ...	17
2-ம் அதிகாரம். இந்தியாவும் ஆங்கிலரும் ...	23
உவாரன் ஹேஸ்டிங்ஸ் ...	25
லோட் கோண்வாலிஸ் ...	31
லோட் உவெல்லெஸ்லி ...	33
லோட் மின்ரோ ...	38
3-ம் அதிகாரம். இலங்கை: ஆங்கிலர் வருகை	39
ஆங்கிலரின் முதல் வருகை ...	43
ஆங்கிலர் வருகை ...	45
கொழும்பு முற்றுகை ...	51
கரைநாடுகளில் ஆங்கிலேயரின் ஆரம்பகாலஆட்சி	54
முடி ஆட்சி ...	58
4-ம் அதிகாரம். இலங்கை: கண்டி ஆங்கிலருக் காதல் ...	63
கண்டி இராச்சியம் ...	64
பிலாமைத்தலாவையின் சூதுகள் ...	66
மக்டவலின் தூது ...	71
கண்டி யுத்தம் ...	74
கண்டிச் சங்காரம் ...	78
சேர் றெபேட் பிறவுண்றிக் ...	83
இரண்டாம் கண்டி யுத்தம் ...	88
ஆங்கிலர் கண்டிநகரை வெற்றி கொள்ளல்	89

பக்கம்

5-ம் அதிகாரம். **19**-ம் நூற்றண்டு: ஐரோப்பா 96
1830-ம் ஆண்டுப் புரட்சிகள் ... 98
1848-ம் ஆண்டுப் புரட்சி ... 100
மூன்ரும் நெப்போலியன் ... 101
இத்தாலிய நாடுகளின் ஐக்கியம் ... 102
மஸ்ஸினி ... 104
கரிபால்டி ... 107
கவூர் ... 108
கிறீஸின் சுவாதீனம் ... 115
புதிய ஜேர்மனி ... 117
அவுஸ்திரிய புறாஷிய யுத்தம் ... 120
பிரான்சிய ஜேர்மனிய யுத்தம் ... 122
றாஷியாவும், துருக்கியும், போல்க்கன் நாடுகளும் 125

6-ம் அதிகாரம். இந்தியாவும் ஆங்கிலரும் ... 131
லோட் ஹேஸ்ரிங்ஸ் ... 131
லோட் அம்ஹேஸ்ற் ... 135
லோட் உவில்லியம் பென்ரிங்க் ... 136
லோட் ஒக்லண்ட் ... 137
லோட் எலன்பறே ... 138
லோட் ஹாடிங் ... 140
லோட் டல்ஹவுசி ... 141
லோட் கன்னிங் ... 144

7-ம் அதிகாரம் இலங்கை: ஆங்கிலர்காலம் 147
புதிய பாதைகள் ... 147
கிருஷிகமும் வியாபாரமும் ... 150
அரசியல்முறைத் திருத்தங்கள் ... 151
சண்டிச்சருபங்கள் ... 154

பக்கம்

8-ம் அதிகாரம். ஐரோப்பாவும் உலகப்போரும் 158
ஜேர்மனி: 1870க்குப் பிந்தியகால நிலைமை 158
பிரான்ஸ்: 1870க்குப் பிந்தியகால நிலைமை 162
ஐரோப்பிய மகா யுத்தம் ... 169
வேர்சேல்ஸ் உடன்படிக்கை ... 173
சர்வதேச சங்கம் ... 174

9-ம் அதிகாரம். றூஷியாவும் அமேரிக்காவும் 177
றாஷியா ... 177
அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் ... 185
தென் அமெரிக்கா ... 189
பிறேசில் ... 191

10-ம் அதிகாரம். தூர கீழைத்தேசங்களும்
ஆபிரிக்காவும் ... 192
யப்பான் ... 192
சீனு ... 195
சீன யப்பானிய யுத்தம் ... 196
பொக்சர் கலகம் ... 198
ஆபிரிக்கா ... 201
தென்னுபிரிக்கா ... 203
எகிப்து ... 205
அபிசீனியா ... 206

11-ம் அதிகாரம். இலங்கை: ஆங்கிலர் காலம்
1850க்குப் பிந்திய காலம் ... 209
கல்வி ... 209
கிருஷிகம் ... 213
போக்குவரவு வசதிகள் ... 215
அர[illegible]ல் ... 220

		பக்கம்
12-ம் அதிகாரம். பிரித்தானிய சக்கராதிபத்தியம்		
அவுஸ்திரேலியா	...	229
நியூசிலாந்து	...	231
கனடா	...	232
அயர்லாந்தின் இஷ்ட நாடு	...	233
இந்தியா	...	236
ஏனைய குடியேற்ற நாடுகள்	...	239
13-ம் அதிகாரம். ஐரோப்பா: மகா யுத்தத்துக்குப் பிந்திய காலம்	...	241
ருஷியா	...	242
இத்தாலி	...	244
ஜேர்மனி	...	246
பயிற்சி வினுக்கள்	...	249
கால அட்டவணை	...	—

ஸ்ரீ சண்முகநாத யந்திரசாலை, யாழ்ப்பாணம்.

1-ம் அதிகாரம்.

புரட்சிக்காலம்

உலகின் பிரதான சரித்திர சம்பவங்கள் யாவும் நடுதி நிகழ்ச்சிகளாகத் தோன்றியவையே. பதினெட்டாம் நூற்றாண்டிற் சிற்சில யுத்தங்கள் நடைபெற்றனவேயாயினும், அமைதியான வளர்ச்சியும் முன்னேற்றமும் பல தேசங்களிற் காணப்பட்டன. இந்நூற்றாண்டின் கடைக்காலங்களில் காத்திராப் புரட்சிகள் தலைகாட்டி நின்றன. இவற்றுள் மற்றெல்லாவற்றிற்கும் காரணமாயிருந்ததும், முதன் முதற் தோன்றியதும் அமெரிக்க புரட்சி யெனலாம்.

1. அமெரிக்க புரட்சி

(The American Revolution.)

வட அமெரிக்காவில் அத்திலாந்திக் சமுத்திரக் கரையோரமாக, நோவாஸ்கோஷியா (Nova Scotia) முதல் புளோறிடா (Florida) வரையில் பதின்மூன்று ஆங்கில குடியேற்ற மாகாணங்களிருந்தன. மதவிரோதத்தினாலும் அரசியல் வேற்றுமையினாலும் ஆங்கில மன்னர்களால் துன்பம் இழைக்கப்பட்டவர்கள் ஆங்கு குடியேறினர். அவர்கள் தாய் நாட்டின்மீது அபிமானம் அற்றவர்கள். அயலில் இடம் பிடித்திருந்த பிரான்சியரைத் துரத்துதற்கு

மாத்திரம் ஆங்கிலரின் துணையைத் தேடி நின்றனர். 1763 ல் குடியேற்ற காரணமாகக் கனடாவில் நிகழ்ந்த பெரும்போரில் பிரான்சியரைச் செயித்ததோடு அன்னாரைப்பற்றிய பயமும் பறந்தொழிந்தது. அதன்பின் குடியேற்ற நாட்டினர் இங்கிலாந்தினின்றும் பிரிந்து தனியரசாவதற்குத் தம்முட் தீர்மானங் கொண்டனர்.

சப்தாண்டு யுத்தத்தில் இங்கிலாந்துக்கு அதிக செலவு ஏற்பட்டதால் ஆங்கில அரசாங்கத்திற்கு அமெரிக்கர் வரியிறுக்க வேண்டுமென்றும், ஆங்கிலேயரேயன்றி வேறெந் நாட்டினருடனும் வியாபாரஞ் செய்தல் கூடாதென்றும், ஆங்கில பாராளுமன்றத்தாற் சட்டம் விதிக்கப்பட்டது. இங்கிலாந்திலுள்ள குடிகளைப் போலவே அமெரிக்க குடியேற்ற நாட்டினரையும் அரசன் பாதுகாக்க வேண்டுமானால் அவர்களும் கட்டாயமாகவே வரிசெலுத்த வேண்டுமெனப் பிடிவாதமுள்ள 3-ம் ஜோர்ஜ் (George iii) மன்னன் கூறினன். அமெரிக்கர் இதனாற் கோபங்கொண்டு ஆங்கில பாராளுமன்றத்திற்குப் பிரதிநிதிகளை அனுப்பும் உரிமை தங்கட்கில்லாமையின் எவ்வித வரிகளையுந் தாங்கள் செலுத்த வேண்டியோர் அல்லரென்று வாதாடினர். அன்றியும் ஓர்முறை பொஸ்தன் (Boston) துறைமுகத்திற்கு மூன்று கப்பல்களிற் கொண்டுவரப்பட்ட தேயிலைப் பெட்டிகளை அமெரிக்கர் செவ்விந்தியர் போல மாறுவேடம் பூண்டு, நள்ளிரவிற் பறித்துக்

கடலில் வீசிவிட்டனர். இச்சம்பவமே இருபகுதியினரும் போர்தொடுத்தற்குக் காரணமாயிற்று.

முன் நிகழ்த்திய போர்களிற் கீர்த்தியடைந்தவனும் யுத்த திறமை வாய்ந்தவனுமாகிய "ஜோர்ஜ் உவாஷிங்ரன்" (George Washington) அமெரிக்க படைத்தலைவனாகத் தெரியப்பட்டான். லெக்சிங்ரன் (Lexington', பங்கேர்ஸ்கில் (Bunker's hill), என்ற இடங்களில் 1775இலும்,1776இலும், நடந்த யுத்தங்களில் ஆங்கிலர் ஓரளவிற்கு வெற்றியடைந்தனர். பின்னர் 1776-ல் பதின்மூன்று மாகாணவாசிகளும் தாம் அமெரிக்கரென்றும், ஐக்கிய நாட்டினரென்றும், ஆங்கில அரசின்கீழ்ப் பிரசைகளல்லவென்றும், ஓர் சுயாதீன சாதியாரென்றும் கூறிய சுதந்தர அறிக்கை ஒன்றினைப் பிரசித்தப்படுத்தினர். இதனால் ஆங்கிலர் கோபம் மென்மேலும் வளர்வதாயிற்று. உவாஷிங்ரன் நடத்திய யுத்தத்தில் சறற்றோகா (Saratoga) என்னுமிடத்தில் 1777ல் ஆங்கிலர் தோல்வியடைந்தனர். இறுதியில் கடும்போர் நடைபெறும்போது பிரான்சியர் அமெரிக்கருக்குத் துணைச்செய்தனர். அதன்பின் கோண்வாலிஸ் (Cornwallis) என்னும் ஆங்கில தளபதி 1781ல் யோர்க்ரவுனில் (Yorktown) அமெரிக்கரிடம் சரண்புகுந்தமை புதிதாய்த் தோன்றிய ஐக்கிய நாட்டுக்கு வெற்றியளித்தது. உவாஷிங்ரன் (Washington) ஐக்கிய நாட்டின் முதற் குடியரசுத் தலைவனாகத் தெரியப்பட்டான்.

2. பிரான்சிய புரட்சி.

(The French Revolution)

14-ம் லூயிஸ் (Louis xiv), தன் ஆட்சிக்காலத்தில் ஐரோப்பாவில் பிரான்சை அதி வல்லபம் படைத்த இராச்சியமாக்கும் நோக்கத்திற்காக மிகவு முழைத்தான். அவனுக்குப் பின் அரசுக்கு வந்தவர்கள் திறமையிற் குறைந்தோராயினும் அதே இலக்குடன் ஆட்சி செய்தனர். இதனாற்றான் பிரான்ஸ் பதினெட்டாம் நூற்றாண்டில் பல யுத்தங்களி லீடு படவும் குடியேற்ற நாடுகள் பிடித்தற்குச் சண்டைசெய்யவும் நேர்ந்தது. முடிவில்லா யுத்தங்களால் பிரான்ஸ் வறுமையின்வாய்ப்பட்டது. சனங்கள் இறுக்க முடியா வரிகளாற் துன்புறுத்தப்பட்டனர். வரிகளிற் பெரும்பாகத்தை வேளாண்மை செய்யும் வறியவர்களே செலுத்த வேண்டியதாயிருந்தது. பிரபுக்களும் குருமாரும் வரியிறுக்காதிருந்தனர். அரசரைப் போலப் பிரபுக்களும் தங்கள் இடாம்பீக சீவியத்திற்குத்தேவையான பணத்தை அநியாய முறையில் தமக்குக் கீழ்ப்பட்டவர்களிடமிருந்து அறவிட்டனர்.

இக்காலத்தில் வோல்தேர் (Voltaire) என்னும் பிரான்சிய தத்துவ சாஸ்திரி, தான் எழுதிய நூல் ஒன்றில், இங்கிலாந்தின் நிலைமையோடு பிரான்ஸின் நிலைமையை ஒப்பிட்டு நோக்கிப் பிந்திய நாட்

டின் தாழ்நிலையை எடுத்துக் காட்டினன். பாரம்பரியமாய் வந்த பழக்கத்தினாலும் அச்சத்தினாலும், சனங்கள் அரசருக்குச் செலுத்தும் வணக்கம் பிழையென்றும் மானிடன் ஒவ்வொருவனும் சுதந்தரமுள்ளவனென்றும் தன் நாட்டினர்க் குணர்த்தினன். றூசோ (Rousseau) என்னும் மற்றோர் பிரான்சிய தத்துவ சாஸ்திரி "சமுதாய ஒப்பந்தம்" என்னும் சிறந்த நூலில் (1762) வொல்தேர் உணர்த்திய புதிய சுதந்தரக் கொள்கையை ஆதரித்தும், விரித்துரைத்தும் பொதுச் சனங்கட்கிடையே கிளர்ச்சி யுண்டாக்கினன்.

மேற்கூறிய காரணங்களினாலன்றி அமெரிக்க குடியேற்ற நாடுகள் சமராடிச் சுயராச்சியம் பெற்ற முன்மாதிரியைப் படித்ததாலும், ஆங்கில பிரசைகள் குறொம்வெல் (Cromwell) லின் தலைமையின்கீழ்ப் போரிட்டுக் கொடுங்கோலன் சாள்ஸ் மன்னவனை முடியிழக்கச் செய்ததை நினைவுக்கெடுத்ததாலும், தம்தேசஆட்சிவிஷயத்தில் பொதுச் சனங்களுக்குப் போதிய பொறுப்பளிக்க வேண்டுமென்று பிரான்சியர் கேட்டு நின்றனர்.

1789ல் 16-ம் லூயிஸ் (Louis xvi) பிரான்சின் அரசனாகவிருந்தான். அவன் மனத்திண்மையற்றவன். முந்திய அரசனின் ஆட்சி முறைகளைக் கையாளுதற்கு, அன்றேல் ஒதுக்கி வைப்பதற்கு வேண்டிய புத்தி சாதுரியம் அவனிடம் இருக்க

வில்லை சனங்கள் வறுமையினால் வரியிறுக்காது
விட்டனர். அரசாங்கத்தின் செலவுகட்குப் பணம்
போதாதிருந்தது. அதனால் அரசன் பிரான்சிய
மகா சபையை (பாராளுமன்றத்தை)க் கூடுமாறு
உத்தரவிட்டான். பிரான்சிய மகாசபை பிரபுக்
கள், குருமார், பொதுச் சனங்களாகிய முப்பிரிவின
ரின் பிரதிநிதிகளின் சபைகளை யடக்கியது. 1614க்
குப்பின் எந்த அரசரும் இச்சபையைக் கூட்ட
வில்லை. 1789 ம் வருடம் வைகாசி மாதத்தில்
வேர்செல்ஸிலே (Versailles) மகா சபை கூடியது.
அரசனின் வேண்டுகோள் ஆலோசனைக்கு ஏற்
கப்படவில்லை. பொதுச் சன சபையார் சமதத்து
வக் கொள்கைகளினாற் தூண்டப்பட்டு ஆட்சி முறை
யிற் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென வாதா
டினர். பிரபுக்கள், குருமார் என்பாரின் சபைக
ளும் இதற்குச் சம்மதங் கொடுத்தன. மூன்று
சபைகளுக்குப் பதிலாக ஓர் பொதுத் தேசியசபை
ஏற்படுத்தப்பட்டது.

இச் சமயத்திலே பசியினாலும், பணமின்மை
யாலும் பரிதபித்திருந்த பரீஸ் நகரத்தினோர் ஒழுங்
கற்ற சனக்கூட்டம் அப்பப் போறணைகளையும்,
குடிவகைச் சாய்ப்புக்களையும் கொள்ளையடித்தது.
பிரான்சிய அரசின் கொடுங்கோன்மைக்குப்பெரும்
ஞாபக சின்னமாயிருந்த பஸ்ரீல் (Bastille) மறி
யற்சாலையையும் ஆடிமாதத்தில் இடித்தழித்தார்
கள். கொள்ளைக்காரரைப் பற்றிய செய்தி எங்

கும் பரவியது. பிரபுக்கள் பிறநாடுகட்கு ஒழித்
தோடினர். அவர்களுடைய மாளிகைகள் தாக்கப்
பட்டன. பிரான்ஸ் முழுவதிலும் பெருந் திகிலுண்
டாயிற்று. ஆவணிமாசம் மகாசபை கூடியது. தேச
நிலைமையைத் திருத்துதற்கான ஒழுங்குகள் செய்
யப்பட்டன. இதுவரை பாப்பரசருக்குக் கொடுக்
கப்பட்டுவந்த கட்டணப் பணமும், மானிய முறை
யும், பத்திலொருபங்கு வரியும் முற்றாக நீக்கிவிடப்
பட்டன. “மானிடரின் உரிமைகள்” வரையப்பெற்ற
பிரசித்த பத்திரிகை இச்சபையினரால் வெளியிடப்
பட்டது.

இதன்பின் ஐப்பசி மாதத்தில் உணவின்றி
வருந்தியோருள் 2000 பெண்கள் ஒன்றுகூடி ஆயு
தபாணிகளாய் வேர்செல்ஸ் (Versailles) மாளிகைக்
குச் சென்று 16-ம் லூயிஸ் அரசனையும், அவன்
மனைவியையும் கைதிகளாக்கிப் பட்டணத் தெருக்க
ளூடே நடத்திப் பரீஸ்(Paris) நகருக்குக் கொண்டு
சென்றனர்.

பிரான்சிய புரட்சியைப் பற்றிக் கேள்வி
யுற்றஅமெரிக்கரும், ஆங்கிலரும் தாமும் ஓர்காலம்
வல்லரசரின் கொடுமைகளை அநுபவித்தவர்களாத
லின் பிரான்சர்மேல் அநுதாபங் காட்டினர்.
அவுஸ்திரிய புறூஷிய அரசரோவென்றால் தங்கள்
பிரசைகளைப்பற்றிய ஏக்கங் கொண்டனர். 1790ல்
பெல்ஜியர் (Belgians) அவுஸ்திரிய அதிகாரத்திற்கு
மாறாகப் புரட்சி செய்ததும் அவர்கள் செவிக்கே

றியது. பிரான்சில் நின்று அவுஸ்திரியாவிற்கு ஒழித்தோடிய பிரபுக்களாலுந் தூண்டப்பட்டனர். உடனே பிரான்சின்மீது படையெடுத்தனர். தேச பக்தி நிறைந்த பிரான்சிய படைவீரர் வீராவேசத்தோடு ஐரோப்பிய இடாம்பீக மன்னரின்சேனைகளை வால்மி (Valmy) என்னுமிடத்திற் தோற்கடித்தனர். (1792)

இவ்வெற்றி காரணமாகப் பிரான்சில் "தேசீய சபை" அதிகார மிழந்தது. கட்டுக்கடங்கா முரட்டுச் சனங்களின் எண்ணமே சட்டமானது. றொபெஸ்பியேர் (Robespierre) என்னுங் கடும்நெஞ்சன் அவர்களின் தலைவனானான். இதற்குப்பின் நடைபெற்ற பயங்கர ஆட்சி (Reign of Terror) 1793—94 கொடுந் தண்டனைகளையும் சிரச்சேதங்களையுமே துணையாகக் கொண்டது. நாளாந்தம் நூற்றுக் கணக்கானோர் தூக்குமரத்திற் கிரையானார்கள். அரசனும் அவன் குடும்பத்தைச் சேர்ந்தோரும் கொலை செய்யப்பட்டனர். (1893) அரசன் சார்பாகவேனும் பயங்கர ஆட்சி புரிவோருக்கு விரோதமாகவேனும் பேசியவர்கள் தடையின்றிக் கொலைக்களத்திற்குக் கொண்டுபோகப்பட்டனர். இந்நிலையில் இன்னோர்முறை ஐரோப்பிய அரசரின் படைகள் முரியடிக்கப்பட்டன (1794). தம் தேசத்தில் இரத்தத்தின்மேல் இரத்தம் சிந்தப்பட்டு வருவதைப் புரட்சிவிட்டுக் கண்விழித்துக் துயருற்ற பிரான்சிய மக்கள் கவனித்தனர். அத்தால் பயங்

கர ஆட்சிக்குக் காரணமாயினோரைக் கொலை செய்து ஓர்வித குடியரசை ஸ்தாபித்தனர். ஆயினும் 1799 ல் நெப்போலியன் பொனப்பாட் (Napoleon Buonaparte) தனியரசனாகும் வரையும் பிரான்சில் அமைதி தோன்றவில்லையெனலாம்.

பிரான்சிய புரட்சிப் பலாபலன்கள்.

பிரான்சிய புரட்சி ஐரோப்பிய சரித்திர சம்பவங்களுள் விசேஷித்த ஒன்று. ஒரு தேசத்தின் சனங்கள் எப்பெருங் கருமத்தையும் செய்து முடிக்கக்கூடிய வன்மை உடையர் என்பதை இப்புரட்சி காட்டுகின்றது. அக்கால மக்களிலும் பார்க்க இக்காலத்தவர்கள் இதன் விசேஷங்களை அதிகமதிகம் விளங்கக்கூடியவர்களாயிருக்கிறார்கள். அவை பின்வருமாறு:—

1. ஐரோப்பாவின் ஏனைய தேசங்களிலும் இடாம்பீக மன்னர் ஆட்சிபுரிந்தாராயினும் பிரான்சில் மாத்திரமே புரட்சி ஏற்பட்டது. ஏனெனில் மற்றுந் தேசங்களில் ஒழுங்கற்ற சனக்கூட்டங்களின் மிருக வெறியை உபயோகமுள்ள வழிகளிற் செலுத்துவதற்குக் கல்வி அறிவுள்ள மத்திய வகுப்பினராகிய வியாபாரிகள், வைத்தியர்கள், நியாயதுரந்தரர்கள் இருக்கவில்லை.

2. புரட்சியின் பயனாகப் பிரான்ஸ் முழுமாற்ற மடைந்தது. மாதங்கள், கிழமைகளின்

பெயர்கள்தானும் புதுப்பிக்கப்பட்டன. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் குறித்த ஒவ்வோர் இலக்கிற்காகப் புரட்சிகள் செய்யப்பட்டன. அவ்விலக்குகள் அனுகூலமானதுடன் மறுபடியும் பழைய நிலைமை அத்தேசங்களில் தோன்றியது.

3. நெப்போலியன் பொனேப்பாட்.

(Napoleon Buonaparte)

உலகிற் பெருங் கீர்த்திபெற்ற யுத்தவீரனும், பிரான்சின் மிகச் சிறந்த மன்னனுமாகிய நெப்போலியன் பொனெப்பாட் இத்தாலியின் கரையோரமாயுள்ள கொர்சிக்கா (Corsica) தீவில் 1769ம் ஆண்டிற் பிறந்தான். ஜெனோவா (Genova) நகரத்திற்குச் சொந்தமாயிருந்த கோர்சிக்கா தீவு அவன் பிறத்தற்கு ஒருவருஷத்திற்குமுன் பிரான்சியரால் ஏலத்திற்கொள்ளப்பட்டதாதலால் நெப்போலியன் பிரான்சிய பிரசையானான். அவன் பரீஸ் நகரத்திற் கண்மையிலுள்ள யுத்தப் பயிற்சிக் கழகத்திற் கலைபயின்று, பீரங்கிப் படையில் ஓர் உத்தியோகத்தி லமர்ந்தான். 1795ல் பிரான்சிய பிரசாதிபத்திய அதிகார சபையைக் குலைப்பதற்காகக் கலகம் விளைத்தவர்களைக் குண்டுப்பிரயோகத்தினா லடக்கினான். அப்போது அதிகார சபையினர் ஐரோப்பா முழுவதும் புரட்சியின் விதைகளை விதைக்க எண்ணித் துணிந்தனர். இந்நோக்கம்பற்றி நெப்போலியனின் தலைமையின் கீழ் இத்தாலிக்கோர் சேனை அனுப்பப்பட்டது.

போர்ச் சூழ்ச்சிகளில் வல்லனும் நெப்பொலியன் இத்தாலியின் வடபாகத்தை இலகுவில் வென்று ஆங்கோர் பிரசாதிபத்தியத்தைத் தொடக்கினான். அவுஸ்திரியாவினோர் பாகத்தையும் அடிப்படுத்தி அரசனோடு சமாதானஞ் செய்தான்.

ஒல்லாந்தும் பிச்செகுறு (Pichegru) என்னும் மற்றோர் பிரான்சிய சேனாபதியாற் பிடிக்கப்பட்டது. இத்துடன் புரட்சியை எதிர்த்துநின்ற தேசங்களுள் இங்கிலாந்து தவிர மற்றைய தேசங்களைப் பற்றிய பயம் பிரான்சிற்கு முற்றிலும் நீங்கிவிட்டது. ஆகையாற் பிரான்ஸ் இங்கிலாந்துடன் போர் தொடுப்பதற்கு ஒல்லாந்தருடையவும், ஸ்பானியருடையவும் துணையைப்பெற எத்தனித்தது. இதையறிந்த ஆங்கிலர் ஸ்பானியரைப் போர்த்துக்கால் தேசத்திற்குச்சமீபமாகச் சென் வின்சென்ற் முனையிலும், (Cape St. Vincent), ஒல்லாந்தரைக் கம்பர்டவுண் (Camperdown) என்ற இடத்திலும் 1797ல் கடல் யுத்தங்களிற் தோற்கடித்தனர்.

நெப்போலியன் இத்தாலியில் அடைந்த வெற்றியோடு அற்பமேனுந் திருப்தியடையவில்லை. மகா அலெக்சாந்தரைப்போன்று கீழைத்தேச சக்கராதிபத்தியமொன்று தன்னால் ஸ்தாபகமாகவேண்டுமென்றும், தானே உலக முழுவதிற்கும் அரசனாகவேண்டுமென்றுந் தீர்மானித்தான். இவற்றிற்குத் தடையாயிருந்த இங்கிலாந்தை உண்மையாகவே அழிக்கவேண்டுமானால் எகிப்தின் அதிகாரத்

தைக் கைப்பற்றல் அவசியமென்றெண்ணி, அவ்விடத்திற்குத் தரை, கடற்படைகளைக் கொண்டு சென்றான். அங்கே நைல் (Nile) நதிக்கணித்தாய் அபுக்கீர் குடாவில் (Abukir bay) ஆங்கில கடற்படைவீரன் நெல்சனாற் (Nelson) தோற்கடிக்கப்பட்டான். நெப்போலியன் தரைமார்க்கமாகச் சுயதேசஞ் செல்லவேண்டியிருந்தது. வழியில் பலஸ்தீனாவில் (Palestine) துலுக்கர் ஆங்கில சேனையின் துணையைப் பெற்று அவனை எதிர்த்துச் சண்டை செய்தனர். அவனுடைய சேனை ஆங்கிலர் கைப்பட்டது. அவன் தனியே பிரான்சிற்குத் தப்பியோடினான்.

இஃதிவ்வாறாகப் பிரான்சில் புதிய பிரசாதிபத்திய அதிகார சபையினரின் ஆட்சி அனுகூலப்படவில்லை. இச்சபை 1799 ல் குலைக்கப்பட்டது. அதனிடமாக மூன்று கான்சல்கள் (Consuls) நியமனம் பெற்றனர். அவர்களுள் முதல்வன் நெப்போலியன். பிரதம கான்சல் பதவிக்குயர்த்தப்பட்டவுடன், அவன் கலகக்காரரை யடக்கிச் சமாதானத்தை வருவித்து, தேச சட்டங்களைத் திருத்திப் புதிய உத்தியோகஸ்தரை நியோகித்தும், தேச வங்கியை ஸ்தாபித்துத் தொழில், வியாபாரம் முதலியவற்றை ஊக்கப்படுத்தியும், பத்து வருஷப் புரட்சிப் புயலை அமைதியாக்கிப் பிரான்ஸ் முழுவதிற்கும் புத்துயிர் கொடுத்தான். பிரான்சில் இச்சீர்திருத்தங்கள் செய்யப்படுங் காலத்தில், ஆங்கிலர் எகிப்தி லடைந்த வெற்றியால் உற்சாகங்

கொண்ட ஏனைய ஐரோப்பிய தேசங்கள், இங்கிலாந்தோடு சேர்ந்து, அவனது பேராவலை நசுக்க வுடன்பட்டன. நெப்போலியன் வெகு சீக்கிரத்தில் அவுஸ்திரியரை மறுபடியும் இத்தாலியினின்று துரத்தித் தேசங்களின் ஐக்கியத்தையு மழித்து விட்டான். ஆங்கிலரின் கடலதிகாரத்தை மாத்திரம் அவனால் முறிக்க முடியவில்லை. அவர்கள் இன்னோர்முறை நெல்சனைத் தலைவனாகக்கொண்டு அவனைக் கொப்பனேஜன் (Cophenagen) என்ற இடத்தில், கடல் யுத்தத்தில், அபஜெயப்படுத்தினர். ஈற்றில் 1802 ல் ஆங்கிலர் பிரான்சியருக்கிடையில் ஓர்வித சமாதானஞ் செய்துகொள்ளப்பட்டது.

இதன்பின் நெப்போலியன் பெருஞ்சேனை திரட்டுவதாகக் கேள்வியுற்ற ஆங்கிலர் தங்கள் கால்வாயைக் காவல் செய்தனர். அவனோ ஸ்பானிய பிரான்சிய கப்பல்களிற் சேனைகள் கொண்டு, கால்வாய் கடந்து, இங்கிலாந்து செல்லற்கான முயற்சிகள் செய்தான். ஆனால் நெல்சன் இருபகுதியினரையும் ரிறவல்கார் (Trafalgar) என்னுமிடத்திற் தோல்வியுறச் செய்தான் ((1805). இத்தாற் பிரான்சிய கடற்படை யழிக்கப்பட்டது. நெல்சனும் இச் சண்டையில் உயிர் துறந்தான்.

இவ்வேளையில் இங்கிலாந்தின் முதன் மந்திரியாகவிருந்த இரண்டாம் பிற் (Pitt the younger) என்னும் அரசியல் நிபுணன் அவுஸ்திரியா, ருஷியா ஆதியாம் ஐரோப்பிய தேசங்களை ஒன்று

சேர்த்து நெப்போலியனை எதிர்த்துச் சண்டை செய்யுமாறு தூண்டினன். ருஷியாவும், அவுஸ்திரியாவும் அஸ்ரர் லீட்ஸ் (Austerlitz) என்ற இடத்திலும், புருஷியா ஜீனா (Jena) என்ற இடத்திலும், அவனோடு யுத்தஞ் செய்தன. ஒவ்வோர் நாடும் அவனாணைக்குள்ளானது. 1807 ல் திரும்பவும் சமாதானம் ஏற்பட்டது. நெப்போலியன் இத்தருணத்தில் (1808 ல்) ஆங்கிலரின் வியாபார செல்வாக்கை யழித்தற்பொருட்டு ஐரோப்பாவின் எத்தேசமென்கிலும் ஆங்கிலரோடு வர்த்தகஞ் செய்யப்படாதென ஓர் சட்டம் பிறப்பித்தான். (Berlin Decrees). போர்த்துக்கேயரோ இச்சட்டத்திற்கு மாறாக முன்போல ஆங்கிலருடன் தொடர்ந்து வியாபாரம் நடத்தினர். உடனே அவர்களைத் தண்டித்தற்பொருட்டுப் பிரான்சிய சேனையொன்று அனுப்பப்பட்டது. ஸ்பானிய வரசன் அரசினின்று நீக்கப்பட்டான். அவனிடமாக நெப்போலியனின் சகோதரன் யோசெவ் பொனொப்பார்ட் (Joseph Bunoparte) நியமிக்கப்பட்டான். ஸ்பானியர் எல்லோரும் ஒருமனமுடையோராய் பிரான்சிய சேனையை எதிர்த்து யுத்தஞ் செய்தனர். பன்முறை போரில் பிரதிகூலமடைந்தாராயினும் விடாப்பிடியாகப் பகை பாராட்டி வந்தனர். கடைசியில் ஆங்கிலரும் அவர்கட்குத் துணை செய்தனர். முதலாம் ஆங்கில சேனையால் நடத்தப்பட்ட யுத்தம் பிரான்சியருக்கே வெற்றியாக முடிந்தது. இரண்டாம் சேனை, இந்திய யுத்தங்களில் கீர்த்திபெற்ற

ஆர்தர் உவெல்லெஸ்லி (Arthur Wellesley) என்பவரைத் தலைமையாகக் கொண்டு, போர்த்துக்காலிலிறங்கியது. உடனே அதி விரைவாகப் பிரான்சிய சேனை போர்த்துக்காலினின்றும், அதன்பின் ஸ்பானியாவினின்றும் துரத்தப்பட்டது. இம்முறையே முதன்முதலாக நெப்போலியனுக்குத் தரைச் சண்டையிற் தோல்வி கிடைத்தது. உவெல்லெஸ்லி யுத்தங்களில் காட்டிய வீரத்துவங் காரணமாக டியூக் ஒவ் உவெல்லிங்ரன் (Duke of Wellington) என்ற மகிமைப் பட்டம் பெற்றான்.

இதன்பின்னர், நெப்போலியன், அந்நியர் ஆட்சிக்கமையப் பின்னிட்ட ருஷியரை மறுபடியும் வென்று அடக்குவதற்காக வோர் சேனையை ருஷியாவிற் கனுப்பி வைத்தான் (1812). சேனையாட்கள் செல்லும் வழியில் மாரிகாலக் கஷ்டங்களையே யெதிர்த்துப் போராடவேண்டியிருந்தும் கஷ்டங்களைப் பாராது போர்க்கோலத்தோடு மொஸ்கோ நகரை யடைந்தனர். அங்கே நகரம் சனங்களின்றித் தீக்கிரையாகி எரிந்துகொண்டிருப்பதைக் கண்ணுற்றனர். வேறொன்றுஞ் செய்ய முடியாது பிரான்சிற்குத் திரும்பவும் பிரயாணமாயினர். குளிரினாலும் பசியினாலும் 1,55,000 வீரர் வழியில் உயிர் நீத்தனர்.

அடுத்த வருஷத்தில் ஐரோப்பிய தேசங்கள் எல்லாம் ஒருங்கு சேர்ந்து தம்மை வருத்திய

கொடுங்கோலனை எதிர்த்து லீப்சிக் (Leipzig), என்ற இடத்தில் நடத்திய "பலசாதிப் போரில்" நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டதுமன்றி, இத்தாலிக்கும் கோர்சிக்காவுக்கும் இடையேயுள்ள எல்பா (Elba) என்னும் ஓர் சிறுத் தீவிற்கு அரசிழந்தவனாக அனுப்பப்பட்டான். வெற்றியாளரான ஐரோப்பிய வரசரும், அரசியல் நிபுணரும், வீயென்னா (Vienna) நகரிற் கூடித் திரும்பவும் தேசங்களில் ஒழுங்கு வருவித்தற்கு ஆலோசனை செய்யுஞ் சமயம், நெப்போலியன், எல்பா தீவினின்றும் வெளியேறிப் பிரான்சிற்கு வந்து, பெருஞ்சேனை திரட்டி, யுத்தத்திற் கெழுந்தான். இம்முறையும் உவாட்டலூ (Waterloo) என்ற இடத்தில் ஆங்கில சேனாதிபன் உவெல்லிங்டனாலும் அவனுக்குத் துணைசெய்த புறுஷியராலும் தோற்கடிக்கப்பட்டு ஸ்பானிய கரைக்குச் சமீபமாயுள்ள சென்ற் ஹெலினா (St. Helena) தீவுக் கனுப்பப்பட்டான். அங்கிருந்து அவன் ஒருபோதும் தப்பியோட முடியாவண்ணம் காவல் செய்யப்பட்டு, அங்கேயே 1821 ல் மரணமானான்.

நெப்போலியனால் ஏற்பட்ட பலாபலன்கள்.

1. புரட்சியினால் ஒழுங்கற்ற நிலையிலிருந்த பிரான்ஸ் தேசத்திற்குத் தக்கவோர் தலைவனையும், சிறந்த ஆட்சி முறையையும் அவன் அளித்தான்.

2. ஒரு சில வருஷங்களுக்குப் பிரான்சை ஐரோப்பாவில் அதி வல்லபம் படைத்த அரசாக்கினான்.

3. ஐரோப்பிய தேசங்கள் எல்லாவற்றிலும் தேசீய உணர்ச்சி உதிக்கச் செய்தான்.

4. கைத்தொழிற் புரட்சி.

முன் கூறப்பட்ட புரட்சிகள் இரண்டும் அரசியல் முறைகள் சம்பந்தமானவை. இவை அமெரிக்காவிலும் பிரான்சிலும் பிற்காலங்களில் ஏனைய தேசங்களிலும் ஆட்சி முறைகள் திருந்துவதற்கு வழி திறந்தன. இதே காலத்தில் நடைபெற்ற மற்றோர் புரட்சி கைத்தொழிற் புரட்சியெனப்படும். இது கைத்தொழில் முறைகளிலும் வர்த்தகத்திலும் மாறுதல்களுண்டாக்கியது. இதனாற் சாதாரண சனங்களின் சீவியமும் அவர்களின் முயற்சிகளின் இயற்கையும் மாற்றமடைந்தன.

இப்புரட்சி நடைபெறும் வரையில் அநேக நூற்றாண்டு காலமாகக் கைத்தொழில் முறைகள் பூர்வ எகிப்திற்போலவே யிருந்தன. மனிதரின் தேவைப் பொருட்கள் யாவும் கையினாற் செய்யப்பட்டன. தரையிற் குதிரையும் கடலிற் பாய்க்கப்பலும் இதுவரை கிடைத்த அதி தீவிர பிரயாண வசதிகளாம்.

பண்டைய கிரேக்க ஞானிகளிடமிருந்து மனிதர் தம் விவேகத்தை உபயோகிக்கவும், சமய விஷய ஆராய்ச்சிகள் நடத்தவும் மாத்திரமன்றித்

தம்மைச் சூழவுள்ள உலகத்தையும் படித்தற்கு அறிந்துகொண்டனர்; "புத்துயிர்க் கிளர்ச்சி" காலத்திலே பலவித ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டனர். அறிவுப்பயன் கருதியோ அன்றேல் வாழ்க்கைப் பயன் கருதியோ அவர்கள் இயற்கையையும் சுற்றுடலையும் பற்றிக் கற்றறிந்ததைச் சிவியத்தொழில்களில் உபயோகிக்கக் கூடியதாயிருந்தது. வான சாஸ்திர அறிவைக்கொண்டு கடலிற் செல்லுங் கப்பல்களின் திட்டமான நிலையம் இன்னதென விளங்கிக்கொண்டனர். கடிகாரம், மூக்குக் கண்ணாடி தூரதிருஷ்டிக்கண்ணாடி முதலியன பாவிக்கத் தொடங்கினர். ஆயினும் பதினெட்டாம் நூற்றாண்டு வரையும் விஞ்ஞான சாஸ்திர அறிவை அவர்கள் வாழ்க்கையிற் பயன்படு முறையிற் பிரயோகிக்க அறியாராயினர்.

முந்த முந்த ஆங்கில கமக்காரன் ரல் (Tull) என்பவனல் கிருஷிகத் தொழில் முன்னேற்றத்திற்கான வழி காட்டப்பட்டது. ஆங்கில கமக்காரர் அடுத்து இரண்டு வருஷங்களுக்குப் பயிர் விதைத்த பின் மூன்றும் வருஷம் நிலத்தைப் பயிர்செய்யாது விடுவது வழக்கமாயிருந்தது. நல்ல விளைவு கிடைப்பதரிதென்றெண்ணியதால் இவ்வாறு செய்தனர். ரல் என்பவன் வருஷ முழுவதும் வகை மாற்றிப் பயிர் விளைவிக்கக் கூடுமென்பதை அறியச் செய்தான். இதன்பேருக வருஷத்தின் முற்பகுதியில் ஓர் தானியமும், அதன்பின் கிழங்கு வகையும், பிற்பகுதியில் இன்னோர் வகைத் தானியமும் விளைவிக்கக்கூடியதாயிருந்தது. சனங்கள் உணவிற்குத் தேவையான தானியத்திற் பெரும் பாரத்தைத் தம் தேசத்திலேயே பெற்றுக்கொண்டனர்.

மிருகங்கள் மனிதருக்குப் பல்வேறு வழிகளில் உபயோகப்படுகின்றன. அவற்றுள் வளர்ப்பு மிருகங்களாகிய குதிரை, ஆடு, மாடு என்பன உழவுத் தொழில், சவாரி செய்தல், முதலிய தொழில்கட்கும்; பால், இறைச்சி போன்ற உணவுகட்கும் தேவைப்படுகின்றன. மனிதனின் தேவைகட்கேற்ப வளர்ப்பு மிருகங்கள் உயர் இனங்களாகப் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படவேண்டுமென்று பேக்வெல் (Bakewell) என்னுங் கமக்காரன் பரிசோதனைகள் மூலம் தான் விளங்கிக் கொண்டதை மற்றவர்களும் கண்டுபாவிக்கச்செய்தான். இதுவுமன்றி ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்குப் பொருட்கள் கொண்டுசெல்லும் முறையிலும் திருத்தம் ஏற்பட்டது. தரையில் இழுத்துச் செல்லக்கூடியதிலும் பார்க்கப் பன்மடங்கான பாரத்தைக் குதிரையொன்று வள்ளத்தில் இழுத்துச் செல்லுதல் கூடுமென்று அறிந்து அநேக கால்வாய்கள் வெட்டப்பட்டன. பாதைகளில் விரைவான போக்குவரவு செய்யத்தக்கதாக அவற்றை ஒப்பமாகவும் கடினமாகவும் அமைத்தற்கான நவீன முறையை மக்கடம் (MacAdam) என்ற வியவகார சிற்பியொருவன் கண்டுபிடித்தான்.

ஆங்கிலரின் விசேஷ கைத்தொழில்களாகிய நூல் நூற்றலும் நெசவு செய்தலும் திருத்தம்பெறுதற்கேற்ற இயந்திரங்கள் இக்காலத்திலேயே புதிதாக நிருமாணிக்கப்பட்டன. 1769 ல் ஆக்றைற் (Arkwright) என்பவன் நூல் நூற்கும் இயந்திரம் ஒன்றையும் 1770 ல் ஹார்க்கிறிவ்ஸ் (Hargreaves) என்பவன் மேற்போந்த இரண்டு அல்லது கூடிய தொகை இயந்திரங்களை ஒருவன் தனித்து இயக்கக் கூடியதான இன்னோர் இயந்திரத்தையுங் கண்டுபிடித்தனர். காட்றைற் (Cartwright) என்பவன் 1785 ல் இந்த இயந்திரங்களை நீரோட்டச் சக்தியினால் இயக்குவதற் குபாயங் கண்டான். நீராவிச் சக்தியைக்கொண்டு நூல் நூற்கும் இயந்திரங்களை இயக்கும் முறையை உவாற் (Watt) என்பவன் கண்டறிந்தான். பின்னர் 1825 ல் ஸ்ரீவின்சன் (Stephenson) நீராவியினால் இரதங்களைச் செலுத்துவதிற் சித்தியடைந்தான். அவனுடைய முதற் புகையிரதம் றொக்கெற் (Rocket) மணித்தியாலம் ஆறுமைல் வீதம் ஸ்ரொக்ரன் (Stockton) என்ற பட்டினத்திலிருந்து டாளிங்ரன் (Darlington) பட்டினத்திற்கு முப்பது வண்டிகளை இழுத்துச் சென்றது. நீராவிச் சக்தியின் உபயோகத்தினால் பாய்மரக் கப்பல்களினிடமாக நீராவிக் கப்பல்கள் கட்டப்பட்டன. முதலாம் நீராவிக் கப்பல் சவன்னா (Savannah) என்ற பெயர் பெற்று அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்தது.

இயந்திரங்களின் பயன்களை மனிதர் நன்குணர்ந்ததால் காலத்திற்குக் காலம் புதிய புதிய இயந்திரங்களை ஆக்கிவந்தனர், உலகின் சீவியத்தில் இவை அநேக மாற்றங்களுக்குக் காரணமாயின.

உலகின் செல்வம் மென்மேலும் அதிகரித்தது. மேலதிகமான பணம், கல்வி, சமயம், சௌக்கியம், போன்ற விஷயங்களிற் செலவிடப்பட்டது. கலாசாலை, வாசிகசாலை, வைத்தியசாலை, நூதனசாலை முதலிய பொது வசதிகள் எங்ஙனும் ஏற்படுத்தப்பட்டன. தானியம் ஏராளமாக விளைவிக்கப்பட்டது. குறைந்த நேரத்தில் கூடிய வேலை செய்யப்பட்டது. லோகங்களும் சுரங்கப் பொருட்களுமுள்ள சுரங்கங்கள் தோண்டப்பட்டன.

முதலாளி, தொழிலாளி என்னும் புதிய வகுப்புக்கள் தோன்றின. தொழிற்சாலைகளின் சொந்தக்காரர் முந்திய வகுப்பினராவர். ஆங்கு தொழில் புரிந்தோர் பிந்தியவர்களே. முதலாளிகள் வேலையாட்களின் நன்மை கருதித் தரும ஸ்தாபனங்கள் அநேகம் அமைத்தனர். தொழிலாளிகள் தங்கள் வேலை நேரங்களைக் குறைத்தற்கும், அபாயத்திலகப்பட்டோர்க்குப் பணம் உதவுதற்கும், வயதிற் குறைந்தோர்க்குச் சில சலாக்கியங்கள் பெறுதற்கும் இடைக்கிடை பணி மறித்துப் பல உரித்துக்களை வலிந்து பெற்றனர்.

கைத்தொழிற் புரட்சியினால் இங்கிலாந்து உலக விஷயங்களிலோர் விசேஷ தேயமானது. ஆங்கிலரே முதன்முதல் இயந்திரங்களை இயற்றினர். ஆங்கில இயந்திரங்கள் அந்நிய தேசங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டன. ஆங்கில வியாபாரப் பொருட்கள் சகாயமான விலைக்கு எல்லாத் தேசங்களாலுங் கொள்ளப்பட்டன. ஆங்கில வியாபாரம் வளர்ச்சியடைந்தது. புதிய போக்குவரவு வசதிகளால் இங்கிலாந்தோடு எல்லாத் தேசங்களும் இணைக்கப்பட்டன. பிரயாணம் விரைவாகவும், இலகுவாகவும் செய்யக் கூடியதாயிற்று.

2-ம் அதிகாரம்.

இந்தியாவும், ஆங்கிலரும்.

1767—1813.

இந்தியாவின் நிலைமை.

1767ல் இந்தியாவில் ஐரோப்பியரின் ஆளுகைக்குட்படாத விடங்கள் நிலை குலைந்துபோயின. முகலாய வரசன் பேரளவில் மாத்திரம் அரசனாகவிருந்தான். அவனுடைய இராச்சியமும் சிதைவுற்றது. மருட்டியர் (Marathas), சீக்குகள், (Sikks), ஆபுகானிஸ்தர் ஆதிய ஏனைய இந்திய சாதிகளுள் எவையேனும் மற்றையோரை வென்று புதிய சக்கராதிபத்திய மொன்று தாபிக்க வல்லவர்களாயிருக்கவில்லை. சுயவரசரா லாளப்பட்ட சிறு நாடுகளுஞ் சில விருந்தன. அவை தம்மைச் சூழவுள்ளவர்களைப் பற்றிய அச்சம் நிறைந்தனவாய்க் காணப்பட்டன.

இக்காலத்தில் இந்தியாவில் ஆங்கிலர்க்குரிய நாடுகள் மூன்று பிரதான பட்டினங்களை யடுத்திருந்தன. பட்டினங்களுள் விசேஷித்தது கல்குத்தா. இது செல்வம் நிறைந்த வங்காளப் பிரிவின் மையஸ்தானம். இதைச் சுற்றிப் பிற்கால ஆங்கில இந்தியா விசாலிக்கக் கூடியதாயிருந்தது. பிளாசே (Plassey) யுத்தத்தில் கிளைவ் (Clive) என்பான் இப்பட்டினத்தை ஆங்கிலர்க்

காக்கினான். கிளைவ்வின் வெற்றிகளாற் தென் இந்தியாவிற் பிடிக்கப்பட்ட மற்றோர் பட்டினம் சென்னை. அதனைச் சுற்றியுள்ள பாக்க பிரதேசமும் ஆங்கிலர்க்குரியதாயது. சுதேச மன்னரோடு செய்த உடன்படிக்கைகளால் ஆங்கிலரின் செல்வாக்கும் அதிகரித்தது. இவையன்றிப் பம்பாய்த் தீவும் ஆங்கிலர்க்குரியது. இது 1661ல் போர்த்துக்கேயரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

மேற்சொல்லப்பட்ட மூன்றிடங்களும் ஓர் சக்கராதிபத்தியம் தாபிப்பதற்குப் போதியவையல்ல. மேலும் அவை ஒன்றாக இணைக்கப்படாது தனித்தவையாக ஆளப்பட்டன. ஆகவே இந்தியாவிற் பிரித்தானிய சக்கராதிபத்தியம் நிறுவுதற்கு அவை மூன்றும் பலமுள்ள ஒரேயாட்சியின் கீழ்ப்படுவதும், அதனதிகாரம் இந்தியாவின் மறுபாகங்கட்குப் பரவுவதுந் தேவையாயின.

ஆங்கிலரின் ஆரம்பகால ஆளுகை.

கிளைவ் என்பவனின் பிரமித்தற்குரிய வெற்றிகளாற் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தினதிகாரம் வங்காளத்திலும் தென் இந்தியாவின் சில பாகங்களிலும் மேலோங்கியது. வர்த்தக சங்கத்தின் உத்தியோகஸ்தர் ஆட்சி முறைகளைப் பற்றிய அறிவற்றவர்களா யிருந்தனராதலால் அவர்கள் சுதேச அரசரை நியமித்து இராச்சிய கருமங்களை அரசரே கவனிக்க விட்டனர்.

உதாரணமாக, வங்காளத்தில் வர்த்தக சங்கத்தார் நவாப் ஒருவனிடம் அரசியற் பொறுப்பை விட்டனர். இதனால் நாடுகளிற் சங்க உத்தியோகஸ்தரி னதிகாரம் ஒரு பக்கத்திலும், நவாப்புகளி னதிகாரம் மறுபக்கத்திலுமாக இரட்டை ஆட்சி (Dual government) நடைபெற்றது. மேலும் இத்தகைய ஆட்சியால் எக்கருமமும் சரியாகச் செய்யப்படவில்லை. வர்த்தக சங்கம் செய்யுமென்று நவாப் எண்ணியதை நவாப் செய்வானென்று கொம்பனி கைவிட்டது. பணம் அறவிடுவதில் மாத்திரம் இருபகுதியாரும் கண்ணாயிருந்தனர். இந்த அக்கிரமத்தை யொழிப்பதற்குக் கிளைவ் தன்னாற் கூடியளவுழைத்தானாயினும் இரட்டையாட்சியின் கேடுகளை விளங்கிக்கொள்ளவில்லை.

உவாரன் ஹேஸ்டிங்ஸ்.

(Warren Hastings).

வங்காளத்தில் நடைபெற்ற தவறுகளையும், ஒழுங்கீனங்களையும் நிவிர்த்தியாக்கும் நோக்கமாக உவாரன் ஹேஸ்டிங்ஸ் வர்த்தக சங்கத்தாரால் 1772ல் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டான். இவன் இருபத்திரண்டு வருஷங்களுக்குமுன் இந்தியாவிற்கு வந்து வர்த்தக சங்கத்தின்கீழ் லிகிதனாகக் கடமை பார்த்தோன். 1761ல் மீர்காஸிம் என்ற வங்காள நவாப்பின் சமஸ்தான வாசியானன். ஆங்கிலருக்கும் நவாப்பிற்கு மேற்பட்ட சச்

சரவை நீக்கிச் சமாதானம் உண்டாக்குதற்கு இவன் பெரிதும் உழைத்தான்.

வங்காளத்தில் இரட்டை ஆட்சி முறையே எல்லா நீதியீனங்களுக்குங் காரணமென்று ஹெஸ்டிங்ஸ் விரைவிலறிந்து, அதை முற்றாக அழித்து, அரசியல் வியவகாரங்களைக் கொம்பனியாரே தனித்து நடத்தச் செய்தான்; சங்க உத்தியோகஸ்தரில் தகுதியற்றோரை நீக்கினான்; கருமசாலைகளைப் புதுப்பித்து நீதி விசாரணை முறையை ஏற்படுத்தினான்; வரியறவிடும் முறைகளைத் திருத்தினான்; இவ்வாறாக இந்தியாவில் ஆங்கில நாடுகளில் நல்லாட்சி நடைபெறுதற்குரிய வழி திறந்தான்.

ஆங்கில அரசாங்கம், வர்த்தக சங்கத்தாரின் முறைகேடான ஆளுகையாற் சீற்றங்கொண்டு இந்தியாவில் அவர்களின் அதிகாரத்தை வரையறுத்தும், எல்லைப்படுத்தியும் 1773ல் ஓர் சட்டம் விதித்தது. இச்சட்டத்தின்படி வர்த்தக சங்கம் ஆங்கிலரின் ஆளுகைக்குட்பட்டது. இந்தியாவிலுள்ள ஆங்கில நாடுகட்கு வங்காளம் தலைமையாயது. ஹேஸ்டிங்ஸ் வங்காளத்திற்கு முதன்மைத் தேசாதிபதி (Governor General) யாகத் தெரியப்பட்டான். சென்னையிலும், பம்பாயிலுமிருந்த தேசாதிபதிகள் வங்காளத் தேசாதிபதியின் மேற்பார்வையின்கீழ் வைக்கப்பட்டனர். கவனர் ஜெனறலுக்கு நான்கு அங்கத்தவரையுடைய மந்திர சபை யொன்றும்

நியமிக்கப்பட்டது. கல்குத்தாவில் சுப்பிறீங்கோடு ஸ்தாபிக்கப்பட்டு மூன்று நீதிபதிகளும், ஒரு பிரதம நீதிபதியும், நியமனம் பெற்றனர், வர்த்தக சங்கம் வருஷத்திலிருமுறை அதன் கணக்குகளை ஆங்கில தனாதிகாரிக்கு ஒப்படைக்கக் கடமைப்பட்டது.

1773 ம் வருஷச் சட்ட ஒழுங்குகள் (புதிய இந்திய சட்டம்) 1784-ம் வருஷம் வரையில் அனுசரிக்கப்பட்டு வந்தன. இக்காலம் முழுவதும் ஹேஸ்டிங்ஸ் கவனர் ஜெனறலாகவிருந்து நாட்டைச் சீர்ப்படுத்தி ஆட்சி·முறையைச் சீராக்கினான்.

1-ம் மராட்டிய யுத்தம்.

மராட்டியப் பிரதானிகள் இருவர் இராசபட்டத்துரிமை பற்றிச் சண்டை செய்தனர் (1775). பம்பாய்த் தேசாதிபதி மதிமோசமாக வல்லமை குறைந்த பிரதானிக்குத் துணைசெய்து தோல்வியடைந்தான். வங்காளத்திலிருந்த மகா தேசாதிபதி, ஹேஸ்டிங்ஸ், இதனைக் கேள்வியுற்று, பம்பாய்த் தேசாதிபதி தனது கட்டளையை மீறிப் போருக்குச் சென்ற குற்றத்தைப் பாராட்டாது, அவனுக்கு இரு சேனைகளை அனுப்பி வைத்தான். இரு சேனைகளும் மத்திய இந்தியாவூடாகச் சென்று நடத்திய யுத்தங்களில் "குவாலியோர்" (Gwalior) என்ற மராட்டிய கோட்டையும் "சால்செற்" (Salsette) என்ற சிறியவோர் தீவும் பிடிக்கப்பட்டன. பின்

செய்துகொள்ளப்பட்ட சமாதான ஒழுங்கின்படி இருபது வருஷங்களுக்கு யுத்த மொழிந்தது.

மைசூர் யுத்தம்.

அமெரிக்க புரட்சியில் பிரான்சியர் அமெரிக்கருக்குத் துணைசெய்தது காரணமாக ஆங்கிலருக்கும் பிரான்சியருக்குமிடையில் 1778ல் யுத்தமாரம்பித்தது. இவ்வேளையில் இந்தியாவில் பிரான்சியருக்குரிய புதுச்சேரியையும் மற்றுமிடங்களையும் பிடிக்கச் சேனைகள் அனுப்பும்படி ஹேஸ்டிங்ஸ் சென்னைத் தேசாதிபதிக்குக் கட்டளையிட்டான். பிரான்சியர் தம் நாடுகளை இழந்தாராயினும் ஹைதர் அலி (Haider Ali) என்னும் மனோதைரியமும் வீரியமும் படைத்த மைசூர் மகாராசாவைத் தமக்குதவியாகச் சேர்த்துக்கொண்டனர். ஹைதர் ஆங்கில நாடுகட்கனுப்பிய சேனைகள் சிறிதளவேனும் இரக்கமின்றி அக்கிரமச் செயல்களைப் புரிந்தன. அவர்களை எதிர்த்துச் சமராடிய சென்னைச் சேனையாட்கள் தோற்கடிக்கப்பட்டனர். மகா தேசாதிபதியிட முதவி கேட்கவேண்டியதாயிருந்தது. ஹேஸ்டிங்ஸ் தாமசமின்றிச் சேனை சேர்த்து 'சேர் அயர் கூற்' (Sir Eyre Coote) என்ற வங்காளத் தளபதியின் தலைமையின்கீழ் அனுப்பி வைத்தான். இச்சேனையோடு நடத்திய போற்றோ நோவோ (Porto Novo) யுத்தத்தில் ஹைதர் அலி அபஜெயமுற்றான் (1781). அடுத்த வருஷத்தில்

அவன் மரணமானான். 1783ல் பிரான்சியருடன் சமாதானஞ் செய்யப்பட்டது. ஹைதரின் மகன் திப்பு சுல்தான் (Tippoo Sultan) இன்னமும் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தினானாயினும் 1784ல் சமாதானத்திற் குடன்பட்டான்.

ஹேஸ்டிங்ஸ் 1775ல் உத்தியோகத்தினின்று நீங்கி இங்கிலாந்திற்குச் சென்றான். இவன் ஆங்கில அரசிற்குச் செய்த சேவை மிகவும் பெரியது. ஆங்கில நாடுகளில் ஒற்றுமை, ஒழுங்கு, நல்லாட்சி என்பவற்றை வருவித்ததன்றி அவற்றை நேராக ஆங்கில வதிகாரத்திற் குட்படுத்தினான். கல்வி கேள்விகளிற் சிறந்தவனாயிருந்தமையால் வங்காளம், இந்துஸ்தான், பார்சியா. அராபியா முதலிய இடங்களின் பாஷைகளைக் கற்றறிந்தான். இந்தியரின் நாகரீகம், சிற்பம், இலக்கியம் ஆதியவற்றைப் பற்றிய ஆராய்ச்சிகள் செய்தற்கெனவோர் சங்கத்தை ஸ்தாபித்தான்.

ஹேஸ்டிங்ஸ் இங்கிலாந்திற்குத் திரும்பிச் சென்றபொழுது இவனது பகைவரான சிலர் சேர் பிலிப் பிரான்ஸிஸ் (Sir Philip Francis) என்பவரைத் தலைமையாகக் கொண்டு பாராளுமன்றத்தி லிவன்மீது பொய்யான குற்றங்களைச் சுமத்தினர். குடிகளைக் கொடுமையாக நடத்தினானென்றும், கொள்ளையடித்தானென்றும், அக்கிரமச் செயல்கள் புரிந்தானென்றுங் குற்றஞ் சாட்டப்பட்

டான். பிரபுக்கள் சபை எட்டு வருஷங்களாக விசாரணை நடத்தியது. ஈற்றில் ஹேஸ்டிங்ஸ் சுற்றவாளியாய்க் காணப்பட்டான்.

இந்தியாச் சட்டம்.
(1784)

ஹேஸ்டிங்ஸ் இந்தியாவைவிட்டு நீங்குதற்கு முந்திய வருஷத்தில் ஆங்கில பாராளுமன்றம் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தை அடக்கி ஆளுவதற்கான இன்னோர் சட்டம் பிறப்பித்தது. இது 1773ச் சட்டத்தைப் போன்றதாயினும், ஒருபடி ஏற்றம்பெற்றதெனலாம். முதலாவதாக வர்த்தக சங்கத்தின் கருமங்கள் முன்னிலும் மதிகமாக ஆங்கில வரசாங்கத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. கொம்பனியின் ஆட்சி முறைகளைப் பற்றிய மேல் விசாரணை செய்தற்குக் காரியாதிகாரியையும் இன்னும் ஐந்து அங்கத்தவர்களையு மடக்கிய ஒரு அதிகார சபை நியமிக்கப்பட்டது. அதன் அதிகாரம் மட்டின்றி விசாலித்தது. கொம்பனி ஊழியரே இன்னமும் இராச்சிய நிருவாகத்திற்குரிய இனைந்த கருமங்களைச் செய்தனர்.

இரண்டாவதாகத் தல அதிகாரம் மீளவும் வங்காளத்தின் மகா தேசாதிபதிக்கும் அவனுடைய மந்திரசபைக்கு மளிக்கப்பட்டது. விசேஷமாகச் சென்னையிலும் பம்பாயிலுமுள்ள தேசாதிபதிகள் தங்கள் அயலிலுள்ளவர்களோடு நடந்து

கொள்ளும் முறையை மகா தேசாதிபதிக்கறிவிக்க வேண்டியவர்களானார்கள். மூன்றாவதாக ஆங்கிலர் இந்தியாவில் இதுவரை பிடித்த இடங்களைத்தவிர வேறிடங்களை யுத்தங்களினாலேனும், மற்றும் வழி வகைகளினாலேனும் கைப்பற்றுவ தில்லையெனத் திட்டமாகக் கூறப்பட்டது.

லோட் கோண்வாலிஸ்.
(Lord Cornwallis)
1786—1794

லோட் கோண்வாலிஸ் முந்திய தேசாதிபதிகளைப் போன்றவனல்ல. அவர்கள் போர்வீரர் அன்றேல் கீழ் உத்தியோகங்களினின்று உயர்த்தப் பட்டவர்கள். இவன் உயர்குடிப் பிறந்தவன்; பிரித்தானியாவின் வேற்றிடங்களில் உத்தியோகம் பார்த்தவன்; ஓர் தேசாதிபதியின் கடமையை நன்கு விளங்கியவன்; நீதியும், நேர்மையும், திட சித்தமுமுடையன்; இவன் அயல்நாடுகளுடன் யுத்தஞ் செய்ய நினையாது தன்னதிகாரத்திற்குட்பட்ட நாடுகளைத் திருத்துவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தான்.

இந்தியாவில் “இராச்சிய விவகார சேவை” (Civil service) முதல்முத லிவனால் தொடக்கப்பட்டது. கொம்பனி உத்தியோகஸ்தர் இக்காலம் வரையும் இராச்சிய பரிபாலனம், வியாபாரமாகிய

இரு முரண்படுந் தொழில்களில் ஒரேமுறையி லீடுபட்டனர். இப்போ அவர்களுள் ஒரு பகுதியார் இராச்சிய கருமங்கள் கவனித்தற்கும், மறு பகுதியார் வியாபாரஞ் செய்வதற்குமாக நியமிக்கப்பட்டனர். வர்த்தக சங்க உத்தியோகஸ்தரிற் காணப்பட்ட மற்றோர் குற்றம் உபகாரம் ஏற்பது. முகலாயருடைய ஆட்சியால் ஏற்பட்ட இப்பழக்கத்தைத் தொலைப்பதற்காகக் கோண்வாலிஸ் உத்தியோகஸ்தரின் சம்பளங்களை அதிகமாக்கினான். இந்திய உத்தியோகஸ்தர் உபகாரம் ஏற்பதில் அதிகம் விருப்புடையோரெனக் கண்டு அவர்களைச் சேவையினின்றும் நீக்கினான்.

மைசூர் யுத்தம்.

அயல் நாடுகளுடன் சமாதானமாயிருக்கவேண்டுமென்பது கோண்வாலிஸ் தேசாதிபதியின் விருப்பும் இராச்சிய தந்திரமுமாயிருந்தது. ஆனால் அவ்விடங்களிலுள்ள வரசர்கள் உள்நாட்டுக் கலகங்கள் காரணமாக, அடிக்கடி மாறியதால் அவர்களுடைய சிநேகம் அற்பமேனும் பயனுள்ளதாகக் காணவில்லை. திருவாங்கூர் அரசு மாத்திரம் நிலையுள்ளதாகத் தோற்றியது. அரசனும் ஆங்கிலர்க்குச் சில வியாபார சலாக்கியங்க ளளித்தான். அதனால் ஆங்கிலர் அவனுடன் ஐக்கிய உடன்பாடு செய்துகொண்டனர். யுத்தப் பிரியனான ரிப்பு சுல்த்தான் ஆங்கிலரோடு போர்தொடுக்கும்

பொருட்டு நாகரீகமற்ற முறையில் திருவாங்கூர் இராச்சியத்தைக் கொள்ளையடித்தான். உடனே கோண்வாலிஸ் தேசாதிபதி ஓர் சேனைகொண்டு அவனை எதிர்த்துச் சமராடினான். மராட்டியர் ரிப்பு சுல்த்தானுக்குத் துணைச் செய்தனர். தேசாதிபதியின் சேனை சுல்த்தானை அரிக்கேறா (Arikera) என்ற இடத்திற் தோற்கடித்தது (1791). அடுத்த வருஷத்தில் செரிங்கப்பட்டணம் (Seringapatam) என்ற இராசதானியுந் தாக்கப்பட்டது. சுல்த்தான் தன்னுடைய இராச்சியத்தில் அரைவாசியும் பரிக்கிரயமும் ஆங்கிலர்க்குக் கொடுக்கச் சம்மதித்துச் சமாதானத்திற்கிணங்கினான்.

லோட் உவெல்லெஸ்லி.

(Lord Wellesley)

1798—1805

லோட் கோண்வாலிஸ் உத்தியோகத்தினின்று நீங்கியபோது (1794) அவனிடத்திற்கு சேர் யோண் ஷோர் (Sir John Shore) அனுப்பப்பட்டான். அவன்காலத்தில் யாது விசேஷ சம்பவமும் நடைபெற்றிலது. 1798ல் லோட் உவெல்லெஸ்லி தேசாதிபதியானான். இவன் முந்திய தேசாதிபதிகள் போலப் போரையொழித்துச் சமாதானத்தை நிறுவி ஆங்கில நாடுகளைப் பாதுகாத்தல் பூக செயலாகாதென் றெண்ணினான். ஆங்கிலர் இந்தியாவி லிடம்

பிடிக்க உற்ற உதவியாயவை யுத்தங்களே. ஆங்கில நாடுகளி னயலிலுள்ள சீக்குகள், ஆபுகானிஸ்தர், மருட்டியராகிய முரட்டுச் சாதியார் அடிக்கடி இடுக்கண் விளைத்து வருவதா லவர்களை யடக்குவது அகத்தியமாயிற்று. ஒழுங்கற்ற ஆட்சியாலும் அரசியற் குழப்பங்களாலும் இடர்ப்படும் இந்திய நாடுகள் சமாதானமும், பாக்கியமும் அனுபவிக்க வேண்டுமானால், அவை ஆங்கிலரின் ஆஞ்ஞைக்குட்பட வேண்டும். ஐரோப்பியர் குடியேற்றத்தையும் புரட்சியையும் விரும்பி நிற்கும் இக்காலத்தில், இந்தியாவை ஆங்கிலர் கைப்பற்றாவிடின் பின்னிதமின்றிப் பிரான்சியர் அதைப் பிடித்துக்கொள்வர். அதனாலேயே யுத்தத்தினாலேனும் சமாதான ஒழுங்குகளினாலேனும் இந்தியா முழுவதையும் ஆங்கில ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்று உவெல்லெஸ்லி கூறினான்.

கடைசி மைசூர் யுத்தம்.

இந்தியாவினின்று ஆங்கிலரைத் துரத்தவேண்டுமென்ற எண்ணம் இன்னமும் பிரான்சியர் மனதைவிட்டுப் போகவில்லை. மொரீஷியஸ் (Mauritius) தீவின் பிரான்சிய தேசாதிபதி 1798ல் ரிப்பு சுல்த்தானையும் வேறு சில சுதேச மன்னரையும் ஆங்கிலரோடு போருக் கெழுப்பி விட்டான். ரிப்பு முன் செய்துகொண்ட உடன்படிக்கைகளை மீறி முன்னிலும் மூர்க்கமாகப் படைசேர்த்துப் பழிவாங்க ஆயத்தமானான். லோட் உவெல்லெஸ்லி

காலதாமதஞ் செய்யாது ரிப்புவின் இராச்சியத்திற்குச் சேனையனுப்பினான். இராச்சியம் வங்காளப் பக்கமாயும் சென்னைப் பக்கமாயுந் தாக்கப்பட்டது. இரண்டு மாதங்கள் செல்லுமுன் இராசதானி கைப்பற்றப்பட்டது. யுத்தத்தில் ரிப்புவு முயிரிழந்தான். இவ்வெற்றிகளுக்குக் காரணமாயிருந்தவன் தேசாதிபதியின் சகோதரன் ஆர்தர் உவெல்லெஸ்லி. (Arther Wellesley) என்பவன். இவனே நெப்போலிய யுத்தங்களிற் கீர்த்தியடைந்து டியூக் ஒவ் உவெல்லிங்ரன் என்ற மகிமைப் பட்டம் பெறலாயினன். இதன்பின் மைசூர் இராச்சியம் ஹைதர் அலியா லகற்றப்பட்ட இந்துவரசனின் மரபிற் தோன்றிய வொருவனுக்குக் கொடுக்கப்பட்டு, ஆங்கில சமஸ்தானவாசி யொருவனும் நியமிக்கப்பட்டான். அரசனே இராச்சிய கருமங்களைப் பார்க்க விடப்பட்டான். மைசூர் அரசர் இராச்சியத்தைத் திருத்தி முன்னேற்றத்திற்குக் கொண்டுவரும் முறையில், ஆங்கில பாதுகாப்பின் கீழ், நல்லாட்சி செய்தனர்.

மைசூரைப் போன்று இந்தியாவின் வேறுசில பாகங்களும் விரைவில் ஆங்கிலர்க்காயின. தஞ்சாவூரரசன் தனது இராச்சியத்தைக் கைப்பற்ற நினைத்த எதிரி யொருவனுக்குப் பயந்து ஆங்கிலரிடம் சரண்புகுந்தான். அவனிராச்சியம் வர்த்தக சங்கத்திற்கானது. அவனுக்கு இளைப்பாற்றிச் சம்பள மளிக்கப்பட்டது (1799). அதே வருஷத்தில் சூரத் ஆங்கில நாடுகளுடன் இணைக்கப்பட்

டது. சிறிது காலத்திற்குப்பின் கானற்றிக் (Carnatic) முழுவதும், அயோத்தியா மாகாணத்திற் பெரும் பகுதியும், சேர்த்துக்கொள்ளப்பட்டன.

இரண்டாம் மருட்டிய யுத்தம்.

மைசூர், அயோத்தி, ஆதியாமிடங்கள் நெடுங் காலமாக மருட்டியருக்குப் பரிதானங் கொடுப்பது வழக்கமாயிருந்தது. ஏனெனில், மருட்டியர் திருட்டுத் தொழில் செய்பவர்கள். காலத்துக்குக் காலம் அவர்கள் இவ்விடங்கட்குச் சென்று கொள்ளையடித்து வந்தனர். அவர்களின் அநியாயத்தினின்றுந் தப்பிக்கொள்வதற்காக வருடாந்தம் பெருந் தொகைப் பணம் இறுக்கப்பட்டது. இவ்விடங்கள் ஆங்கிலராற் பிடிக்கப்பட்ட பின்னர் மருட்டியர் சூறையாடவும், பணம் பறிக்கவும் முடியவில்லை. அதனால் யுத்தஞ்செய்தென்கிலும் தமதெண்ணத்தை நிறைவேற்றத் துணிந்தனர். இவ்வேளையில் (1795) மருட்டிய இராச்சியமும் சிதைவுற்றது. அரசனிலும் பலமுள்ள பிரதானிகள் பலர் தோன்றினர். அவர்கள் அவனுடன் போர்செய்து வெற்றியடைந்தனர் (1802). ஆங்கிலரின் துணை அரசனுக்கு வேண்டியதாயிற்று. மருட்டிய வரசன் ஆங்கிலருடன் உடன்பாட்டுக் கிணங்கியதை யறிந்து அவன் எதிரிகளாகிய சிந்து (Sind) பெரூர் (Berar) நாட்டரசரும், ஒல்கார் (Holkar) என்ற திருடர் தலைவனும் ஆங்கிலரைப் போருக் கெழுந்தனர். யுத்தத்தில் மருட்டிய சேனை அசேயி (Assaye) என்ற

இடத்தில் 1803ல், தோல்வியடைந்தது. இரண்டு வருடங்கள் செல்லுமுன் ஒல்கார் தவிர மருட்டிய பிரதானிகள் யாவரும் ஆங்கில அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதாகப் பொருத்தஞ் செய்தனர்.

உவெல்லெஸ்லி தேசாதிபதியின் இந்திய சேவை உண்மையாகவே வியக்கத்தக்கது. அவன் தன்னுடைய நோக்கங்கள் நிறைவேறுவதற்காக மிகவும் பிரையாசையுடனுழைத்தான். அவனால் திப்பு சுல்த்தானின் இராச்சியம் அழிக்கப்பட்டது. தென்னிந்தியா முழுவதையும் ஆங்கிலரின் கீழோர் சம்யுக்த இராச்சியமாக்கியவ னவனே. உத்தியோகஸ்தரைப் பயிற்றும் சாலைகளை ஸ்தாபித்து அவர்களின் பிழைகளைத் திருத்தியவனு மவனே. ஆனால் வர்த்தக சங்கத்தார் அவனுடைய ஆட்சியை விரும்பவில்லை. யுத்தங்களும் பொருத்தங்களுமன்று உடன் ஆதாயம் மாத்திரமே சங்கத்திற்குத் தேவையாயிருந்தது. இக்காரணம்பற்றிச் சங்கம் தேசாதிபதியை இங்கிலாந்திற்கு அழைத்துக்கொண்டு திரும்பவும் கோண்வாலிஸை அனுப்பி வைத்தது. இம்முறை லோட் கோண்வாலிஸ் தேக சுகமற்ற விருத்தாப்பியனாய் இந்தியாவை யடைந்தான். இளமைப் பருவத்திற்போல மனோதைரியத்துடன் எதையுஞ் செய்ய முடியாதவனாய், எச்சாதியோடும் எளிதிற் சமாதானஞ் செய்பவனா யாட்சி புரிந்து, இரண்டு மாச முடிவில் மரணமானான். இவனுக்குப் பின் வந்த ஜோர்ஜ் பார்லோ (George Barlowe) என்ப

வனும் லோட் கோண்வாலிஸின் கிழப்பராயவாட்சி முறையைக் கையாடினான்.

லோட் மின்ரோ
(Lord Minto)
1807—1813.

மின்ரோவும் சமாதானத்தைப் பாதுகாக்கக் கருதினானாயினும் மருட்டியரும் மற்றுஞ் சாதியினரும் ஆங்கில நாடுகளைக் கொள்ளையடித்து வருத்தாதிருக்கச் செய்ய வழி பார்த்தான். சீக்குகளுள் முதல்வனான இரஞ்சித சிங்கி (Ranjit Singh) என்பவனின் படையெழுச்சியைப் போரினாலும், சாமோபாயத்தினாலு மடக்கினான். இரஞ்சித சிங்கி இத்தருணத்திற் செய்த பொருத்தத்தின்படி, மரண பரியந்தம் சமாதானத்திற்குப் பங்கம் விளைக்கவில்லை. மின்ரோ தேசாதிபதி புத்திசாதுரியமும் வினைத் திட்பமு முள்ளவன். நெப்போலியன் ஐரோப்பாக் கண்டத்தை அதிரச் செய்த காலத்தில், கீழைத் தேசத்தில் பிரான்சியரை எதிர்த்த கடற்பட்டாளத்திற்கு இவன் தலைவனானான்; கீழ்க் கடல்களிலிருந்து பிரான்சிய கப்பற் படையைத் துரத்தினான்; இந்து சமுத்திரத்தில் பிரான்சியர் பிடித்திருந்த மொறிஷியஸ், பூர்வோன் (Bourbon) முதலிய தீவுகளைக் கைப்பற்றினான் (1800). ஒல்லாந்தரின் குடியேற்ற விடமும் பிரான்சியரின் ஆளுகையிலிருந்ததுமான மொலுக்காஸ் (Moluccas) தீவுகளையும் பிடித்தான்; அடுத்த வாண்டிற் கீழைத் தேசத்தில் ஒல்லாந்தரின் பிரதானவிடமாயிருந்த யாவா (Java) வையும் வென்றான். [யாவா 1815ல் திரும்பவும் ஒல்லாந்தருக்குக் கொடுக்கப்பட்டது.]

3-ம் அதிகாரம்.

இலங்கை ஆங்கிலர் வருகை.

ஒல்லாந்தரின் ஆட்சியும் அதன் பயனும்.

ஆரம்ப காலங்களில் ஒல்லாந்தர் இலங்கையை அதி ஊக்கத்துடனும் யோசனையுடனும் ஆட்சி செய்தாராயினும் அவ்வாறு முழுக்காலமும் தொடர்ந்து ஆளுதற்கு வசதிகள் ஏற்படவில்லை. அவர்கள் கண்டி அரசனுடன் அடிக்கடி முரண்பட வேண்டியிருந்தது. தங்கள் வியாபாரத்திற்கவசியமான கறுவாச் சரக்கைக் கண்டியரசனிடமிருந்து பெற்றுக்கொள்வதிற் கலகங்கள் பலவுண்டாயின. இவற்றால் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்பட்ட கரைநாடுகளில் நல்லாட்சி நடைபெறவில்லை. இடையிடையே அரசுக்கு மாறான குழப்பங்கள் தோன்றின.

ஒல்லாந்த நாடுகள் வர்த்தகக் கொம்பனியாரா லாளப்பட்டவை. தேசாதிபதிகள் அரசியற் கருமங்களிலு மதிகமாக வியாபார விஷயத்திற் கரிசனை கொண்டனர். கரைநாட்டுத் தேசாதிபதிகள் தத்தம் பிரிவுகளில் மாத்திரம் ஓரளவிற்கு ஒழுங்கு வரு

வித்தனர். அவர்களுடைய விசேஷ கவனம் பணஞ் சம்பாதிப்பதிலும் வர்த்தக சங்கத்திற்கு இலாபம் வருவிப்பதிலுஞ் சென்றது. கடமையிற் கவனமற்றோராய், அரசனிடமிருந்து நயத்தாலும் பயத்தாலுங் கறுவா பெற்றுக்கொள்ள மாத்திரந் தெண்டித்ததால், அவர்களது ஆட்சி அனுகூலப்படவில்லை.

சுயநல ஆட்சிமுறை போர்த்துக்கேயர், சிங்களர், காலத்திற் போலவே நடைபெற்றது. பட்டாளத்திற் சேர்ந்தவர்கள் முதலியார், முகாந்தரம், போன்ற உத்தியோகஸ்தரின் கீழிருந்தனர். சாதாரண சனங்களுக்குக் கோறாளை அல்லது தலைமைக்காரர் அதிகாரிகளாயிருந்தனர். இரு பகுதி உத்தியோகஸ்தரிடையே காலத்துக்குக் காலம் சச்சரவுகளுண்டானதாற் சில இடங்களில் ஒருவனே இரு உத்தியோகங்களையும் பார்க்க விடப்பட்டான். உயர்ந்த உத்தியோகங்கள், திசாவைகள் உட்பட, ஒல்லாந்தருக்கே யளிக்கப்பட்டன. அவர்கள், தேச லாபம் கருதாத, சுயநலப் புலிகளாயிருந்தனர். மலையாளிகள் ஒல்லாந்த பட்டாளத்திற் கட்டாயசேவை செய்தனர். சோனகர் "ஊழியம்" எனப்படுவதும் "இராசகாரியம்" போன்றதுமான கட்டாய ஊழியஞ்செய்யக் கடமைப்பட்டிருந்தனர். அதினின்றும் தப்பிக்கொள்ள வேண்டுமானால் தவறாது வரியிறுக்க வேண்டியிருந்தது.

இவ்வகையான குறைபாடுகளிடையே ஒல்லாந்தர் உண்மையாகவே நிலைபெற்ற கொடைகள் பலவற்றை இலங்கைக் களித்திருக்கின்றனர், முதலாவதாக யஸ்ரினியன் (Justinian) என்ற றோமைச் சக்கரவர்த்தியா லியற்றப்பெற்ற தேச சட்டங்கள் ஒல்லாந்திற்போல இலங்கையிலும் வழங்கச் செய்தனர். "றோமன்-டச்-லோ" என்ற பெயரால் தற்போது அழைக்கப்படுஞ் சட்டங்கள் இவையேயாம், கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், முதலிய பெரிய பட்டினங்களில் ஒல்லாந்தர் மூன்று நீதிவிசாரணைக் கோடுகளையும் ஸ்தாபித்தனர். இவற்றுள் ஒன்று தற்போதைய சுப்பிறீங்கோடு போன்றது. பற்றேவியா (Batavia) விலுள்ள நீதிமன்றம் மாத்திரம் இதன் தீர்ப்புக்களை ஆராய அதிகாரமுள்ளது. கீழ்க்கோடுகளிலிருந்து வரும் வழக்குகளும் இங்கே விசாரணைக் கெடுக்கப்பட்டன. அடுத்த கோட்டில் நிலவுரிமை பற்றிய விசாரணைகள் நடத்தப்பட்டன. அதற்குக் கீழ்ப்பட்ட கோடு தற்போதுள்ள பொலிஸ் கோடுகளுக்கும் டிஸ்திறிக் கோடுகளுக்கும் சமானமானது. தலைமைக்காரரும் சிறு குற்றங்களைப்பற்றிய விசாரணை செய்யவும் தண்டனை கொடுக்கவுந் தத்துவம் பெற்றனர்; மேற்போந்த நீதிவிசாரணை முறைகள் நாட்டில் நற்பயனளிக்க வேண்டியவை. ஆனால் தகுதியற்ற நீதிபதிகள் கைலஞ்சம்பெறல், காலதாமசஞ் செய்தல்

போன்ற துர்ப் பழக்கங்களா லவற்றைப் பாழாக்கினர்.

இரண்டாவதாக, இலங்கையில் கிருஷிகத்தை வளர்ப்பதற்கும் ஒல்லாந்தர் பேருதவி செய்தனர். கறுவாச் செய்கையை அதிகமதிகம் ஊக்கப்படுத்தினர். நெல் விளைவித்தலிலும் அவர்களே முன்னோடிகளாயினர். அநேக புதிய பயிர்களும் அவர்களாலே கொண்டுவரப்பட்டன. அவற்றுள் முக்கியமான கோப்பிச் செடி 1720ல் இங்கு முதன் முதலாக நாட்டப்பட்டது,

மூன்றாவதாக ஒல்லாந்தர் கட்டட நிருமாணத்திற் சிறந்தவர்கள். இலங்கையின் அநேக அழகிய கட்டடங்கள் அவர்கள் காலத்திலேயே நிறுவப் பெற்றவை. கொழும்பில் இராசமாலிகிதரின் பழைய காரியாலயமும் ஆட்டுப்பட்டித் தெருக் கோவிலும், (Wolfendaal Church) காலிக் கோட்டையும் ஒல்லாந்தராற் கட்டப்பட்டவை. புத்தளவெட்டுவாய்க்காலும் அவர்கள் வேலையே.

சமய விஷயத்தில் ஒல்லாந்தர் போர்த்துக்கேயரைப் போன்று அநியாயமாகச் சனங்களை வதைக்கவில்லை. சமய கருமங்கள் "கோவிற்கோடு" எனப்படும் சபையாராற் கவனிக்கப்பட்டன. கல்வி வளர்ச்சிப் பொறுப்பும் அச் சபைக்குத்தானே கொடுக்கப்பட்டது. கிராமங்கள் தோறும் பாடசாலைகள் திறக்கப்பட்டன. சிறுவர்களெல்லோரும் ஒல்லாந்த பாஷை கற்கவேண்டியிருந்தது.

ஒல்லாந்த பிள்ளைகளுக்கென ஆரம்ப பாடசாலைகளும் கொழும்புச் "செமினரி" என்னும் உயர்தரக் கல்லூரியும் ஸ்தாபிக்கப்பட்டன. பற்பல இடங்களிலும் செபக்கூடங்கள் கட்டப்பட்டன.

போர்த்துக்கேய பாஷை மொழிகள் சிங்களத்தில் அதிகமாகக் கலந்து வழங்குகின்றன. ஒல்லாந்தருடைய பாஷையினின்று "தோம்பு, பட்டோலை, தேச வழமை" முதலிய ஒரு சில சொற்கள் மாத்திரமே பாவனைக்கு வந்தன. ஒல்லாந்தருடைய புரொட்டெஸ்தாந்து சமயத்தைத் தழுவியவர்களும் மிகச் சிலரே. ஒல்லாந்த பழக்க வழக்கங்களும் இலங்கையரின் சீவியத்திற் காணக் கிடைப்பதரிதே.

ஆங்கிலரின் முதல் வருகை.

கண்டி அரசின் தொந்தரவு நீங்கியதென்று ஒல்லாந்தர் எண்ணக்கூடிய தருணத்தில், ஆங்கிலர் அவர்களுக்குப் பகைவராயினர். அமெரிக்க சுவாதீன யுத்தம் இங்கிலாந்தின் எதிரிகளிடையே கலவரம் உண்டாகச் செய்தது. பிரான்ஸ் அமெரிக்கர்மேல் அனுதாபங்கொண்டு சேனையுதவியது. ஒல்லாந்து பிரான்சின் முன்மாதிரியைப் பின்பற்றி அமெரிக்கர்மேற் கொண்டுள்ள அனுதாபத்தைத் தெரிவித்ததுமன்றி ஆங்கிலரோடு யுத்தமுந்தொடக்கியது. (1780). இச்சமயத்திற் தூரதேச குடியேற்ற நாடுகளின் பாதுகாப்புக்காக ஆங்காங்கு சேனை

கள் அனுப்பப்பட்டன. ஆங்கிலர் இலங்கையைச் சருவுமிடத்து யாழ்ப்பாணம், திரிகோணமலை, கொழும்பு, காலி முதலிய பட்டினங்களிலுள்ள கோட்டைகளைக் காவல்செய்தற்கான படை சேர்க்கப்பட்டது. தேச பட்டாளம் போதாதிருந்தமையால் டேமியூறன் (De Meuron) எனும் சுவீதிய பிரபுவிடமிருந்தும் வேறு தனியாட்களிடமிருந்தும் போர்வீரரை ஒல்லாந்தர் வாடகைப் பணங்கொடுத்துப் பெற்றுக்கொண்டனர்.

ஒல்லாந்தர் இங்கிலாந்துடன் போருக்கெழுந்ததைக் கேள்வியுற்ற சென்னைச் சேனுபதி லோட் மக்காட்னி (Lord Macartney) என்பவன் இந்தியாவில் ஒல்லாந்தரின் ஆதீனத்துக்குட்பட்ட நாடுகளைக் கைப்பற்றும் பொருட்டு அவ்விடங்களுக்குச் சேனைகளனுப்பினுன். 1781ம் ஆண்டு கார்த்திகை மாதம் ஒல்லாந்தரின் பிரதான நகரமாகிய நாகபட்டணம் பிடிக்கப்பட்டது. அடுத்த தை மாதத்தில் சேர் எட்வேட் ஹியூஸ் தளபதி திரிகோணமலையைக் கைப்பற்றினுன். மக்காட்னி பிரபு ஒல்லாந்தருக்கும் கண்டியரசனுக்குமுள்ள பகையை நன்கறிந்தவனுதலால் அரசனேடு உடன்படிக்கை செய்தல் யுக்தியெனத் தீர்மானித்து “பொயிட்” (Boyd) என்னும் காரியதரிசியைத் தூதனுப்பினுன்; அவ்வேளையில் கண்டிக்கரசனுயிருந்த இராசாதி இராசசிங்கன் தான் ஆங்கிலவரசனேடன்றிச் சென்னைத் தேசாதிபதியோடு உடன்படிக்கைசெய்

வதில்லையெனத் தட்டிவிட்டான்; ஆங்கிலருடன் யுத்தந் தொடுப்பதற்கு இதுவே தருணமெனக் கண்டு பிரான்சிய கப்பற்படைத் தலைவன் டி சவ்விறேயின் (de Snffren) ஹியூஸ் தளபதியின் கப்பல்களோடு மும்முறை வெற்றி தோல்வியின்றிப் போர் பொருதினுன். பொயிட்துரை இலங்கையை விட்டுச் செல்லுகையில் சவ்விறேயினுடைய கப்பல்களிலொன்ருற் கைதியாக்கப்பட்டான். திரிகோணமலை 1782-ம் வருஷம் ஆவணி மாதம் 25-ந்திகதி சவ்விறேயினுற் பிடிக்கப்பட்டது. மறுபடியும் பிரான்சியர் 1784ல் திரிகோணமலையை ஒல்லாந்தருக்குக் கொடுத்தனர்.

ஒல்லாந்தரை இலங்கையினின்று அகற்றுதற்குத் துணைதேடிய இராசாதி இராசசிங்கன் பிரான்சியரோடு ஐக்கிய உடன்பாடு செய்வது அரசனின் முதல் உத்தியோகஸ்தருள் ஒருவனுன பிலாமைத்தலாவை (Pilame Talauwe) என்பவனுல் ஒல்லாந்தருக்கு அறிவிக்கப்படவே இருபகுதியாருக்குமிடையே சமாதான நிலை தோன்றியது.

ஆங்கிலர் வருகை.

முன்னதிகாரத்திற் கூறப்பட்டபடி பிரான்சிய கலகக்காரரால் ஒல்லாந்த ஒறேஞ்சு வமிசத்தரசன் 1794ல் முடியிழந்தான். ஒல்லாந்தில் குடியரசுமுறை தொடக்கப்பட்டது. ஐரோப்பிய தேசங்கள் ஒவ்வொன்றும் தத்தம் பாதுகாப்புக்காகப் பிரான்சுடன் போருக்கெழுந்தன.

நாடிழந்த ஒறேஞ்சு மன்னன் ஆங்கிலரிடம் சரண்புகுந்து அவர்களும் பிரான்சியர்மீது பகை கொள்ளுமாறு உபாயங்கள் கையாடினன். ஒல்லாந்த குடியேற்ற நாடுகளான இலங்கையையும், தென்னாபிரிக்காவில் கேப்கலனியையும், கலகக்காரர் கைப்பற்றுவாரென அஞ்சிய அரசன் அவ்விடங்களுக்குப் போர்க் கப்பல்கள் அனுப்பும்படி ஆங்கிலரைத் தூண்டினான். ஆங்கிலரும் அவ்விடங்களைத் தமக்காக்கிக்கொள்ளச் சந்தர்ப்பம் வாய்க்குமென்றெண்ணிச் சம்மதித்தனர்.

சென்னைத் தேசாதிபதியாகிய ஹோபாட் பிரபு 1795-ம் ஆண்டு ஆடிமாதம் அக்நியு (Agnew) என்பவன் மூலம் இலங்கையிலுள்ள "வானஞ்சல் பேர்க்" (Van Angelberk) தேசாதிபதிக்கு இரு கடிதங்கள் அனுப்பி வைத்தான். அவற்றுளொன்று ஒல்லாந்த வரசனுடையது. அதில் ஆங்கில சேனைகளையும் கப்பல்களையும் ஏற்குமாறு ஒல்லாந்தவரசன் கேட்டிருந்தான். மற்றக் கடிதம் ஹோபாட் பிரபுவால் எழுதப்பட்டது. அதில் ஆங்கில சேனைகளையும் கப்பல்களையும் தடையின்றி ஏற்காதிருந்தால் பலாத்காரம் உபயோகிக்கப்படுமென்று கூறப்பட்டிருந்தது. வானஞ்சல்பேர்க் சுயதேச சம்பவங்களைப் பூரணமாயறியவில்லை. பிரான்சியர் ஒல்லாந்தின்மீது படையெடுத்ததையும் ஒல்லாந்த வரசன் இங்கிலாந்திற் கொழித்தோடியதையும் மாத்திரம் அவன் அறிந்தான்.

நாடுவிட்டுச் சென்ற அரசனை இன்னமும் அரசனாக மதித்து அவனுடைய கட்டளைக் கமையத் தேசாதிபதி பின்னிற்க வில்லை. ஆனால் ஒல்லாந்த நாடுகள் யாவையும் ஆங்கிலருக் கொப்படைக்கும் எண்ணம் அவனைத் திடுக்கிடச் செய்தது.

ஆகவே தேசாதிபதி தன் மந்திர சபையைக் கூட்டி அவர்களின் ஆலோசனை பெற்றுப் பின்வரும் உத்தர மளித்தான். "நாங்கள் ஆங்கிலரை எங்கள் நட்பினராக ஏற்கிறோம். 800 ஆங்கில போர்வீரரை ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கின்றோம். எங்கள் நாடுகளை ஆங்கில பாதுகாப்பிற்கு ஒப்படைக்க ஒருபோதும் ஒருப்படோம். எங்கள் மன்னனிடமிருந்து தரப்பெற்ற கடிதத்தில் அப்படியான கட்டளை யொன்றும் இல்லை".

இது நீதியான விடையெனக்கண்ட ஹோபாட் பிரபு உடனே திரிகோணமலையிலுள்ள ஊஸ்றென் பேர்க் (Oostenburg) கோட்டையைக் காவல்செய்ய 300 ஆங்கிலவீரரை யனுப்பினன். அக்காலத்திற் திரிகோணமலையின் தளகர்த்தனாயிருந்த வோண் போவர் (Fornbawer) இவர்கள் ஒல்லாந்த தேசாதிபதியிடமிருந்து பெற்றுவந்த கடிதத்தில் ஐயுறவுற்றுக் கொழும்பிலுள்ள தனது சிரேஷ்டருக்கு அறிவித்தான். அவனது உத்தரம் கிடைக்குமுன் ஆங்கிலர் பலாத்காரமாகக் கரையி லிறங்கினர். ஒல்லாந்த ஒறேஞ்சு வம்ச அரசன் முடியிழந்ததையும் பிரான்சிய குடியரசின் கீழ் ஒல்லாந்து அமைந்திருப்பதையும் கொழும்புத் தேசாதிபதி அப்போ

துதான் அறிந்தான். ஆகவே ஆங்கிலரை எதிர்க்கும்படி திரிகோணமலைத் தளபதிக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. இது ஆங்கிலரின் செவிக்கேறவே, அவர்கள் 1795-ம் ஆண்டு, ஆவணி மாதம் 23-ந்திகதி, பிறெடிறிக் கோட்டையைத் தாக்கினர். மூன்று நாட்களாகக் குண்டுமாரி பொழிந்த பின்னர் கோட்டையையிலகுவிற் கைப்பற்றிக் கொண்டனர்.

இதன்மேல் ஒன்றன்பின்னொன்றாக, ஆவணி மாதம் 31-ந்திகதி ஊஸ்ரென்பேர்க் கோட்டையும் அடுத்தமாதம் 18-ந்திகதியில், மட்டக்கழப்புக் கோட்டையும் பிடிக்கப்பட்டன. புரட்டாசி மாசம் 24-ந்திகதியில், பருத்தித்துறையும், மறுநாள் யாழ்ப்பாணமும் ஐப்பசிமாசம் முதலாந் திகதியில், முல்லைத் தீவும் அம்மாதம் 5-ந்திகதியில் மன்னாரும், கார்த்திகை 13ல் கற்பிட்டியும், யாதும் தடையின்றி ஆங்கிலர்க்குக் கையளிக்கப்பட்டன.

தலைநகராகிய கொழும்பு மாத்திரம் இன்னமும் ஒல்லாந்தருக்கா யிருந்தது. கொழும்பைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலர் பல சூழ்ச்சிகள் கையாடினர். யாழ்ப்பாணத்தைப் பிடித்த சேனை ஏலவே பார்பத் தளபதியுடன் 1796-ம் வருடம் மாசிமாசம் 3-ந்திகதி நீர்கொழும்புக் கனுப்பப்பட்டது. திரிகோணமலையைப் பிடித்த சேனை ஸ்ருவாட் தளபதியுடன் இராமேஸ்வரம்போய் ஆங்

குள்ள பிரதான துருப்புக்களுடன் நீர்கொழும்பிற்குச் செல்வதற்கு அனுப்பப்பட்டது. இந்திய சிப்பாய்களும் அங்கு அவர்களைச் சேர்ந்தனர். ஆங்கிலர் வருவதைக் கண்ட ஒல்லாந்தர் மெல்ல மெல்லப் புறங்காட்டிக் கொழும்பை யடைந்து, அதையே காப்பதிற் கவனஞ் செலுத்தி நின்றனர்.

இதே வேளையில் டெமியூறன் என்ற பிரபுவினிடமிருந்து ஒல்லாந்தர் வாடகைக்குப் பெற்றுக் கொண்ட பயிற்றப்பட்ட 600 போர்வீரரையும் ஆங்கிலர் தங்கள் சேனையிற் சேர்ப்பதற்குப் பிரபுவுடன் ஒழுங்கு செய்துகொண்டனர். இவர்களை இழந்ததால் ஒல்லாந்த சேனைப்பலந் தளர்வுற்றது.

கொழும்பைக் கைப்பற்றும் நோக்கமாக ஆங்கிலர் செய்த உபாயங்களு ளொன்று றொபேட் அன்டுறூஸ் (Robert Andrews) என்னுஞ் சென்னைச் சிவில் உத்தியோகஸ்தன் ஒருவனைக் கண்டியரசனோடுடன்படிக்கை செய்ய அனுப்பியதேயாம். மாத்தளைத் திசாவையும் இரண்டாம் அதிகாரமும் அன்டுறூஸை (Nalanda) நாலந்தையிற் சந்தித்து, இராசாதிராசசிங்கனிடம் அழைத்துச் சென்றனர். பிரதானிகளும் அரசனும் அன்டுறூஸிடம் ஓர் உறுதி வாக்குக் கேட்டனர். அதாவது "ஆங்கிலர் பிடிக்கும் இடங்களைத் திரும்பவும் ஒல்லாந்தருக்குக் கொடுக்கப்படாதென" வாக்களிக்கும்படி

வேண்டி நின்றனர். ஐரோப்பாவில் அவ்வேளையில் நடைபெற்ற யுத்தத்தில் பிரான்சிய கலகக்காரரினின்று ஒல்லாந்தை மீட்கும் நோக்கத்தோடு மாத்திரம் ஆங்கிலர் ஒல்லாந்த குடியேற்ற இடங்களைப் பிடித்தனர். அத்தால் ஐரோப்பிய யுத்த முடிவில் இத்தேசங்கட்கிடையில் சமாதானமோ அன்றேல் பகையோ நிலைக்குமென்று அன்டுறாஸ் என்பவன் அறியாதவனதலால், அரசனும் பிரதானிகளுங் கேட்டதற்கு அவன் சம்மதி கொடுக்கவில்லை.

கடைசியாக. மீகஸ்தென என்பவனின் தலைமையில், ஓர் தூதுக்கோஷ்டி சென்னைத் தேசாதிபதிக்கு அனுப்பப்படவேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டது. சென்னைத் தேசாதிபதியான ஹோபாட் பிரபு இவ்வித நிரந்தரமான உடன்பாட்டுக்கு இசைந்தனரேனும், இந்திய பிரதம தேசாதிபதியான "ரெயின்மத்" (Teignmouth)) பிரபு தாம் ஒல்லாந்தருடன் நட்பும் பகையும் சாதிப்பது ஐரோப்பிய நிலைமையிற் பொறுத்துள்ளதெனத் தெரிவித்தார்.

ஈற்றில், 1796ம் ஆண்டு, மாசிமாதம் 12-ந் திகதி, மீகஸ்தென சென்னையிற் செய்துகொண்ட வுடன்படிக்கையின் பயனாக, இலங்கை யரசர் அநேகாண்டுகளாக ஒல்லாந்தரிடம் பெற்றுக்கொள்ள முடியாதிருந்த இரண்டு சலாக்கியங்கள் கிடைக்கப்பெற்றன. அவை:—

023314

முதலாவதாக அரசன் தன் சொந்த உப்புச் சாலையொன்றைக் கரைப்பகுதியில் வைத்திருக்கவும்; இரண்டாவதாகப் பத்துக் கப்பல்களுடன் பிறநாடுகளோடு வியாபாரஞ் செய்யவுமாம். இவ்வுடன்படிக்கை சென்னையில் எழுதப்பட்டு அன்டுறாஸ் என்பவனால் இலங்கையரசனிடம் கொண்டுவரப்பட்ட சமயத்தில், அரசன் அதற்குக் கைச்சாத்திட மறுத்து விட்டான். கண்டி அரசர் ஆங்கிலருடன் இவ்வாறு சமாதானப்பட்டிருப்பின் பிற்காலங்களிற் கண்டியின் சரித்திரம் முற்றுமே வித்தியாசப்பட்டிருக்கும்.

கொழும்பு முற்றுகை.

போதிய தொகைப் படைவீரரும் மற்றும் முஸ்திப்புகளும் இப்போ ஆங்கிலருக்கு ஆயத்தமாயிருந்தன. ஆகவே அவர்கள் தாமசமின்றிக் கொழும்புக்குப் படையெடுத்துச் சென்றனர். ஆங்கிலர் விரைந்து முன்னேறிச் செல்வதைக் கண்ட ஒல்லாந்தவீரர் பட்டினத்தை நோக்கி ஓட்டம் பிடித்தனர். நீர்கொழும்பிலிருந்து கொழும்புக்குச் செல்லும் வழி இருமருங்கும் காடடர்ந்த ஓரடிப் பாதையாயிருந்தது. ஒழித்திருந்து எதிர்ப்பதற்கேனும் ஒல்லாந்தருக்குத் துணிவிருக்கவில்லை.

1796 ம் ஆண்டு மாசி மாதம் 5ந் திகதி ஆங்கில சேனை ஜயலா (Jaela) வுக்குச் சென்றது.

018299

இதையறிந்த ஒல்லாந்தர் ஆங்கிலர் நெருங்கிவருவதைத் தடுப்பதற்காய் ஐந்து கூட்டம் போர்வீரரை வத்தளை (Wattale) க்கு அனுப்பிவைத்தனர். ஆனால் மறுநாளில், ஒருகூட்டந்தவிர ஏனைய நாலுந் திருப்பி யழைக்கப்பட்டன. இன்னோர் கூட்டம் முகத்துவாரத்திற்கு (Mutwal) அனுப்பப்பட்டது. மாசிமாதம் 6-ந்திகதி ஆங்கிலர் பட்டினத்தையணுகி மாபோலையை (Mabole) யடைந்தனர்; அவர்களை எதிர்க்க (Grand Pass) பாலத்துறைக்கு ஒல்லாந்த சேனை சென்றது. இரு நாட்களின் பின்னர் இச்சேனையும் மீளவும் எடுக்கப்பட்டது. இவ்வாறாக ஒல்லாந்த சேனைகள் ஒருநாளென்கிலும் ஒரேயிடத்திற் தரிக்காமல், இடத்திற்கிடம் மாறிமாறிக் கடைசியில் பட்டினத்திற்குள்ளே சென்றுகொண்டிருந்தன.

கூலிப்படையிலுள்ள டி றேமன்ட் (de Raymond) என்பவன் ஒருவனே ஒல்லாந்தர் பக்கத்திற் துணிகரமாகச் சண்டை செய்தான்; மாசிமாதம் 10-ந்திகதி இராவானவுடன், அவன் ஆங்கிலர் தங்கியிருந்த வோரிடத்திற்குச் சில போர்வீரரை நடத்திச் சென்று எண்பது ஆங்கிலரைத் தரைக்கிரையாக்கினான். அவனும் அவ் யுத்தத்திலேயே இறக்கலாயினான்.

மறுநாள் 11-ந்திகதி, 18 ஆங்கில கப்பல்கள் கொழும்புத்துறைமுகத்தை யடைந்து, மாற்றாரின்

குண்டுபொழியும் துப்பாக்கிகட்கெட்டாத தூரத்தில் நங்கூரமிட்டன. இச்சமயத்தில் ஒல்லாந்த படையில் அமர்ந்த சிங்களர், மலையாளர், சிப்பாய்கள் முதலியோர் ஒல்லாந்தருக்கு முற்றும் மாறாகக் கலகங்கள் செய்தனர்.

மாசிமாசம் 13-ந்திகதி ஒல்லாந்த இராணுவ உத்தியோகஸ்தர் ஒருங்கு சேர்ந்து நடத்திய ஆலோசனையின் பேறாகத் தாங்கள் இன்னும் மூன்று நாட்களுக்கு மேல் ஆங்கிலரை எதிர்க்க முடியாதென்றும், எதிர்ப்பது சரியல்லவென்றும் முடிவுக்கு வந்தனர். 14-ந்திகதி ஸ்ரூவாட் தளபதி ஒல்லாந்தரிடங் கேட்டுக்கொண்டபடி அடுத்தநாள் வானஞ்சல்பேர்க் தேசாதிபதி கொழும்பை ஆங்கிலருக்குக் கையளித்தான். 16-ந்திகதி, ஆங்கிலசேனை கொழும்புக் கோட்டையைக் கைப்பற்றியது.

வானஞ்சல்பேர்க் அத்தருணத்தில் வேறொன்றுஞ்செய்ய இயலாதவனானான். ஏனெனில் யுத்தம் நடந்தமையால் வியாபாரப் பொருட்கள் வியாபாரசாலைகளில் அடைபட்டிருந்தன. வியாபாரமின்மையாற் பணம் மிகக் குறைவாயிருந்தது. போர்வீரரின் தொகை ஆங்கிலரை எதிர்ப்பதற்குப் போதியதாயிருக்கவில்லை. சுயதேசத்தினின்று படையென்கிலும் பணமென்கிலும் கிடைக்கக்கூடியதாயிருக்கவில்லை. சுயதேச நிலையோ எப்படிப் பட்டதென்பதை நிச்சயமாக அவன் அறிய முடி

யாதிருந்தது. பிரான்சியரின் துணையை நாடுவதோ அன்றேல் ஆங்கிலரின் சனுவைப் பெறுவதோ எது சரியாயிருக்குமென்பது எந்நேரமும் விளங்கமுடியா விஷயமாயிற்று.

கரைநாடுகளில் அங்கிலேயரின் ஆரம்பகால ஆட்சி.

ஒல்லாந்தர், ஆங்கிலரிடம் சரண் புகுந்தபோது. பின்வரும் நிபந்தனைகளுக்குச் சம்மதித்தனர்:—

1. கொழும்பை மாத்திரமன்றி மற்றெல்லா நாடுகளையும் வியாபாரப் பொருட்களையும் ஆங்கிலருக்குக் கையளித்தல்.

9. ஒல்லாந்த படையிலுள்ளோர் சென்னைக்குச் செல்லுதலும் உத்தியோகஸ்தராயுள்ளவர்கள் தீர்வையின்றித் தம் பொருட்களையுங் கொண்டு பிறவிடங்கட்குப் போதல் அன்றேல் இலங்கையிற் தங்குதலும்;

3. ஒல்லாந்த நீதிஸ்தலங்கள் இன்னும் ஒரு வருடம் நிலைநின்று அவற்றிலுள்ள வழக்குகளை விசாரணை செய்தலும்.

4. கொம்பனி உத்தியோகஸ்தர் 18 மாதங்களென்கிலும் தங்கி நின்று வரவு செலவுத் திட்டங்கள் காண்டலும்.

5. ஒல்லாந்த மிஷனரிகள் தங்களின் தேவாலயங்களிலே தரித்தலும்.

6. பணமுடையாற் பரிதாப நிலையுற்றிருந்த வர்த்தக சங்கத்தின் பொறுப்பை ஆங்கிலர் ஏற்றுக் கொள்ளுதலும்.

ஐரோப்பாவில் நடைபெற்ற யுத்தம் முடியும் வரையும் ஒல்லாந்தர் இலங்கையிற் பிடித்திருந்த இடங்களைப் பாதுகாத்துக் கொடுக்கும் நோக்கத்தோடு முதன்முதல் இலங்கைக்கு வந்த ஆங்கிலர் இத்தீவைச் சீரான முறையில் ஆட்சி செய்ய நினைக்கவில்லை. தீவின் வியாபாரத்திற் பங்கும், சென்னை, கற்குத்தா, முதலிய விடங்களுக்குச் செல்லுங் கப்பல்களுக்கு வசதியான திரிகோணமலைத் துறைமுகமும், அவர்களுக்குக் கிடைத்தாற் போதுமென எண்ணினர். முதன்முதல், கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் பொறுப்பிலேயே இலங்கை விடப்பட்டது. சென்னைத் தேசாதிபதி, ஹோபாட் பிரபு கொழும்பைக் கைப்பற்றிய தளபதி ஸ்ருவாட் என்பவனை முதற் தேசாதிபதியாக அனுப்பி வைத்தான். இவனே இராணுவத்திற்கும் தேசத்திற்கும் அதிபதியானன். சிலமாசங்கள் கடந்தபின் இவனிடமாக டொயில், (Doyle) உப தளகர்த்தன் தேசாதிபதியின் கடமைகளைப் பார்த்து வந்தான். இன்னுஞ் சில மாசங்களால் டேமியூறன் தளகர்த்தன் அவ்வுத்தியோகத்திலமர்ந்தான். மூவரும் ஆட்சியனுபவமில்லாச் சாமானியபோர்வீரர். தேசத்தில் ஒருவகையான ஒழுங்கு நிலவச் செய்தனரேயன்றி வேறொன்றும் நிறைவேற்ற வல்லபமற்றி

ருந்தனர். இவர்கள் கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், திரிகோணமலை, மன்னார், முதலிய இடங்களில் மறநெறிக் கோடுகள் ஸ்தாபித்தனர். ஒல்லாந்த உத்தியோகஸ்தர் தங்கள் வேலைகளில் நிலுவையாயிருந்தவற்றைச் செய்து முடித்தனர். இராணுவத்தின் செலவிற்கு வேண்டிய பணம் வரியாக அறவிடப்பட்டது.

வரி அறவிடும் உத்தியோகம் ரொபேட் அன்ட்ரூஸ் என்பவனுடையது. அவனும் அவனுக்குப் பின் அவ்வுத்தியோகத்தி லமர்ந்த பிறரும் பணம் அறவிடுவதற்காக இலங்கையை மூன்று பிரிவாகப் பிரித்தனர்.

1. மாத்துறை தொடக்கம் சிலாபம் வரையுமுள்ள நாடுகளைக் கொழும்புப் பிரிவெனவும்.

2. மட்டக்கழப்பும் கீழ்க்கரையுஞ் சேர்ந்தவிடங்களைத் திரிகோணமலைப் பிரிவெனவும்,

3. மன்னார் புத்தளம், கற்பிட்டியை யடக்கிய வடபாகத்தை யாழ்ப்பாணப் பிரிவெனவும் பெயரிட்டனர்.

வரி அறவாக்கும் மூன்று பிரதான உத்தியோகஸ்தரின் கீழும், சென்னையிலிருந்து கொண்டுவரப்பட்ட தமிழர் அநேகர் வேலை பார்த்தனர். முந்திய சிங்கள விதானை, அதிகாரம், முதலியோர் நிறுத்தப்பட்டனர். சென்னையாட்கள் சனங்களி

றுக்க வேண்டிய வரியின் ஒரு குறித்த பாகத்தை மாத்திரம் அறவாக்கி, அரசுக்கு ஒப்படைக்கக் கடமைப்பட்டவர்கள். மிஞ்சிய பாகத்தைத் தாமே எடுத்து ஆதாயமடைந்தனர்.

சனங்களிடையே இம்முறை அதிக திருப்தியீனத்தை யெழுப்பியது. சிங்கள தலைமைக்காரர், போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலங்களிலும்,கடமை பார்த்தவர்கள். அவர்களுடைய நீதியீனங்களிலும் பார்க்கச் சென்னை உத்தியோகஸ்தரின் அநியாயங்கள் பொறுக்க முடியாதவை. அன்றியும் முந்திய காலங்களில் கமக்காரர் நிலங்கட்காக வரியிறுத்தல் வழக்கமாயிருக்கவில்லை. வரிக்குப் பதிலாக ஊழியமே செய்யப்பட்டது. இப்போ ஊழியம் ஒதுக்கப்பட்டு வரி கட்டாயமாக்கப்பட்டது. சனங்களின் நிர்ப்பாக்கியநிலை போதாதென்றூற்போலத் தென்னை வரியுந் தொடங்கியது. ஒரு மரத்திற்கு ஒருபணம் (வெள்ளி நாணயம்) இறுக்கவேண்டியிருந்தது. தென்னையின் பிரயோசனம் தென்னை வரிக்குப் போதியதா யிருக்கவில்லை. இவ்வேளையில் இலங்கையிற் தங்கிய ஒல்லாந்தரும், வேலை நிறுத்தம் பெற்ற சிங்கள தலைமைக்காரரும், சனங்களின் பக்கஞ் சேர்ந்து அவர்களை உற்சாகப் படுத்திக் கலகத்திற்குத் தூண்டிவிட்டனர். இதன் பின் நடைபெற்ற கலகத்தில், வரி சேர்க்கும் சென்னையாள னொருவன் திரிகோணமலையிற்

கொல்லப்பட்டான். கொழும்புக் கலகம் சிப்பாய்களால் அடக்கப்பட்டது.

இலங்கைச் சம்பவங்களைப்பற்றிக் கேள்வியுற்ற ஹோபாட் பிரபு கலக காரணங்களை ஆராய்வதற்கெனச் சங்கமொன்றை நியமித்து, டேமியூறன், அக்நியூ, அண்டுறாஸ் என்பவர்களை அதன் அங்கத்தவர்களாக்கினான். இவர்களுள் அண்டுறாஸ் என்பவன் இக் குழப்பங்களுக்குக் காரணமான ஆட்சிமுறையை ஆரம்பித்தவனாவன். மூவரும் நடத்திய விசாரணைப் பயனாக 1798ம் ஆண்டு ஆடிமாதம் தென்னைவரி நிறுத்தப்பட்டது. வரிகளுக்குப் பதிலாக ஊழியங் கட்டாயமானது. சிங்களத் தலைமைக்காரர் திரும்பவும் நியமனம் பெற்றனர். டேமியூறன் என்பவன் தேசாதிபதியாக்கப்பட்டான். இவனே மேற்கூறிய திருத்தங்களைச் செய்துவைத்தான்.

முடி ஆட்சி.

ஐரோப்பாவில் யுத்தம் இன்னமும் நடைபெற்றது. இலங்கை ஆங்கிலர் பாதுகாப்பினின்று நீங்கக் காலம் அதிகம் இருப்பதாகத் தோன்றியது. ஆகையால், இலங்கையை ஏற்றமுறையாக ஆண்டு வருவது அவசியமென ஆங்கிலர் கண்டனர். 1798-ம் ஆண்டு இலங்கை ஆங்கில இராசாங்கத்தோடு சேர்க்கப்பட்டது. சங்கைக்குரிய விறெடிறிக் நோர்த் (Frederick North) என்பவர் தேசாதி

பதியாக நியமிக்கப்பட்டார். இவரே அரசியற் பொறுப்பைக் கையேற்றுக் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஊழியரைப் பல உத்தியோகங்களிலமர்த்திச் சுதேசிகளின் பூர்வ முறைகளைத் தழுவி, எல்லாச் சாதி சமயத்தவருக்குமிசைய, அரசு நடத்தினார். இவருடன் "ஹியூகிளெக்ஹோண்" (Hugh Cleghorn) என்பவர் பிரதம லிகிதராக அனுப்பப்பட்டார்.

இவர் காலத்தில் அண்டுறாஸ் என்பவன் வரியறவிடும் உத்தியோகத்தினின்று எடுக்கப்பட்டான். வரியறவிடுதற்கான தேசப்பிரிவுகள் ஐந்தாக வகுக்கப்பட்டன. அவை கொழும்பு, காலி, மட்டக்களப்பு, திரிகோணமலை, யாழ்ப்பாணம் என்பன. வைத்தியப்பகுதி, கல்விப்பகுதி, நில அளவைப்பகுதி, கணக்குப் பரிசோதனைப்பகுதி ஆதியாம் வேலைப்பகுதிகள் புதிதாகத் தாபிக்கப்பட்டன. சேர் கொட்றிங்ரன் எட்மண்ட்கறிங்ரன் (Sir Codrington Edmund Carrington) என்பவர் பிரதம நீதிபதியாக நியமிக்கப்பட்டார். நீதிவிசாரணை முறைகளைப் பண்டைய முறைகளோடொட்டிப்பார்த்துப் புதுப்பிக்கும் வேலை அவருக்கானது. அவரால் சுப்பிறீங்கோடு, டிஸ்திறிக்கோடு, பொலிஸ்கோடுகள் ஏற்படுத்தப்பட்டன. நோர்த் மன்னவர் காலத்தில் இலங்கையில் அம்மைநோயுண்டானது. அத்தால் அம்மைப்பால் குத்தும் முறை தொடக்கப்பட்டு ஆஸ்பத்திரிகளுந் திறக்கப்பட்டன.

நோர்த் மன்னவரின் மூன்றுவருஷ ஆட்சியின் பின், மற்றோர் மாற்றம் வருவதாயிற்று. 1801-ம் வருட முடிவில் நெப்போலியன் செய்த எமியென்ஸ் (Amiens) உடன்படிக்கையின்படி ஆங்கிலர் காப்பாற்றிய ஒல்லாந்த விடங்களெல்லாம் ஆங்கிலருக்காயின. இலங்கை 1802 ல் முடிக்குரிய குடியேற்ற நாடெனப் பெயர் பெற்றது. ஒரு அரசனுக்குச் சொந்தமானதும் அவனுடைய குடியேற்ற நாடுகளின் லிகிதர்மூலமோர் தேசாதிபதியாலாளப்படுவதுமான தேசம் முடிக்குரிய குடியேற்ற நாடெனப்படும்.

கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் தொடர்பு இத்தோடு நீங்கியது. சென்னையாட்கள் இலங்கையினின்று அகற்றப்பட்டனர். இதன்மேல் இலங்கைச் சிவில் உத்தியோகஸ்தர் அவர்களின் வேலைகளைக் கையேற்று நடத்தி வந்தனர்.

நோர்த் மன்னவரால் இலங்கையடைந்த இன்னோர் நன்மை, தற்போது அரசியற் சங்கமெனப் பெயர்பெறும் சங்கத்தின் மூலசபையென்று சொல்லக்கூடியவோர் மந்திரசபை ஏற்படுத்தப்பட்டமையாம். அதிற் பிரதம லிகிதரும், பிரதம நீதிபதியும், பட்டாளத்தலைவரும் அங்கத்துவம் வகித்தனர்.

கறிங்ரன் என்பவரால் தொடக்கப்பட்ட சுப்பிறீங்கோடு 1802 ம் ஆண்டு, மாசிமாதம், 8 ந் திகதி திறக்கப்பட்டது. பிரக்கிராசி, அப்புக்காத்து

எனப்படும் நியாயதுரந்தரர்கள் இக் கோட்டால் நியமிக்கப்பட்டனர். நீதிவிசாரணை மற்றும் அரசியற் கருமங்களோடு தொடர்பில்லாத புறம்பான வேலையாக நடைபெற்றது. இவ்வொழுங்கு சனங்களின் பாதுகாப்பிற்கும், நீதி செலுத்துதற்கு வேண்டிய வசதிக்கும், ஏற்றதெனக் கொள்ளப்படுகிறது.

1802 ல் நோர்த் மன்னர் வரிக்குப் பதிலாக ஊழியஞ் செய்வதை மாற்றித் திரும்பவுங் கரைநாடுகளில் ஐந்திலொன்றும், மலைநாடுகளில் பத்திலொன்றுமாக வரி விதித்தார். இதனால், கறுவாச் செய்கை முன்போன்ற வியாபாரத்திற்குப் போதியதாயிராததைக் கண்டு, திரும்பவும் 1808 ல் வரி நீக்கப்பட்டு, ஊழியமுறை சட்டமாக்கப்பட்டது.

இலங்கையின் ஒழுங்கான ஆட்சிக்கு அடிகோலியவர் இவரே. கண்டி இராச்சிய சம்பந்தமான விஷயங்களில் மாத்திரம் இவருடைய நோக்கங்கள் சித்திபெறவில்லை. இவர் 1805 ல் உத்தியோகத்தினின்று இளைப்பாறினார். ஆங்கிலர் கைப்பற்றிய இடங்களின் ஆட்சியை நன்மைப்படுத்துவதற்கு நோர்த் மன்னவர் தொடக்கியவற்றை 'தொமஸ் மெயிற்லன்ட் பிரபு' தொடர்ந்து செய்யப் பிரயாசப்பட்டார். இவர் கண்டி இராச்சியத்துடன் யாது தொடர்புமின்றி ஆளுதற்குச் சித்தமானார். இவருடைய இரண்டாம் நீதிபதி சேர் அலெக்சாந்தர் யோண்ஸ்ரன் (Sir

Alexander Johnston) என்பவரின் துணையுடன் கொளும்பு, காலி, யாழ்ப்பாணம், திரிகோணமலை—மட்டக்களப்பு, புத்தளம்—சிலாபம், ஆதிய பிரதான பட்டினங்களில் இவர் 5 மாகாணக் கோடுகளை ஸ்தாபித்தார். இக்கோடுகள் நோர்த் மன்னரால் ஸ்தாபிக்கப்பட்ட சுப்பிறீங் கோடுகளுக்கும் பொலீஸ்கோடுகளுக்கும் இடைத்தரமானவை. விசாரணைக்கு எடுக்கப்படும் விஷயங்களும் மத்திம அளவான குற்றங்களே. நீதி விசாரிப்போர் மாகாண ஏசண்டுத் துரைமாரின் அதிகாரத்திற்குட்படாதிருந்தனர். யோண்ஸ்ரன் முஸ்லீம்களுக்கான தேசப் பிரமாணங்களையும் எழுதி வைத்தார்.

மெயிற்லன்ட் பிரபு கத்தோலிக்கரின் இராசபக்தியைப் பெரிதும் மெச்சி அவர்களின் சமயாநுசாரத்திற்கு மாறுன பிரமாணங்கள் யாவையும் நீக்கினுர். இலங்கைச் சுப்பிறீங் கோடுகளில் இவர் காலந் தொடக்கியே யூரித்துரைமார் விளக்கம் நடைபெறலானது. யோண்ஸ்ரன் என்பவரின் அயர்விலா உழைப்பும், ஒத்துழைப்பும் இவர் இன்னும் பல காரியங்களை நிறைவேற்றுவதற்குக் காரணமாயின. இவ்விருவர் காலத்தில் ஊழியமுறை திரும்பவும் கட்டாயமானது; கமச்செய்கை அபிவிர்த்தியின் பொருட்டுப் பழைய குழங்களைப் புதுப்பித்தற்குச் சனங்களை ஊக்குவித்தனர்; கிருஷிக சம்பந்தமான காட்சிகளும் நிகழ்த்தப்பட்டன.

இக்கால முன்னேற்றத்திற்குத் தடையாயிருந்தவை கண்டிக் கலகங்களும், கடைவரியாலுண்டான குழப்பங்களுமாம். கடைகளில் விற்கப்பட்ட எல்லாப் பொருட்களிலும் ஒரு சிறிய தொகைப் பணம் வரியாக எடுக்கப்பட்டது (1806). இந்தவரி சனங்களிடையே பெருங் கிளர்ச்சியை உண்டாக்கியமையால் இது நீக்கப்பட்டு, இதற்குப் பதிலாகத் தீவினுட் கொண்டுவரப்படும் பொருட்களில் இறக்குமதி வரி ஏற்படுத்தப்பட்டது. இது தவிர அரசாங்கத்திற்கு வேறு வருவாய்களுமுள்ளன. அவை பின்வருமாறு:—

முத்துக் குளிப்பு, சோனகர் முந்தியகால ஊழியத்திற்குப் பதிலாக இறுத்தவரி, பாக்கு, உப்பு முதலிய வரிகள்· கறுவாவிலும் சாராயத்திலும் அரசாங்கத்திற்கு ஏக வியாபார அதிகாரமிருந்தது.

4-ம் அதிகாரம்

இலங்கை: கண்டி ஆங்கிலருக்காதல்

புராதன கண்டி இராச்சியம் எப்படி ஆங்கிலவரசுடன் இணைக்கப்பட்டதென்பதைத் தொடர்பான சம்பவங்கள் மூலம் அறிந்துகொள்வோம். ஆங்கிலர்காலப் பிரதான சம்பவமென்று சொல்லக்கூடியது, 1815ல் செய்யப்பட்ட உடன்படிக்கைப்படி கண்டி இராச்சியம் ஆங்கில ராதீனத்துக்

குட்பட்டதே. இதனால் அநேகாண்டுகளுக்குப்பின்னர் இலங்கையும் இலங்கை மக்களும் மறுபடியும் ஒன்றிக்கக் காரணமாயிற்று. இவ்வொற்றுமையானது பிறதேசத்தவரால் வருவிக்கப்பட்டதாயினும் இலங்கையின் முன்னேற்றத்திற்கும், சீர்திருத்தத்திற்கும் இதுவே வழிதிறந்ததெனலாம்.

கண்டி இராச்சியம்.

19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கண்டி இராச்சியம் சுவாதீன நாடாயிருந்த காலத்தில், அதன் நிலை எத்தன்மையானதென்பது கவனிக்கத் தக்கது. கண்டியில் அரசனே சர்வ அதிகாரமும் பெற்றிருந்தான். பிரதானிகளும் ஏனைய உத்தியோகஸ்தரும் அவனாலேயே நியமிக்கப்பட்டனர். அரசனே நீதிவிசாரணை செய்தான். அவனுடைய தீர்ப்புக்களை அவனே திருத்தக் கூடும். அரசனே சமய கர்த்தா ஆவன். சமய குரவர் அவனாலேயே தெரியப்பட்டனர். அவனே தலதா மாளிகை போன்ற புத்தாலயங்கட்குப் பராபரிப்புக்காரரை நியமித்து வந்தான். அவனுடைய அதிகாரத்தை மட்டுப்படுத்தக்கூடிய சாதனங்கள் மிகச் சிலவே. புராதீன பழக்க வழக்கங்கள் சனங்களின் மனதில் நன்றாக வேரூன்றியிருந்தமையால் அவற்றிற்கு மாறான எச்செயலும் குழப்பங்களை உண்டுபண்ணற் கேதுவாயின. சிங்களப் பிரதானிகள் சிலரின் செல்வாக்கும் பொறாமையும் எந்நேரமும் சனங்களை அரசனுக்கு விரோதமா யெழுப்பும்

இதுவுமன்றிக் கொடுங்கோன் மன்னர்க்குச் சம்பவிக்குங் கொலையையும் அரசன் நினைக்க வேண்டியிருந்தது.

அரசவுரிமை அரசனின் மகனுக்குடையது. உரிமையைப் பற்றிய விவாதம் ஏற்படுங் காலத்தில் அரசனைத் தெரியுமதிகாரம் பிரதானிகளுக்குரியது. அரசனுக்கடுத்து இரண்டு அதிகாரங்களிருந்தனர். அவர்கள் இராச்சியம் முழுவதிலும் அதிகாரஞ் செலுத்தக்கூடும். முதல் அதிகாரம் பிரதான இராணுவ அதிகாரியெனப் பட்டம் பெற்றான். அதிகாரங்களின் கீழ் நாலு பிரதான திசாவைகளும் வேறு எண்மரும் இருந்தனர். இவர்களெல்லோரும் அரண்மனையில் வசித்தனர். அதிகாரங்களும், திசாவைகளும் சுற்றோட்டம் போகும்போது தங்கள் நடத்தைக்குப் பிணையாகத் தங்கள் குடும்பங்களை அரண்மனையில் விட்டுச் செல்வது வழக்கம். திசாவைகளுக்குக் கீழ் அநேக தலைமைக்காரர் இருந்தனர். அவர்களுட் பிரதானமானவர் இரட்டமாத்தையா (**Ratemahatmaya**) என அழைக்கப்பட்டனர். வேறு அரசாங்க வேலைப் பகுதிகளில் “லேகம்” எனப்படும் லிகிதர் கடமை பார்த்தனர். பஞ்சாயங்கள் அல்லது கன்சபாவாக்கள் அநேகம், கிராமங்கள் தோறும், காணப்பட்டன. நீதி வழங்குதல் திசாவைகளிடத்தும் தலைமைக்காரரிடத்தும் தங்கியிருந்தது. சாதி பார்ப்பது

பட்சபாதங் காட்டுவது, கைலஞ்சம் ஏற்பது ஆகிய
துர் வழக்கங்களால் அவர்கள் நீதி செலுத்தத்
தவறினர். கொலைத் திர்ப்புக் கொடுக்க அரச
னுக்கு மாத்திரம் அதிகாரமுண்டு. ஆனால் உள்
நாடுகளில் பல தடவைகளிலும் பிரதானிகள் தாமே
அவ்வதிகாரத்தை உபயோகித்தனர்.

அரசாங்கத்தின் நிலங்களைப் பெற்றுப் பயிர்
செய்தவர்கள் அந்நிலங்களுக்காக ஊழியஞ்செய்து
வந்தனர். உதாரணமாகச் சேனையிலுள்ளோர்
தமக்களிக்கப்பட்ட நிலத்திற்காகப் பட்டாளச்
சேவை புரிந்தனர். அரசதிறை, ஊழிய வாயிலாயும்
முடிக்குரிய கிராமங்களின் வருவாயினாலும், மரண
வரி, நெல்வரி, போன்ற வரிகளினாலும், இன்னும்
பிரதானிகள் நியமனம் பெறும்போதும், புதுவரு
டப் பிறப்பு முதலிய தினங்களிலும் கொடுக்கும்
வெகுமதிகளினாலும், சேகரிக்கப்பட்டது.

பிரதானிகளுந் தலைமைக்காரரும் காணிகளுத
வப்பட்டிருந்தனரன்றி வேதனங் கொடுக்கப்பட
வில்லை. அவர்கள் அநியாய அபகரிப்பினாலும்,
கைக்கூலியினாலும், தங்கீழுள்ளவர்களிடமிருந்து
பெற்றுக்கொள்ளும் உபகாரங்களினாலும் தமக்கு
வேதனந் தேடிக் கொண்டனர்.

பிலாமைத்தலாவையின் சூதுகள்.

ஆங்கிலர் தாம் பிடித்த கரைநாடுகளில் ஒழுங்
கானதும் சமாதானமுடையதுமான ஆட்சி நடக்க

வேண்டுமானால் கண்டி யரசனுடன் ஓர் முடிவான
உடன்படிக்கை செய்ய வேண்டுமென உணர்ந்த
னர். முன்னர் அன்டுறாஸ் என்பவன் கொண்டு
சென்ற நயமான நிபந்தனைகளை யுடைய உடன்
படிக்கையை இராசாதி இராசசிங்கன் நிராகரித்த
தோடு அவர்களின் முதலாம் பிரயத்தனம் வீணா
யிற்று.

கண்டி இராச்சியமோ ஒழுங்கற்ற நிலையிலிருந்
தது. சிறீ விஷயஇராசசிங்கன், கீர்த்திசிறீ முதலிய
முந்திய மதுரை அரசர்கள் பிரசைகளின் அன்பை
யும் நன்மதிப்பையும் பெற்றிருந்தனர். பின்வந்த
அரசர்களின் ஆட்சி அதிகம் அனுகூலப்படாத
தால், விசேஷமாகச் சிங்களப் பிரதானிக
ளிடையே, பரபரப்புக் காணப்பட்டது. இவ்வாறு
திருப்தியற்றிருந்த பிரதானிகளுள் முதல்வன் பிலா
மைத்தலாவை என்னும் முதல் அதிகாரம். இவ
னோர் தந்திரியும் துட்டனுமாக இருந்ததன்றிச் சிங்
காதனத்தைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டு
மென்ற வாஞ்சையு முடையவனானான்.

1798-ல் பிலாமை மற்றப் பிரதானிகளின்
உதவியோடு இராசாதி இராசசிங்கன் அரசிழக்கச்
செய்தான். ஆயினும் தனது சூழ்ச்சியின்படி
தானே அரசனாகத் தெண்டித்தபோது அநேக
தடைகள் குறுக்கிட்டன. உடன் பிரதானிகளெல்
லோரும் அரசினின்று அந்நியனை அகற்றத்

துணைச் செய்தனரேயாயினும் அவனுடைய அவாவைப் பூர்த்தியாக்க முன்வரவில்லை. தக்க தருணம் இன்னமும் வரவில்லையெனக் கண்ட பிலாமை அரசிழந்த மன்னனின் மைத்துனனாகிய முத்துச்சாமியைத் தற்காலிக வரசனாகக் கடமை பார்க்க விட்டான். ஆனால் முதலதிகாரம் என்ற மட்டிற் தன்னிலேயே அதிக பொறுப்பை வைத்துக் கொண்டான்.

சொற்ப காலத்திற்குப்பின் 1798-ம் ஆண்டு ஆடிமாதத்தில்இராசாதிஇராசசிங்கன் இறந்தபோது அவனிடமாக வொருவனை நியமிப்பது முதலாம் அதிகாரத்தின் கடமையாயிற்று. தன்மேற் பொருமைகொண்டிருந்த பிரதானிகள் தன்னை அரசனாக ஏற்றுக்கொள்ளமாட்டார்களென் றுணர்ந்த பிலாமை, இத்தருணத்தில், இறந்த வரசனின் வழித் தோன்றல்களுள் மிக்க இளமையும், புத்திக் குறைவுமுடைய சிறீ விக்கிரமராசசிங்கனென்பவனை நியமிக்கலாயினன். இவனைத் தான் விரும்பியவாறு நடத்தலாமென் றெண்ணினன் பிலாமை. முத்துச்சாமி ஆங்கில நாட்டுக் கொழித்தோடி அங்கிருந்து யாழ்ப்பாணஞ் சென்று அங்கே ஆங்கிலர் பாதுகாப்பின் கீழ் வாழ்ந்து வந்தான்.

பேரளவில் மாத்திரம் அரசனாயிருந்தவனும், பிலாமையால் நியமிக்கப்பட்டவனுமாகிய, சிறீ விக்கிரம இராசசிங்கனின் காலத்தில் கிடைக்கும் முதற் தருணத்தில் அரசனாகிவிட வேண்டுமென்

றெண்ணிப் பிலாமை தனது சத்துராதிகள் யாவரையும் மிகவுங் கொடுமையாகத் தண்டித்தான். ஆனால் உடன் பிரதானிகள் மதுரை அரசனை அங்கீகரிக்க மாட்டார்களென்றும், அதிலுங் கூடியதாகத் தன்னை ஏற்கமாட்டார்களென்றும் அவன் மட்டிட் டறிந்து ஆங்கிலரின் உதவியை நாட எண்ணங் கொண்டான்.

அவ்வண்ணமே 1799-ம் ஆண்டு மாசிமாதம் நோர்த் மன்னவரை அவிசாவலையிற் சந்திக்க ஏற்பாடு செய்தான். இச்சமயந் தேசாதிபதியுடன் யாது பேசவேண்டுமென்பதை அவன் நிச்சயித்துக்கொள்ளவில்லை. அவர் தனக்கு உதவிசெய்யக் கூடியவரோ வென்று அவரது மன நிலையைத் தெளிந்துகொள்ளப் பார்த்தான். ஆங்கிலர் கண்டிக்குச் சேனை யனுப்பிச் சிறீ விக்கிரம ராசசிங்கனைக் கொலுவினின்றும் நீக்கித் தன்னை அரச பதவியில் வைப்பரேல் அவர்களுக்கு விலையிலா வியாபார சலாக்கியங்க ளளிப்பதாகக் கூறினன். தேசாதிபதி யவனுடைய பேச்சுக்குச் சற்றேனும் இணங்கவில்லை. ஆனாற் கண்டி இராச்சிய விஷயங்களில் அவருக்குள்ள கரிசனையை விளங்கிக்கொண்டான்.

மறுபடியும் அவ்வாண்டு, மார்கழிமாதம் பிலாமை நோர்த் மன்னவரை அவிசாவலையிற் சந்தித்து ஆங்கிலர் தனக் குதவி புரிவரேல் தான் சிறீ விக்கிரம ராசசிங்கனைக் கொன்று இராச்சியத்தைப் பிடிப்பதாகத் தெரிவித்தான்.

இப்படியான பழிபாதகத்தைச் சீர்திருத்த முள்ள எவனும் எண்ணியிருக்க மாட்டான். இத்தகைய துரோகியுடன் எவனும் எவ்வித சகவாசமும் வைத்துக்கொள்ளான். ஆனாற் கண்டி இராச்சியத்தில் பிலாமைக்கன்றி வேறொருவனுக்குஞ் செல்வாக்கில்லையென்று நோர்த் மன்னரறிந்ததால் அரசனோடு யாது பேச்சுக்கும் போகாமல், மீண்டும் பிலாமையோடு கலந்துரையாடி வந்தார்.

1800ம் ஆண்டு, தை மாதத்தில், மூன்றாம் பிரதம காரியதரிசி பொயிட் (Boyd) என்பவனை அவிசாவலையிற் தரிசித்தான். இஃதிவ்வாறாகச் சிறீ விக்கிரம ராசசிங்கன், பிலாமை நினைத்ததுபோல ஒரு பாவையாகவிருக்கவில்லை. அவன் ஆதரவற்றவனுமல்ல. முதல் அதிகாரி ஆங்கிலரின் துணையைப் பெறுவதற்காகச் சூழ்ச்சிகள் செய்து வந்த காலங்களில் அரசன் பிரதானிகளைத் தன் பக்கமாக்கித் தன்னைப் பெலப்படுத்தினான். பிரதானிகளும், அரசன்மேலன்பில்லாதிருந்தும், பிலாமையின் மனோ வாஞ்சையைப் பொறுமையுடனும் பயத்துடனும் அவதானித்து வந்தனர். இவற்றைக் கண்ணுற்ற பிலாமை ஆங்கில சேனையொன்றைக் கண்டிக்கு நடத்திச் சென்று அரசனைத் துரத்த வேண்டுமென்ற ஆசை கொண்டான்.

அநேக நாட்களாக அவனொரு முற்றுக்கும் வரவில்லை. ஆங்கிலரோ, போர்த்துக்கேயர், ஒல்

லாந்தரைப் போலக் கண்டியரசனுடன் சண்டையிட்டுக்கொள்ள விரும்பவில்லை. ஓர் சமாதான ஒப்பந்தத்தையே அவர்கள் விரும்பினர். பிலாமையுந் தன் மூலமாக மாத்திரம் அப்படிப்பட்ட உடன்படிக்கை செய்யக் கூடுமென்று அவர்களை விளங்கச்செய்தான். ஆனால் அரசனைக் கொலை செய்வதோ தமக்குச் சம்மதமாகாதென ஆங்கிலருரைத்தனர். பிலாமையோவென்றாற் தன்னை அரசனுக்கத் தவறிய எவ்வித சூழ்ச்சியையும் விரும்பாதிருந்தான்.

கடைசியாக நோர்த் மன்னவர் ஓர் வழி கூறினார். சிறீ விக்கிரம ராசசிங்கன் அரச பரிவாரங்களோடும், அரச மரியாதையுடனும் ஆங்கில நாட்டிற் சீவிக்க விடப்பட்டிருக்கப் பிலாமை முதலதிகாரமாகவிருந்து, கண்டி ராச்சியத்தை ஆண்டுவரவேண்டுமென்றுபாய முரைத்தார். இது பிலாமையின் விருப்புக்கு மாறானதெனினும், உடனேயோர் ஆங்கில சேனையைக் கொண்டு சென்று கண்டி யரசனைப் பயமுறுத்த வேண்டுமென்ற ஆசையால் உந்தப்பெற்று, இதற்குச் சம்மதிக்கலானான்.

மக்டவலின் தூது.

இந்த அரை மனதான சூழ்ச்சி அரைமனமாகவே கையாளப்பட்டது. மக்டவலென்னுந் தளபதி கண்டிக்கோர் சேனை நடத்திச் சென்றான்.

இவனுடைய உண்மையான நோக்கம் நோர்த் மன்னவரின் விருப்பின்படி கண்டி இராச்சியத்தை ஆங்கிலரின் ஆணைக்குட்படுத்துவதும், பிலாமையின் செல்வாக்கை நாட்டுவதும், பிலாமையின் சதிமானத்தினின்று கண்டியரசனை மீட்பதுமாம்.

மக்டவலின் நோக்கம் எவ்வாறிருந்தபோதிலும் அது பயனடையவில்லை. அரசனோ துருப்புகளை ஏற்றுக்கொள்ள மறுத்துநின்றான். ஆகையாற் சேனையிற் பெருந்தொகையை றுவான்வல்லையில் விட்டுச் செல்ல வேண்டியதாயிற்று. ஆனால் அரசனுடைய அரண்மனையாட்கள் மக்டவலைக் கன்னொறுவாவிற் சந்தித்துக் கண்டிராச்சியத்தை ஆங்கிலரின் பாதுகாப்பின்கீழ்த் தாம் வைப்பதில்லையென்று மரியாதையுடன் தெரிவித்தனர். ஈற்றில் மக்டவல் கண்டியையடைந்தபோது ஓர் கொண்டாட்டமான பேட்டியளிக்கப்பட்டதன்றிக் காரியம் ஒன்றும் பலிக்கவில்லை.

இருவருடங்களின் பின்னர் 1802ல் இரண்டாம் அதிகாரம் மீகஸ்தென என்பவன் கண்டி மன்னனின் தூதுவனாகக் கொழும்பு சென்று, கடற்கரையிலோர் பண்டகசாலையையும் பிறநாட்டு வியாபாரத்திற்காகப் பத்துக் கப்பல்களையுமுதவும்படி கேட்டான். ஆனால் தேசாதிபதியைத் தனிமையாகக் காணச் சமையம் வாய்த்ததும், அவன் பிலாமையின் பழைய நோக்கமாகிய சிறீ விக்கிரமராசனைக்கொலை

செய்யும் சூழ்ச்சியைத் தெரிவிக்கவே, தேசாதிபதி சீற்றங்கொண்டு மிக்க மன வெறுப்போடு மக்டவலுக்குச் செவிசாய்க்க மறுத்து நின்றார்.

எவ்வகையான உபாயங்களும் பலிக்காதிருப்பதைப் பிலாமை கண்டு, பலாத்காரத்தினாலேனும் தேசாதிபதியைக் கண்டிக்குச் சேனையனுப்பச் செய்யவேண்டுமெனத் தீர்மானித்தான். இதற்காகச் செய்யக்கூடிய ஒரேயொரு வழி, ஆங்கிலர் கண்டி அரசனைப் பகைக்கச் செய்வதே. பிலாமையின் முயற்சியால் பலவகையான வதந்திகளும் கொழும்பில் நுளையத் தொடங்கின. கண்டியரசன் கோட்டைகளை அரண்படுத்திச் சேனைகளைத் திரட்டி யுத்தத்திற்கு ஆயத்தப்படுகின்றானென்னுஞ் சமாச்சாரம் பரந்தது. பின்னர் 1802-ம் ஆண்டு ஆங்கில பிரசைகளாகிய புத்தளச் சோனக வியாபாரிகளின் சரக்குகள் கண்டி நாட்டில் பறிக்கப்பட்டு அவர்களுங் கைதிகளாக்கப்பட்டனர்.

பிலாமையா லாயத்தஞ் செய்யப்பட்ட இத்துணிகரமான விரோதச் செயல் ஆங்கில அதிகாரிகளை விழிக்கச் செய்தது. குற்றஞ் செய்யாத ஆங்கில பிரசைகளை இவ்வாறு தொந்தரை செய்ததற்கு அவர்கள் நஷ்ட பரிகாரங் கேட்டனர். இதற்குத் தகுந்த பதில் கிடைக்கவில்லை. அன்றியும் கொடுப்பதாக வாக்குப்பண்ணிய நஷ்ட ஈட்டை

யரசன் மீண்டும் மீண்டும் பின்போட்டு, ஈற்றில் மறுத்துவிட்டான். பின்னர் பிலாமைக்கும் அரசனுக்கும் அறிவித்தல் கொடுத்தபின், மேற்போந்த அநியாயம் திரும்பவும் நடைபெறாவண்ணம் கண்டிக்குச் சேனையனுப்பத் தீர்மானித்தார்.

கண்டி யுத்தம்.

1803-ம் ஆண்டின் தொடக்கத்தில் இரண்டு ஆங்கில சேனைகள் கண்டிக்குப் புறப்பட்டன. ஒன்று மக்டவல் தளபதியின் கீழ்க் கொழும்பிலிருந்து தம்பதேனியா மார்க்கமாகவும், மற்றையது பார்பத் தளபதியின் கீழ்த் திரிகோணமலையிலிருந்து வதுளை மார்க்கமாகவும் சென்றன. இவை மாசிமாதம் 19-ந்திகதி மகாவலிகங்கைக் கரையிற் சந்தித்தன. இருநாட்களின்பின் எதிர்ப்பின்றிக் கண்டிக்குட் பிரவேசித்தன. அரசனும் பிலாமையும் அநேக குடிகளும் பட்டணத்தை எரியூட்டி ஓடி ஒழித்தனர். பட்டினம் முற்றாகத் தீப்பற்றவில்லை.

கண்டியைப் பிடிப்பது சுலபமாயிருந்தது. ஆனா லதைப் பிரயோசனப்படுத்துவதும் அதினின்று திரும்பவுங் கொழும்புக்குச் செல்லுவதும் ஓர் பெரும் பிரச்சினையாயிருந்தது. சிறீ விக்கிரம ராசசிங்கன் ஒழித்தோடியதால் அவன் அரசைத் தானாகவே கைவிட்டா னென் றெண்ணி ஆங்கிலர் முத்துச் சாமியைத் தீவிரமாய் யாழ்ப்பாணத்திலிருந்து வரு

வித்து 1803-ம் ஆண்டு பங்குனி மாதம் 3-ந்திகதி அவனைக் கண்டிக் கரசனாக்கினர். அத்தருணத்திலேயே ஆங்கிலர்க்குக் கண்டி இராச்சியத்தின் முழுப் பொறுப்புங் கொடுத்து ஓர் பொருத்த சாதனமும் எழுதப்பட்டது.

ஆனால் முத்துச் சாமிக்குச் சார்பான ஆட்கள் கண்டியில் ஒருவரு மிருக்கவில்லை. அவனால் ஆங்கிலருக்கு யாது துணையுங் கிடைக்கவில்லை. பிலாமையே அநேகாண்டுகளாக ஆங்கிலரோடு கருமங்கள் செய்து வந்தவன். அவனும் அரசனோடு ஓடித் தப்பிவிட்டான். அவனின்றி யாதுஞ் செய்ய முடியவில்லை. அவன் திரும்பவும் வெளிப்படும் வரையில் ஆங்கிலர் பொறுத்திருக்க வேண்டியதாயிற்று.

பிலாமை மறுபடி காணப்பட்டபோது மிகவுங் கோபங்கொண்டவனாயும். பயங்கரத்திற்குரியவனாயும் காணப்பட்டான். அவனுடைய சூழ்ச்சிகள் எல்லாம் வீணாயின. தானே கண்டிக் கரசனாகிவிட வேண்டுமென்று அவன் விரும்பியிருக்க, முத்துச்சாமி அரசனாகி விட்டான்.. ஆங்கிலரே இதற்குக் காரணம். அவர்களை எதிர்ப்பது புத்தியாகத் தோன்றவில்லை. ஏனெனிற் கண்டியில் அவர்களின் சேனைகளிருந்தன. அவர்களுக்கு நட்புக் காட்டிச் சேனைகளைக், கொழும்பிற் கனுப்பிவிட்டு அதன்பின் முத்துச் சாமியைத் தொலைப்பது நன்றெனக் கருதினான்.

பிலாமை அவ்வண்ணம் ஆங்கிலருடன் நட்புப் பாராட்டி, முன் சிறீ விக்கிரம சிங்கனுக்குக் கேடு விளைக்கப் பிரயாசப்பட்டதுபோல, இப்போ ஆங்கிலரை அவனுக்குக் காட்டிக் கொடுக்கச் சமயம் பார்த்திருந்தான்.

இத்தகைய எண்ணத்துடன் பிலாமை கண்டிக்குத் திரும்பிவந்து மக்டவல் தளபதிக்குத் தன் சேனையையும் யோசனையையுமுதவினான். முதலாவதாகச் சிறீ விக்கிரம ராசசிங்கனைக் கண்டுபிடிக்கும்படி ஏவினான். அதற்காகப் பெயிலி (Baillie) என்பவனை அங்குருங்கட்டைக் கனுப்பும்படி கட்டளையிட்டான். பெயிலி என்பவன் பிலாமையை நன்கறிந்தமையால் அரசன் அங்குருங்கட்டையிலில்லையெனக் கண்டவுடனே, திரும்பவுந் தீவிரமாகக் கண்டிக்கு வந்தான். அவன் அப்படித் திரும்பி வராதிருந்தால் சிங்களர் காடுகளில் மறைந்திருந்து அவனையும் அவனாட்களையும் துண்டுதுண்டாக்கி விடுவார்கள்.

இதன்பின்னர், நோர்த் மன்னவர் புத்தியீனமாகப் பிலாமையின் யோசனைக் குடன்பட்டார். அதாவது அரசனையும் முத்துச்சாமியையும் சிங்காதனத்தினின்று நீக்கி பிலாமையை யரசனாக்க இசைந்தார். ஆயினுங் கண்டி அரசனது உயிருக்கும் கௌரவத்திற்கும் எவ்வித குறையும் வரக்கூடாதென்றும் முத்துச்சாமிக்கு வன்னிப்பகுதி கொடுக்கப்படவேண்டுமென்றும், ஏழு கோறளைகள்

ஆங்கிலர்க்கு விடப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தினார். இவையெல்லாம் கண்டியரசன் சிறைப்பட்டவுடன் நிச்சயமாவதற் கிருந்தன.

நோர்த் மன்னவரின் எண்ணத்தின் அநுகூலம் கண்டியிலிருந்த பட்டாளத்திற் றங்கியிருந்தது. அங்கே மக்டவலும் இன்னு மநேகரும் சுரத்தாற் பீடிக்கப்பட்டனர். அவர்கள் கொழும்பிற்குத் திரும்பிவர வேண்டியதாயிற்று.

பிலாமை தனது தருணங் கிட்டி வருவதாக உணர்ந்தான். அவனுடைய மனமானது தன் வாஞ்சையை நிறைவேற்றுவதற்காக யாரை என்கிலும், எல்லோரையுமென்கிலும், மறுதலிப்பதற்கு ஆயத்தமாயிருந்தது. ஆங்கிலர் அவனுக்குச் செய்யுந் துணை போதியதாயிருக்கவில்லை. அவர்களுடைய சேனையும் அருகத் தொடங்கியது. ஆகவே சில காலத்திற்காயினும், தான் அரசனாகாதிருந்தாலும், சிறீ விக்கிரமன் சார்பாக நிற்க எண்ணங் கொண்டான்.

இவ்வித பல ஆலோசனைகளோடும் பிலாமை தம்பதேனியாவில் தேசாதிபதியைச் சந்திக்க ஒழுங்கு செய்தான். இம்முறை தேசாதிபதியைக் கைதியாக்க வேண்டுமென்ற கபட யோசனை செய்திருந்தான். காத்திராத விதமாகப் பார்பத் தளபதியின் சேனை அங்கு செல்ல நேர்ந்தது. இதனால் அவனது எண்ணம் நிறைவேற்றத் தருணம் வாய்க்க

வில்லை. இப்பொழுது முன்சொல்லப்பட்ட பொருத்த சாதனம் நோர்த் மன்னவராலும், பிலாமையாலும் கைச்சாத்திடப்பட்டு, பார்பத் என்பவன் மூலம், முத்துச்சாமியின் கையொப்பத்திற் கனுப்பி வைக்கப்பட்டது.

கண்டிச் சங்காரம்.

பார்பத், கண்டியையடைந்த சில நாட்களுள் மரணமடைந்ததால், அனுபவங் குறைந்த கீழுத்தியோகஸ்தனை டேவி (Davie) என்பவன் பட்டாளப் பொறுப்பேற்றான். மக்டவல் தளபதி, சுகமடைந்தபின், கண்டிக்குச் சென்றானாயினும் மறுபடியும் சுரத்தாற் பீடிக்கப்பட்டதால், சேனைப் பொறுப்பை டேவிக்குக் கையளித்துவிட்டுக் கொழும்புக்கு மீளவுந் திரும்பினான்.

டேவியின் வீரர் நோய்வாய்ப் பட்டமையாலும், மலாய போர் வீரர் விட்டு நீங்கியதாலும் டேவியின் நிலைமை அபாயத்திற்குரியதானது. பிலாமையொருவன் மாத்திரமே அன்னவனுக்குத் துணைச் செய்யக் கூடியவன். சிறீ விக்கிரம சிங்கனின் சேனைகள் பைய மெல்லக் கண்டியைச் சூழ்ந்து வந்தன. வெளியிலிருந்து உதவி பெறுவது முடியாதிருந்தது. ஆனி 24-ந் திகதி, மும்முரமாக நடைபெற்ற யுத்தத்தில் டேவியும் அவன் சேனையும் பத்து மணித்தியாலங்கள் வரையிலெதிர்த்துச்

சண்டை செய்தனரேயாயினும் கடைசியில் பிலாமைத் தலாவையின் நீதியற்ற நிபந்தனைகளுக்கிணங்கிச் சரண் புகுந்தனர்.

அந்நிபந்தனைகளுள் முந்தியது டேவியும் தேக சௌக்கியமுள்ள யுத்தவீரரும் முத்துச்சாமியையுமழைத்துக்கொண்டு ஆயுதபாணிகளாய்த் திரிகோணமலைக்குச் செல்ல வேண்டும் என்பது. பிந்தியது நோயாளிகளும் பொருட்களும் பிலாமையின் பாதுகாப்பில் விடப்படவேண்டுமென்பது.

டேவியும் அவன் வீரரும் கண்டி நகரினின்றும் வெளிப்பட்டு மகாவலி கங்கைக் கரையையடைந்தனர். நதி பெருக்கெடுத்திருந்தமையால் அதைத் தாண்ட இயலாது அன்றிரவு அங்கே தங்க வேண்டியவர்களானார்கள். அடுத்தநாட்காலை முத்துச்சாமியை அக்கணமே தன் சந்நிதிக்குக் கொண்டுவரும்படி அரசன் ஏவலாட்களை அனுப்பி வைத்தான். டேவி தளபதி முதலில் மறுத்து நின்றான். ஆனால் அப்படி எதிர்ப்பவர் கொலை செய்யப் படுவரென்ற எச்சரிப்பு வார்த்தைக்குப் பயந்து முத்துச்சாமியைக் கொடுத்து விட்டான். உடனே முத்துச்சாமி சிரச்சேதஞ் செய்யப்பட்டான். ஆங்கில வீரர், இருவர் இருவராக ஓரிடத்திற்குக் கொண்டுபோகப்பட்டு வாளுக்கிரையாக்கப்பட்டனர். அந்த இடம் தற்போது "டேவியின் மரம்" என்றறியப்படுகிறது. பிலாமையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த நோயாளிகளும் அவ்

வாறே கொல்லப்பட்டனர். டேவி மாத்திரம் விடப்பட்டான். இன்னொருவன் உயிரற்றவன் போலத் தரையில் வீழ்ந்து கிடந்து, வயிற்றாலே நகர்ந்து அதிகதூரஞ் சென்று, சிங்களனொருவனின் துணையைப்பெற்று, மாத்தளையிலிருந்த மக்டவல் கோட்டையைச் சேர்ந்தான். இக்கோட்டையைக் காவல் செய்த சேனை அவன்மூலம் கண்டிச் சமாச்சாரங்களை யறிந்து உடனே திரிகோணமலைக்குச் சென்றது. இப்பயங்கரமான வேளையில் ஆங்கில வீரரோடு நின்ற இரு மலாய வீரர் அஞ்சாநெஞ்சராய், அரசன் சேவையில் அமர மறுத்ததால், சிரச்சேதஞ் செய்யப்பட்டனர்.

டேவி என்பவன், சில வருடங்களின்பின், சிறையில் மரித்தான். அன்னவன் செவ்வையாகக் காரியங்களை நடப்பிக்கவில்லையென்று அவன் மேற் குறை கூறப்பட்டது சரியாயிருப்பினும் அவனைப் பிலாமைத்தலாவையின் தயையில் தங்கியிருக்கவிட்ட அவனது அதிகாரிகளிலேயே உண்மையாகக் குறைகூற வேண்டியது. அவனுடைய குற்றம் எதுவெனில் அரசனின் கோபத்துக்கு முத்துச்சாமியைப் பலிகொடுத்ததுவேயாம். மக்டவலும் தேசாதிபதியும் தங்களைத் தற்காக்கும் பொருட்டுக் குற்றம் முழுவதையும் அவன்மீது சுமத்தினர்,

இதுவரையில் ஆங்கில சேனைகள் யாவும் மலைநாட்டைவிட்டு வெளியேறிவிட்டன. கண்டிப்படை

களோ கரைநாடுகள் நாடிச் சரிந்தவண்ணம் இருந்தன. அங்கேயும் அநேக சனங்கள் அவர்களைச் சேர்ந்தனர். ஆங்கிலரின் படைப் பலத்தை யறியாத சிறீ விக்கிரமன் தானாகவே கொழும்பைத் தாக்குவதற்கு இரு துப்பாக்கிகளுடன் வந்தான். ஹன்வல (Hanwella) என்ற இடத்தில் அவனுடைய சேனை சிதறவடிக்கப்பட்டுப் புறங்காட்டி ஓட்டம் பிடிக்க வேண்டியதாயிற்று. யாழ்ப்பாணம் தொடக்கம் அம்பாந்தோட்டை ஈறாக ஆங்கில நாடுகளை யணுகிய சிங்களச் சேனைகள் திரும்பவும் மலைநாடுகட்குத் துரத்தப்படலாயின.

அடுத்த வருடம் (1804) நோர்த் மன்னவர் மறுபடியும் கண்டிக்குப் படையெடுத்துச் செல்ல ஆயத்தஞ் செய்தார். யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பட்டணங்களிலிருந்து வெவ்வேறு பாதைகளாற் சேனைகள் கண்டிக்குச் சென்று அதனைக் கையாட வேண்டுமெனக் கட்டளையிட்டார். அத்தருணத்தில் பட்டாளத்துக்குத் தலைமை வகிக்க விருந்த உவெமிஸ் (Wemyss) தளபதியுடன தேசாதிபதி சச்சரவுபட்டதால், சேனைகளை அங்கு செல்லாவண்ணம் தடுத்து விட்டார். யாதோ காரணத்தால் மட்டக்களப்பிலிருந்த யோண்ஸ்ரன் (Johnston) சேனாபதியைத் தடுக்க மறந்து விட்டார். அதனால் அவன் மட்டக்களப்பை விட்டு நீங்கிக் கண்டியை

யணுகி அதனைக் கையாடிக் காவல்செய்து நின்றான். அங்கிலேய சேனைகள் அங்கு வராததைக் கண்டு யோண்ஸ்ரன், மூன்று நாளுக்குப் பின் அந்நகரை விட்டுத் திரிகோணமலைக்கு வழிபிடித்துச் சென்றான்.

இஃதிவ்வாறாக 1803-ம்ஆண்டுச் சம்பவங்களும் ஆங்கிலவீரர் சங்காரத்தைப்பற்றிய செய்தியும் இங்கிலாந்திற் தெரிய வரவே, பாராளுமன்றம் இலங்கை நடபடிக்கைகளைப்பற்றி ஆராயத் தொடங்கினது. நோர்த் மன்னவர் தேசாதிபதி பதவியை இராசிநாமாச் செய்ய வேண்டியதாயிற்று.

உலகத்தை ஏமாற்றக் கூடியவனான பிலாமைத்தலாவை யென்கிற துரோகியை நம்பியதால் நோர்த் மன்னவர் மோசம்போயினர். தன் அரசனைக் கொலை செய்ய எண்ணியவன் எப்படிப்பட்டவனென்பதை அவர் ஊன்றி நினைக்கவில்லை. பிலாமைக்குக் கண்டியில் விசேஷ அதிகாரமும் செல்வாக்கு முண்டென்று பிழையாக எண்ணினார். ஆங்கில வீரர் சங்காரம் நடைபெறும் வரையும் பிலாமையை நம்பி நடப்பதாற் கேடு விளையுமென்பதை அவர் உணர்ந்துகொள்ளவில்லை.

அவருக்குப்பின் தேசாதிபதியாயிருந்த சேர் தொமஸ் மெயிற்லண்ட் (Sir Thomas Maitland) கண்டி இராச்சிய விஷயமாக யாதும் செய்ய

வில்லை. நோர்த் மன்னவரின் பாடுகள் இவருக்குப் படிப்பினையாயின. இவர் தமது நேரத்தைக் கரைநாடுகளைத் திருத்துவதிலே செலவழித்தார்.

சேர் றெபேட் பிறவுண்றிக்

Sir Robert Brownrigg.

1812-ம் ஆண்டு பங்குனி மாதம் இவர் தேசாதிபதியானார். அரசைக் கையேற்ற முற்பகுதியில் கொம்பனித் தெருவில் (Slave Island) நானமரச் சோலையொன்றை ஸ்தாபித்தார். புகையிலை வியாபாரம் அரசாங்கத்தின் பொறுப்பில் விடப்பட்டது. பூரிமாரின் விளக்கம் ஆரம்பமானது.

பிறவுண்றிக் தேசாதிபதி கண்டிநாட்டுக் கருமங்களில் தன்னாற் கூடிய சிரத்தை எடுத்தார். ஆங்கில நாடுகளின் மத்தியில் இது ஓர் அமைதியில்லா விராச்சியமாக விருந்ததினாலும், இங்கிருந்த மேலுத்தியோகஸ்தர் ஆங்கிலரின் சனுவைப் பெற முயன்றதினாலும், அரசன் அயல்நாடுகளுடன் செய்தவுடன்படிக்கைகளைப் பொருட்படுத்தாததினாலும், இங்கே சீரான ஆட்சி முறையை ஏற்படுத்திச் சமாதானத்தைத் தோற்றுவிக்க வேண்டுமென்பது தேசாதிபதியின் நோக்கமானது. 1803-ம் ஆண்டின் அவமானத்தை அழிக்கவேண்டுமென்பதையும் அவர் மறக்க வில்லை.

கண்டியின் நிலைமை.

கண்டியில், சிறீ விக்கிரமன், பிலாமைத்தலாவையின் சூழ்ச்சிகளைத் தோற்கடிக்க வல்ல அதிகாரத்தைத் தனதாக்கியபோதிலும், இராச்சியத்தை முறையாக ஆளத்தக்க வல்லமையைப் பெற்றிலன், அவன் தன்மேற் பொறாமை கொண்ட சிங்களப் பிரதானிகளின் சச்சரவுகளி லீடுபட்டிருந்தான். பிரதானிகள் பிலாமை அரசனாகி விடுவான் என்ற அச்சத்தினால் அரசனைச் சிங்காதனத்திலிருந்து நீக்காதுவிட்டனர். அநேக பிரதானிகள், அரசன் மீது கொண்ட அச்சத்தினாலும், வெறுப்பினாலும், கொழும்பிலுள்ள அதிகாரிகளோடு, சிங்களப் பாஷையை நன்கு பேசவறிந்த யோண் டொயிலி (John D' Oyly) என்னும் உத்தியோகஸ்தன் மூலமாக, ஆங்கிலப்படையைக் கொண்டு வந்து, முன்னர் பிலாமை எண்ணியதுபோல அரசனைத் துரத்துதற்கான பகிரங்கப் பிரயத்தனங்கள் செய்தனர்.

பிரசைகளோ அரசனுக்கும் அதிகாரிகளுக்குமிடையே யேற்பட்ட பிணக்குகளால் அதிக திருப்தியீன மடைந்தனர். எல்லைப் புறங்களிலுள்ள சிங்களர் ஆங்கிலப் பிரசைகளின் அமரிக்கையான வாழ்வைக் கண்டு மனம் புழுங்கினர். அன்றியும் பிரதானிகள் அரசனுக்கு மாறாகவும் அரசன் அன்னார்க்கு மாறாகவும் இடர் விளைக்கப் பிரசைகளின் நிலைமை திரிகையில் அகப்பட்ட மணிபோலாயிற்று.

சப்தகோறளையின் திசாவை மீகஸ்தென வென்பவன் 1806-ல் காலஞ்சென்றான். அரசன் ஏழு கோறளைகளை இருபிரிவாக்கி ஏகேலபலையையும் மூன்றாம் மந்திரியாகிய முள்ளிக்கொடையையும் அவற்றிற்குத் திசாவைகளாக்கினான். இதனால் சனங்கள், ஒருவருக்குப்பதிலாக இருவருக்கு வரி கொடுக்கவேண்டியிருந்ததைக் கண்டு, கலகஞ் செய்தனர். கலகத்தையடக்க அரசனால் முடியாத தருவாயில், பிலாமை அதைத் தணித்து, முன்னிலும் அதிக செல்வாக்கைப் பெற்றான். அரசன் இதற்குப் பிரதியுபகாரமாக இருபிரிவுகளையும் பிலாமைக்கும் அவன் மருகன் றட்டுவத்தை திசாவைக்கும் கொடுப்பதாக வாக்களித்தானாயினும் அவர்கள் மீதுற்ற மனக்குரோதத்தால் அன்னார்க்கும் பிரசைகட்கும் கொடூரச் செயல்கள் புரிந்துவந்தான்.

தானடைந்த வெற்றியால் கர்வங்கொண்ட பிலாமை, தானே யரசனாவது அசாத்தியமென வுணர்ந்து, தன் மகனைச் சிம்மாசனமேற்றத் தெண்டித்தான். ஆகவே, காலஞ்சென்ற கீர்த்தி சிறீ மன்னன் மகளைத் தன் மகனுக்கு விவாகம் செய்துவைத்து முடியுரிமைபெற ஆயத்தப்பட்டான். இதுகாரணத்தால் பிலாமை அரசனின் கடுங்கோபத்துக்காளாயினன். அரசன் பிலாமையை யழைத்து, அவன்மேற் குற்றங்கள் சுமத்தி, அவனைச் சிறையில் வைத்துச் சில நாட்களின்பின் உத்தியோகத்தினின்றும் நீக்கிவைத்தான்.

இப்படிப்பட்ட அவமானத்தைப் பிலாமை சகிக்கக்கூடியவனல்ல. அவன் ஓர் மலையாளிக்குக் கைலஞ்சங்கட்டி, அரசன் துயிலுஞ் சமயம் அவனைக் குத்திக்கொல்லும்படி ஏவினதுமன்றி அதே சமயத்தில் நாட்டில் புரட்சியுண்டாக்கவும் ஆயத்தங்கள் செய்திருந்தான். சமயம் வாய்க்குமுன் சனங்களின் புரட்சி தொடங்கியதால் அரசன் சதிமோசத்தினின்று தப்பினன். பிலாமைத்தலாவையும் அவனுடைய சுற்றத்தாரும் உடனே பிடிக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்டனர் (1811).

இதன்பின் ஏகேலபலை முதலாம் அதிகாரமாகவும் முள்ளிக்கொடை இரண்டாம் அதிகாரமாகவும் நியமிக்கப்பட்டனர். இவர்களிருவருக்குமிடையில் இருந்த பகையை அரசன் ஏலவே யறிந்ததால், இவர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொள்வார்களென்றும், தன்னுடன் சச்சரவுபட நேரமிராதென்றும் கருதியே இவர்களைத் தெரிந்தனன்.

ஏகேலபலை இவ்வுயர்பதவியில் சிலநாட்கள் மாத்திரமே யிருந்தான். சிறீ விக்கிரமனின் இரண்டாம் விவாகதினத்தன்று ஏகேலபலை விலையேறப்பெற்ற வெகுமதிகள் கொண்டுவரத் தவறியதால் 1814ல் மறுபடியும் சப்பிரகாமப் பகுதிக்கு மாற்றப்பட்டான். அவ்விடத்தில் அவனாற் துன்புறுத்தப்பட்ட குடிகள் அரசனிடம் முறையீடு செய்தனர். அரசன் அவனை உடனே கண்டிக்கு

வரும்படி ஆஞ்ஞாபித்தான். அவனோ, ஆங்கிலரின் துணையிருக்கும்வரையும் அரசனின் கோபம் என்செய்யுமெனச்சொல்லிக் கண்டிக்குப்போகாதிருந்தான். அதுகண்டு அரசன் அவனை அதிகாரபதவியினின்று நீக்கி, இரண்டாம் அதிகாரமாயிருந்த முள்ளிக்கொடையை அப்பதவியிலமர்த்தினன். ஏகேலபலை மனம் கவன்றவனாய் அங்கிலேயரிடம் சரண்புகுந்து சப்பிரகாமத்தை அவர்கட் களிப்பதாக வாக்குப்பண்ணினன். ஆங்கிலர் ஏனைய பிரதானிகளின் ஆதரவு கிடைக்கும்வரையும் பொறுத்திருந்து சேனை திரட்டினர். கண்டியரசனோ அவ்வாறு பொறுத்திருக்கவில்லை. அவன் 1814 ல் ஏகேலபலையைப் பிடித்தற்கு முள்ளிக்கொடையைச் சப்பிரகாமத்துக்கு அனுப்பிவைத்தான். ஏகேலபலை ஆங்கில நாட்டுக் கோடி ஒழித்தான். முள்ளிக்கொடை கலகத்தை யடக்கி அதற்குக் காரணராயிருந்த 47 பேரைக் கைதிகளாக்கிக் கண்டிக்குத் திரும்பினன்.

ஏகேலபலைமேற் பழிவாங்க முடியாததால், அரசன் முள்ளிக்கொடையாற் கொண்டுவரப்பட்டவர்களைக் கொலை செய்வித்தான். டொயிலி என்பவனுக்குச் சனுவாய் நின்றவரெனத் தான் ஐயுறவு கொண்ட யாவரையும் சிரபங்கஞ் செய்வித்தான். அதன்பின் ஏகேலபலையின் மனைவி மக்களையும் இனசனரையும், வன்னெஞ்சனா சிறீ விக்கிரமன் எவரும் நினைக்கவும் உரைக்கவும் முடியாத கொடுந் துன்பத்துக்குள்ளாக்கிப் பரிதாப மரணம் அடை

யச் செய்தான். கடைசியாக ஏழு கோறளையின் சனங்களிற் பெருந்தொகையினரைக் கொன்று வரும்படி முள்ளிக்கொடையை ஆங்கனுப்பினான்.

இச்சமாச்சாரத்தைக் கேள்வியுற்ற ஏகேலபலை அனலிலிடப்பட்ட மெழுகுபோலுருகி, பிறவுண்றிக் மன்னரிடஞ்சென்று, அவர் ஆதரவை வேண்டி நின்றான். கண்டிப் பிரதானிகளிற் பலரும் ஆங்கிலரைச் சரணடைந்தனர். அந்நாட்களில் ஆங்கில நாட்டுச் சுதேச வணிகர் சிலர் கண்டிநாட்டுக்குச் சென்றபோது (1814 கார்த்திகை) அரசன் அவர்களை வேவுகாரரென எண்ணி, அவர்களின் மூக்கு, செவி, கரங்களைச் சேதித்து, அவற்றை மாலையாகக் கோர்த்துக் கழுத்திற் தரிப்பித்தனுப்பி விட்டான். எழுவர் வழியிலிறந்துவிட, மூவர் கொழும்பு சென்று தமக்குற்ற துயரத்தைத் தேசாதிபதிக் குரைத்தனர். இன்னுஞ் சில நாட்களால் சீதவாக்கைக் கணித்தாயுள்ள ஆங்கில நாடுகளுக்குச் சேனையனுப்பிக் குடிகளின் பொருட்களைச் சூறையாடுவித்து, வீடுகளுக்கும் எரியூட்டுவித்தான்.

இரண்டாம் கண்டி யுத்தம்.

மேற்கூறிய சம்பவங்கள் யாவும் கண்டியரசனோடு ஆங்கிலர் போர் தொடுத்தற்குப் போதிய காரணங்களாயின. உடனே ஆங்கில படையணிகள் ஒருங்கு சேர்ந்து கண்டி நகரை ஒரே தடவை

யிற் சருவுதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன (1815 தை). கொழும்பிலும், திரிகோணமலையிலுமிருந்து இவ்விரண்டு சேனைகளும்; நீர்கொழும்பு, காலி, மட்டக்கழப்பு என்னும் இடங்களிலிருந்து ஒவ்வோர் சேனையும் கண்டிக்குப் புறப்பட்டன. ஏகேலபலையைச் சேர்ந்தவர்கள் சீதவாக்கையில் கண்டித் துருப்புக்களுடன் சண்டை தொடங்கினர். ஆங்கில சேனைகள் தைமாதம், 12-ந்திகதி, றுவான்வலையை யடைந்தன. இங்கே பிறவுண்றிக் மன்னர் கண்டியரசனுக்கு மாறாய்ச் சண்டைக் கெழுதற்குரிய நியாயங்களைத் தெரிவிக்கும் அறிவித்தல் ஒன்றை வெளிவிடுத்தார். ஆங்கில பிரசைகளுக்குப் புரிந்த அக்கிரமச் செயல்களால் ஆங்கில அரசாங்கத்தின் கௌரவத்துக்குப் பங்கம் செய்தானென்றும், மானுஷிய இயல்பு கடந்து தன் பிரசைகளை வருத்தினானென்றும், அவன்மேற் குற்றஞ்சாட்டப்பட்டது.

ஆங்கிலர் கண்டி நகரை வெற்றிகொள்ளல்.

ஆங்கில சேனைகள் மூன்று கோறளைகளுக்கூடாகச் சென்று நாலு கோறளைகளில் முள்ளிக்கொடையை கணேதன்னே என்ற இடத்தில் மாசிமாதம், 8-ந்திகதி, எதிர்த்தனர். முள்ளிக்கொடை நாலு கோறளைகளை அவர்களுக்குக் கையளித்தான். இம்மாசம் 14-ந்திகதி யன்று அவர்கள்

எதிர்ப்பார் யாருமின்றிக் கண்டியைச் சேர்ந்தனர். அரசன் அவ்வேளையிற்றானே அங்கிருந் தொழித்தோடினான்.

இதுவரையில் மூன்று கோறளைகளும், நாலு கோறளைகளும், சப்பிரகாமமும் ஆங்கிலருக்காயின. கண்டி கைப்பற்றப்பட்ட நாலாம்நாள் (18-ந்திகதி) சிறீ விக்கிரம ராசசிங்கன் எகேலபலையின் வீரரால் பிடிக்கப்பட்டான். அவனும் அவன் குடும்பமும் கொழும்புக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கிருந்து தென் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். இலங்கையரசாட்சியாரால் அவனுக்கு இளைப்பாற்றிவேதனம் அளிக்கப்பட்டது. அங்கே அவன் 1832 ல் மரணமானான். அவனுடைய ஏக புத்திரன் 1843ல், புத்திரபாக்கியமற்றவனாய், இறந்தான். சிறீ விக்கிரமனின் கிட்டிய இனத்தவரின் சந்ததியார் கடந்த நூற்றாண்டில் அழிந்துபோயினர். தற்போது உபகாரவேதனம் பெற்று வருபவர்கள் மிகவும் நெருங்கிய உறவினரன்று.

அடுத்த பங்குனி மாதம், 2-ந்திகதி, அரசனின் சமஸ்தான மண்டபத்திலே, கண்டிப் பிரதானிகள் தம் வரிசை முறைப்படி சூழ்ந்துநிற்க பிறவுண்றிக் மன்னவரால் பின்வரும் நிபந்தனைகள் சிங்கள, ஆங்கில பாஷைகளில் வாசிக்கப்பட்டன. அவை, சிறீ விக்கிரம ராசசிங்கனுக்குக் கண்டி இராச்சியத்தில் பாத்தியமில்லை; கண்டி

இராச்சியம் இன்றுதொட்டு ஆங்கில முடிக்கே உரியது; அரசாட்சியார் புத்த சமயானுசாரத்துக்கு எதிரிடை செய்யவொண்ணாது; புத்த ஆலயங்களும் பொருட்களும் இதுகாறும் நடைபெற்று வந்ததுபோலப் பாதுகாக்கப்படல் வேண்டும்; தேச பிரமாணங்கள் யாவும் முன்போலவே இருக்க வேண்டும்; அரசிறை வருமானங்கள் முந்திய முறையாகவே திரட்டலாகும்.

இந்நிபந்தனைகள் வாசிக்கப்பட்டவுடன் வாத்தியங்கள் முழங்கப் பீரங்கிகள் சப்திக்க, ஆங்கிலக்கொடி உயர்த்தப்பட்டு, மூன்றாம் ஜோர்ஜ் முழு இலங்கைக்கும் அரசனென விளம்பரஞ் செய்யப்பட்டது.

கண்டி ஆங்கில ராதீனத்துக்குட்பட்ட ஆரம்ப காலத்தில், இராசப் பிரதிநிதியையும், நீதி விசாரணைக் கர்த்தரையும், அரசிறைப் பொக்ஷாதிபரையும் அங்கத்தவராகக் கொண்ட வோர் சங்கத்தால் அதன் அரசியற் கருமங்கள் விசாரணை செய்யப்பட்டன. இவர்கட்குத் துணையாய்ச் சப்பிரகாமம், ஊவா, மூன்றுகோறளைகள் என்னுமிடங்களிலுள்ள ஏசண்டுமாரும், உள்நாடுகளில் திசாவைகளும், றட்டமாத்தையா என்றழைக்கப்படும் நாட்டதிபரும் நியமிக்கப்பட்டனர்.

ஏகேலபலை முதலதிகார உத்தியோகத்தைக் கையேற்க மனங் காட்டாததால், முள்ளிக்கொடை

முதலதிகார மாக்கப்பட்டான். அவனே சப்த கோறளையின் திசாவையாகவும் நியமனம் பெற்றான். கப்புவத்தை என்பான் இரண்டாம் அதிகாரி யாக்கப்பட்டான். ஏகேலபலையின் மைத்துனனான கபிற்றிப்பலை ஊவாவுக்கும், காலஞ்சென்ற பிலாமையின் மகன் நாலு கோறளைகளுக்கும் திசாவைகளாக நியோகிக்கப்பட்டனர்.

கண்டி இராச்சியம் அங்கிலேயரின் கீழ்ப்பட்ட பின்னர் அங்கே மூன்று வருஷ காலமட்டில் சமாதான ஆட்சி நடைபெற்றது. ஆயினும் பழைய நிலைமை திரும்பவுந் தோன்றியது. சிறீ விக்கிரமன் காலத்தில் பிரதானிகளின் செல்வாக்கு அதிகமாயிருந்ததால் அவர்கள் சனங்களைத் துன்புறுத்தினர். தமக்குள்ளேயும் சச்சரவிட்டனர். இப்போதும் பிரதானிகளின் செல்வாக்கு அதே அளவாக விருந்தது. இதுவுமன்றிச் சனங்களும் பிரதானிகளும் அந்நியரா லாளப்படுவதை விரும்பவில்லை. நீதி ஸ்தலங்களில் ஆங்கிலரிட்ட தீர்ப்புக்கள் சாதி சமயச் சார்பின்றியும் பட்சபாதமின்றியும் இருந்ததைச் சிங்களர் கண்டு வெறுப்புக் கொண்டனர்.

அந்நாட்களில் வதுளைக் கணித்தாயுள்ள வெள்ளாசி யென்னுமிடத்தில் வசித்த சோனகர் ஆங்கில சேனைகட்குப் புரிந்த உதவிகட்காகத் தம் சாதியத்தவனான ஹஜ்ஜி மரிக்கார் என்பவ

னைத் தலைமைக்காரனாகப் பெற்றிருந்தனர். சோனகரிடமிருந்து பணம்பெற்று அவர்களுக்கு வியாபார சலாக்கியங்க ளளித்து வந்த சிங்களப் பிரதானிகள் இதனாற் கோபங்கொண்டனர். 1817-ம் ஆண்டு புரட்டாசி மாதத்தில் புத்த தவத்தி யொருவன், தான் அரச குடும்பத்தவனெனச் சொல்லி வெள்ளாசியின் வனத்தை யடைந்தான். அவனைப் பிடித்து வருமாறு ஊவாமாகாண அதிபதியாகிய சில்வெஸ்ரர் உவில்சன் (Sylvester Wilson) துரை ஹஜ்ஜிக்குக் கற்பித்தார். அவன் அத்தவத்தி வசித்த வனத்துட் புகுந்தபோது, சிங்களர் சிலர் அவனை யகப்படுத்தித் தவத்தியின் சமுகத்திற் கொண்டுபோய் விட்டார்கள். இதனைக் கேள்வியுற்ற உவில்சன் துரை அவனை மீட்பதற்காகப் புறப்பட்டுச் சென்று, அவன் கொலை செய்யப் பட்டானென்ற செய்தியை யறிந்து, வதுளைக்குத் திரும்பி வரும்போது, வழியிற் சிங்களரின் அம்புகட் கிலக்காகி, உயிரிழந்தான். கண்டி நாட்டிற் புரட்சி யுண்டானது.

ஊவாவின் திசாவையான கபிற்றிப்பலை வெள்ளாசியின் திசாவையாக்கப்பட்டான். கபிற்றிப்பலை கண்டி இராச்சியம் தனக்கே உரியதெனக் கூறிப் புரட்சி யெழுப்பிய துரைச்சாமி யென்பவனோடு சேர்ந்துகொண்டான். முள்ளிக்கொடையின் பொறுப்பிலிருந்த மூன்று கோறளைகளிலும், நாலு கோறளைகளிலும், சப்பிரகாமத்திலும் மாத்திரம்

கலகங்கள் தோன்றவில்லை. ஆங்கில சேனைகள் சிங்களரை அடக்குவது கஷ்டமாயிற்று. சிங்களர் மலைகள் கணவாய்களிலும், காடுகள் வனங்களிலும் பதிவிருந்து ஆங்கிலர்க்குக் கெடுதி விளைத்தனர். ஈற்றில் 1818-ம் ஆண்டு, மாசிமாதம், 21-ந் திகதி, தேசாதிபதி சிங்களரை மறநெறியா லடக்கும்படி கட்டளை யிட்டார்.

அநேக மாதங்களாக அங்கும் இங்கும் பதிவிருந்து, இடைக்கிடை சண்டை செய்துவந்த சிங்களர் இதன்பின் உணவின்றி வருந்தக் காலமானது. வீடுகள் யாவுந் தீக்கிரை யாக்கப்பட்டன. ஆடு மாடுகள் நாசமாக்கப்பட்டன. ஆயுததாரிகளாய்க் காணப்பட்டோர் அவ்வவ்விடங்களிலேயே கொல்லப்பட்டனர். இதனாற் சிங்களர் படிப்படியாக ஆங்கிலர் பாரிசமாயினர். பிரதானிகள் ஐக்கியமுமுடைந்தது. அவர்கள் ஒருவரை யொருவர் அகப்படுத்த உபாயந் தேடினர். ஐப்பசி மாதம் 30-ந்திகதி, கபிற்றிப்பலை பிடிக்கப்பட்டான். மூன்றாம்நாள் மதுல்க்கலையும் சிறையாக்கப்பட்டான். இருவரும் சிரச்சேதம் பெற்றனர். ஏகேலபலையும் அவனுக்குத் துணையாக நின்ற வேறு சிலரும் மொரீஷியஸ் தீவுக் கனுப்பப்பட்டனர். ஏகேலபலை அங்கே 1829 ல் இறந்தான். ஏனையோர் சிறீ விக்கிரமனின் மரணத்துக்குப்பின் திரும்பவும் நாடு செல்ல உத்தரவளிக்கப்பட்டனர்.

புரட்சி முடிவாகி, நாட்டில் அமைதி தோன்றியது. ஆயினும் 1819-ம் ஆண்டு, மாசி மாதம், 12ந்-திகதி வரையும் மறநெறி நீக்கப்படவில்லை. இப்புரட்சி ஆங்கிலரைக் கண்டியினின்று துரத்த வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் செய்யப்பட்டது. பிரதானிகளின் அதிகாரம் குறைந்தாலன்றி, ஆங்கில நாட்டிற் சமாதானமும் நீதியும் நிலைக்கமாட்டாதென்பதும் இதனால் விளங்கவிருக்கின்றது.

1818-ம் ஆண்டுப் புரட்டாசிக்குப்பின் 1815-ம் ஆண்டுச் சட்டங்கள் மாற்றமடைந்தன. ஆங்கிலேய துரைமக்களே நீதிவிசாரணைசெய்ய நியமிக்கப்பட்டனர். இறை திரட்டுவதில் இவர்கட்குத் துணையாகச் சுதேச தலைமைக்காரர் நியமனம் பெற்றனர். பிரதான உத்தியோகஸ்தர் சனங்களை வருத்தி அவர்களின்பொருட்களை அபகரியாவண்ணம், அன்னவருக்குச் சம்பளம் விதிக்கப்பட்டது. முன்னிருந்த வரிகள்யாவும் நீக்கப்பட்டன. அவற்றிற்குப் பதிலாகத் தானியவரி ஏற்படுத்தப்பட்டது. வீதிகள், பாலங்கள் இயற்றுவதைத்தவிர மற்றும் வேலைகட்கெல்லாம் அரசாட்சியார் கூலி கொடுப்பதாகவும், புத்தகுருக்களும் அவர்கள் சமயாநுசரணைகளும் அவமதிக்கப்படலாகாதெனவும் நிச்சயிக்கப்பட்டது.

5-ம் அதிகாரம்.

19-ம் நூற்றண்டு

ஐரோப்பா.

ஓய்வுக்காலம்.

ஐரோப்பாக் கண்டமுழுவதும் இருபத்தைந்து வருஷங்களுக்குமேல் (1789—1815) குழப்பங்கள், புரட்சிகள், யுத்தங்கள், வெற்றிகளாதியவற்றால் ஒழுங்குகெட்ட நிலையிலிருந்தது. முடிவில்லா யுத்தங்களால் அழிவுற்ற தேசங்கள் இப்போ சமாதானத்தையும், அமைதியையும் ஆசித்தன. நெப்போலியனுடைய வீழ்ச்சிக்குப்பின்னர் வியென்னா (Vienna) வில், ஐரோப்பியதேசப் பிரதிநிதிகள் கூடியசங்கத்தில், அவுஸ்திரிய மன்னனின் மந்திரியான மெற்றேர்னிச் (Metternich) பிரபு சமாதானத்திற்கான திட்டங்களைச் செய்தான். புரட்சிக் காலங்களுக்கு முந்திய நிலையைத் திரும்பவும் ஐரோப்பாவிற் தோற்றுவிப்பதும், புதிதாகத் தோன்றிய தேசீய உணர்ச்சியைத் தொலைப்பதுமே இவனது நோக்கங்கள். ஏனைய பிரசாதிபதிகளையும் இக் கொள்கைகளை ஏற்கச்செய்து இவை நிறைவேறும்பொருட்டுப் பின் வரும் ஒழுங்குகளை இவன் செய்தான்.

1. குடியரசு முறையான ஆட்சி நீக்கப்பட்டுத் திரும்பவும் அரசர் நியமிக்கப்பட்டனர். றாஷியா, அவுஸ்திரியா, புறாஷியா, தேசங்களில் நெப்போலியனாற் தோற்கடிக்கப்பட்ட வரசர் மீளவும் அரசுக்கு வந்தனர். பிரான்சும், ஸ்பெயினும் முன் துரத்திய அரசரை அன்றேல் அவர்கள் வம்சத்தவரை ஏற்றுக்கொண்டன. ஒல்லாந்த சுயவரசு ஒறேஞ் வம்சத்தவ னொருவனின் அதிகாரத்திற்குட்பட்டது.

2. நெப்போலிய யுத்தங்களா லுண்டான தேசீய வுணர்ச்சி நசுக்கப்பட்டது. சிறு தேசங்கள் பெருந் தேசங்களால் பங்கிடப்பட்டன. பெல்ஜியம் அவுஸ்திரியரிடமிருந் தெடுக்கப்பட்டு ஒல்லாந்தருக்குக் கொடுக்கப்பட்டது. தென் ஆபிரிக்காவையும் இலங்கையையுமிழந்த இக்காலத்தில் ஒல்லாந்திற்குப் பெல்ஜியம் ஏற்ற கைமாறாயிற்று. போலாந்து தேசம் அவுஸ்திரியா, றாஷியா, புறாஷியாவால் பகிரப்பட்டது. றாஷியா கூடின பங்கைக் கைப்பற்றியது. நெப்போலியனாற் தனியாணைக்குட்பட்ட இத்தாலிய மாகாணங்கள் பாப்பரசருக்கும், அவுஸ்திரியாவிற்கும், ஸ்பெயினுக்கும் பங்கிடுசெய்யப்பட்டன. நோர்வே தேசம் டென்மார்க்கிடமிருந் தெடுக்கப்பட்டுச் சுவீடினுக் களிக்கப்பட்டது.

1830-ம் ஆண்டுப் புரட்சிகள்.

மேற்கூறிய திட்டங்களாற் சங்க நோக்கங்கள் நிச்சயமாகவே அனுகூலப்படுமென்ற அபிப்பிராயத்தின் பிழையை சிறிது காலத்திற்குப் பின்னேற்பட்ட புரட்சி அத்தாட்சிப்படுத்தியது.

பிரான்சில் அரசியற் புரட்சிக்குமுன் அரசு புரிந்த 16-ம் லூயிஸின் சகோதரன், 18-ம் லூயிஸ் 1815 ல் அரசனானான். இவன் கலகக்காரர் குறைகூறாதபடி சனங்களின் திருப்தியை விரும்பிக் கொடுங்கோன்மையை யொழித்துக் கவனமாக ஒன்பது வருஷமாண்டபின் காலன் கைப்பட்டான். இவனுடைய இளைய சகோதரன் 10-ம் சாள்ஸ் (Charles X)1824ல் அரசனானான். புரட்சிக் காலத்தில் வேற்றிடங்கட்குச் சென்றிருந்த பிரபுக்களும் இவனுடன் பிரான்ஸிற்குத் திரும்பி வந்தனர். அவர்கள் முந்திய காலங்களிற் தாமனுபவித்த விசேஷ உரிமைகளையும் தமக்குச் சொந்தமாயிருந்த நிலங்களையும் மீண்டும் பெறுதற்கு முயன்றனர். நெப்போலியனாட்சியில் பங்குபற்றினோரைத் தண்டிக்கத் துணிந்தனர். அரசனும் சனங்களுக்குச் சற்றேனும் அதிகாரங் கொடாமல் பிரபுக்களின் பலத்தையும் தன்னதிகாரத்தையு மதிகரிக்கச் செய்தான். இக்காரணங்களால், பரீஸ் நகரத்தில் மற்றோர் புரட்சி தோன்றிற்று (1830 ல்). இம்முறை பயங்கரவாட்சி, குடியரசாட்சி என்பன பிரான்ஸிய

மக்களுக்குக் கனவிலும் கருத்தில் வரவில்லை. இவற்றைப்பற்றிய பயம் இன்னமும் அவர்களை விட்டு நீங்கவில்லை. ஆகையாற் கொடுங்கோன் மன்னனைப் பரதேசம் போக்கிவிட்டு, லூயி பிலிப்பு (Louis Philip) என்பவனை யழைத்து அவனைத் தலைவனாக்கினர்.

1830-ம் ஆண்டுப் புரட்சி எல்லா ஐரோப்பிய தேசங்களிலுந் தோன்றியது. கத்தோலிக்கரான பெல்ஜியர் ஒல்லாந்தின் புரொட்டெஸ்தாந்த ஆளுகையின்கீழிருக்க விரும்பவில்லை. பிரான்ஸிய கலகம் பெல்ஜியத்திற்கோர் உற்சாகமளித்தது. இங்கிலாந்தும் பிரான்சும் பெல்ஜியருக்கு அனுதாபங் காட்டினர். இதுவே ஏற்ற தருணமாகக்கொண்டு, பெல்ஜியர் நடத்திய புரட்சியின் முடிவாகச் சுதந்திரங் கிடைத்தது (1830.) பெல்ஜியம் லெயப்போல்ட் (Leopold) அரசனின் ஆளுகையின் கீழோர் தனித் தேயமானது. இன்றும் அது முன்னேற்றமுள்ள சுயவரசு நாடுகளு ளொன்றாக விளங்குகின்றது.

சிற்சில ஜேர்மன் மாகாணங்களும், இக்கிளர்ச்சியாற் தூண்டப்பட்டுக் கலகஞ் செய்தன. பாப்பரசரின் பிரசைகளின் குழப்பங்களை யடக்க அவுஸ்திரியர் துணைநின்றனர். போலாந்திலேற்பட்ட புரட்சியைக் கொடுஞ் செயல்களாலன்றி யடக்க முடியாதிருந்தது.

1848-ம் ஆண்டுப் புரட்சி

இதற்குப்பின் பதினெட்டு வருஷங்களாக ஐரோப்பாவில் சமாதான ஆட்சி நடைபெற்றது. ஆயினும் திரும்பவும் பிரான்சிலேயே புரட்சி ஏற்படக் காரணமுண்டாயிற்று. லூயி பிலிப்பு அரசனின் ஆளுகை அனுகூலப்படவில்லை. இவன் உதார குணமும் சாந்தமுமுள்ளவன். ஆனால் முற்போக்கில்லாதவன். அவலட்சண தோற்றமுடையன். இவனுடைய ஆட்சியிற் பிழைகளேற்படாதிருந்தாலும் பெரும்பகுதிச் சனங்கள் துணிகரமும் யுத்தப் பிரியமுமுள்ள வொருவரே தங்களுக்குத் தலைவனாயிருக்க வேண்டுமென்று விரும்பினர். மற்றோர் சாரார் மறுபடியும் அரசராட்சியை வெறுத்தனர். பரீசில் முன்போலக் கலகம் நிகழ்ந்தது. லூயி பிலிப்பு பதவி யிழந்து இங்கிலாந்திற்குச் சென்றான். சனங்கள் அரசனின்றிச் சீரான ஆட்சியை ஸ்தாபிக்க முடியாததாலும், சிறிதுகால அமைதியால் வந்த யுத்தப் பிரியத்தினாலும் நெப்போலியனில் வைத்த நம்பிக்கையாலும், ஏவப்பட்டு நெப்போலியன் பொனப்பாட்டின் தம்பியின் மகன் லூயி நெப்போலியன் (Louis Napoleon) என்பானைத் தங்கள் குடியரசுத்தலைவனாகத் தெரிந்து கொண்டனர். (1848)

மூன்றாம் நெப்போலியன்.

இவன் பெரிய நெப்போலியனைப் போன்ற இராச்சிய தந்திரியல்ல. அதிக யுக்தியும், பொறுமையும், கபடுமுள்ளவன். சக்கரவர்த்தியாகவேண்டுமென்பதே இவனுடைய ஏக கவலை. தன் நோக்கம் அனுகூலப்படும் வரையும் அதிகார வல்லமையும், தேச நன்னிலைமையும் தன்னிலே பொறுத்துள்ளதாகச் சனங்களுணரச் செய்தான். பிரசைகளின் விருப்புகட்கிணங்கி இராச்சிய பரிபாலனஞ் செய்வதாக நடித்தான். 1852-ம் ஆண்டில் மூன்றாம் நெப்போலியனென்ற நாமதேயத்துடன் முடிசூடிப் பிரான்சின் வளர்ச்சிக்கு வேண்டிய திருத்தங்களைச் செய்யவாரம்பித்தான். வர்த்தகத்தை ஊக்கப்படுத்திப் போக்கு வரவு வசதிகளைப் பெருக்கித் தேசப் பிரமாணங்களைப் புதுப்பித்தான். ஆனால் யுத்தங்களை எதிர்பார்த்திருந்த பிரான்சிய சனங்கள் இவனில் வெறுப்புக்கொண்டனர். நெப்போலியனென்ற நாமம் பூண்டவன் ஆனமையின், யுத்த மகிமையுடையவனாயிருத்தல் வேண்டுமென்பது சனங்களுடைய கருத்து. ஆகவே அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக 1853—56-ம் ஆண்டுகளில் நடைபெற்ற கிறீமியப் போரில், ருஷியாவை எதிர்த்தற்கு ஆங்கிலருக்குத் துணைச் செய்தான். இரண்டு வருஷங்களின்பின், அவுஸ்திரிய ஆட்சியினின்று விலகுதற்குச் சமராடிய இத்தாலியருக்குதவி செய்தான். ஈற்றில்

018299

1871 ல் புறாஷியரோடு நடத்திய போரின் பயனாக, நெப்போலியன் முடியிழக்க நேர்ந்தது.

1848-ம் ஆண்டுப் புரட்சியும் முந்தியது போல ஐரோப்பாவின் பலவிடங்களிலும் நடைபெறலாயிற்று. இத்தாலி, ஹங்கேரி, பொகீமியா, ஆதியாமிடங்களில் அவுஸ்திரிய அதிகாரத்திற்கு மாறாகக் கலகங்கள் உண்டாயின. அவுஸ்திரியாவிலேற்பட்டவோர் குழப்பம், மெற்றேர்னிச் மந்திரியின் வீழ்ச்சிக்கும், ஆட்சிவிஷயத்தில் சனங்களுக்குக் கூடிய பொறுப்புக் கிடைத்தற்கும், காரணமாயது.

புதிய தேசங்கள்.

நெப்போலியனுடைய யுத்தங்களால் ஐரோப்பாவில் தேசீய உணர்ச்சிக்கான விதைகள் விதைக்கப்பட்டன. இவை முளைகொண்டு வளர்ச்சிபெறுவதைத் தடுப்பதற்கு வியென்னாச் சங்கம் அநேக சூழ்ச்சிகளைக் கையாடியதாயினும் நல்விருத்திக்கான அரும் பெரும் முயற்சிகள் பல தேசங்களிலுஞ் செய்யப்பட்டனவாதலால் ஒற்றுமை பூண்ட புதிய தேசங்கள் தோன்றின.

இத்தாலிய நாடுகளின் ஐக்கியம்.

அநேக நூற்றாண்டுகளாக இத்தாலிய நாடுகள் அந்நியராலாளப்பட்ட தொடர்பற்ற நாடுக

ளாகவிருந்தன. வெனிஸ் தவிர்ந்த ஏனைய இத்தாலிய நாடுகள், பரிசுத்த றோமானிய சக்கராதிபத்திய காலங்களிற் போலவே, அவுஸ்திரிய அரசனதிகாரத்தின் கீழிருந்தன. வெனிஸ், நெப்போலியன் காலம்வரையும், தனித்தவோர் குடியரசு நாடாக விளங்கியது. றோம் நகரை மையமாகக் கொண்ட மத்திய பாகங்கள் பாப்பரசரின் ஆளுகைக்குட்பட்டிருந்தன. தென் இத்தாலி ஓர் காலம் ஸ்பானியராலும் பிறிதோர் காலம் பிரான்ஸியராலுமாளப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில், நெப்போலியன் முழு இத்தாலியையும் வென்று, ஆங்கு பிரான்ஸிற்குக் கீழ்ப்பட்டவோர் இத்தாலிய குடியரசை ஸ்தாபித்தான். இவன் காலத்திற்றான் இத்தாலியர் ஒற்றுமையை விரும்பவும் ஒற்றுமைபூண்ட இத்தாலியைத் தோற்றுவிக்கவும் படித்துக்கொண்டனர். ஆனால் வியென்னா நகர வுடன்படிக்கையால், இத்தாலி மீண்டும் நிலை குலைந்தது. முன்னைய அரசர் தத்தம் நாடுகளுக்கு உரித்தாளராயினர். அவுஸ்திரியர் வடநாடுகளையும், பரிசுத்த பாப்பானவர் மத்திய நாடுகளையும் ஸ்பானிய அரசன் வேர்டினண்ட் (Ferdinand) என்பவன் நேப்பிள்ஸ், (Naples) சிசிலி, (Sicily) முதலிய தென்பகுதி நாடுகளையும் பெற்றனர். எஞ்சிய சார்டீனிய (Sardinia) இராச்சியம், பீட்மந்து (Piedmont),

சவோய் (Savoy) மாகாணங்களையும் சார்டீனி
யாத் தீவையுமடக்கிய சுயவரசு நாடானது.

தங்கள் நாடுகள் திரும்பவும் அந்நியர் கைப்
பட்டதை இத்தாலியர் விரும்பவில்லை. அவுஸ்திரி
யரும் அவர்களின் அதிருப்தியையறிந்து மிகவுங்
கொடூரமாக ஆட்சி புரியத் தொடங்கினர். ஆளு
பவர்களின் வல்லமையை எதிர்ப்பதும், அதற்கா
கச் சண்டைசெய்வதும் இயலாக் கருமமானது. ஆன
தால் ஆங்காங்கு பல இரகசிய சபைகளைத்
தொடக்கி, அவுஸ்திரிய, ஸ்பானிய அரசருக்கு
மாறாகக் கலகம் விளைக்கவும், தாய் நாட்டின் சுதந்
தரத்திற்காக உழைக்கவும், இத்தாலியர் சத்தியஞ்
செய்துகொண்டனர்.

மஸ்ஸினி.

(Mazzini)

அதே காலத்தில் மஸ்ஸினி யெனும் இத்தா
லிய தேசாபிமானி யொருவன் ஒற்றுமை பூண்ட
இத்தாலிய குடியரசைத் தாபிக்கும்நோக்கத்
துடன் யௌவன இத்தாலி (Young Italy)
என்னும் சங்கத்தை ஏற்படுத்தினான். மஸ்ஸினி
ஓர் கவிவாணனாதலால் அரசியல் விஷயங்களை
நன்கறிந்தவனல்ல. தன் முயற்சிக்கு எத்துணை
கஷ்டங்கள் தடையாக விருக்கும் என்பதை அவன்
எண்ணித் துணிந்தானல்லன். ஆயின், அவ
னது வீரமொழிகளால் இளைஞரிடம் வீராவேச

முண்டாயது. இரண்டு ஆண்டுகட்குள், சபையின்
அங்கத்தினரின் தொகை 60,000 க்கு மேற்பட்
டது. சபையிற் சேர்ந்தவர்கள் அவுஸ்திரியரால்
நெருக்கிடை செய்யப்பட்டனர். அதிகாரிகளின்
எதிர்ப்பு அங்கத்தவரின் தொகையை மீளவும்
அதிகரிக்கச் செய்தது. தீர்க்கதரிசியான மஸ்ஸினி
தேசபரிபாலன முறைகளை அறியாததால், அவ
னுடைய பிரயாசைகள் தீவிர பயன் அளிக்க
வில்லை.

இத்தருணத்தில் வேறொரு பெரியார் தோன்றி
னர். சாள்ஸ் அல்பேட் (Charles Albert) சார்டீ
னியவரசனானான் (1831). ஒன்பதாம் பத்திநாத
ரென்ற நாமதேயத்துடன் புதியவோர் பாப்பரச
ருந் தெரியப்பட்டார் (1846). இவர்களிருவரும்
இத்தாலியை அவுஸ்திரியரின் கொடுங்கோலரசி
னின்றும் விடுவித்தற்கும், ஒற்றுமையுள்ள ஓர்
பெரும் இராச்சியமாக அமைத்தற்கும் முயற்சித்
தனர். பல நூற்றாண்டுகளாகப் பாப்பரசருக்கும்
அவுஸ்திரிய அரசருக்கு மிடையே ஒப்பற்ற ஒத்
துழைப்புக் காணப்பட்டது. புதிய பாப்பரசரோ
அவுஸ்திரியப் பற்றில்லாதவர். இவர் செய்த சில
சீர்திருத்தங்கள் (1847) அவுஸ்திரியருக்கு மிகுந்த
கவலையையும் இத்தாலியருக்குக் கூடின சுதந்தரத்
தையும் அளித்தன. அல்பேட் மன்னன் பாப்பர
சரைப் பின்பற்றித் தன் இராச்சியத்திலும் ஆட்சி
முறையிற் சில புதிய ஒழுங்குகள் செய்தான்.

இவை காரணமாக அவுஸ்திரியராட்சிக்குட்பட்ட நாடுகளிற் புரட்சிக ளுண்டாயின.

வட இத்தாலியிலேற்பட்ட புரட்சியால் அவுஸ்திரியர் ஒவ்வோர் மாகாணத்தினின்றும் துரத்தப்பட்டனர். அல்பேட் அரசன் அவர்களுக்குத் தலைவனானன். மாகாணங்களிற் தொடங்கிய சிறு குழப்பங்கள் இப்போ அவுஸ்திரியருக்கு மாருன பெரும் போராக மாறின. ஆயினும் இத்தாலியர் எதிர்பார்த்தவண்ணம் அவுஸ்திரியர் உள்நாட்டுக் குழப்பங்களால் பல மிழக்கவில்லை. அவர்களுக்கு மாருகப் புரட்சிக் கெழுந்த ஹங்கேரியையும் இத்தாலியையும் அடக்குதற்கு ரஷியர் துணைச்செய்தனர். தேசாபிமானத்தின் அளவான யுத்தப் பயிற்சி இத்தாலிய சேனைகளுக்கு இருக்கவில்லை. அல்பேட் மன்னனும் துணைவரும் கஸ்ரோசா (Custozza), நொவாரு (Novarra) என்னும் இடங்களில் முறையே 1848-ம் ஆண்டின் ஆடிமாதத்திலும், 1849-ம் ஆண்டின் பங்குனிமாதத்திலும், தோற்கடிக்கப்பட்டனர்.

இதன்பின் அவுஸ்திரியரின் ஆட்சி முன்னிலுங் கொடூரமாயிற்று. சாள்ஸ் அல்பேட் தன திராச்சியத்தைப் புத்திரன் விக்ரர் இம்மானுவேல் (Victor Emmanuel) என்பவனுக்குக் கையளித்த பின்னர், புறநாடு சென்று அங்கேயே சில மாதங்களின்பின் மரணமானன்.

இவை நடைபெறுங் காலத்தில் பரிசுத்த பாப்பரசர் தாம் செய்த சீர்திருத்தங்களால் இத்தாலியர் தேசீய உணர்ச்சி மிகுந்தவராய் அவுஸ்திரியர் அதிகாரத்தை எதிர்த்துப் புரட்சிகள் செய்வதையும் தமது இராச்சியம் சீர்குலைந்த நிலையிலிருப்பதையுங் கண்ணுற்று ரோமைவிட்டுச் சென்ருர். இதுவே ஏற்ற தருணமெனக் கண்டு மஸினி ரோமுக்கு வந்து அங்கே குடியரசை ஸ்தாபித்தான். பிரான்சிய குடியரசுத் தலைவனை லூயி நெப்போலியன் இதனைக் கேள்வியுற்று ஆத்திரங் கொண்டான். இவனோர் கத்தோலிக்க னதலால் தன் சமயத்தவரையும் சமயத் தலைவரையுஞ் சத்துராதிகள் தாக்குவதைத் தான் பார்த்திருப்பது சரியல்லவென வுணர்ந்தான்: ஐரோப்பிய நடவடிக்கைகளிற் கைகலக்க ஏலவே ஆயத்தமாயிருந்த இவனுக்கு இதுவே ஏற்ற சந்தர்ப்பமாயிற்று. பிரான்சிலிருந்து அனுப்பப்பட்ட சேனை ரோமாபுரியைக் கைப்பற்றி மஸினியைப் புறங்காட்டச்செய்தது (ஆனி 1849). நகரத்தினுள் பிரான்சிய சேனையொன்று காவலாக வைக்கப்பட்டது. ரோம் திரும்பவும் பரிசுத்த பாப்பரசருக்காயது.

கரிபால்டி.

Garibaldi.)

இத்தாலியின் எல்லாப் பாகங்களிலு முண்டான புரட்சிகள் இப்போ நசுக்கப்பட்டன. மஸ்

ஸினியின் நண்பனும் பேர்பெற்ற யுத்தவீரனுமாகிய கரிபால்டி (Garibaldi) என்பவன் மாத்திரம் இன்னமும் இத்தாலியின் சுதந்தரத்திற்காகப் பாடுபட்டுழைத்தான். இவனும் மஸ்ஸினியைப் போன்று இராச்சிய தந்திரங் கற்றறியாதவன். குடியரசு முறையை ஆதரித்தவன். வீரியமும் துணிகரமும் படைத்தவன். இவனது உற்சாக வார்த்தைகளாற் தூண்டப்பெற்ற போர்வீரர் அபாயத்திற்கும் அகால மரணத்திற்கும் அஞ்சாது,, சிவப்புச்சட்டை அணிந்துநின்று, றோமைத் தாக்கிநின்ற பிரான்சியரோடு போர் பொருதினர். ஆயின் கரிபால்டியின் தேச பக்தியும் சிவப்புச் சட்டைக்காரரின் விடா ஊக்கமும் பிரான்சிய சேனையை முறியடிப்பதற்குப் போதியதாயிருக்கவில்லை. யுத்தமுடிவில் அவர்கள் றோம நகரின் அயற்புறத்தேயுள்ள மலைப் பிரதேசங்களில் ஓடி ஒழிக்க வேண்டியதாயிற்று.

கவூர்.

(Cavour)

இத்தாலியின் ஒற்றுமைக்காக இதுவரை செய்யப்பட்ட முயற்சிகள் யாவும் பயன்படா தொழிந்தன. இத்தாலிய சனங்கள் மஸ்ஸினி கரிபால்டியாகியவிரு தேசாபிமானிகளாற் சுதந்தரத்திற்காகவுழைக்கத் தூண்டப்பட்டனரே யன்றி, அவுஸ்திரிய ஆளுகையினின்றும் நீங்கிக்கொள்ள முடியவில்லை. இத்தருணத்தில் முந்திய இருவரின் நோக்கங்களை

முற்றுப்பெறச் செய்யக்கூடியவனும், சனங்களின் வைராக்கியத்தை நல்வழிப்படுத்தக் கூடியவனுமான கவூர் (Cavour) எனும் மற்றோர் தேசாபிமானி விக்ரர் இம்மானுவேலின் மந்திரியானான் (1852). இவன் ஆழ்ந்த சிந்தனையும் அரசியல்முறையறிவுமுள்ளவன். வாக்குவன்மை குறைந்தவனாயினும் பின்வருங் கருமங்களை முன்னறிந்துகொள்பவன். ஐரோப்பாக் கண்டத்தினர் இத்தாலியரோடு அனுதாபங்கொள்ளுமாறு இவன் திறமையுடன் நடந்துகொண்டான். அவுஸ்திரியரோடு பகைமைபூண்ட தேசங்களாகிய புறூஷியாவையும் பிரான்சையுமிவன் தன் பக்கமாக்கினான். அச்சமயத்தில் றூஷியாவோடு இங்கிலாந்தும் பிரான்சும் கிறீமியப் போரில் (Crimean war 1854—56) ஈடுபட்டிருப்பதைக் கண்டு பிந்திய தேசங்களுக்குத் துணைப்படை யுதவினான். வெகு விரைவில் (1858) மூன்றாம் நெப்போலியனும் சார்டீனிய மன்னனுமாக இரகசியப் பொருத்தமொன்று செய்துகொண்டனர். இதனால் அவுஸ்திரியரோடு நடத்தும் யுத்தத்தில் சார்டீனியருக்கு நெப்போலியன் செய்யு முதவிக்காக நைஸ் (Nice), சவோய் (Savoy), எனும் மாகாணங்களை அவனுக்குக் கொடுப்பதாக வாக்களிக்கப்பட்டது.

இதன்பின்னர் கவூர், அவுஸ்திரியரோடு போர் தொடுப்பதற்குச் சமயந் தேடினான். 1859-ம் ஆண்டு சித்திரைமாதம் 19-ந்திகதி அவுஸ்திரியர் காததிரா

வேளையில் போர்க்கறை கூவி நின்றனர். யுத்தந் தொடங்கியவுடன் மொடினா (Modena), பர்மா (Parma), ரஸ்கனி (Tuscany), முதலிய இத்தாலிய சிறு மாகாணங்கள் விக்ரர் இம்மானுவேல் தங்கள் அரசனாக வேண்டுமெனக் கூறிக் கலகஞ் செய்தன. அவுஸ்திரிய சேனைகள் மஜென்ரா (Majenta)சோல்வெறினோ (Solferino), எனுமிடங்களில் தோல்வி யடைந்தன. வெற்றி நேரத்தில் நெப்போலியன தனது சேனைகளைப் பிரான்சுக்கு அழைத்துச் சென்றான். அவன் சடுதியாக யுத்தம் நிறுத்தியது யாது காரணத்தாலெனக் கூற முடியாது. தானடைந்த யுத்த மகிமை போதுமென நினைத்தோ, அன்றேல் புறாஷியர் அவுஸ்திரியருக்குத் துணைச்செய்வாரெனப் பயந்தோ அவ்வாறு செய்தாரெனலாம். அவுஸ்திரிய பிரான்சிய உடன்படிக்கை வில்லா விருங்கா (Villa Franca) என்ற இடத்தில் 1859-ம் ஆண்டு ஆடிமாதம் 9-ந்திகதி நிறைவேறியது. இத்தாலியருக்கும் பிரான்சியருக்கும் பகையுண்டாவதற்கும் நெப்போலியனுடைய வீழ்ச்சிக்கும் (1870) இதுவே காரணமாயிற்று. (Solferino) சொல்வெறினோ யுத்த முடிவில் லொம்பாடி பீட்மந்தோடு சேர்க்கப்பட்டது. வெனீஸ் அவுஸ்திரியருக்கு விடப்பட்டது எஞ்சிய நாடுகள் பாப்பரசரின் தலைமையின்கீழ் அமைந்த ஐக்கியநாடுகளாயின. கவூர் பிரபுவுக்கு இத்தீர்மானங்கள் திருப்தியளிக்கவில்லை. பாப்பரசர்

சமய தலைவராதலால் கத்தோலிக்க அவுஸ்திரியாவை முற்றாகத் தள்ளிவைக்கமாட்டாரென்றும் இத்தாலியின் புதிய நிலைமை பழைய நிலைமையிலும்பார்க்கச் சற்றேனும் வித்தியாசமில்லையென்றும் கவூருக்குத் தோன்றியது. ஐக்கியநாடுகளின் தலைமை வகித்தற்குப் பாப்பரசரும் மறுத்து நின்றார். கவூர், 1859-ம் ஆண்டின் ஆவணிமாதத்தில், மந்திரி பதவியை விட்டு நீங்கினான். அப்பொழுதே ரஸ்கனி, பர்மா, மொடினா, பொலோஞ்ஞா (Bologna), ரோமாஞ்ஞா (Romagna) முதலிய மாகாணங்கள் சார்டீனிய வரசன் விக்ரர் இம்மானுவேலைத் தமக்கரசனாயாறு கேட்டன. கவூர் மறுபடியும் மந்திரி உத்தியோகத்தைக் கையேற்று (1860, தை), அம்மாகாணங்களைச் சார்டீனிய வரசுடனிணைத்தான். அத்துடன் நெப்போலியனுக்கு நைஸ், சவோய், எனும் மாகாணங்களை அளித்து அவனுடைய திருப்தியையும் பெற்றான்.

மேற்கூறிய நிகழ்ச்சிகளின் பயனாக வடபகுதியிலும் மத்திய பகுதியிலுமுள்ள சிற்றரசராலாளப்பட்ட சிறு நாடுகள் சார்டீனிய இராச்சியத்தோடு சேர்க்கப்படவே, விக்ரர் இம்மானுவேல் அவற்றின் மன்னனாக ஏற்றுக்கொள்ளப்பட்டான் (1860, பங்குனி). அடுத்தமாதம், இரண்டாந்திகதி, முதலாம் இத்தாலிய பாராளுமன்றம் தூரின் (Turin) நகரிற் கூடியது.

தேன் இத்தாலி

வட நாடுகளும் மத்திய நாடுகளும் புதியவோர் இத்தாலிய இராச்சியமாக அமைந்து விட்டன. தென் இத்தாலியிலிருந்த பாப்பரசர் நாடும், நேப்பிள்ஸ்—சிசிலி சேர்ந்த இராச்சியமும் மாத்திரம், இன்னமும் அத்துடன் ஒன்றிக்கவேண்டியிருந்தன.

கரிபால்டியும் சிவப்புச் சட்டையணிந்த 1000 வீரரும் 1860-ம் ஆண்டு, வைகாசிமாதம், 5ந் திகதி, ஜெனோவாவிற் கப்பலேறி, 11ந் திகதியன்று சிசிலிதீவிலிறங்கினர். இவ்வேளையில் நேப்பிள்ஸ்—சிசிலி இராச்சியத்தின் ஸ்பானிய வரசனை 2ம் பிரான்சீஸிற்கு விரோதமாயெழுந்த சனங்களுக்கு, கரிபால்டியினதும் அவன் வீரர்களினதும் துணை கிடைக்கலாயிற்று. தீவு முழுவதும் கரிபால்டியினாற் பிடிக்கப்பட்டது. இதற்குப் பின் கரிபால்டி நேப்பிள்ஸ் சென்று, அங்கும் சிசிலிதீவிற்போன்ற நிலைமை இருப்பதைக்கண்டு புரட்சி தொடக்கவே, அரசன் நிலைகுலைந்தோடினான். கரிபால்டி தன்னை நாட்டதிபனெனப் பிரசித்தஞ்செய்தற் பொருட்டு நேப்பிள்ஸ் நகரத்துட் பிரவேசித்தான்.

இதே தருணத்தில் கவூர் பாப்பரசரின் நாட்டுக்கூடாகச் சேனையை நடத்திச் சென்று, பாப்பரசரின் பிரான்ஸிய சேனையை "கஸ்ரல்

விடாடோ" (Castelfidardo) என்ற இடத்தில் தோற்கடித்துவிட்டு, விக்ரர் இம்மானுவேலுடன் நேப்பிள்ஸ் நகரிற்குப் புறப்பட்டான். இருவரும் கரிபால்டியைச் சந்தித்தபோது பின்னவன் தன்னதிகாரத்தை விக்ரர் இம்மானுவேலுக்கு ஒப்படைத்தான். இத்துடன் வட, தென், மத்திய, இத்தாலிய நாடுகள் அமைந்த தனியரசு தொடங்கப்பட்டது.

1861-ம் வருஷம் மாசிமாதம் முழு இத்தாலியின் பாராளுமன்றம் முதன்முறையாகத் தூரின் நகரிற் கூட்டப்பட்டது. விக்ரர் இம்மானுவேல் இத்தாலிய அரசனாக முடிசூட்டப் பெற்றான்.

வெனிசும் ரோமும்.

ரோமாபுரியும் வெனிசும் இன்னமும் புதிய இத்தாலிய இராச்சியத்து ளடங்காதிருந்தன. ரோம் 1849 ல் மூன்றாம் நெப்போலியனா லங்கனுப்பப்பட்ட பிரான்சிய சேனையாற் காவல்செய்யப்பட்டிருந்தது. வெனிஸ் அவுஸ்திரியருக்காயிருந்தது. 1866 ல் நடைபெற்ற அவுஸ்திரிய புறாஷியப் போரில் இத்தாலி புறாஷியாவிற்குத் துணைச்செய்து, ஏலவே நிறைவேற்றப்பட்ட உடன்படிக்கைப்படி, யுத்த முடிபில், வெனிசைப் பெற்றது.

பண்டைய நாகரீகத்திற் சிறந்ததும், மாட்சிமை மிகுந்ததுமான ரோம நகரையும் ஒற்றுமை பூண்ட நாடுகளுடன் இணைக்கவேண்டுமென்பதும்,

அதையே புதிய இத்தாலிய இராச்சியத்தின் இராசதானியாக்க வேண்டுமென்பதும், கவூரினதும் இம்மானுவேல்மன்னனதும் விசேஷ கவலையாயிருந்தது. 1870ல் பிரான்சியரும் புறூஷியரும் சண்டையிடும் வரையில், இவர்களுக்குத் தருணம் வாய்க்கவில்லை. பிரான்சிய—புறூஷிய யுத்த வேளையில் பிரான்சிய சக்கராதி பத்தியம் அழிவடைய, இத்தாலியசேனை ரோமாபுரியின்மீது படையெடுத்துச் சென்று (1870), அங்கிருந்த பிரான்சிய சேனையைத் துரத்தி நகரத்தைக் கைப்பற்றியது. பாப்பரசரின் லௌகீக அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. அக்காலந் தொடக்கம் அவர் வர்த்திக்கான் மாளிகையிலேயே வசிக்கலானார். புதிய இத்தாலியின் ஆட்சி விஷயத்தில் தொடர்பு பெற அவர் மனமொப்பினாரல்லர்.

ரோமாபுரி கைப்பற்றப்பட்டதோடு, இத்தாலியின் ஒற்றுமை பூரணமாயிற்று. விக்ரர் இம்மானுவேல் அதன் அரசனானான். பாப்பரசர் அரசபதவி யிழந்தார். அவரிடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட நாட்டிற்குப் பதிலாக உலகப் பெரும் போரின் பின்னர் வர்த்திக்கான் நாட்டிற்குச் சூழவுள்ள சிறிய நிலப் பரப்பை அவருக் களிப்பதற்கும், அவரையே அப்பிரதேசத்திற்கு அரசனாகக் கொள்வதற்கும், இத்தாலியின் தற்போதைய சர்வாதிகாரி முசோலினி (Mussolini) என்பவனால் ஒழுங்குகள் செய்யப்பட்டன.

3. கிரீஸின் சுவாதீனம்.

கிறீஸ் முன் ஓர்காலம் தத்துவ சாஸ்திரம், இலக்கியம், சங்கீதம், தொழில் ஆதிய நாகரிக விஷயங்களில் முன்னேற்றம் பெற்றிருந்தது. பின்னர் மசிடோனியர், ரோமர், முதலியோரின் ஆட்சிக்குட்பட்டது. மத்திய காலங்களில் கீழைச் சக்கராதிபத்தியத்துடன் சேர்க்கப்பட்டிருந்தது. 1453 ல் கிறீசும், சின்னாசியாவும், போல்க்கன் குடாநாடும் துருக்கிய ஆளுகைக்குட்பட்டன.

கிறீஸில் துருக்கியரின் ஆட்சி மிகவுங் கொடூரமாயிருந்தது. கிறீஸ்துவ பிரசைகள் அதனைத் தாங்க முடியவில்லை. அதனால் 1814 ல் "சிநேகிதர் சங்கம்" எனவோர் சங்கம் தொடக்கப்பட்டது. இது ஆரம்பத்தில் பாஷை விர்த்திக்காக உழைத்து வந்ததாயினும், சிறிது காலத்திற்குப்பின் தேசிய விஷயங்களிற் கலந்து கொண்டது. துருக்கிய ஆட்சியினின்றும் கிறீஸை மீட்க வேண்டுமென்பது இச்சங்கத்தின் நோக்கமாக மாறியது. கவுன்ற் கப்போடிஸ்ரிறியஸ் (Count Capodistrias) இதற்குத் தலைமை வகித்தார்.

1821 ல் துருக்கிய பிரபுக்களில் ஒருவனாகிய அலி பாஷா, (Ali Pasha) என்பவன் சுல்த்தானுக்கு

மாறாக எழுந்தான். மித்திரர் சங்கம் கப்போடிஸ்திரியஸின் இடத்திற்கு இப்சிலாந்தி (Ypsilanti) என்பவனைத் தெரிந்தது. இப்சிலாந்தி றாஷியாவிற்குச் சென்று றாஷியாவின் துணை பெற முயன்றான். இவனது சேனை துருக்கியரால் முற்றாக அழிக்கப்பட்டது. இப்சிலாந்தி அவுஸ்திரியாவிற்கு ஒழித்தோடி அங்கேயே மரணம் வரையும் (1828) சிறையில் வைக்கப்பட்டான்.

இப்சிலாந்தி றாஷியாவிற்குச் சென்றபொழுது கொலொக்கொற்றிறோனிஸ் (Colocotro: is) என்னும் தைரியமும் வீரியமும் படைத்த ஒரு தளபதியின்கீழ் கிரேக்கர் திரண்டு துருக்கியரோடு நாலு வருஷங்களாக யுத்தஞ் செய்தனர். துருக்கியர் தாம் பிடித்த ஆயிரக் கணக்கான கத்தோலிக்கரைச் சிறைப்படுத்தினர். சுல்த்தான் எகிப்திய வைஸ்றோய் மகமது அலி (Mahomet Ali) என்பவனின் உதவி பெற்றான். ஆங்கிலர், பிரான்சியர், றாஷியரின் உதவி கிறீஸிற்குக் கிடைத்தது. கடலில் கொக்றேன் பிரபு (Lord Cochrane) எனப்படும் ஆங்கிலனும் தரையில் பைறன் (Laud Byron) பிரபுவும் கிறேக்கருக்காகப் பெரு முயற்சிகள் செய்தனர். 1828 லும், 29 லும் துருக்கர், ஆங்கில, றாஷியசேனைகளால் நெருக்கப்பட்டு, 1829 ல் கிறீசைக் கையளித்தனர். கிறீஸ் சுயவரசு நாடானது. (1832) பவேரிய இளவரசன் ஒற்றோ (Otto) என்பவன் கிறீஸின் முதலரசனானான்.

புதிய ஜேர்மனி.

19-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஜேர்மனிய நாடுகளிற் றோன்றிய தேசீய வுணர்ச்சி காரணமாக இந்நாடுகள் ஒன்றிப்பதற்கு விரும்பின. ஜேர்மனிய நாடுகளின் புதிய ஐக்கியத்திலே அவுஸ்திரியாவும் புறாஷியாவும் பிரதான இராச்சியங்களாக அமைந்தன.

அவுஸ்திரியாவும் புறாஷியாவும் இன்னுஞ் சில சிற்றரசுகளும் ஜேர்மன் பாஷை பேசும் நாடுகளாக விருந்தன. சிற்றரசு நாடுகளுள் பவேரியா (Bavaria) கனோவர் (Hanover) போன்றவை மிகப் பெரியனவாயும் ஏனையவை மிகச் சிறியனவாயுமிருந்தன. மத்திய காலங்களில் இச் சிற்றரசு நாடுகள் பரிசுத்த றோமானிய சக்கராதிபத்தியத்துளடங்கி அவுஸ்திரிய அரசனாலாளப்பட்டன. மார்க்க சீர்திருத்த காலங்களில் இவற்றுள் அநேகம் புறொட்டெஸ்தாந்த மதத்தைத் தழுவியதுடன், அவுஸ்திரிய ஆளுகையினின்றும் நீங்கின. மகா விறெடிறிக் காலத்தில் இந்நாடுகள் புறாஷியாவின் பாதுகாப்பின்கீழ்ச் சென்றன. இவ்வாறாகப் பதினெட்டாம் நூற்றாண்டு முடிவில் ஜேர்மன் பாஷை பேசும் நாடுகளின் ஒரு பகுதியாகிய கத்தோலிக்க நாடுகள் அவுஸ்திரிய ஆணையின் கீழும், மறுபகுதியாகிய புறொட்டெஸ்தாந்த நாடுகள் புறாஷிய ஆணையின் கீழும் அமைந்திருந்தன.

ஜேர்மன் நாடுகளின் பாஷையும், பழக்க வழக்கங்களும், அவை ஒற்றுமைப்படுதற்குப் பெரும் உதவியாயின. ஆயின் சமயமோ தடையாகவிருந்தது. நெப்போலியனுடைய காலத்தில் இந்நாடுகளொன்று சேர்ந்து யுத்தங்களிற் பங்கு பற்றின. அவற்றாலுண்டாகிய தேசீய உணர்ச்சியை வியென்னாச் சங்கம் அழித்துவிட்டது. வியென்னாச் சங்க ஒழுங்குகளின்படி, அநேக ஜேர்மன் நாடுகள் அவுஸ்திரிய அரசதலைமையின் கீழ்ப்பட்டன. சிற்றரசு நாடுகள் அவுஸ்திரிய ஆணைக்குட்பட்டிருக்க முற்றாக விரும்பவில்லை. ஏனெனில் அவுஸ்திரியவரசன் தன் கவனத்தை இத்தாலியர், போலாந்தர், ஹங்கேரியராகிய பல சாதிகளிலும் பங்கிடவேண்டியவனானான். புறாஷிய வரசனோ ஜேர்மன் சாதியாரை மாத்திரம் ஆண்டு வந்தான். மேலும் புறாஷியா முற்போக்கும் செல்வமும் நிறைந்த நாடு. அவுஸ்திரியாவோவெனில் ஒழுங்கீனமும் தூக்கமும் நிறைந்தநாடு.

இத்தருணத்தில் சிற்றரசுகளைத் தன் பக்கமாக்குதற்குப் புறாஷியா உபாயந்தேடி, இவற்றையெல்லாமோர் வியாபார ஒற்றுமைச் சங்கத்திற் சேர்த்துக்கொண்டது (1833). இச்சங்க ஒழுங்கின்படி சிற்றரசு நாடுகள் தம்முள் நடத்தும் வியாபாரத்திற் சுயாதீனமும் துறைமுகவரி நீக்கமும் பெற்றன. ஜேர்மன் நாடுகளெல்லாம் சங்கத்திற் சேர்ந்து வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் முன்னேற்றமடைந்தன. சில நாடுகள் புதிய புகை

யிரதப் பாதைகளால் இணைக்கப்பட்டன. அநேக தொழிற் சாலைகள் திறக்கப்பட்டன.

1848 ல் இத்தாலியிலும் பிரான்சிலும் தலைகாட்டிய புரட்சி ஜேர்மனியிலும் பரவியது. அவுஸ்திரியவரசன் றாஷிய சேனையின் துணையைப் பெற்றுத் தனதிராச்சியத்தில் ஒழுங்கும் சமாதானமும் வருவித்தான். புறாஷியவரசனோ அந்நியருதவியின்றித் தன் பிரசைகளை யடக்கினான். இவ்வேளையில் ஜேர்மனிய சிற்றரசு நாடுகள் திரண்டு, சுதேச ஆட்சிச் சங்கமொன்றை ஸ்தாபித்துப் புறாஷிய அரசனாகிய 4ம் விறெடிறிக் உவில்லியத்திற்குத் தம்மையொப்படைத்து ஜேர்மனிய சக்கரவர்த்தியென அவனுக்கு நாமஞ் சூட்டினர்.

விறெடிறிக் அரசன் சுதேசஆட்சிச் சங்கத்தின் கொள்கைகளை விரும்பாததால் இவ்வேண்டுகோட்குச் சம்மதிக்கவில்லை (1861). அதனால் அவுஸ்திரியவரசன் திரும்பவும் இந் நாடுகட்குத் தலைவனானான். 4ம் விறெடிறிக் உவில்லியத்தின் பின் அரசு செய்த அவன் சகோதரன், 1ம் உவில்லியம் தன் ஆணையின்கீழ், ஜேர்மனியநாடுகளை இணைக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டு, இந்நோக்கத்தைப் பூர்த்தியாக்குவதற்காக இடையறாதுழைத்தான். இப்பெரும் முயற்சியில் வொன்றான் (Von Roon) எனும் போர்வீரனும் வொன்

பிஸ்மார்க் என்னுந் தேச பரிபாலன நிபுணனும் உதவிசெய்தனர். பிஸ்மார்க் தனதரசனின் எண்ணத்தையே தன் நோக்கமாகக் கொண்டு, ஜேர்மனிய நாடுகளின் ஒற்றுமையையே கனவிலும் நினைவில் வைத்துவந்தான். சங்கங்கள், வாதவிவாதங்கள், உடன்படிக்கைகள், இராச்சியத்தைப் பெலப்படுத்தமாட்டாவென்றும், போரும் பலியும், அன்றேல் இரும்பும் இரத்தமுமே ஜேர்மனிய சககராதிபத்தியத்தை அமைக்கக்கூடுமென்றும் அவன் நம்பினான். தன் தாய்நாடான புறாஷியா முதன்மை பெற்று விளங்குமாறு ஜேர்மனியருக்குத் தேசீய உணர்ச்சி தோன்றச் செய்ததனால், பிஸ்மார்க் சரித்திர நூல்களிலே இருப்பு மந்திரி எனப் பெயர் பெற்றுள்ளான். பிஸ்மார்க் ஐரோப்பாவில் அதி பலமுள்ளதும் திறமைவாய்ந்ததுமான ஜேர்மனிய சேனையை ஆயத்தஞ் செய் செய்தான்.

அவுஸ்திரிய புறாஷிய யுத்தம்.

1815 க்கும் 1860 க்கு மிடையில் அவுஸ்திரிய இராச்சியம் வளர்ச்சியிற் குன்றிவரப் புறாஷிய இராச்சியம் உயர்ச்சியடைந்து வந்தது. அவுஸ்திரிய இராச்சியத்தில் பன்னிரண்டிற்கு மேற்பட்ட சாதிகளிருந்தன. அவைகள் அவுஸ்திரியவரசனின் கீழிருக்க விரும்பவில்லை. அரசனுமவைகளை யடக்கியாளுவதில் கவனத்தையுங் காலத்தை

யுஞ் செலவிட்டான். புறாஷிய இராச்சியத்திலோ ஜேர்மன்நாடுகள் மாத்திரமிருந்தன. இவை ஒற்றுமையுடையவை. வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் கதித்தவை. திருத்தமான முறையிலாளப்பட்டவை. புறாஷிய சேனையும் வலிமையுடையது. புறாஷிய அரசனும் ஜேர்மன் நாடுகட்குத் தலைவனாதற்குத் தருணம் பார்த்திருந்தான். வெகு விரைவில் ஏற்ற சந்தர்ப்பமொன்று வாய்த்தது.

ஷெல்ஸ்விக் (Schelswig) ஹொல்ஸ்ரேன் (Holstein) எனப்படு மிருமாகாணங்களில் ஜேர்மனியர் வசித்தனர். ஆனாலிருமாகாணங்களும் டென்மார்க் (Denmark) தேசவரசனின் ஆளுகைக்குட்பட்டிருந்தன. 1863 ல் இவற்றைத் தேனியவரசனிடமிருந்து பறித்தெடுப்பதற்காக அவுஸ்திரியாவும், புறாஷியாவும் ஒன்றுசேர்ந்தன. இருமாகாணங்களையும் கைப்பற்றிய பின்னர் இவற்றைப் பங்கீடுசெய்வதிலும் வியென்னாச்சங்க ஒழுங்குகளைப் புதுப்பிப்பதிலும் இருதேசங்கட்கிடையிலும் சச்சரவுண்டாயது.

1866-ம் ஆண்டு ஆனிமாதம் யுத்தம் ஆரம்பமானது. அவுஸ்திரிய போர்வீரரின் தொகை அதிகமாயிருந்தபோதிலும் புறாஷிய சேனையின் அமைப்பும், பயிற்சியும், மற்றும் ஆயத்தங்களும் நிச்சயமான வெற்றியின் காரணங்களாயின

அவுஸ்திரியர் மூன்று கிழமைக்குள் சடோவா (Sadowa) என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டனர் (1866 ஆடி 3.)

உவில்லியம் அரசன் வெற்றிக்கோலம்பூண்டு வியென்னா நகர வீதிகளுக்கூடாக ஊர்வலஞ் செய்ய எத்தனித்தான். ஆனால் மதி யூகியாகிய பிஸ்மார்க், அரசன் தன் வெற்றியைப் பாராட்டாது தடுத்துவைத்தான். அவுஸ்திரிய வல்லமையை முற்றாக அழித்துவிட்டால் கத்தோலிக்கர் புறூஷியாவிற்கு மாறாக எழும்புவரோவெனப் பயந்து பிஸ்மார்க் இவ்வாறு செய்ததுமன்றி, அதி விரைவாகப் பிறேக் (Prague) நகர வுடன்படிக்கையையுஞ் செய்துமுடித்தான் (1866, ஆவணி 23). அவுஸ்திரிய புறூஷிய யுத்தம் நிறுத்தப்பட்டது. உடன்படிக்கையின்படி வடஜேர்மனிய நாடுகள் உவில்லியம் அரசனின் கீழ் ஒன்றுசேர்க்கப்பட்டன. அவுஸ்திரிய அதிகாரம் ஒழிந்தது.

பிரான்ஸிய ஜேர்மனிய யுத்தம்.

சடோவா யுத்தத்தினால் புறூஷியா வடஜேர்மன் நாடுகளுக்குத் தலைமை பூண்டது. இந்நாடுகளிடையே ஒற்றுமை ஏற்படுவதற்குப் புறூஷியாவின் கீழிருப்பது மாத்திரம் போதாமையால், இவை பொது நோக்கங் கொள்வதற்கும், ஒருமித்து ஒத்துழைப்பதற்குஞ் சந்தர்ப்பம் உண்டாக்குதற்குப் பிஸ்மார்க் உபாயந் தேடினான்.

அதற்காக வடஜேர்மன் நாடுகளுக்கும் தென் ஜேர்மன் நாடுகளுக்கும் பொதுப் பகைவரான பிரான்ஸியரோடு யுத்தஞ் செய்வதற்குச் சமயம் பார்த்திருந்தான்.

அவுஸ்திரியாவும் புறூஷியாவும் யுத்தஞ் செய்து இளைத்திருக்கும் நேரத்தில், பிரான்ஸ் ஐரோப்பாவிற் பெருமிராச்சியமாகக் கூடுமென மூன்றாம் நெப்போலியனுக்குத் தோன்றியது. சடோவா யுத்தத்தின்பின் புறூஷியவரசு மறுபடியும் பலமடைவதைத் தடுப்பதற்கு எவ்வித முயற்சியுஞ் செய்ய அவன் ஆயத்தமாயிருந்தான். இவ்வாறாகப் பிரான்சும் புறூஷியாவும் யுத்தத்தை எதிர்பார்த்திருக்கும் வேளையில், ஸ்பானிய அரசுரிமையைப் பற்றிய தர்க்கமுண்டாயது. நெப்போலியன் போருக்கெழுந்தான். ஜேர்மனிய சேனைகள் வொன் மொல்க் (Von Moltke) தளபதியின் கீழ்த் தகுந்த அணிவகுப்புகளுடன் அல்செஸ், லொறேன் (Alsace Lorraine) மாகாணங்களையடைந்தன. அவற்றை யெதிர்க்கவந்த பிரான்ஸிய சேனை லோறேனில், மெற்ஸ் (Metz) கோட்டையில் முற்றுகையிடப்படவே, கோட்டையிலகப்பட்டோரை மீட்க வந்த நெப்போலியனும் அவன் சேனையும் செடான் (Sedan) நகரில் முற்றுகையிடப்பட்டுப் பிடிக்கப்பட்டன.

பரீஸ் நகரத்தவர்க்கு இச்செய்தி எட்டியதும், அவர்கள் புரட்சிக் கோலங் கொண்டெழுந்தனர்.

மூன்றாம் நெப்போலியன் இங்கிலாந்திற் கொழித்தோடினான். பிரான்ஸில் தேசிய தற்காப்புச்சங்கம் ஏற்படுத்தப்பட்டுத் தேச ஆட்சி நடத்தப்பட்டது.

ஜேர்மனிய சேனை பரீஸ் நகரத்தை நெருங்கி வந்தது. தேசிய தற்காப்புச் சங்கம் சில மாதங்களாக யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தியதாயினும், 1871 ல் நெருக்கிடை தாங்கமுடியாமல் ஜேர்மனியரிடம் சரண்புகுந்தது. அதன்பின் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைப்படி அல்செஸ் லொறேன் மாகாணங்கள் ஜேர்மனிக்கு அளிக்கப்பட்டன. பிரான்ஸ் யுத்த தண்டமாகப் பெருந்தொகைப் பணமிறுக்கச் சம்மதித்தது.

யுத்த பலாபலன்.

இவ் யுத்தத்தின் பயனாகத் தென் ஜேர்மன் நாடுகள் வடஜேர்மன் நாடுகளுடன் சேர்க்கப்பட்டு, ஜேர்மனிய சக்கராதிபத்தியத்தின் கீழ் ஒன்றித்தன. முதலாம் உவில்லியம் வேர்செல்ஸ் (Versailles) இராசமாளிகையின் விசாலமான கண்ணாடி மண்டபத்திலே ஜேர்மனியச் சக்கரவர்த்தியெனப் பிரசித்தஞ் செய்யப்பட்டான். மகா விறெடிறிக் தொடக்கிய வேலை இத்துடன் முற்றுப்பெற்றது.

யுத்த தெண்டத்தின் பாரத்தால் தாழ்த்தப்பட்ட பிரான்ஸ் முந்திய நிலைக்கு வருவதற்கு

அநேகாண்டுகள் கடத்தல்வேண்டும். ஆனால் பிரான்ஸிய கமக்காரர், வறியவர்கள் பணக்காரரென்ற வித்தியாசமின்றி, அவரவர் தத்தமக்கெனச் சேகரித்து வைத்திருந்த பணத்தை அரசிறைச் சேரிக்குக் கையளித்துத் தேச கடனையிறுத்தனர். ஜேர்மனிய சேனையும் சொற்பகாலத்திற்குள் பிரான்ஸிலிருந்து அகற்றப்பட்டது.

தற்காலிகமாக நியமிக்கப்பட்ட தேசிய தற்காப்புச் சங்கம் பிரான்ஸின் நியதியான ஆட்சிமுறையை நிச்சயிக்க ஆரம்பித்தது. ஆகவே அரசாட்சியை விரும்பினோர்க்கும், சமதத்துவக்கொள்கையை விரும்பினோர்க்குமிடையே கலகமுண்டானது. கலகம் அடக்கப்பட்ட பின்னர், குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது (1871). தற்போது பிரான்ஸிலுள்ள குடியரசாட்சிமுறை இப்போதே தொடக்கப்பட்டது.

5. றாஷியாவும், துருக்கியும், போல்க்கன் நாடுகளும்.

19ம் நூற்றாண்டில், இராச்சியத்தைப் பெருப்பிக்கவேண்டுமென்பது றாஷிய சக்கரவர்த்திகளின் அரசியல் நோக்கமாகவிருந்தது. இது காரணத்தால் றாஷியா இடையிடையே அயற் தேசங்களுடன் சச்சரவிட நேர்ந்தது. வியென்னாச் சங்க ஒழுங்கின்படி போலாந்தின் பெரும்பகுதி றாஷியாவிற்குச் சேர்ந்தது. போலாந்தர் றாஷிய ஆளுகையினின்றும் பிரிந்துகொள்வதற்கு விரும்பினர்.

ருஷியவரசர் அவர்களை யடக்கியாளுவதில் அனுகூலப்படவில்லை. அடிக்கடி தோன்றிய புரட்சிகளால் அதிக கஷ்டமும் செலவும் ஏற்பட்டன.

இவ்வேளையிற்றானே, ருஷியவரசர் ஆசியாவில் தங்களிராச்சியத்தைத் தெற்கேயும் கிழக்கேயும், துருக்கிஸ்தானுக்கும் கோக்கேஷிய மலைகளுக்கும் அப்பால் விசாலிக்கச்செய்ய மிக முயற்சித்தனர். பிரயோசனமற்ற துருக்கிஸ்தான் பிரதேசங்களை ருஷியர் பிடிப்பதை யாதொரு தேசமுந் தடுக்க முன்வரவில்லை. ஆனாற் பார்சியாவினதும் ஆபுகானிஸ்தானினதும் எல்லை வரையில் ருஷிய இராச்சியம் பரவியதன்மேல், ருஷியர் கைபர் கணவாய்வழியாக இந்தியாவிற்கு வரப்பின்னிற்கமாட்டார்களென ஆங்கிலர் யோசிக்கலாயினர்.

போலாந்தின் பெரும் பகுதியைப் பிடித்திருந்தும், கிழைத் தேசத்தில் இடங்கள் கைப்பற்றியும் திருப்தியடையாததுபோல, ருஷியர் போல்க்கன் குடாநாட்டையுந் தாக்கினர். போல்க்கன் குடாநாட்டின் தென்பாகத்தில் கிறேக்கரும், வடபாகத்திலும் மத்தியிலும் சேர்பியர், பல்கேரியர், ருமேனியர், குறோற்ஸ், மொன்ரினிகிறோவர், ஆதியோரும் இன்னும் பல சிலாவ சாதியினரும் வசித்தனர்.

15ம் நூற்றாண்டில் இக் குடாநாடு முழுவதும், சின்னாசியாவும், கொன்ஸ்தாந்தி நோப்பிளும் உட்படத் துருக்கியரால் வெற்றி கொள்ளப்பட்டவை. துருக்கியர் போர்த்திறமை மாத்திரமுள்ளவர்கள். அவர்களுடைய பரந்த இராச்சியத்தை ஆளுந் திறமை அவர்களுக்கு இருக்கவில்லை. ஆகையாற் துருக்கிய இராச்சியம் சிதைவுறும் நிலையிலிருந்தது. இந்நேரத்தில் துருக்கியரை ஐரோப்பாவினின்றுந் துரத்திப் போல்க்கன் நாடுகளைக் கைப்பற்றிக்கொள்ளலாமென்று ருஷியவரசர் நினைத்தனர். இப்படி அவர்களெண்ணியதற்கு மூன்று விசேஷ நியாயங்கள் கூறலாம்.

முதலாவதாகத் தங்கள் சாகியத்தவரும் - ருஷியரும் சிலாவ் சாதியைச் சேர்ந்தவர்கள் - சமயத்தவருமான போல்க்கன் நாட்டவர் கிறிஸ்துவரல்லாத அந்நியரின் அநியாய ஆட்சியின் கீழ் இடர்ப்படுவதை ருஷியர் சகிக்க இயலாது இடருற்றனர்.

இரண்டாவதாகக் கிரேக்க திருச்சபையிற் சேர்ந்தவரான ருஷியர் பரிசுத்த ஸ்தலமென மதிக்கப்பட்ட கொன்ஸ்தாந்தி நோப்பிள் நகரம் துருக்கியர் வசமிருப்பதை விரும்பவில்லை.

மூன்றாவதாகப் போல்க்கன் நாடுகளைக் கைப்பற்றினாற் தமக்கு மத்தியதரைக்கடலில் அநேக துறைமுகங்கள் சொந்தமாகுமென்று ருஷியருக்குத் தோன்றியது.

இந்த நோக்கங்கள் இலகுவில் நிறைவேற்றப் படக்கூடியனவல்ல. துருக்கிய சக்கராதிபத்தியம் "ஐரோப்பாவின் நோயாளி" எனப் பெயர்பெற்றிருந்தாலும் நோயாளி இன்னமும் மரணவாய்ப் படவில்லை. போல்க்கன் நாடுகள் துருக்கிய கொடூரத்தினின்றும் தப்பிக்கொள்வதற்கு அவாவுற்றனவேயன்றி ருஷியவாணையின் கீழ் அகப்பட விருப்புக் காட்டவில்லை. மேலும் ருஷியா போல்க்கன் நாடுகளைப் பிடிப்பதானால், அயலிலுள்ள அவுஸ்திரியா தேசம் ருஷியாவின் செல்வாக்கை முறிக்க உதவி செய்யும். மத்தியதரைக் கடலையடுத்த பாகங்கட்கு ருஷியா வருவதானால், பிரான்ஸ் ருஷியாவை எதிர்க்கும். துருக்கிய சக்கராதிபத்தியத்தை ருஷியா தனக்காக்குவதையும் மத்தியதரைக் கடலின் வியாபாரத்தைத் தடுப்பதையும் இங்கிலாந்து ஒருபோதும் பார்த்திருக்கமாட்டாது.

துருக்கிய சக்கராதிபத்தியத்தை நசுக்கிப் போல்க்கன் நாடுகளைப் பிடிக்கவேண்டுமென்று ருஷியா கொண்ட எண்ணத்தால் ஐரோப்பாவிலுண்டான பகை, கிரீமியப்போர் (Crimean War 1854—55) நடைபெற்றபோது, அதன் உச்சநிலையை யடைந்தது. இச்சமயத்தில் ருஷியாவை எதிர்த்துச் சண்டை செய்வதற்குப் பிரான்சும் இங்கிலாந்தும் ஒன்று சேர்ந்தன.

கிரீமியப் போரிலடைந்த தோல்வியால் ருஷியா சிறிது காலத்திற்குத் துருக்கியை நெருக்காதிருந்தது. ஆனால் போல்க்கன் நாடுகளை ருஷியா இன்னமும் துருக்கியரை விரோதிக்கத் தூண்டி வந்தது. ஈற்றில் 1876 ல் பல்கேரியரும், சேர்பியரும், மொன்ரிநிகுரோவரும், ருஷியாவின் துணையுடன் புரட்சி செய்தனர். இவர்களை யடக்கத் துருக்கியர் கையாடிய கொடிய முறைகளை நியாயமாகக் கொண்டு ருஷியா போல்க்கன் குடாநாட்டிற்குச் சேனையனுப்பித் துருக்கியரைக் கொன்ஸ்தாந்திநோப்பிள் வரையுந் துரத்தியது.

இவ்யுத்தத்தில் துருக்கியர் நிச்சயமான தோல்வியடைந்தனரென்கிலும், ருஷியா தனதெண்ணப்படி போல்க்கன் நாடுகளைப் பிடித்துக் கொள்வதற்கு ஐரோப்பிய தேசங்களிடம் கொடுக்கமாட்டா. ஆகவே 1878ல் பேர்லின் நகரத்திற் கூடிய சங்கத்தில் இங்கிலாந்தும், அவுஸ்திரியாவும், பிரான்சும் போல்க்கன் நாடுகள் கிரீசைப்போன்ற சுயவரசு நாடுகளாக வேண்டுமென்றும், ருஷியாவின் ஆணைக்குட்படலாகாதென்றும், நிச்சயித்தன.

புதிய சுயவரசு நாடுகளிடையே ஒருவித ஐக்கியமுமிருக்கவில்லை. அவை யொன்றை யொன்று பகைத்துவந்தன. அநேக முறைகளில் மும்முரமான யுத்தங்கள் அவற்றிற்கிடையே நடைபெற்ற

தால் போல்க்கன் குடாநாடு ஐரோப்பாவின் புயல் நிலையமெனப் பெயர் பெறலாயிற்று. இந்நாடுகளின் சச்சரவுகளில் இவற்றோடு சாதி அல்லது சமய அநுதாபமற்ற ஐரோப்பிய தேசங்களும் கலந்துகொண்டன.

19-ம் நூற்றாண்டில் இங்கிலாந்து.

இவ்வதிகாரத்தில் இதுவரை கூறப்பட்ட சம்பவங்கள் நடைபெறுங் காலத்தில் ஆங்கிலர் குடியேற்ற நாடுகளின் வளர்ச்சியையும், வியாபார விர்த்தியையுங் கவனித்து வந்தனர். ஆங்கில வரசோடு சம்பந்தப்படாத எந்த ஐரோப்பிய விஷயத்திலும் ஆங்கிலர் சேரவில்லை. அன்றியும் ஏனைய இடங்களிற் போன்ற நிலைமைகள் இங்கிலாந்தில் ஏற்படவில்லை, ஐக்கியத்தையேனும் சுவாதீனத்தையேனும் நாடுதற்கு இங்கிலாந்திற்கு அவசியமிருக்கவில்லை. 1830-ம், 1848-ம் ஆண்டுப் புரட்சிப் புயல்களும் இங்கே வீசவில்லை.

பொதுவாகக் கூறின் 19-ம் நூற்றாண்டின் மத்திய பாகமும் முடிவுக் காலமும் இங்கிலாந்தின் அதி சிறந்த முன்னேற்ற காலங்களாகும். இவ்வாண்டுகளே விக்ரோறியா மகா இராணியின் ஆட்சிக் காலமுமாம்.

6-ம் அதிகாரம்

இந்தியாவும் ஆங்கிலரும்.
1813—1856.

லோட் ஹேஸ்ரிங்ஸ்.
1813—1823.

லோட் மின்ரோவுக்குப்பின் ஹேஸ்ரிங்ஸ் பிரபு தேசாதிபதியானார். இவருடைய இளமைப் பராய சீவியத்தை யறிந்தவர்கள் இவர் தேசாதிபதி பதவிக்கேற்றவரல்லர் என்பர். ஆனால் இவர் பத்து வருஷ காலம் இந்தியாவின் முன்னேற்றத்துக்காக அதிகம் பிரயாசையுடன் உழைத்து அநேக நன்மைகளைச் செய்து வைத்தார். கோண்வாலிஸ், பார்லோ, மின்ரோ பிரபுக்கள் ஆங்கில நாடுகளுக்குத் தலைமையாகவிருந்த காலங்களில், ஆங்கில நாடுகட்கு ஏற்பட்ட தொந்தரவுகள் நீக்கப்பட்டனவேயன்றி அவை வேரோடு களையப்படவில்லை.

நேர்பாள யுத்தம்.

இமயமலைச் சரிவில் (Nepal) நேர்பாளம் என்ற மாகாணம் உண்டு. அங்கு வ்சிப்பவர்கள் கூர்க்காஸ் (Çurkhas) சாதியாரெனப்படுவர். இவர்கள் மின்ரோ தேசாதிபதி காலத்தில் புத்வால் (Butwal) என்னும் ஆங்கில மாகாணத்தைக் கொள்ளையடித்த

வர்கள். காலத்துக்குக் காலம் இவ்வாறு தங்கள் மாகாண எல்லையைக் கடந்து சென்று அயல்நாடுகளைச் சூறையாடி வந்தார்கள். 1814 ல் இவர்கள் புத்வால் மாகாணத்துள் நுழைந்து கொள்ளையடித்தார்கள். ஹேஸ்ரிங்ஸ் தேசாதிபதி ஆங்கோர் சேனை யனுப்பிவைத்தார். அவர் அனுப்பியசேனை நேர்பாளத்துக்கூடாகச் சென்று மலாஓன் (Malaon) என்ற இடத்திலிருந்த கோட்டையைக் கைப்பற்றியது. கூர்க்காஸ் சாதியார் 1816ல் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டனர். நேர்பாளத்தில் ஒரு சிறு நிலப் பரப்பு ஆங்கிலர்க்குக் கொடுக்கப்பட்டது. எஞ்சிய பாகம் தனியரசு நாடாக விடப்பட்டு, ஆங்கில சமஸ்தானவாசியொருவரும் தலைநகரில் வைக்கப்பட்டார். இவ்வுடன்படிக்கையின் நிபந்தனைகள் இன்னும் அநுசரிக்கப்பட்டுவருகின்றன. நேர்பாள ஆட்சி ஆங்கிலரின் கலப்பின்றி நடைபெறுகின்றது. கூர்க்காஸ் சாதியார் ஆங்கிலருடன் நட்புள்ளவர்களாக அவர்களுக்கு வேண்டிய காலங்களில் துணைச் செய்து வருகின்றார்கள். 1858ல் நடந்த இந்திய சேனைக் கலகத்திலும் ஐரோப்பிய மகா யுத்தத்திலும் கூர்க்காஸ் சாதியார் ஆங்கிலருக்குப் படையுதவி புரிந்தனர்.

3-ம் மருட்டிய யுத்தம்.

ஹேஸ்ரிங்ஸ் காலத்திலேயே மருட்டியரின் நெருக்குதலு மொழிந்தது. மருட்டியர் கொள்ளைக்

காரர். அயல்நாடுகளின் சமாதானத்தைக் கெடுத்தவர்கள். அவர்களோடு இப்போ பட்டாணிச் (Pathans) சாதியாரும் பிந்தாரிச் (Pindaris) சாதியாரும் சேர்ந்தனர். பட்டாணிகள் முஸ்லிம் சமயத்தவர்கள். யுத்தப் பிரியமுள்ள கொள்ளைக்காரர். கூட்டங் கூட்டமாகக் கூடிக் களவாடியவர்கள். பிந்தாரிச் சாதியாரும் கூட்டமாகச் சேர்ந்து கொள்ளையும் கொலையும் புரிந்தவர்கள். சாதி சமயபேதமின்றி ஒன்று கூடித் திரிந்து கிராமங்களை அழித்தவர்கள்.

இம்மூன்று சாதிகளினதும் கொடுமை நாளுக்கு நாள் அதிகரித்தது. ஒரு மருட்டிய பிரதானி ஒரு சில வருஷங்களுள் மீவார் (Mewar) மாகாணத்திற் கொள்ளையடித்த பணம் 30 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்டது. ஆங்கில நாடுகளும் இவ்வித அபாயகரமான நிலையிலிருந்தன. 1816ல் பிந்தாரிச் சாதியார் ஆங்கிலநாடுகட்குச் சென்று அதிக நஷ்டத்தை வருவித்தனர். 12 நாட்களில் 339 கிராமங்கள் அழிக்கப்பட்டன. 200 ஆட்கள் கொலையுண்டனர். 4000 சனங்கள் காயப்பட்டனர்.

ஹேஸ்ரிங்ஸ் பிரபு, காலதாமசம் செய்யாது இச்சாதியாரால் நெருக்கப்பட்ட இராசபுத்தருடன் ஓர் ஐக்கிய வுடன்பாடு செய்துகொண்டு, 120,000 போர்வீரரைச் சேர்த்து, மருட்டிய நாட்டை முற்றுகையிட்டார். பிந்தாரிச் சாதியார் 1817 ல் நிர்

மூலமாக்கப்பட்டனர். பட்டாணிச் சாதியார் முறியடிக்கப்பட்டுச் சமாதான சீவியம் நடத்துதற்கென்று ரொங்க் (Tonk) என்னும் மாகாணத்தில் விடப்பட்டனர். வீரியமும் தைரியமும் நிறைந்த இச்சாதியார் அவ்விடத்தில் ஆங்கில இந்திய சேனையில் சேர்ந்து யுத்தப்பயிற்சி பெற்றுவந்தனர். பூனா பிடிக்கப்பட்டதுடன் மருட்டிய வரசன் ஆங்கிலருக்குத் தன்னைக் கையளித்தான் (1818). இதன்பின் அரசனுக்கு இளைப்பாற்றி வேதனங் கொடுக்கப்பட்டது. மூர்க்கமும் துரோகமும் நிறைந்த பிரதானிகள் நீக்கிவைக்கப்பட்டனர். ஏனைய பிரதானிகள் தங்கள் நாடுகளை ஆங்கில மேற்பார்வையின்கீழ் ஆளுதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. இவ்வொழுங்குகளின்படியே இவ்விடங்கள் இன்னமும் ஆளப்படுகின்றன.

சிங்கப்பூரும் ஹேஸ்ரிங்ஸ் காலத்தில் ஆங்கிலர்க்கானது. யாவா 1815ல் ஒல்லாந்தருக்குத் திரும்பவும் கொடுக்கப்பட்டபோது, தேசாதிபதி, மலாக்காத் தொடுவாய்க்கூடாகத் தூர கீழைத் தேசத்துக்கும் சீனாவுக்கும் செல்லும் கடற்பாதையின் பாதுகாப்புக்காக, அதன் அயலில் ஓர் ஆங்கில குடியேற்ற நாட்டை ஸ்தாபிக்க வேண்டுமென்றெண்ணி, றவ்வில்ஸ் (Raffles) என்னும் உத்தியோகஸ்தனின் துணையைக்கொண்டு சிங்கப்பூரைக் கைப்பற்றினார் (1819). சிங்கப்பூர் தற்போது உலகின் பெரிய வியாபார துறைமுகங்க

ளுள் ஒன்றாகவும் ஆங்கிலரின் கீழைத்தேச கடற்பட்டாளத்தின் ஸ்தானமுமாக இருக்கின்றது.

இந்தியாவின் தேசாதிபதிகளுள் எவரேனும் ஹேஸ்ரிங்ஸ் பிரபுவைப்போல இந்தியாவுக்கு நன்மைகள் செய்திலர். இவருடைய ஆட்சிக்கால முடிவில் இந்தியாவின் எப்பக்கத்திலும் ஆங்கிலரின் ஆதிக்கம் பரவியிருந்தது. இவர் மிக்க ஊக்கத்துடனும் துணிவுடனும் அநேக யுத்தங்கள் செய்து நாடுகளைக் கைப்பற்றினார். அந்நாடுகளின் நன்மையை விரும்பி அவற்றை நீதியும் இரக்கமும் காண்பித்து ஆண்டுவந்தார். இராச்சியத்தைப் பெருப்பிக்க வேண்டுமென்பதை மாத்திரம் இவர் நினைக்கவில்லை. ஆங்கில நாடுகளில் பாதைகள் திருத்துவதையும், பாலங்கள் போடுவதையும், நீர்ப்பாய்ச்சு வேலைகள் செய்வதையும் இவர் ஊக்கப்படுத்தினார். இந்தியர் மேனாட்டுக் கல்வி கற்பதற்கும் உயர் உத்தியோகங்கள் பெறுவதற்குமான திட்டங்களை முதற்செய்தவர் இவரே.

லோட் அம்ஹேஸ்ற்.

(Lord Amhurst)

1823—1826

இவர்காலப் பிரதான சம்பவம் முதலாம் பர்மா யுத்தம். பர்மியர் சில்லாண்டுகளாக யுத்தப் பிரியமும் மூர்க்கமுமுள்ள அரசராலாளப்பட்டனர்.

1784ல் அவர்கள் அரக்கனைப் பிடித்தார்கள். இப்பாகிடோ (Hpagyidoa) என்பவன் அரசனான போது(1819), மனிப்பூர் (Manipur), அசாம்(Assam) என்ற இடங்களைக் கைப்பற்றி ஆங்கில எல்லை வரைக்கும் தன் இராச்சியத்தைப் பெருப்பித்தான். 1824ல் ஆங்கிலரிடமிருந்து வங்காளத்தைப் பறிக்கத் தீர்மானித்தான். அவனுடைய சேனை வெகு சீக்கிரத்தில் எல்லைப் பக்கங்களிலிருந்து துரத்தப்பட்டது. மனிப்பூரும் அசாமும் ஆங்கிலரால் பிடிக்கப்பட்டன. இராசதானிக் கணித்தாயுள்ள யண்டாபோ (Yandabo) என்ற இடத்தில் செய்யப்பட்ட உடன்படிக்கையால் அரசன் அசாம், அரக்கன், என்ற இடங்களை ஆங்கிலருக்குக் கொடுக்கவும், யுத்த தெண்டமிறுக்கவும், வியாபார உரிமைகளளிக்கவும் சம்மதங் கொடுத்தான். அம்ஹேஸ்ற் பிரபு 1826ல் உத்தியோகத்தினின்று இளைப்பாறினர். அவரிடமாக உவில்லியம் பென்றிங்க் (William Bentink) பிரபு 1828ல் தேசாதிபதியானர்.

லோட் உவில்லியம் பென்றிங்க்
(Lord William Bentink)
1828—1835.

பென்றிங்க் பிரபு வங்காளத்தில் விதவைகள் உடன்கட்டையேறும் பண்டை வழக்கத்தை 1829ல் நீக்கி வைத்தார். சென்னை, பம்பாய்ப் பகுதிகளிலும் இவ்வழக்கம் படிப்படியாகக் குறைந்தது.

நாட்டுப் புறங்களில் தக்ஸ் (Thugs) என்னும் கொள்ளைக்காரரின் கூட்டங்க ளிருந்தன. அவர்கள் பிரயாணிகளைக் காளிதேவதைக்குப் பலி கொடுப்பதாகப் பாசாங்கு பண்ணிப் பணம் பறித்துவந்தார்கள். 1829ல் அவர்களிலொருவன் பிடிக்கப்பட்டான். அவன், தான் தப்பிக்கொள்வதற்காக தன் கூட்டத்தவரின் இரகசியங்களை வெளியிட்டான். இதனால் அவர்களிலநேகர் கைதியாக்கப்பட்டு அவர்களின் கூட்டங்களும் குலைக்கப்பட்டன.

பென்றிங்க் பிரபு அரசாங்க வரவு செலவுத் திட்டங்களையும் கல்வி வளர்ச்சிக்கான வழிவகைகளையும் செய்து வைத்தார். இவர்காலத்தில் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட சட்டத்தின்படி சாதி, சமயம், குலம், நிறம், என்ற வித்தியாசமின்றி, இந்தியர் உத்தியோகங்கள் பெற்றனர். பென்றிங்க் பிரபுவுக்குப்பின் ஒக்லன்ட் பிரபு (Lord Auckland) தேசாதிபதியாக அனுப்பப்பட்டார்.

லோட் ஒக்லன்ட்.
(Lord Auckland)
1834—1842.

பார்சியாவும் றூஷியாவும் இக்காலத்தில் நட்புள்ள தேசங்களாக விருந்தன. 1837ல் பார்சியர் ரூஷியராற் தூண்டப்பெற்று ஆபுகானிஸ்தானிலுள்ள எருற் (Herat) மாகாணத்தைப் பிடித்துக்கொள்ளப்

படையெடுத்துச் சென்றனர். ஒக்லண்ட்பிரபு, ஆங்கில முதல் மந்திரி பாமெஸ்ரனின் (Palmerston) உத்தரவுப்படி, ஆபுகானிஸ்தானுக்குச் சேனை அனுப்பி, அங்கே அரசு நடத்திய கான் (Khan) என்பவனைத் துரத்தி, முன்னரே அரசிழந்தவனாகிய ஷா ஷூஷா (Shah Shuja) என்பவனை அரசனாக்கினார். சனங்கள் சிறிதுகாலத்துக்குப் பின் (1841) கலகம் விளைத்தனர். கபூல் நகரிலிருந்த ஆங்கில போர்வீரர் பகைவரால் சூழப்பட்டு, ஓடித்தோடும் வழியில், கைபர் கணவாயில் பிடிக்கப்பட்டனர். 17,000 வீரருள் பிறைடன் (Brydon) என்னும் வைத்தியன் ஒருவன் மாத்திரமே யலாலபாத் (Jalala. bad நகரத்தை யடைந்து, தன்னுடன் சென்றவர்களுக்கு நேர்ந்த அபாயத்தை ஆங்கிலருக்குத் தெரிவித்தான். ஒக்லண்ட் பிரபு தனது பிழையினால் ஏற்பட்ட சீவமோசத்தைப்பற்றிய துக்கத்தில் அமிழ்ந்தியவராய் இங்கிலாந்துக்குத் திரும்பினார்.

லோட் எலன்பறே
(Lord Ellenborough)
1842—1844

எலன்பறோ பிரபு 1842ல் தேசாதிபதியானார். கைபர் கணவாயில் ஆங்கிலரடைந்த அவமானத்துக்குப் பழிவாங்க வேண்டுமென்பது இவர் எண்ணமாயிருந்தது. கண்டகார் (Kandahar) யலாலபாத் ஆகிய இடங்களில் இன்னமும் ஆங்கில

சேனைகள் ஆபுகானிஸ்தரால் சூழப்பட்டிருந்தன. எலன்பறோ பிரபு சேனைகளை மீட்பதற்காகத் தாமசமின்றி மற்றோர் சைனியத்தை அனுப்பினார். ஆபுகானிஸ்தரின் பிரதான கோட்டையொன்றும் கபூல் நகரும் கைப்பற்றப்பட்டன. ஆங்கில வீரருக்குச் செய்யப்பட்ட அக்கிரமங்களுக்குப் பழிவாங்கப்பட்டது. ஆங்கிலர் இந்தியாவுக்குத் திரும்பியபின் கான் என்பவன் மறுபடியும் அரசுக்கு வந்தான்.

1843ல் எலன்பறோ பிரபு இந்தியாவில் அடிமை ஊழியத்தை நீக்கினார். இவ்வாண்டிற்றானே சிந்து மாகாணமும் ஆங்கிலரின் ஆணைக்குள்ளாக்கப்பட்டது. சிந்துதேசம் செழிப்பான நாடாயிருந்ததாலும், யுத்த முயற்சிகளைத் தடுப்பதற்கு ஆங்கிலருக்குத் தேவையாயிருந்ததாலும், ஆங்கிலரால் கவரப்பட்டது. சிந்து அரசர் 1832ல் ஆங்கிலருடன் ஓர்வித உடன்படிக்கை செய்திருந்தனர். இதன்பின் ஆங்கிலரின் நீதியற்ற நெருக்கிடையால் புரட்சியுண்டானது. புரட்சிக் காலத்தில் (1843), தேசாதிபதி, உத்தியோகஸ்தர் முதலிய பெரியாரினதும் தாய்நாட்டு மேலதிகாரிகளினதும் விருப்புக்கு மாறாக, சிந்து மாகாணத்தை இணைத்துக் கொண்டார்.

லோட் ஹாடிங்.

(Lord Harding)

1844—1846.

ஹாடிங் பிரபு தேசாதிபதியான இரண்டாம் வருடத்தில் மிகவும் பயங்கரத்துக்குரிய பகைவரோடு யுத்தமுடற்ற வேண்டியிருந்தது. சீக் சாதியார் முன்னோர் காலம் முகலாய அரசரின் வல்லமையை அழித்தவர்கள். வெற்றி வீரனும் ரஞ்சிதசிங் என்னும் மகா ராசனால் அநேகாண்டுகளாக ஆளப்பட்டவர்கள். ரஞ்சிதசிங் பஞ்சாலம்,, காஷ்மீரம், பெஷ்வார், கங்கிரா, முதலிய விடங்களை வெற்றிபெற்று ஆண்ட மன்னன். லோட் மின்றோவின் ஆட்சியின்போது ஆங்கில நாடுகளைக் கொள்ளையடித்தவனாதலால் அவர் அன்னவனுடன் ஓர் உடன்படிக்கை செய்தார். அதன்பின் ரஞ்சிதசிங், இறக்கும் வரையும் (1839), ஆங்கிலரோடு நட்பாளனாயிருந்தான். அவனின் மரணத்துக்குப்பின் ஆறு வருடங்களாக இராச்சியக் குழப்பமும் ஒற்றுமையீனமு முண்டாயின. ஈற்றில் 1845ல் டியூலிப்சிங் (Dhuleepsingh) என்னும் 5 வயதுச் சிறுவனைச் சீக் சாதியார் அரசனாக்கினர். போர்ப்பிரியரான சீக்கியர் இத்தருணத்தில் தங்கள் எல்லை கடந்து ஆங்கில நாட்டினுட் பிரவேசித்து, யுத்தந் தொடக்கினர். இவர்களை வெற்றிகொள்வது ஆங்கிலர்க்கு இலகுவான கருமமாயிருக்கவில்லை. ஆரம்பத்தில் சீக்கியர் சிறுக வெற்றியடைந்தனர்.

ஆயினும் ஆங்கிலர் 1846ல் சொப்பிறாஒன் (Sobraon) யுத்தத்தில் அடைந்த வெற்றியால் அவர்கள் நாட்டைக் கைப்பற்றினர். அப்பால் லாகூரில் செய்யப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், காஷ்மீரமும் ஆங்கில எல்லைக்குத் தெற்கேயுள்ள காடுகளும் சீக்கியரிடமிருந்து பறிக்கப்பட்டன. சீக்கியரின் சேனை சிறுப்பிக்கப்பட்டது. அவர்களின் நாட்டிலோர் சமஸ்தானவாசியும் வைக்கப்பட்டான்.

ஹாடிங் பிரபு இந்தியாவில் புகைரதப் பாதைகள் திறத்தற்கான ஆயத்தங்களைச் செய்தார். கல்வி வளர்ச்சியில் அதிக ஊக்கம் காட்டினார். ஒறிஸா நாட்டினின்று மனிதபலி கொடுக்கும் நாகரீகமற்ற வழக்கத்தைத் தொலைத்தற்கான பிரமாணங்களை ஆக்கினார்.

லோட் டல்ஹவுசி.

(Lord Dalhousie)

1846—1856.

ஹாடிங் பிரபுவுக்குப் பின் தேசாதிபதியான டல்ஹவுசி பிரபு தேக சவுக்கியம் குறைந்தவராயினும் இந்தியாவின் நன்மைக்காக அதிக பிரயாசையுடன் உழைத்தார். இவர்காலத்தில் சீக்கியர் மறுபடியும் போருக்கெழுந்தனர். அந்நியரின் ஆட்சியினின்று தம் நாட்டை விடுவிக்க வேண்டுமென்றாற்போலக் கலகங்கள் விளைக்கத் தொடங்கினர். முல்த்தான் (Multan) என்ற இடத்

தில் 1848ல் சீக்கியர் இரு ஆங்கில உத்தியோகஸ்தரைக் கொன்றது காரணமாகத் தேசாதிபதி சேனை திரட்டிச் சீக்கியரைச் சிலியன்வல (Chilianwala) என்ற இடத்தில் தோல்வியடையச் செய்தார். அன்னவர் முன்னிலும் மும்முரமாக யுத்தம் நடத்தினர். ஆங்கில சேனை மறுமுறை குஜராத்தில் போராடி வெற்றி பெற்றது. பெஷ்வார் இராசதானியையும் பிடித்தது. உடனே டியூலிப்சிங் அரசினின்று நீக்கப்பட்டான். அவனுடைய நாடு ஆங்கில ராதீனத்துக்குட்பட்டது. சீக்கியர், அக்காலம் தொடக்கம் அங்கிலேய இராணுவத்தைச் சேர்ந்து, போர்த்தொழிலில் திறமையுடையோராய் விளங்குகின்றனர்.

இரண்டாம் பர்மிய யுத்தமும் இத் தேசாதிபதி காலத்திலேயே நடைபெறலானது. பர்மியர் சமாதானம் விரும்பும் சாதியார். அவர்களைச் சில காலங்களாக ஆண்ட மன்னர் கொடுங்கோலர். முதலாம் பர்மிய யுத்தத்துக்குக் காரணராயிருந்த இப்பகிடோ அரசனுக்குப் பைத்தியம் பிடித்தமையால், அவன் மகன் தாராவடி (Tharawadi) என்பவன் 1837ல் அரசைக் கையேற்று, மிதமிஞ்சிய மதுபானம் அருந்தும் பழக்கத்தால் மதிகெட்டு, பிரசைகளைக் கொடுமையாக ஆண்டுவந்தான். கடைசியாக 1845ல் அவனுடைய அரண்மனையாட்கள் அவனுடன் செய்த சண்டையில், தங்கள் உயிரைக் காப்பதற்காக, அவனைக் கொலைசெய்தனர்.

தாராவடியின் மகன் பகான் மெங் (Pagan Meng) இப்போ அரசனானான். இவன் சூதாடுவதில் பொழுதுபோக்கினானன்றி, இராச்சியத்தை ஆளுவதில் சிரத்தை எடுக்கவில்லை. முன்போலப் (1824) பர்மியர் எல்லை கடந்து, ஆங்கில நாட்டுக்குட் புகுந்து, குடிகளுக்கு இடுக்கண் விளைத்தனர். டல்ஹவுசி பிரபுவாலனுப்பப்பட்ட சேனை பர்மியரை இலகுவிற் தோற்கடித்தது. றங்கூனிலிருந்த பேராலயம் 1852ல் பிடிக்கப்பட்டது, பெகுநாடு முழுவதும் ஆங்கிலர்க்கானது. பர்மிய அரசன் சமாதானம் செய்துகொள்ளச் சம்மதிக்காததாலும், தேசாதிபதி யுத்தத்தை நீடிக்க விரும்பாததாலும், பெகு நாட்டை ஆங்கிலர் வைத்திருக்க வேண்டியதாயிற்று. ஆனால் பின்னர் நடைபெற்ற மற்றோர் யுத்த முடிவில் பர்மியரும் ஆங்கிலரும் முடிவான ஒழுங்குகள் செய்துகொண்டனர்.

டல்ஹவுசி தேசாதிபதி அரசியல் விஷயங்களில் அநேக திருத்தங்களைச் செய்தார். புதிய பாதைகளும், கால்வாய்களும், புகைரத வீதிகளும், இவராற் திறக்கப்பட்டன. தபாற்கந்தோர்களும் தந்திக்கந்தோர்களும் இவர் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டன. கல்வியும் வளர்ச்சி யடைந்தது. இவராற் செய்யப்பட்ட திருத்தங்களும் மாற்றங்களும் மிகப் பலவாயினும் அவை செய்யப்பட்ட காலம் சுருக்கமாயிருந்ததால் இந்தியர் மிகவும் மயக்கமுற்றனர்.

லோட் கன்னிங்.

(Lord Canning)

1856—1862.

மேற்கூறிய காரணத்தால் இந்தியாவின் பலவிடங்களிலும் சனங்கள் கலகம் செய்ய ஆயத்தப்பட்டனர். இராணுவத்திலமர்ந்த சிப்பாய்களே இவர்களுள் முதல்வராவர். அவர்கள் கலகம் தொடக்குவதற்குத் தருணம் பார்த்திருக்கையில், புதியவகைத் துப்பாக்கிகளையும் அவற்றிற்கு வேண்டிய தோட்டாக்களையும் சேனையாட்கள் உபயோகிக்க வேண்டுமென்ற கட்டளை அரசாங்கத்தாராற் கொடுக்கப்பட்டது. சேனையாட்கள் இந்து அல்லது இஸ்லாம் சமயத்தவர்கள். இந்துக்கள் பசுவை அன்பாய் ஆதரிக்கிறவர்கள். மகமதியர் பன்றியை அருவருத்துத் தள்ளுகிறவர்கள். தோட்டாக்களில் மாட்டுக்கொழுப்பும் பன்றிக்கொழுப்பும் சேர்க்கப்பட்டிருந்ததால் இருபகுதியாரும் அவற்றை உபயோகிக்க மறுத்து நின்றனர். தங்கள் எல்லோரையும் கிறீஸ்தவர்களாக்குவதற்காக இவ்வுபாயம் கையாடப்பட்டதெனவும் சிலர் எண்ணினர். மீறற், டெல்ஹி, கோண்பூர், இலட்சுமணபுரி முதலிய விடங்களில் கலகம் உண்டானது. மீறற்றில் 1857-ம் ஆண்டு, வைகாசி மாதம், 10-ந் திகதி, ஞாயிற்றுக்கிழமையன்று, ஐரோப்பியர் யாவரும் கோவிலிற் கூடியிருக்கச் சிப்பாய்கள் அப்பட்டணத்திலிருந்த மறியற்காரரை விடுதலையாக்கி,

உத்தியோகஸ்தரின் வீடுகளுக்கு எரியூட்டி, அகப்பட்ட ஐரோப்பியரைக் கொன்றனர். அப்பால், டெல்ஹிக்குச்சென்று நகரத்தைக் கைப்பற்றி, ஆண், பெண், சிறியோர், பெரியோர் என்ற பேதமின்றி ஐரோப்பியரைக் கொலைசெய்தனர்.

கன்னிங் தேசாதிபதி இவ்வேளையில் பம்பாய், சென்னை, பர்மா, ஆதியவிடங்களிலிருந்து சேனைகளை அழைப்பித்து டெல்ஹி நகரை மீளவும் பிடித்தார். கலகக்காரரால் அரசனாக்கப்பட்ட பாதூர்ஷா என்ற முகலாயனைக் கைதியாக்கி றங்கூனுக்கனுப்பிவைத்தார் (1857). கலகம் முற்றாகத் தணிவதற்கு இரண்டு வருஷங்கள் சென்றன. வங்காளத்திலும் அயோத்தியிலும் கலகம் மும்முரமாக நடைபெற்றது. லட்சுமணபுரியில் ஆங்கிலர் சிலர், பகைவரின் முற்றுகையால், சமஸ்தான வாசியின் மாளிகையில், நாலுமாசங்களாக, அடைபட்டிருந்தனர். ஈற்றிலோர் ஆங்கிலசேனை அவ்விடம் சென்று அவர்களை இரட்சித்தது. கோண்பூரில் இன்னும் பரிதாபமான சம்பவமொன்று நடைபெற்றது. அங்கே கலகக்காரரின் தலைவனாயிருந்த நானாசகிப் (Nana Sahib) என்னும் மருட்டியன், தானோர் புதிய மருட்டிய இராச்சியத்தைத் தாபிக்கலாமென்ற எண்ணத்தால் தூண்டப்பட்டு, ஐரோப்பிய வியாபாரிகள் அநேகரையும் அவர்கள் மனைவி மக்களையும் மூன்றுகிழமைவரையில் வருத்தலானான்.

கடைசியில் அவன் அவர்களை அலகபாத்துக்குச் செல்ல உத்தரவளிப்பதாகப் பாசாங்குபண்ணி, வள்ளங்களிலேற்றியபின், துப்பாக்கிகளுக் கிரையாக்கினன். உயிர்பிழைத்தோரைத் துண்டந் துண்டமாக வெட்டிக் கிணற்றுளெறிவித்தான். அவர்களை மீட்பதற்கென்று புறப்பட்ட சேனை, இது நடந்து இரண்டு நாட்களுக்குப்பின், கோண்பூரையடைந்து நகரத்தைக் கைப்பற்றியது.

இதன்மேல் கலகம் படிப்படியாகத் தணிந்தது. சுதேசவரசர் திரும்பவும் சொற்பகாலத்துக்குள் ஆங்கில அரசுக்குப் பிரமாணிக்கமுள்ளவர்களானார்கள்.

சிப்பாய்க் கலகத்தின் பயனாக இந்தியா கிழக்கிந்திய கொம்பனியாரின் ஆட்சியினின்றெடுக்கப்பட்டு ஆங்கிலேய பேரரசாங்கத்தின் நேராளுகைக்குள் கொண்டுவரப்பட்டது. (1858). இம்மாற்றத்தை விக்ரோறியா இராணி 1858-ம் ஆண்டு கார்த்திகை மாதம், முதலாம் திகதி விடுத்த விளம்பரத்தால் இந்திய சனங்களுக்கும் அரசருக்கும் அறியக்கொடுத்தாள்.

7-ம் அதிகாரம்

இலங்கை: ஆங்கிலர் காலம்.

1820—1850

இலங்கையில் ஒல்லாந்தராற் கைப்பற்றப்பட்ட கரைநாடுகள் ஆங்கிலருக்கானதும், அவை கிழக்கிந்திய கொம்பனியாரின் அதிகாரத்தினின்று நீங்கி முடியாட்சிக்குட்பட்டதும், கண்டி இராச்சியம் ஆங்கிலராற் பிடிக்கப்பட்டதும் பற்றிய வரலாறுகள் இதுவரை கூறப்பட்டன. இனி முழு இலங்கையும் ஆங்கில அரசாங்கத்தால் ஆளப்பட்டு அதன் பயனாக அடைந்துள்ள வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் ஆராய்வாம்.

பிறவுண்றிக் மன்னர் 1820ல் இலங்கையாலகன்று விட, சேர் எட்வேட் பாண்ஸ் (Sir Edward Barnes) என்பவர் உபதேசாதிபதியாகி, இரண்டு வருஷத்திற்கு அரசு நடத்தி வந்தார். அடுத்த இரண்டு வருஷங்களும் சேர் எட்வேட் பஜெற் (Sir Edward Paget) என்பவர் இலங்கையின் தேசாதிபதியாகக் கடமை பார்க்க, பாண்ஸ் பிரபு மறுபடியும் தேசாதிபதியானர்.

புதிய பாதைகள்.

பாண்ஸ் தேசாதிபதி சுறுசுறுப்பும் வேலைத் திறமையுமுடையவர். சட்டங்கள் ஆக்குவதிலும்

ஆட்சி முறைகளைத் திருத்துவதிலும் இவருடைய கவனம் செல்லவில்லை. இவர் இலங்கையின் தேவைகளுள் விசேஷித்தவை போக்குவரவுப் பாதைகளென்பதை உணர்ந்து, பல பாதைகளைத் திறப்பித்தார். ஒல்லாந்தர் தங்கள் ஆட்சிக்கால ஆரம்பத்திற் திறந்த பாதைகளைத் தவிர, இலங்கையில் வேறு பாதைகள் இருக்கவில்லை. கண்டி இராச்சியத்தில் மலைகளுக்கும் காடுகளுக்கு மூடாகச் செல்லும் ஒற்றையடிப் பாதைகள் மாத்திரம் காணப்பட்டன. அப்பாதைகளிலும் வழிகாட்டிகளின்றிப் பிரயாணம்செய்ய முடியாதிருந்தது. ஒரு பட்டணத்திலிருந்து மற்றோர் பட்டணத்துக்கு, தேவையான காலங்களில் சைனியங்களனுப்புவது மிகவுங் கஷ்டமாயிருந்தது.

இதனால் பாண்ஸ் தேசாதிபதி இத்தீவின் எல்லாப் பட்டணங்களையும் பாதைகளா லிணைக்கத் தீர்மானித்தார். இவ்வேலையில் ஸ்கின்னர் (Skinner) என்னும் பட்டாள உத்தியோகஸ்தன் ஒருவன் பெரும் துணையானான். கொழும்பிலிருந்து கண்டிக்குப் போகும் பாதை முதன் முதலாகத் தொடக்கப்பட்டது (1820). கடுகணாவைமலை யேற்றத்தில் பாதை வேலை அதிக கஷ்டத்துக்குரியதாயிருந்தது. இப்பாகத்தில், மிக்க பிரயாசையுடன் வேலையை நடப்பித்தவரான கப்ரின் டோசன் (Captain Dawson) என்பவரின் ஞாபக தம்பம் வழியோரத்தில் இன்னும் காணக் கிடக்கின்றது.

அப்பால், கண்டியிலிருந்து மாத்தளைக்கு 1831ல் பாதை திறக்கப்பட்டு, 1832ல் தம்பளையும், 1833ல் திரிகோணமலையும் இணைக்கப்பட்டன. கரையோரமாக 736 மைல் நீளமான பாதையொன்று இலங்கையைச் சுற்றிப் போடப்பட்டது. இப்பாதை கொழும்பிலிருந்து புத்தளம் மார்க்கமாக யாழ்ப்பாணத்துக்கும், கீழ்க்கரையில் திரிகோணமலை வழியாக மட்டக்களப்புக்கும், அங்கிருந்து அம்பாந்தோட்டை, மாத்துறை, காலி, முதலிய பட்டணங்க ளூடாகக் கொழும்புக்கும் சென்றது. மாத்தளை, வதுளை, நுவரெலி, ஆதிய பட்டணங்களும் ஒன்றோடொன்று பாதைகளால் இணைக்கப்பட்டன. கரைநாடுகளிலிருந்து குருநாகல் வழியாக மலைகளையூடறுத்துக் கண்டிக்குச் செல்லும் இன்னோர் பாதையும் இப்போ திறக்கப்பட்டது.

புதிய பாதைகள் திறக்கப்பட்டதால், சேனைகள் இலங்கையின் பல பட்டணங்களிலும் நிறுத்தப்படாமல், ஒரேபட்டணத்தில் தங்கியிருக்கக் கூடியதாயிற்று. நீதிபதிகள், ஏஜண்டுமார், வைத்தியர், முதலிய உத்தியோகஸ்தர் விரைவாகப் பிரயாணம் செய்து தங்கள் உத்தியோக கடமைகளை நிறைவேற்ற வசதியேற்பட்டது. வியாபாரம் விருத்தியாவதற்கும், கமச்செய்கை வளர்ச்சியுறுவதற்கும் தருணம் வாய்த்தது. இவற்றிலுமதிகமாகச் சிங்களர், சோனகர், தமிழர், ஆதியோர் ஒருவரொருவரையறியவும், ஒத்துழைக்கவும், ஐக்

கியவுணர்ச்சி கொள்ளவும், போக்குவரவுப் பாதைகள் வழிதிறக்கலாயின.

கிருஷிகமும் வியாபாரமும்.

பாண்ஸ் தேசாதிபதி சனங்களைக் கிருஷிகத்திற் றூண்டிவிட்டு, இலங்கையின் வியாபாரமும் வளரச்செய்தார். தமது செலவிற் பல தோட்டங்களை ஆக்குவித்தார். பயிர்செய்ய விரும்பினவர்கட்குக் காட்டு நிலங்களை இலவசமாகக் கொடுத்தார். 1824 ல் காப்பிச்செய்கை ஆரம்பமானபோது, பேராதனைக்குச் சமீபமாய் கங்கருவாவெனுந் தோட்டத்தைத் தமது பொறுப்பில் அமைத்தார். கப்ரின் பேட் (Captain Bird) என்னும் பட்டாள உத்தியோகஸ்தன் கம்பளைக்கும் புசலாவைக்குமிடையிலோர் காப்பித் தோட்டத்தைத் திறந்தான். சொற்ப காலத்துக்குள் மலைநாடுகளில் காடுகள் வெட்டப்பட்டுப் புதிய தோட்டங்கள் தொடக்கப்பட்டன. வருஷத்துக்கு வருஷம் இங்கிலாந்துக்கு அதிகமதிகமான கோப்பி ஏற்றுமதியானது. 1827-ம் ஆண்டில் பதினயிரம் அந்தர் கோப்பி இலங்கையிலிருந்து அனுப்பப்பட்டது.

காப்பிச்செய்கை அதிகரித்ததன்பயனக இலங்கையின் வறுமை நீங்கியது. அரசாங்கத்துக்கு வருமானம் கூடியது. கல்வி விஷயங்களிலும் பாதைகள், பாலங்கள், போடுவதிலும் பணம் செல

விடக்கூடியதாயிருந்தது. அரசியல் முறைகளும் திருத்தப்பட்டன.

அரசியல்முறைத் திருத்தங்கள்.

காப்பிச் செய்கையும் வியாபாரமும் அநேக ஆங்கிலர் இலங்கைக்கு வருகிறதற்குக் காரணமாயிருந்தன. இவர்களே பெருந் தொகையான தோட்டங்களைச் செய்கை பண்ணினர். இவர்கள் அரசின் கீழ் உத்தியோகம் பெற்றவரல்லர். இலங்கையாரைப் போலவே இவர்களும் ஆளப்பட்டு வந்தனர். ஆங்கிலர் இதை விரும்பவில்லை. இங்கிலாந்திற் போன்று, சனப்பிரதிநிதிகள் அரச சபையிலிருக்கவேண்டுமென்றும் அவர்களுக்கு ஆட்சி விஷயத்தில் பங்கும் உரிமையும் கொடுக்கப்பட வேண்டுமென்றும் தோட்டத் துரைமார் காலத்துக்குக் காலம் பேரரசாங்கத்துக்கு மனுப்பண்ணினர். 1829ல் நான்காம் ஜோர்ஜ் அரசர் இதுவிஷயத்தை ஆராய்வதற்கென இருவரை இலங்கைக்கு அனுப்பிவைத்தார். அவர்களுள் ஒருவர் கோல் புறூக் (MaJor Colebrooke) என்னும் தளபதி. கோல் புறூக் தேசபிரமாணங்களையும் ஆட்சி முறைகளையும் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டார். கமறன் (Cameron) என்னும் மற்றவர் நீதிக்கோடுகளின் அமைப்பையும் நீதி முறைகளையும் ஆராயத் தத்துவம் பெற்றுர். இருவரும் இலங்கைக்குவந்து, பிரதான பட்டணங்களுக்குச் சென்று, அங்கேயுள்ள உத்தியோகஸ்தரையும், பிரதானிகளையும், சனங்

களையும் சந்தித்து, நேர்விசாரணைகள் நடத்தித் தங்கள் குறிப்புக்களையும் செய்யக்கூடிய திருத்தங்களையும் 1832 ல் அரசருக்குத் தெரிவித்தனர். இவர்களின் அறிக்கையிற் சொல்லப்பட்ட அநேக திருத்தங்கள் பாண்ஸ் தேசாதிபதிக்குப்பின் 1831 ல் அரசைக் கையேற்றவரான சேர் றபேட் ஹோட்டன் (Sir Robert Horton) காலத்தில் செய்யப்பட்டன.

இக்காலம்வரையும் கண்டிப்பகுதியும் கரைநாடுகளும் தனித்தனி முறைகளில் ஆளப்பட்டன. 1833-ம் ஆண்டு, புரட்டாசி மாதம் தொடக்கம் முழு இலங்கையும் ஒரே பொது ஆட்சிக்குட்பட்டது. இதனால் மலை நாடும் கரைநாடுகளும் ஒன்றிக்கவும் தேசீய ஒற்றுமையை விரும்பவும் அஸ்திவாரமிடப்பட்டது. புதிய பிரமாணங்களின்படி ஆளப்படுவதற்காக இலங்கை வட, தென், கீழ், மேல், மத்திய மாகாணங்களென ஐந்தாய் வகுக்கப்பட்டது. ஒவ்வோர் மாகாணத்துக்கும் ஒரு மாகாண அதிபரும் நியமிக்கப்பட்டார். இம்மாகாணப் பிரிவுகள் மிகப்பெரியனவாதலால், சிலகாலங்களுக்குப்பின் வடமேல் (1845), வடமத்திய (1873), ஊவா)1886), சப்பிரகமுவா (1889), மாகாணங்கள் வகுக்கப்படலாயின.

இவ்வாண்டிற்றானே (1833), பிரமாண விதிசபை, பிரமாண திதிசபை என்னுமிருசபைகளு மேற்படுத்தப்பட்டன. முந்திய சபைக்குத் தேசாதி

இலங்கையில் வழங்கிவந்த நிலமானிய முறையும் 1832ல் நீக்கப்பட்டது. இம்முறையின்படி சனங்கள் பிரதானிகளிடமிருந்து நிலங்களைப் பெற்றுக் கமம் செய்துவந்தனர். அந்த நிலங்களுக்காக அவர்கள் வாடகைப் பணம் இறுக்க வேண்டும். பணத்துக்குப் பதிலாக அவர்கள் பிரதானிகளுக்கு "இராசகாரியம்" எனப்படும் ஊழியஞ்செய்தார்கள். இந்த வழக்கம் நிறுத்தப்படவே, அரசாட்சியார் மகா சனங்களுக்குரிய வேலைகளைச் சனங்களைக்கொண்டு செய்விக்க முடியாது போயிற்று. இதனால் இலங்கையார் வருஷத்திற் பதினைந்து நாட்களுக்குத் தெருக்களில் வேலைசெய்ய அன்றேல் தலைவரிப்பணமிறுக்க வேண்டுமென்ற பிரமாணம் 1848 ல் விதிக்கப்பட்டது.

சுப்பிறீங் கோடுகள், டிஸ்திறிக் கோடுகள் எனப்படும் நீதிவிசாரணைக் கோடுகளும் 1833-ம் வருஷத்திலேயே ஸ்தாபிக்கப்பட்டன. பின்னர், 1844ல் பொலிஸ் கோடுகளும், 1845ல் றிக்குவெஸ்ற் கோடுகளு முண்டாயின. கொழும்புப் பட்டணத்திற் காணி வாங்கி வீடுகட்டியிருக்கும் சலாக்கியம் தமிழர் சோனகருக்கு இப்போ கிடைத்தது. இலங்கையில் எவரும் கறுவா செய்கைபண்ணிக்கொள்ளலாமென உத்தரவுமளிக்கப்பட்டது,

கண்டிக் கருமங்கள்

மேற்கூறப்பட்ட திருத்தங்களையும் மாற்றங்களையும் மலைநாட்டு வாசிகள் சந்தோஷத்துடன ஏற்றுக்கொள்ளவில்லை. அவற்றால் தாமடையக் கூடிய பயன்களெவை யென்பதை அவர்கள் விளங்கவில்லை. தங்கள் சுவாதீனத்தையும் பழக்க வழக்கங்களையும் கைவிட வேண்டியிருந்ததையறிந்து துக்கித்தனர். பிரதானிகளும் 1818 ல் திருத்தப்பட்ட சட்டத்தின்படி தமக்கிருந்த அதிகாரத்தை இழந்துவிட்டனர். பாண்ஸ் தேசாதிபதியால் அமைக்கப்பெற்ற பாதைகள் வழியாக அந்நிய வணிகர் கண்டிநாட்டுக்குட் புகுந்து வியாபாரஞ் செய்தனர். பிறசாதியாரின் தொடர்பின்றித் தனிமையாகச் சீவித்த கண்டி நாட்டுச் சனங்களுக்கு இதுவும் வெறுப்பைக் கொடுத்தது. இன்னும் காப்பித் தோட்டங்களின் தொகை கூடியதோடு ஆங்கில தோட்டத் துரைமாரும் இந்திய கூலிச் சனங்களும் கூட்டங் கூட்டமாக இங்குவந் திறங்கினர். இவர்கள் கண்டி நாட்டின் செல்வத்தை அபகரிக்க வந்தவர்களென்றே சிங்களர் விளங்கிக்கொண்டனர் கடைசியில் கண்டி நாடும் கரை நாடுகளும் ஒரே யாட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டு, இராசகாரிய ஊழியம் நிறுத்தப்பட்டதைக் கண்ட பிரதானிகள் கோபாவேசங்கொண்டு இடத்துக்கிடம் சென்று சனங்களைக் கலகம் செய்யத் தூண்டிவிட்டனர்.

1834ல் முதல் அதிகாரமாகிய இளைய முள்ளிக்கொடை என்பவன் ஆங்கில வரசுக்கு மாறாகப் புரட்சியுண்டாக்க இரகசிய ஆயத்தங்கள் செய்வதாக மகாவலத்தன்ன (Mahawalatenne) என்னும் அதிகாரம் அரசாட்சியாருக்குத் தெரிவித்தான். இதற்கு முன்னரும் கண்டியில் அரசுரிமைக்காகக் கலகங்கள் தோன்றியதால், ஆங்கிலவதிகாரிகள் மகாவலத்தன்னவின் வார்த்தையை நம்பி, முள்ளிக்கொடையைச் சிறைப்படுத்தி, அவன் குற்றங்களை விசாரணை செய்தனர். நீதிஸ்தலத்தில் நடத்தப்பட்ட விளக்கத்தில் முள்ளிக்கொடையை யூரிமார் சுற்றவாளியெனக்கண்டனர்.

முள்ளிக் கொடையின் கலகத்தைப் பற்றிய செய்தி நாட்டிற் பரவியது. இத்தருணத்தில் நடைபெற்ற வேறு சம்பவங்களும் சனங்களின் கோபத்தை மீண்டும் புதுப்பித்துவந்தன. ஆங்கிலர் கண்டியைக் கைப்பற்றிய காலம் தொடக்கம், புத்த குருக்களின் தலைவனும் உபதலைவனும் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். தாலத மாளிகை குருபதவியிலில்லாத ஒருவரின் பொறுப்பில் விடப்பட்டிருந்தது. 1841 ல், பிரதம குருக்களைத் தெரிவு செய்யுமதிகாரம் புத்தகுருக்களுக்கே யுரியதெனக் கட்டளை பிறந்தது. 1847 ல் புத்ததந்தம் தாலத மாளிகையின் அதிகாரிகளின் பாதுகாப்பின்கீழ்ச் சென்றது. அரச பராமரிப்பின் கீழிருந்த புத்தாலயங்களும் நிலங்களும் குருமாருக் களிக்கப்பட்டன. ஆலயங்களுக்கு அரசாட்சியா ரிறுத்துவந்த நன்

கொடைப்பணத்துக்குப் பதிலாக முடிக்குரிய நிலங்கள் கொடுக்கப்பட்டன.

இவையன்றி, சேர் கொலின் கமெல் (Sir Colin Campbell (1841—1847) தேசாதிபதியும், வைக்கவுன்ற் ரொறிங்ரன் (Viscouut Torrington) தேசாதிபதியும் அநேக அநியாய வரிகளை விதித்தனர். துவக்குவரி, நாய்வரி, விருந்தைவரி, நகைவரி, ஆகிய வரிகள் புதிதாக அறவிடப்பட்டன. வரியறவிடுவோர் வீடுவீடாகச் சென்று பணம்பெற்று வந்தமை சனங்களுக்குப் பெரும் வசதிக்குறைவுகளை யுண்டாக்கியது. ஐரோப்பியரும் இவ்வித தொந்தரவுக்குள்ளானர்கள். இவர்களனுப்பிய மனுப்பத்திரங்கட்கு மேலதிகாரிகள் செவி சாய்க்கவில்லை.

ஈற்றில் குழப்பக்காரனின் கூட்டமொன்று மாத்தளைப் பட்டணத்துக்குச் சென்று, கட்டடங்களையிடித்து, பொருள் பண்டங்களை யழித்து, புருங் அப்பு (Purang Appu) என்பவன் தங்களுக்கரசனெனப் பிரசித்தஞ் செய்தது. இத்தகைய குழப்பங்கள் மலைநாட்டின் பல பட்டணங்களிலும் நடைபெறலாயின. ரொறிங்ரன் தேசாதிபதி, முன்னர் வரிகள் விதித்ததுபோன்று, விவேகமற்றமுறையில், கலகக்காரரை மறநெறியாலடக்கினர். கலகத்தை வன்முறையாலடக்குவது சுலபமாயினும் அதனல் விளையும் கேடுகள் கணக்கில்லாதவை. கண்டிநாட்டில் மறநெறியாலுண்டான சீவ மோச

மும் பொருட்சேதமும் எம்மட்டெனை மதிக்கமுடியாது. இக்கொடுஞ்செயலைப்பற்றி, சேர் அன்ரனி ஒலிவான்ற் (Sir Anthony Oliphant) என்னும் பிரதம நீதிபதியும், செல்பி (Selby) என்னும் நியாயதுரந்தரரும், ஒப்சேவர் பத்திரிகையை நடப்பித்த பெரியாராகிய எலியற் (Elliot), வேர்குசன் (Ferguson) என்னும் ஐரோப்பியரும் பேரரசுக்கு முறையீடுசெய்தனர். அதன் முடிவாகத் தேசாதிபதியின் குற்றங்கள் பாராளுமன்றத்தால் விசாரணை செய்யப்பட்டன. தேசாதிபதியும், அவர்காலப் பிரதம லிகிதரும் இலங்கையைப்பற்றிய சிறந்த சரித்திர நூலெழுதியவருமாகிய எமேசன் ரெனன்ற் (Emerson Tennant) என்பவரும் உத்தியோகத்தினின்று நீக்கப்பட்டனர்.

8-ம் அதிகாரம்.

ஐரோப்பாவும் உலகப்போரும்.

1. ஜெர்மனி 1870க்குப் பிந்திய காலநிலைமை.

1870ம் ஆண்டின் பின் ஜெர்மனியில் முன்னேற்றத்துக்கான அநேக முயற்சிகள் செய்யப்பட்டன. குறுநில இராச்சியங்களைக் கொண்டு விளங்கிய ஜெர்மனி 1870ம் ஆண்டில் ஒன்றுசேர்க்கப்பட்டது. ஜெர்மனியில் பிரான்சியர், தேனியர் போலாந்தர் முதலிய பிற பாஷை பேசும் பலசாதிமாந்தரிருந்தனர். இத் தனிப்பட்ட சாதியினர் ஒற்றுமையாகச் சீவிக்கவும் புறாஷியாவின் அதிகாரத்தை என்றும் ஏற்கவும் செய்வதற்கான உபாயங்கள் கையாடப்பட்டன. இதற்காகப் பிஸ்மார்க் தபாற் போக்குவரவு முறையை அரசினர் அதிகாரத்துட்படுத்தியும், நாணயமுறையை ஏற்படுத்தியும் புகையிரதப் பாதைகளை அரசினருக்குரியனவாக்கியும் வந்தான்.

எல்லா ஜெர்மனியரும் ஜெர்மனிய சக்கராதிபத்தியத்துக்குப் பிரமாணிக்கமாயிருக்கப் பயிற்றப்படல் மேலானதாகக் கருதப்பட்டது. இதற்காகப் பாடசாலைகளில் தேசாபிமானம்கற்பதற்கான படிப்பித்தல் நடைபெற்றது. மேலும் அதிகாரத்தை என்றும் ஏற்கச் செய்வதற்கு ஜெர்மனி வல்லபம், முன்

னேற்றம், வெற்றி, மகிமையுடைத்தாயிருக்கவேண்டுமென்பதைப் பெருமிலக்காகக்கொண்டே அரசனும் பிஸ்மார்க்குமாண்டுவந்தனர். பின்னோர் காலம் ஐரோப்பா முழுவதற்கும் பயம் வருவித்ததும் தொந்தரவுண்டாக்கியதும் மேற்கூறியவற்றால் ஏற்பட்ட தேசாபிமானமே.

1866ல் நடைபெற்ற அவுஸ்திரிய புறாஷிய போரின்பின் புறாஷியர் அவுஸ்திரியரைத் தயவுடன் நடத்தினர். பிஸ்மார்க் அவுஸ்திரியாவை ஜெர்மனிய சக்கராதிபத்தியத்துடன் ஐக்கியமாக்கப் பெரிதும் முயற்சி செய்தான். இவன் சூட்சித்திறமையினால் 1879ல் ஜெர்மனியும் அவுஸ்திரியாவும் தம்முள் உடன்படிக்கை செய்துகொண்டன. மேலும் றாஷியர் அவுஸ்திரியரினதும் ஜெர்மனியரினதும் பொதுப் பகைவராயிருந்தமையாலும், இருதேசங்களும் றாஷியர் போல்க்கன்குடாநாட்டைப் பிடிப்பதைத் தடுக்க நினைத்தமையாலும், இரு தேசங்களுக்குமிடையே நெருங்கிய ஐக்கியமுண்டானது. இந்த ஐக்கியம் காரணமாக றாஷியர் 1881ல் போல்க்கன் குடாநாட்டை இணைத்துக்கொள்ள முடியாமலிருந்தது. 1881ல் பிரான்சியர் ரியூனிஸைக் கைப்பற்றியதால் தம்நாட்டிற்கு இடுக்கண் விளையுமோவென அஞ்சிய இத்தாலியர் அவுஸ்திரியர்மேல் பகையிருப்பினும் அதனையுள்ளடக்கி "முத்தேய உடன்படிக்கை"யிற் பங்குபற்றினர் (1882). இவ்வுடன்படிக்கை 1914ம்ஆண்டுவரை நிலைத்திருந்தது.

பிரித்தானியர் திறான்ஸ்வால், கேப்கலனி முதலாம் நாடுகளையும், பிரான்சியர் அல்ஜியேர்ஸ், மொறொக்கோ, ரியூனிஸ் ஆதிய நாடுகளையும், ஒல்லாந்தர் கிழக்கிந்திய தீவுகளில் யாவா, சுமத்திரா முதலியவற்றையும், போர்த்துக்கீசர் இந்தியாவிலும் ஆபிரிக்காவிலும் சில இடங்களையும் குடியேற்ற நாடுகளாக வைத்திருந்தனர். பிஸ்மார்க் இதேகாலத்தில் தென்மேலாபிரிக்காவிலும் பசுபிக் சமுத்திரத் தீவுகளிற் சிலவற்றிலும் துருக்கியிலும் தன்னதிகாரத்தைச் செலுத்திவந்தான்.

2ம் உவில்லியம் 1888ல் ஜேர்மனிய சக்கரவர்த்தியானான். இவன் கடவுள்பக்தியும் தாராள சிந்தையுமுடையவனாயினும் நிலையான கொள்கையின்மையும், குரூரமும், பெருமிதமுமுள்ளவனாக விளங்கினான். இவன் ஜேர்மனி உலகவல்லரசுகளில் முதன்மையுற்று விளங்கவேண்டுமெனவும், பொருள் நிறைந்து செல்வம்மிகுத்த குடியேற்றநாடுகளை உலகின் எப்பகுதியிலும் தேடிக்கொள்ளவேண்டுமெனவும், பிரான்ஸ், பிரித்தன் என்பவற்றின் குடியேற்றநாடுகளை உபாயத்தினால் கைப்பற்றவேண்டுமெனவும், போர்ப்பயிற்சிபெற்ற சேனையொன்றை ஆக்கவேண்டுமெனவும், பெரும்நோக்கம் கொண்டிருந்தான். இவன், மந்திரி பிஸ்மார்க் தன் நோக்கங்கட்குத் தடையாயிருப்பதை உணர்ந்து, அவனை வேலையினின்றும் நீக்கிவிட்டான்.

பிரித்தானியர் அதிகமான குடியேற்ற நாடுகளும் பெலமும் உடையோராயிருந்தமை 2ம் உவில்லியத்துக்கு மனத்தாங்கலையுண்டாக்கியது. இதனால் இவன் பிரித்தானியாவுக்குக் கோபமூட்ட எண்ணி ஓர் செயலைச் செய்தான். அது என்னவெனில், 1886ல் பிரித்தானிய தென் ஆபிரிக்க கொம்பனி அதிகாரி டக்டர் "ஜேம்சன்" (Dr. Jameson) என்பவர் திறான்ஸ்வாலுக்குப் படையெடுத்துச் சென்றார்; அது வீணாயது. அப்பொழுது ஜேர்மனிய சக்கரவர்த்தி போவர் (Boers) குடியரசுத் தலைவனை குறாகருக்கு, ஜேம்சனின் படையெழுச்சியினின்றும் போவர் தம்மைக் காத்தமையைத் தான் மெச்சுவதாக ஓர் தந்தி அனுப்பினான். இது உண்மையாகவே பிரித்தானியருக்குக் கோபத்தை மூட்டியது. ஆனால் 1899- 1902ல் நடந்த தென்னாபிரிக்கப் போரில் ஜேர்மனி போவருக்குத் துணைச்செய்யவில்லை. ஏனெனில், ஜேர்மனியின் கப்பற்படை போர் செய்யக்கூடிய நிலையிலிருக்கவில்லை. அன்றியும் போர்த்துக்கீச இராச்சியம் சிதறுண்டு போகுமானால் அதற்குரிய தென்னாபிரிக்கக் குடியேற்ற நாடுகளைப் பிரித்தனும் ஜேர்மனியும் பங்கிடுவதாக 1898ல் பொருந்திக்கொண்டன. மேலும் சிசில்றோட்ஸும் உவில்லியமும் நட்பாளராயிருந்தனர்.

குடியேற்றவிஷயங்களில் ஜேர்மனி பிரித்தானியாவை எதிர்த்ததால் பிரித்தானியா பிரான்சுடன் தனக்கிருந்த தொல்லைகளை மறந்து, 1904ல் ஐக்கிய

உடன்படிக்கை செய்துகொண்டது. இவ்வுடன்படிக்கை உண்மையானதோவென அறிவதற்கு ஜேர்மனி முயற்சித்தது.

அதற்காக மொரொக்கோநாட்டு விஷயங்களிற் கவனம் செலுத்திவந்த பிரான்சுக்கு எதிரிடை செய்துவந்தது. அப்போது பிரித்தன் பிரான்சின் சார்பாக நின்றது. இதனால் மேற்கூறிய உடன்படிக்கை உண்மையானதென்று ஜேர்மனி உணர்ந்தது. இதன்பின் உவில்லியம் தான்செய்த பிழைகளை நீக்குதற்கான வழிகளைத் தேடுவதிலேயே தன் நிலையற்ற மனதைச் செலுத்திவந்தான்.

ருஷியா யப்பானுடன் 1905ல் நடத்திய போரில் தோல்வியுற்றுப் பெலன் குன்றியதாலும், ஜேர்மனியைப் பகைத்ததாலும் பிரான்சுடனும் பிரித்தானியாவுடனும் 1907ல் நட்புடன்படிக்கை செய்துகொண்டது. எனவே ஐரோப்பாவில், பின்னோர் காலம் நடைபெறவிருந்த யுத்தத்தில் பங்கு பெறும் பொருட்டு, வல்லரசுகள்சேர்ந்த இருகட்சிகள்தோன்றின:— i அவுஸ்திரியா, ஜேர்மனி, இத்தாலி ஆகிய தேசங்கள் முத்தேச உடன்படிக்கைப்படி ஒருகட்சியாகவும், ii. பிரான்ஸ், பிரித்தானியா, ருஷியா ஆகிய தேசங்கள் ஐக்கியவுடன்படிக்கைப்படி மறு கட்சியாகவும்.

2. பிரான்ஸ்—1870க்குப் பிந்திய காலநிலைமை.

பிரான்சிய புருஷியயுத்தத்தின்பின் 3ம் நெப்போலியன் பிரான்சைவிட்டொழித்தோடி 1873ல் இங்கிலாந்தில் இறந்தான். அவனுடையமகன் 1879ல் ஆபிரிக்காவில் ஆங்கிலர்க்காகச் சூலுக்களுடன் (Zulus) செய்தயுத்தத்தில் உயிரிழந்தான். அரசன் மனைவி யூஜின் (Eugiene) சக்கரவர்த்தினி 1920ல் வம்பரோவில் இறந்தாள்.

அரசகுடும்பத்தினர் நிலை இவ்வாறாக, 3ம் நெப்போலிய மன்னன் பிரான்சைவிட்டு ஒழித்தோடிய காரணத்தால், பிரான்சில் அரசியற்புரட்சியேற்பட்டு, 3ம் முறையாகக் குடியரசாட்சி தொடங்கியது. இக்குடியரசாட்சியினர்க்குத் தலைவராக, தேசாபிமானமும் மனோதைரியமும் நிறைந்தவரான "**லெயோன் கம்பெற்ரு**" (Leon Gambetta) என்பவர் (1870) தோன்றிப் பிரான்சின் மனோபெலம் குறையாதிருக்கச் செய்யப்பிரயாசப்பட்டார். அதற்காகத் "தேசியதற்காப்புச்சங்கம்" எனும் ஓர் சங்கத்தை ஸ்தாபித்து யுத்த தோல்வியினால் ஏற்பட்ட தீங்குகளை நிவிர்த்திக்க முயறசித்தார். இம்முயற்சியின் பெறுபேறும் 1871ல் விருங்வோட் (Frankfort) எனுமிடத்திற்செய்யப்பட்ட உடன்படிக்கையின் பயனும் பிரான்ஸ், அல்சேஸ் லொறேயின் மாகாணங்களை இழந்தது மன்றி 20கோடி பவுண் யுத்ததண்டமும் புருஷியாவுக்குக் கொடுத்தது. இந்நஷ்ட ஈட்டினாலும், போரிலே 50லட்சம் பிரான்சியர் மாண்டதினாலும், உடன்படிக்கையின்படி 15லட்சம் பிரான்சியக் குடிகள் ஜேர்மனியரானதினாலும் பிரான்ஸ் மிக நெருக்கடிக்குட்பட்டது. இந்நெருக்கடியை நீக்கிப் பிரான்சைப் பழைய நிலைக்குக் கொண்டுவந்தவர் (Louis Adolphe

Thiers) "லூயி அடோல்வ் தியர்ஸ்" என்பவர். இவர் ஓர் சிறந்த தேசாபிமானி. தேசத்தை நன்னிலைக்குக் கொண்டுவருவதே இவரின் தனிப்பெரும் நோக்கமாயிருந்தது. இம்மகான் 1871ல் தேசிய தற்காப்புச் சங்கத்திற்குத் தலைவராகி, அதே ஆண்டிற்றானே குடியரசுத் தலைவரானார். இவர்காலத்திற் பிரான்ஸ் எவரும் எதிர்பாராதவகையில் வன்மையினும் தன்னம்பிக்கையிலும் முன்னேற்றமடைந்தது. ஜேர்மனிக்கு இறுக்கவேண்டியிருந்த யுத்த தண்டம் முழுவதையும் இறுத்து முடித்தது. ஜேர்மனிய சேனையும் பிரான்சினின்று எடுக்கப்பட்டது. சமூக வாழ்க்கையும், வர்த்தக சமுதாயமும், சுய ஆட்சியும், யுத்த காலத்திற் தேயத்தைக் காப்பாற்றற்கான ஆயுதங்களும், பயிற்றப்பட்ட ஓர் சேனையும் பிரான்சில் ஸ்தாபிக்கப்பட்டன. ஆயினும் "பூர்போன்" (Bourbon) அரசர் சார்பான கட்சியும் குடியரசுக்கட்சியும் இவர் காலத்திற்றோன்றின. இவ்விரு கட்சியினரையும் திருப்திப்படுத்தமுடியாது, 1873ம் ஆண்டு வைகாசி மாதம், லூயி அடோல்வ் தியர்ஸ் தம்பதவியைவிட்டு நீங்கினர். இவரின்பின் கீர்த்திபெற்ற (Mac Mahon) மக்மகோன் என்னும் சேனாதிபதி பிரான்சிய குடியரசின் தலைவரானார். இவருடைய முன்னோர் அயர்லாந்து தேசத்தவர். இவரோ பிரான்சிய அரசகட்சிக்குச் சேர்ந்தவர். தமது உத்தியோக காலத்தில் அரசகட்சியினரையே மந்திராலோசனைச்சங்கத்தவராகத் தெரிந்துகொண்டார். இச்சங்கத்தினரும் தலைவர்களும் அரசன் ஆட்சியைத் திரும்பவும் கொண்டு

வரமுயன்றும் அம்முயற்சி சித்தியாகவில்லை. 1874ல் மக்மகோனுடைய ஆட்சி நிறுத்தப்பட்டு 1875ல் குடியரசாட்சிமுறை ஆரம்பிக்கப்பட்டது. இம்முறையே தற்போதும் நிலைநிற்கின்றது.

பிரான்சும் பிறதேசங்களும்.

இரண்டாம் உவில்லியம் 1888ம் ஆண்டில் ஜேர்மனியசக்கரவர்த்தியாகமுடிசூடியபோது மீண்டும் போருண்டாகுமெனும் பயம் தோன்றியதால் எல்லாத் தேசங்களும் தற்காப்புக்கான முயற்சிகள், செய்யமுன்வந்தன. பிரான்சும் தற்காப்பைவிரும்பி றூஷியாவுடன் நட்புக்கொள்ள நாடியது. றூஷியாவும் அத்தருணத்திற் கீழ்த்திசையிற் பெருங் கருமங்களைச் செய்யப் பேராவல் கொண்டிருந்தது. அவுஸ்திரியாவுடன் போல்க்கன் விஷயமாக றூஷியா பகைமை பாராட்டியதுமன்றி ஜேர்மனியிடமும் அவநம்பிக்கை கொண்டிருந்தது. (1877-79ல்) பெரிய புகையிரதவீதிகளை அமைக்கத் தொடங்கித் தேவையான பணம் முழுவதையும், வேலைமுடிவுறும் வரை, முன்போல் பேர்லினிலிருந்து பெறமுடியாதிருந்தது. இக்காரணங்கள்பற்றி றூஷியா பிரான்சின் நட்பைவிரும்பி ஏற்றுக்கொண்டது.

கம்பெற்றா என்பவர் முன்கூறிய புத்திமதியின்படி பிரான்சியர் ஆபிரிக்க குடியேற்ற விடயத்தில் அதிக சிரத்தையெடுத்தனர். 1875ல் பிஸ்மார்க் பிரான்சுடன் யுத்தம்புரிய எண்ணியும் அவ்வாறு

செய்யமுடியவில்லை. பிரான்சியர் செடானிலடைந்த தோல்விக்குப் பழிவாங்க நினைத்தனர். இவ்வூக்கத்தைப் "பொலங்கர்" (Boulanger) எனும் பிரான்சிய யுத்த சேனபதி தூண்டி, உற்சாகத்தை மென்மேலுமூட்டினர். அதுவுமன்றி, பிரான்சியர் யுத்தத்திற்கு எப்போ தருணம் கிடைக்குமெனவும் காத்திருந்தனர். இதற்கிடையில் 1886ல் "ஷினேபெல்" (Schnaebele) எனும் பிரான்சிய பொலிஸ் உத்தியோகஸ்தன் அல்சேஸ் மாகாணத்தில் வேவுகாரனெனும் குற்றச்சாட்டிற்பிடிபட்டான். இதை ஆதாரமாகக் கொண்டு போரெனும் கருமேகம் ஆரவாரித்தது. இதையறிந்த ருஷியஅரசன் யுத்தம்தொடங்கினல், தான் பிரான்சுக்கு உதவி கொடுப்பதாகப் பிஸ்மார்க்குத் தெரிவித்தான். பிஸ்மார்க் யுத்தம் தொடங்காதவாறு ஷினேபெலை விடுதலையாக்கினன். இதேதருணத்திற் போலங்கர் தளபதி பிரான்சிய யுத்த மந்திரியாகத் தெரியப்பட்டார். தெரியப்பட்டதும் ஷினேபெல் சம்பவத்தை நியாயமாகக் காட்டி ஜேர்மனியருடன் யுத்தம் தொடங்குமாறு பிரான்சியரைத் தூண்ட, ஆட்சிப்பகுதியுத்தியோகஸ்தர் பலர் தம்வேலையை இராசிநாமாச் செய்யவே போலங்கரும் தம்பதவியை விட்டு நீங்கினர்.

இத்தருணமும் யுத்தம் தடுக்கப்பட்டது. பிரான்சும் இங்கிலாந்தும் ஆபிரிக்கநாடுகளில் குடியேற்றம் ஸ்தாபித்திருந்தமையால் இவ் விஷயத்தில் இரு தேசத்துக்கும் யுத்தம் எவ்வேளை ஆரம்பிக்குமோவெனக் கூறமுடியாதிருந்தது. ஆயினும் பிரான்சி

யர் வியாபாரத்தை நோக்கியும் ஆங்கிலர் குடியேற்றத்தை நோக்கியும் இடங்களைப் பிடித்தனர். இக்காலத்தில் எகிப்து துருக்கிய ஆட்சிக்குட்பட்டிருந்தது. ஆயினும் இராச்சியகருமங்கள் சீர்கேடாயிருந்தன. இதனற் பிரான்சியரும் ஆங்கிலரும் திருத்தங்கள் செய்யும்படி எகிப்தியராற் கேட்டுக் கொள்ளப்பட்டனர். 1882ல் அரபி பாஷா (Arabi Pasha) என்பவன் இவ்விரு சாதியாருக்கெதிராகப் போருக்கெழுந்தான். உடனே பிரான்சியர் பின் சென்றனர். ஆங்கிலரோ லோட் உவொல்ஸ்லியின் (Lord Wolsely) தலைமையின்கீழ் அவனை எதிர்த்து எகிப்திற் பல திருத்தங்களைச் செய்யுந் தருணம், சூடனிலும் தொந்தரவுகள் ஏற்பட்டன. அங்கே மாதி என்னும் ஓர் அரபியன் எகிப்தில் ஆங்கிலருக்கு யாதும் உரிமையில்லையென்றும் அவர்கள் அவ்விடத்தால் விலகவேண்டுமென்றும் கூறிச் சனங்களிடையே கிளர்ச்சியை யுண்டாக்கினன்.

இவனை எதிர்க்கும்படி அனுப்பப்பட்ட ஆங்கிலேய சேனை இருமுறை தோல்வியடைந்தது. காட்டுமிலிருந்த (Khartum) ஆங்கிலேய சேனையையழைத்துவரும்படி யனுப்பப்பட்ட "கோர்டன்" (Gordon) தளபதியும் சேனைகளும் காட்டுமில் நாசமாக்கப்பட்டனர். பிந்திய 12 வருடங்களாக ஆங்கிலர் வேறுதேச விடயங்களில் ஈடுபட்டிருந்ததால் சூடனைப் பற்றிக் கவனிக்கவில்லை. இதனற் சூடனிற் குழப்பமேற்பட்டது. ஈற்றில் சூடனைக்

கைப்பற்றும்படி ஆங்கில அரசாங்கம் "கிச்சினர்" (Kitchener) என்பவரை யனுப்பிவைத்தது. இவர் சூடன் கலகக்காரரை ஒம்டேர்மன் (Omdurman) எனும் இடத்தில் 1898ல் தோற்கடித்துக் கோர்டன் கொலைக்குப் பழிவாங்கினர்.

அதன்பின் பஷோடா (Fashoda) என்ற இடத்திற்குப் பிரான்சியர் "மார்சல் மார்ச்சாண்ட்" என்பவரின்கீழ் ஓர் சைனியத்தை அனுப்பியிருப்பதைக் கேள்வியுற்று, கிச்சினர் அங்கு சென்று மார்ச்சாண்டை அவ்விடம் விட்டகலும்படி கேட்க மார்ச்சாண்ட் சம்மதிக்கவில்லை. இருவரும் தத்தம் சுயநாட்டுக்குக் கருமங்களைத் தெரிவிக்கவே, பிரான்சியர் பஷோடாவை விட்டு நீங்கும்படி மார்ச்சாண்டுக்குக் கட்டளையிட்டனர்.

இதைப்போன்ற வேறு சம்பவங்களும் இரு பகுதியார்க்கிடையில் 1899 வரை நடந்தன. 1899ல் இருதேயங்களும் ஓர் ஐக்கியஉடன்படிக்கைசெய்து, ஆங்கிலர் சூடனை ஆளுபவரெனவும் பிரான்சியர் மேற்காபிரிக்காவை ஆளுபவரெனவும் ஏற்றுக் கொண்டனர். இவ்வேளையில் இங்கிலாந்து ஜேர்மனியின் வலிமைக்குப்பயந்ததாலும், பிரான்ஸ் றாஷியாவின் உதவியை இனிமேற் காத்திருக்கமுடியாதிருந்ததாலும் (யப்பான் றாஷியாவைத் தோற்கடித்ததால்) பிரான்சும் இங்கிலாந்தும் "என்றன்ற் கோடியால்" (Entente Cordiale) எனும் ஐக்கிய உடன்படிக்கையை 7-ம் எட்வேட் அரசரதும் இங்கிலாந்தி

லிருந்த பிரான்சிய் பிரதிநிதியாகிய டெல்காஸ் என்பவரதும் உதவியாற் செய்தன. இதனால் ஐரோப்பிய விடயங்களில் இருதேசங்களும் ஒன்றற்கொன்று உதவி செய்வதாகவும் பிரான்சியர் மொறொக்கோவைச் சுயேச்சையா யாளுவதாகவும் ஆங்கிலர் எகிப்தையும் சூடனையும் வைத்திருப்பதாகவும் ஒழுங்கு செய்யப்பட்டது. மேற்காபிரிக்காவையும் மடகஸ்காரையும் பற்றிய தர்க்கங்களும் நியூபவுண்ட்லாந்தின் மீன்பிடி விஷயங்களும் இவ்வொப்பந்தத்தால் முடிவுக்கு வந்தன.

3. ஐரோப்பிய மகா யுத்தம்.

1914ம் ஆண்டு 28ந் திகதி அவுஸ்திரிய பட்டத்து இளவரசன் பிரான்சிஸ் பேர்டினன்ட் (Francis Ferdinand) என்பவன் தனது பாரியாருடன் பொஸ்னியா (Bosnia) வுக்கு ஊர்விசாரணைத் தரிசனைப்பொருட்டுச் சென்றபோது, செறஜெவோ (Serajevo) பட்டினத்தில் சேர்பியன் ஒருவனாற் கொல்லப்பட்டான். சேர்பியாவும் அவுஸ்திரியாவும் போல்க்கன் குடாநாட்டு விவகாரங்களால் பகைமை பூண்டிருந்ததால் இச்சம்பவம் இருதேசங்களும் போர்தொடுத்தற்குக் காரணமாயிற்று. அவுஸ்திரியர் ஆடிமாதம் 28ந் திகதி சேர்பியர்மீது யுத்தத்துக் கேகினர். றாஷியா சேர்பியாவுடன் சேர்ந்தது. ஜேர்மனி அவுஸ்திரியாவுடன் சேர்ந்தது. பிரான்ஸ், ஏலவே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி, றாஷியாவுக்குத் துணையாகச் சென்றது.

உடனே ஜெர்மனியர் பிரான்சியரைத் தாக்கி அவர்கள்நாட்டைக் கைப்பற்றும்பொருட்டு, பெல்ஜியத்தின் நடுவுநிலைமையையும் மதியாது, பெல்ஜியத்தூடாகச் சென்றனர். தம்நாட்டுக்கூடாக ஜெர்மனியர் செல்வதைத்தடுத்தமையால் பெல்ஜியரும் போரிலீடுபடவேண்டியதாயிற்று. இத்தருணத்தில்(ஆவணி 4ந் திகதி) பெல்ஜியரைக் காக்கும்பொருட்டு ஆங்கிலர் யுத்தத்துக்கெழுந்தனர்.

பெல்ஜியம் முழுவதும் சிலவாரங்களுள் ஜெர்மனியர் கைப்பட்டது. விரைவில் அவர்கள் பரிஸ் (**Paris**) நகரத்தையும் பிடித்து விடுவார்கள்போற் தோன்றியது. ஆனால் மாண் (**Marne**) நதியில் நடைபெற்ற யுத்தத்தில் அடைந்த தோல்வியால் தடைபட்டு, ஜெர்மனியர் மேற்கரங்கத்தை விட்டுக் கிழக்கரங்கத்தையடைந்தனர். இங்கே றூஷியரைஎதிர்த்துப் போர் நிகழ்த்தப்பட்டது. துருக்கியரும் பல்கேரியரும் ஜெர்மனியரைச் சேர்ந்தனர். ஆங்கிலர் எகிப்து, இந்தியா முதலியவிடங்களைப் பற்றிய பயங்கொண்டவராய் டாடனெல்ஸ் (Dardanelles) விஷயத்தில் பிரவேசித்தனர். இதிலடைந்த கஷ்டங்களால் இதைக் கைவிடவேண்டியிருந்தது. இவ்வேளை இத்தாலியர், ஜெர்மனியரை விட்டு, ஐக்கிய கட்சியாரைச்சேர்ந்தனர். ஜெர்மனியர் இத்தாலி நாட்டுப் பக்கங்களிலும் யுத்தம் தொடங்கினர். இவ்வாறாக ஜெர்மனியர் நாற்புறங்களிலும் வீரத்துடன் யுத்தம் நடத்திவந்தனர்.

ஆனால் ஜெர்மனியரின் யுத்த அடுக்கணிகளும் உணவுப்பொருட்களும் குறைவுற்றன. யுத்தத்தை விரைவில் முடித்துவிடவேண்டுமென்ற எண்ணம் ஜெர்மனியருக்கு வந்தது. அதற்காக ஆங்கிலரின் கப்பல்களைச் சப்மறீன் (**Submarine**) என்னும் இயந்திர வள்ளங்கள்கொண்டு துளைத்து ஆழியில்அமிழ்த்தினர். ஆங்கிலருக்கு வியாபாரப்பொருட்கள் கொண்டுசென்ற அமெரிக்க வியாபாரக்கப்பல்களும் கடலில் அமிழ்த்தப்பட்டன. ஜெர்மனிய சப்மறீன்களால் விளைந்த நஷ்டத்தைச் சகிக்கமுடியாது, அமெரிக்காவும் ஐக்கியகட்சியோடு சேர்ந்தது(1917) ஐக்கிய கட்சியாரிடம் உணவுப்பொருட்களும், யுத்த ஆயுதங்களும், பணமும் மிகக் குறைவாயிருந்தன. இத்தருவாயில் வலிமைமிக்க தேசமொன்று தமக்கு உதவியாக வந்தமை ஐக்கியகட்சியாருக்குப் பெரும் உற்சாகத்தையளித்தது.

மேற்கரங்கத்தில் ஜெர்மனியர் மும்முரமாகப் போர்புரிந்தனர். அமெரிக்கர் யுத்தகளத்தையடைவதற்குமுன் ஜெர்மனியர் ஐக்கியகட்சியாரை முரியடிக்கலாமென்றெண்ணினர். அமெரிக்கரின் வருகையுடன் பிரான்சும், விளான்டேர்சும், பெல்ஜியமும் ஐக்கிய கட்சியாரால் பிடிக்கப்பட்டன. ஐக்கியகட்சியாரின் மகாதளபதி மார்ஷெல் வொஷ் (**Marshal Foch**) என்பவரின யுத்தமுறைகளால் ஜெர்மனியர் இளைப்புற்றனர். கடற்சண்டைகளிலும் ஜெர்மனியர் அபஜெயமுற்றனர். ஜெர்மனிய மாலுமிகளோ யுத்

தம் செய்ய விருப்பற்றவராய்த் தம் அதிகாரிகளை மீறிக் கலகம்செய்தனர். இக்கிளர்ச்சி தரைப்படைக்கும் ஜேர்மனி முழுவதுக்கும் பரவலானது. உவில்லியம்அரசன் 1918ம்ஆ கார்த்திகைமாதம்10ந்திகதியன்று தன் இராச்சியத்தை விட்டு ஒல்லாந்துக்கு ஒழித்தோடினன். அடுத்தநாள் யுத்தம் முடிவானது.

யுத்தம் நிறுத்தப்பட்டு இரண்டுமாதங்கள் கடந்தபின், பரிஸ் நகரில் ஓர் சங்கம் கூடியது. இச்சங்கத்துக்கு ஜேர்மனியரை எதிர்த்துநின்ற 32 தேசங்களினின்றுவந்த 70 பிரதிநிதிகள் கூடினர். ஜேர்மனியும் றாஷியாவும் இச்சங்கத்துக்குப் பிரதிநிதிகளை அனுப்பத் தவறின. பிரதிநிதிகளுள் "பெரிய மூவர்" எனப் பெயர்பெற்ற ஆங்கிலமந்திரி லொயிட் ஜோர்ஜ் (Lloyd George), பிரான்சியதலைவர் கிளெமென்ஸோ (Clemenceau), அமெரிக்க பிரசாதிபத்தியத் தலைவர் உவில்சன் (Wilson) என்பார் சங்க தீர்மானங்களுக்கு வழிகாட்டி நின்றனர்.

பரிஸ்சங்கத்தின் விசேஷநோக்கங்கள் மூன்று. அவை பின்வருமாறு:-

I. மத்திய ஐரோப்பாவிலே தோல்வியடைந்த நாட்டவர் பலவாண்டுகளாக எதிர்த்துநின்ற சுயராச்சியம், தேசீய உணர்ச்சி என்னுமெண்ணங்களுக்கிசைய, ஐரோப்பாவின் தேசபடத்தைப் புதிதாய் வரைதலும், II. ஆசியா, ஆபிரிக்க, பசுபிக்சமுத்திர பிரதேசங்களைச் சரிசமப்படப் பங்கிடுதலும், III. நெடுங்காலத்திலே உலகம் போரைநாடாது, பல நாடுகளின் அரசியல் விவகாரங்களை ஒழுங்குபடுத்தவோர் ஏற்பாட்டை ஆராய்தலும்.

4- வேர்சேல்ஸ உடன்படிக்கை.

1919ம் ஆண்டு, ஆனிமாதம், 28ந் திகதி பரிசுக்கண்மையிலிருக்கின்ற வேர்சேல்ஸ் (Versailles) மாளிகையிலுள்ள கண்ணாடி மண்டபத்தில் இவ்வுடன்படிக்கை செய்யப்பட்டது. இதனால் ஜேர்மனியின் வல்லபம் முற்றாக அழிக்கப்பட்டது. உலகம் முழுவதையும் கண்ணீர்க்கடலில் அமிழ்த்தியதற்காகவும் நீதியற்ற முறையில் யுத்தம் செய்ததற்காகவும் ஜேர்மனி தக்க தண்டனையைப் பெற்றது. ஜேர்மனியின் குடியேற்றநாடுகள் பறிக்கப்பட்டுப் பிறதேசங்கட்குப் பங்கீடு செய்யப்பட்டன.

I. 1885ல் ஜேர்மனியர்கைப்பற்றிய தென்மேற்காபிரிக்கா இப்போ சர்வதேசசங்கத்தின் மேற்பார்வையின்கீழ் தென்ஆபிரிக்க ஐக்கிய நாடுகளின் ஆளுகைக்கு விடப்பட்டது.

II. 1890ல் ஜேர்மனியருக்கான கீழ்ஆபிரிக்கா இப்போ பிரித்தானியருக்கும் பெல்ஜியருக்கும் பங்கிடப்பட்டது.

III. 1890ல் ஜேர்மனியரால் கைப்பற்றப்பட்ட ரோகோலாண்ட், கமறூன்கள் என்பவை பிரித்தனாலும் பிரான்சினாலும் பகிர்ந்துகொள்ளப்பட்டன.

IV. கியோச்சோவும் நிரட்சரேகைக்கு வடக்கே பசுபிக் சமுத்திரத்தில் ஜேர்மனியருக்கிருந்த பிரதேசங்களும் யப்பானுக்காயின.

V. சமோவா நியூசீலாந்துக்கும், புதியகினியாவும் தென்பசுபிக்கிலுள்ள சிலதீவுகளும் அவுஸ்திரேலியாவுக்குக் கொடுக்கப்பட்டன.

ஐரோப்பாவில் ஜேர்மனி பின்வரும் பிரதேசங்களை இழந்தது.

I. அல்சேஸ் லொறேன் மாகாணங்கள் பிரான்சுக்குக் கொடுக்கப்பட்டன. II. போசன், மேற்குப் புறூஷியா என்பவற்றில் சிலபகுதிகள் போலாந்துக்காயின. III. வடஷெல்ஸ்விக், மொறெஸ்நெற், மல்மேடி- இவை தென்மார்க்குக்குக் கொடுககப்பட்டன. IV. சார் (Saar Valley) பள்ளத்தாக்கு பிரான்சுக்குப் பதினைந்து வருடங்களுக்குக் கொடுக்கப்பட்டது. 15 வருட முடிவில் இப்பகுதியினர் தமக்குக் கிடைத்த அநுமதியின்படி ஜேர்மனியுடன் சேரத் தீர்மானித்துக்கொண்டனர்.

5. சர்வ தேச சங்கம்.

ஐரோப்பிய மகாயுத்தத்திற் பல்லாயிரம் சனங்கள் மாண்டனர். கணக்கற்ற தீமைகளும் பொருள் நஷ்டமும்விளைந்தன. இவற்றைக்கண்ணுற்றஐரோப்பியதேசங்கள் போர்என்பதுவருங்காலத்து நிகழாதபடியும் தேசங்களுக்கிடையேயுள்ள சமாதானக்

குறைவுகளையும் தர்க்கங்களையும் நீக்கிக் கூட்டுறவையுண்டாக்கும்பொருட்டும் ஓர் பொதுச்சங்கம் இருக்கவேண்டுமென்றுணர்ந்தன.

இத்தகைய சங்கத்தைப்பற்றிப் பலகாலங்களிலும் பல அரசர்களும் நூலாசிரியர்களும் கூறியுள்ளனர். கியூகோ குறோரியஸ் என்பார் 1625ல் யுத்த சமாதானங்களைப்பற்றி எழுதியபோதும், இம்மனுவேல் கான்ற் என்பார் 1795ல் "நீடூழிகாலச் சமாதானம்" என்னும் நூலிலும், றூஷியதேச அரசன் முதலாம் அலெக்சாந்தர் அவுஸ்திரியாவையும் றூஷியாவையும்சேர்த்து, 1815ல்செய்த "பரிசுத்தபொருத்தம்" என்னும் உடன்படிக்கையிலும் இவ்விதசங்கத்தைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். பின்னர் 1899 லும் 1907 லும் உலகம் முழுவதுக்கும் பரவக்கூடிய யுத்தங்கள் எதிர்பார்க்கப்பட்டன. அக்காலத்தில் றூஷிய அரசன் இரண்டாம் நிக்கொலஸ் சர்வசாதிகளையும் கட்டுப்படுத்தக்கூடிய ஹேக் (Hague) நகர சங்கத்தை ஆரம்பித்தார். ஈற்றில் மகாயுத்தத்தின் பின் அமெரிக்க ஐக்கியநாட்டுத்தலைவன் உவுட்றோ உவில்சன் என்பார், ஆங்கில, இத்தாலிய, பிரான்சிய பிரதிநிதிகளின் துணையுடன், சுவிற்சேர்லாந்தில் ஜெனிவா என்ற இடத்தில் சர்வதேசசங்கத்தை ஸ்தாபித்தார்.

இச்சங்கத்தின் விசேஷ நோக்கங்கள் யுத்தத்தை விலக்குவதும், தேசங்களுக்கிடையில் உண்டாகும் தர்க்கங்களைச் சர்வதேச நீதிவிசாரணைக் கோட்

டில் விசாரணைசெய்வதும், வலிமை குறைந்த அரசுகளைப் பாதுகாத்தலும், வியாபார விர்த்திக்காக உழைத்தலும், எச்சாதியாரையும் அடிமை ஊழியத்தினின்று மீட்டலுமாம்.

சர்வதேச சங்கத்தில் சர்வதேச பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் சபையும், ஓர் பொதுச்சபையும், ஓர் சட்டசபையும், ஓர் நீதிக்கோடும் அடங்கியுள்ளன. ஒன்பது வருடகாலத்துக்குக் கடமையாற்றும் பதினொரு நீதிபதிகள் இக்கோட்டில் வேலைபார்க்கின்றனர்.

எச்சுயவரசுநாடும் சர்வதேச சங்கத்திற் சேரக்கூடும். சங்கத்தின் பிரமாணங்களை ஏற்றுக்கொள்ளும் நாடு எதுவும் சபையினருள் மூன்றிலொரு பகுதியினரின் அங்கீகாரத்துடன் அங்கத்துவம் பெற்றுக்கொள்ளலாம். சங்கத்தைவிட்டு நீங்குவதானால் இரண்டுவருடங்களுக்குமுன் அறிவித்தல் கொடுக்கப்படவேண்டும்.

இச்சங்கம் இதுவரையில் அநேக விஷயங்களை ஆராய்ந்து, பலதேசங்கட்கிடையில்நடைபெற்ற வாதவிவாதங்களைத் தீர்த்துவிட்டது. 1919ல் ருஷியாவுக்கும் போலாந்துக்குமிடையேயும், 1924ல் இத்தாலிக்கும் யூகோசிலாவியாவுக்குமிடையேயும், 1928ல் தென்னமெரிக்கநாடுகளாகிய பீறுவுக்கும் சிலிக்குமிடையேயும் ஏற்பட்ட சச்சரவுகளைச் சர்வதேசசங்கம் சமாதானமுடிவுக்குக் கொண்டுவந்தது.

மேலும் இச்சங்கம் மனிதரின் பொதுக்ஷேமத்தை அதிகரிப்பிக்கும் பல ஆராய்ச்சிகளையும், அபின் முதலிய வெறிப்பொருள்களைத் தடுப்பதற்கான முயற்சிகளையும், தொழிலாளிகளின் சலாக்கியங்களை அதிகரிக்கச்செய்வதற்கான பிரயத்தனங்களையும் செய்துவருகின்றது.

9-ம் அதிகாரம்.

ருஷியாவும் அமெரிக்காவும்.

1. "ருஷியா."

ருஷியாவானது சீர்திருந்திய கீழைத்தேசத்திற்கும் சீர்திருத்தம் கதித்த மேலைத்தேசத்திற்கும் இடையேயுள்ளது. இங்கு வசித்த பூர்வ சாதியார் "சிலாவ்ஸ்" என்றழைக்கப்படுபவர். இவர்களைக் காலத்துக்குக் காலம் வடதேசத்தவரும் ஆசியரும் துன்புறுத்திவந்தனர். 13ம் நூற்றாண்டில் இவர்களை "ஜெங்கிஸ்கான்" "தமர்லேன்" என்னும் தார்த்தாரிய அரசர்கள் ஆண்டனர். 16ம் நூற்றாண்டில் "ஐவன்" என்பவனால் அருக்கியர் ஆட்சியினின்றும் மீட்கப்பட்டனர். இதன்பின்னர் 1689ல் "மகாபீற்றர்" அரசுக்கு வந்தார்.

இவர் றூஷியாவை முன்னேற்றமுள்ள தேசமாக்கினார். நாட்டில் சீர்திருத்தத்தைத் தோற்றுவித்தார். "அசோவ்" துறையையும் சுவீடிய மாகாணங்களையும் வெற்றிகொண்டு றூஷியாவுக்கு வியாபார வசதியைஉண்டுபண்ணினார். பிறநாட்டவரின் கல்வியறிவையும் தொழில்களையும் தன்னாட்டிற் பரப்பினார். இவர் மரணித்தபின் (1725), இரண்டாம் "கதறீன்"(1762-1796) இவ்வேலையைத் தொடர்ந்து நடாத்தினாள். இவள் தேசத்தின் ஆட்சிமுறைகளைத் திருத்தி, வியாபாரத்தையும் கமச் செய்கையையும் ஊக்கப்படுத்தி, நல்லாட்சி செய்தாள். தன் தேசம் வளர்ச்சியுறவேண்டுமென்ற கருத்துடையவளாய், 1774ல் துருக்கியரைத் தோற்கடித்து, றூஷிய கப்பல்கள் "டாடினெல்ஸ்" வழியாகச் செல்லும் உரிமையைப் பெற்றாள். 1782ல் "கிறிமியா"வைத் தன் இராச்சியத்துடன் சேர்த்தாள். பத்துவருடங்களின் பின் "நீஸ்தர்" நதியை றூஷியாவின் எல்லையாக்கினாள். இவளுடைய ஆட்சியின்பயனாக றூஷியா மறு தேசங்களோடு சமனாகிச் சர்வதேச விஷயங்களில் ஈடுபடத் தொடங்கியது. றூஷியாவில் சுதந்தர உணர்ச்சி தோன்றியது. இவ்வுணர்ச்சியே 1917ம் ஆண்டுப் புரட்சிக்குக் காரணமாயதெனலாம்.

1812ல் றூஷியர் நெப்போலியனுடைய தத்துவத்தை முறிக்கவும், "கொன்ஸ்தாந்திநோப்பிளை"ச் சொந்தமாக்கவும், "சொவையா" ஆலயத்தில் கிறீஸ்தவ வணக்கம் செய்யவும் வழி தேடினர். இதனால்,

(1854-56)ல் நடைபெற்ற கிறீமியப் போரில் றூஷியர் பங்குபற்றினர். இவ் யுத்தத்தில் ஐரோப்பிய சேனைகள் றூஷியருக்குத் தடையாக நின்றன. திரும்பவும் றூஷியர் கொன்ஸ்தாந்திநோப்பிளைக் கைப்பற்றத் தெண்டித்தபோது (1877), ஆங்கிலர் தடைசெய்து, றூஷியருக்கு நன்மையாயிருந்த "சான்ஸ்ரவானோ" உடன்படிக்கையை விட்டுவிடும்படி கேட்டனர். இது காரணமாகப் "பெர்லின் சங்கம்" கூடியது. ஆனால் றூஷியருக்கு நயம் வரவில்லை. இதனால் றூஷியர் தென்பகுதியில் நாடு பிடிப்பதை விட்டு, கிழக்கேயும் தென்கிழக்கேயும் பிடிக்கத்தொடங்கினர். இவர்கள் ஆசியாவில் விஸ்தாரமான நிலங்களைத் தங்கள் ஆட்சிக்குட்படுத்திச் "சென்பீற்றஸ்பேர்க்" நகரத்துடன், அவ்விடங்களைத் "திரான்சைபீரியன்" "திரான்ஸ்கஸ்பியன்" என்னும் புகையிரதப்பாதைகளால் இணைத்தனர். துருக்கிஸ்தானைக் கைப்பற்றிச் "சமார்க்கண்ட்" "ஆபுகானிஸ்தான்" "பார்சியா" என்னும் இடங்களுக்கும் றூஷியர் செல்ல, ஆங்கிலர் இவர்களின் இராச்சியப்பெருக்கத்தைத் தடுப்பதற்காக யப்பானியருடன் ஓர் உடன்படிக்கைசெய்ததுமன்றி(1902) ஆபுகானிஸ்தானில் கலகமும் விளைத்தனர். இவ்வாறு றூஷியா வளர்ச்சியுற்றும் பிஸ்மார்க்கின் சிநேகத்தைப் பெற்றும் இருந்ததைக் கண்ணுற்ற மூன்றாம் நெப்போலியன் றூஷியாவின் துணையைத் தேடி ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான்.

இஃதிவ்வாறாக, ருஷியாவில் அரசர்கள் தம் சுயேச்சாதிகார உரிமைகளைப் பாதுகாத்தற்பொருட்டுக் குடிகளின் சுதந்தர உணர்ச்சியை நசுக்க முயன்றனர். ஆனால் இவ்வுணர்ச்சி ஓங்கியே வளர்ந்தது. "கதறீன்" இராணி காலத்திற்றோன்றிய உணர்ச்சியும், பிரான்சிய பிரஜைகள் கலகத்தைப் பற்றிய அறிவும், பொதுச் சனங்களைப் புரட்சிக்குத் தூண்டின. எவ்வித அரசாங்கத்தையும் அழிப்பதற்கென "நிகிலிஸ்ற்" என்றதோர் இயக்கம் நாட்டிற்றொடக்கப்பட்டது.

இத்தருணத்தில் இரண்டாம் "அலெக்சாந்தர்" அரசுக்கு வந்தார். இவர் தன்னிராச்சியத்திலிருந்த 20,000,000 அடிமைகளை விடுதலையாக்கினார். அவர்கள் காணிவாங்கிப் பொருள்தேடத்தொடங்கித் தங்கள் கருமங்களைத் தாங்களே பார்த்து வறுமையினால் கடனாளிகளானார்கள். இதனால் அவர்கள் நாட்டைவிட்டுப் பட்டினங்கட்குச் சென்றார்கள். தேசத்துக்கு நஷ்டமேற்பட்டது. இதைக் கண்டு அலெக்சாந்தர் பல மாகாணங்களிலும் "செம்ஸ்த்வோ" (Zemstvo) என்னும் தலஆட்சிச் சபைகளைத் தாபித்தார். இங்ஙனமாகக் கல்வி, சுகாதாரம், வறியோர் பாதுகாப்பு ஆதிய விடயங்களைக் கவனித்துவந்தார். இவ்வாறு பல திருத்தங்களைச் செய்து வருங்காலத்தில் 1881ல் "சென்பீற்றேர்ஸ்பேக்" நகர வீதியொன்றில் அரசமுறையை எதிர்த்த ஒருவனாற் கொல்லப்பட்டார்.

அலெக்சாந்தருக்குப் பின் இரண்டாம் நிக்கொலஸ் அரசனானார். இவர் சனங்களின் துன்பத்தை நீக்கும்படி சில திருத்தங்களை ஏற்படுத்தினார். இவர் காலத்தில் ருஷியர் யப்பானியருடன் யுத்தம்செய்து தோல்வியடைந்தனர். இவ் யுத்தங்களைப்பற்றிய அபச்செய்திகள் சனங்களுக்கெட்டவே, அவர்கள் அரசனைக் கொல்லுவதற்குப் பிரயத்தனம் செய்தார்கள். அரசன் ஒருவருடகாலமாகத் தலைநகரை விட்டோடி ஒழித்திருந்தான். இச் சந்தர்ப்பத்தில் தொழிலாளிகளிடம் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்த "கப்போன்" (Gapon) என்னும் குரு, முதலாளிகளிடமிருந்து தொழிலாளிகளுக்குச் சில உரிமைகளைப் பெறுவதற்காக, வேலை நிறுத்தம் செய்ய ஒழுங்குகள் செய்தார். கலகத்தைப்பற்றிக் கேள்வியுற்ற இராணுவ அதிகாரிகள் கலகக்காரர் அரசனைக் கொலைசெய்வார்களென எண்ணி, (1905 தைமீ 2ந்உ) தெருக்களில் நின்ற கூலியாட்களைச் சுட்டுக் கொன்றனர். இச்சம்பவம் நடந்த தினம் "இரத்த ஞாயிறு" எனப்படும். இச்செய்கையால் தேசத்தில் கலகம் இன்னும் அதிகமாய் நிகழ்வதாயிற்று. நாளாந்தம் படுகொலைகள் ஏற்படலாயின. ருஷிய பாராளுமன்றம் "டூமா" 1906ம் ஆண்டு வைகாசி மாதத்திற் கூடியது. இதில் பிரதிநிதிகள் சட்டங்களை ஆக்கவும், அவற்றை ஆட்சிக்குக் கொண்டுவரவும் தமக்கு உரித்துண்டென அர்சனுடன் வாதாடினர். அரசன் இவ் அபிப்பிராய பேதமுண்டானதால் டூமாவைக் குலைத்தான். 1907ம் ஆண்டு பங்குனி

மாதத்திற்கூடிய இரண்டாம் டூமாவையும் இதேவித பிணக்கேற்பட்டமையால் அரசன் கலைத்துவிட்டான். மூன்றாம்முறை கூடிய டூமாவில் அரசாங்க மந்திரிகளுக்குச் சார்பாகப் பெருந்தொகையினரிருந்ததினால் முன்னேற்றக் கட்சியாரின் எண்ணங்கள் பலிக்கவில்லை.

யப்பானியரோடு செய்த யுத்தத்தில் ருஷியரடைந்த தோல்வியின் பயனாகை, ருஷிய அரசியல் முறையின் குறைகள் ஏனையநாட்டினருக்குத் தெரியவந்தன. ஐரோப்பிய அரசியல் விஷயங்களில் ருஷியாவை ஒரு வல்லரசாக எவரும் மதிக்கவில்லை. இதனால் ஜேர்மனிய சக்கரவர்த்தி ருஷியாவின் பயமற்றவனாய், உலகத்தலைமை பெறுதற்கான வழியைப் பின்பற்றினான். 1908ம் ஆண்டிலே அவுஸ்திரியா, ஜேர்மனியின் அந்தரங்க உதவியுடன் "பொஸ்னியா"வையும், "ஹேர்செகொவினா"வையும் தனதாக்கிக்கொண்டது. இச்செய்கையைக்கண்டிக்க ருஷியாவின் சேனாபலம் போதியதாயிருக்கவில்லை. மறுபடியும் 1914ல் அவுஸ்திரியா ஜேர்மனியின் உதவியுடன் சேர்பியாவோடு யுத்தம் தொடக்கிய போது, ருஷியா உறுதியாக எதிர்த்து நின்றது. முன்னரே செய்துகொள்ளப்பட்ட ஐக்கிய உடன்படிக்கையின்படி முதலில் பிரான்சும், பின்னர் பெல்ஜியத்தின் மத்தியஸ்தநிலைமையைக் காப்பாற்றும் நோக்கமாகப் பிரித்தனும், ருஷியாவுடன் சேர்ந்தன. இவ்வாறாக உலகப்போர் தொடங்கியது.

யுத்தம் நடந்த முதல் இரண்டு வருஷங்களிலும் ருஷியபடைகள் மதிப்பிடற்கரிய சேவை செய்தன. ஆனால் அரசாங்கம் அவர்களுக்கு வேண்டிய உதவி புரியவில்லை. போர்க்களத்திலே ருஷியா செய்த வேலையைப் பின்னேற்ற எண்ணமும், ஜேர்மனியிடம் அபிமானமும் உள்ளவர்களின் செல்வாக்குத் தடுத்துவந்தது. குடிகளும் சேனாவீரரும் தம் தலைவர்களின் அரசியற்றந்திரங்களை வெறுத்துச் சினந்தனர். ஆகவே அரசியற்புரட்சி உண்டானது. "நிகிலிஸ்ற்" சபையும் சீர்திருத்தக்காரரும் சேர்ந்து கேட்டுநின்ற அரசியல் முறையை இரண்டாம் நிக்கொலஸ் அரசன் அளிக்கமுடியாதெனப் பிடிவாதமாகக் கூறினான். கலகக்காரரின் தாக்குதலைப் பொறுக்கமுடியாது, அரசன் தன் பதவியினின்றும் விலகினான். உடனே கலகக்காரர் ஓர் குடியரசு முறையை ஸ்தாபித்தனர். இவர்கள் சுதந்தரம்பெற்றுத் தருவதாகவும், சமாதானத்துக்கு வழிகாட்டுவதாகவும் கூறிச் சனங்களைத் தம்பக்கமாக்கி, கடற்றரைப் படைகளிற் கலகம் பரவச் செய்தனர்.

1918ல் "லெனின்" (Lenin) என்னும் ஜேர்மனிய ஒற்றன் ஒருவன் புரட்சிக்காரருக்குத் தலைவனானான். இவன் ருஷியாவில் "பொல்ஷெவிக்" (Bolshevik) அரசாங்கத்தையேற்படுத்தி, ஜேர்மனியுடன் சமாதான உடன்படிக்கை செய்தான் (1918 மாசி). இதன்பின் திகிலாட்சிநடைபெற்றது. லெனினும் அவனுடைய கட்சியினரும் தம்மை எதிர்த்தவரைச் சுட்டுக்கொன்றனர். சிலர் நாடுகடத்தப்பட்ட

னர். வேறு சிலருடைய நிலங்கள் பறித்தெடுக்கப்பட்டன. அரசனும் அவன் குடும்பத்தினரும் துப்பாக்கிக்கு இரையானார்கள் (1918 ஆடி).

1921ல் மழையின்மையாலும் புரட்சியினாலும் தானிய விளைவு குன்றியது. நாட்டிற் பஞ்சம் புகுந்தது. பஞ்சத்தைத்தொடர்ந்து,கோரமானதும்,உயிர்மாய்ப்பதுமான கொள்ளைநோயும் பரவியது. இலட்சக்கணக்கானோர் உயிர்நீத்தனர். இதற்குப் பிந்திய ஆண்டுகளில் பொல்ஷெவிக் துரைத்தனம் சில கொள்கைகளை மாற்றிக்கொண்டதாயினும் இன்னமும் குடிகள் வருத்தப்பட்டனர்.

"பொல்ஷெவிக்" என்னும் றூஷியச்சொல் "பெரும்பான்மையோர்" எனப் பொருள்பெறும். இக் கொள்கையின்படி எவனுக்கும் தனக்கெனப் பொருள் வைத்திருக்க உரிமையில்லை. பொருளனைத்தும் சனசமூகத்துக்குரியது. பொல்ஷெவிக் கொள்கையும் பொதுவுடைமைக்கொள்கையும் மிக நெருங்கிய சம்பந்தம் பெற்றவை. "சோவியெற்ஸ்" என்றழைக்கப்படுபவர்கள் றூஷிய தொழிலாளிகள். பொல்ஷெவிக் அரசாங்கம் பெயரளவில் மாத்திரம் தொழிலாளர், படைவீரர் பயிரிடுவோரால் தெரியப்பட்ட தொழிலாளர் சபைகளின் அரசாங்கமாக இருந்தது. ஆனால் உண்மையெதுவெனில், இது பிறநாட்டுக் கூலிப்படையினரினுதவி கொண்டதும், பரிதானம் வாங்குவதுமான ஒரு கட்சியின் ஆட்சியாக இருந்தது.

றூஷியவரசன் பதவியினின்றும்நீங்கியபோது பழைய சக்கராதிபத்தியத்துக்குரிய மாகாணங்கள் பல குடியரசுமுறையைத் தழுவின. வின்லாந்து (Finlad) குடியரசானது. எஸ்தோனியா (Esthonia), லட்வியா (Latvia), லித்துவேனியா (Lithuania) என மூன்று குடியரசுகள் பால்திக் பிரதேசத்திற் றோன்றின. தெற்கே ஜோர்ஜியா (Georgia), உக்றேன் (Ukraine), கோசக்நாடு (Kossuch) என்பன சுதந்தரம் பெற்றுச் சில காலங்களின்பின் சோவியெற் குடியரசின் பகுதிகளாக அமைந்தன. போலாந்து சுவாதீனமடைந்தது.

2. அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள்.

அமெரிக்க சுவாதீன யுத்தமுடிவில், அப்புதுக் குடியரசு அந்திலாந்திக்சமுத்திரக்கரையோரத்திலே பதின்மூன்று சிறு நாடுகளடங்கியதாகவிருந்தது. காலத்துக்குக்காலம் வேறுமாகாணங்களும் இவற்றுடன் இணைக்கப்பட்டன. 1820ம் ஆண்டளவிலே ஐக்கியநாடு இருபத்திரண்டு மரகாணங்கள் கொண்டதாயிற்று. குடிசனப் பெருக்கத்தால் இன்னும் அநேகமாகாணங்கள் சேர்க்கப்படவே அத்திலாந்திக் சமுத்திரம் தொடக்கம் பசுபிக்சமுத்திரம் ஈறாக நாற்பத்தெட்டு மாகாணங்களடங்கிய அமெரிக்க ஐக்கியநாடு தோன்றிற்று.

ஐக்கியமாகாணங்கள் 1787ல் ஓர் சம்யுக்த ராச்சியமாக வமைந்தன. ஒவ்வோர்மாகாணமும் அதன்

அரசியற்கருமங்களை நடத்தியபோதிலும் எல்லா மாகாணங்களுக்கும் பொதுவானவிஷயங்கள் மாகாணப் பொதுச்சபையொன்றின் பொறுப்பில் விடப்பட்டன.

முந்திய பதின்மூன்று மாகாணங்களுள் வடமாகாணங்கள் தென்மாகாணங்களைப் பார்க்கிலும் வித்தியாசப்பட்டவை. வடபகுதியில் வசித்த மாந்தர் கிருஷி, மீன்பிடித்தல், கைத்தொழில் முதலியவற்றில் ஈடுபட்டிருந்தனர். தென்பகுதியினர் நிகிரோவ அடிமைகளைக்கொண்டு விஸ்தாரமான தோட்டங்களிலே பருத்தியும், புகையிலையும் பயிர்செய்து வந்தனர். வடமாகாணத்தவர்கள் எல்லா மாகாணங்களையும் ஒன்றுகூட்டி ஆளும் நோக்குடையோராயிருந்தனர். தென்மாகாணத்தவர்கள் மாகாணங்கள் தனித்தனி ஆளப்படுவதை விரும்பினர். தென்பகுதியினர் விளைவித்த பொருட்களைக் கொண்டு வடபகுதியினர் கைத்தொழில்களைச்செய்து புதியகுடியரசின் பொருளாதார நிலைமையை உயர்த்தக்கூடியதாயிருக்க, இருபகுதியினருக்குமிடையில் அடிமைகளை வைத்திருத்தலைப்பற்றிய அபிப்பிராய பேதத்தால் கலகம் உண்டானது.

1860ம் ஆண்டில் ஆபிரகாம் லிங்கன் (Abraham Lincoln) என்பவர் ஐக்கியநாட்டுக்குத் தலைவராகத் தெரியப்பட்டார். இவர் கெந்தக்கி (Kentucky) மாகாணத்தில் மரக்கட்டைகளைக்கொண்டு கட்டப்பட்ட குடிசையிற் பிறந்து (1809), இந்தியானு (Indiana)

மாகாணத்திற் குடியேறி, வேட்டையாடுவதிலும் மரம்வெட்டுவதிலும் சிறு பராயத்தைக் கழித்து வந்தார். படிப்பில் விருப்புள்ளவராயினும் இவருக்குப் புத்தகங்கள் கிடைக்கவில்லை. இவரின் இளமைப் பருவம் பெருங்கஷ்டமும் வறுமையும் நிறைந்ததாகவிருந்தது.

லிங்கன் தோற்றத்தில் நெடியவர். 6-4 உயரமானவர். அடர்ந்த கருநிறமயிரும், உயர்ந்த நெற்றியும், ஆழ்ந்த சாம்பல்நிறக் கண்களுமுடையவர். இவரது முகக்குறிப்பு ஆழ்ந்த சிந்தனையுள்ளவரென்பதைக் காட்டும். இவர் அரசியல் விஷயங்களிலே ஊக்கங்கொண்ட காலங்களில் அடிமை ஊழியத்திலும், அடிமை வியாபாரத்திலும் வெறுப்புக் காட்டினர். இவர் குடியரசுக்கட்சியின் தாபகர்களிலொருவராயமர்ந்து அக்கட்சிக்குத் தலைவனாகி, இறுதில் ஐக்கியநாட்டின் தலைவனாக நியமிக்கப்பட்டபோது, தென்மாகாணங்களில் பத்து, வடமாகாணங்களினின்று பிரிந்து, தங்கட்கோர் தலைவனைத் தெரிந்துநடத்திய உள்நாட்டுப் போர் 1865ம் ஆண்டு வரையும் நீடித்திருந்தது. லிங்கனுடைய தளபதிகள் பிறவிடங்களிலிருந்து தென்மாகாணங்கட்குப் பொருட்கள் வராதபடி தடுத்தனர். துறைமுகங்களை அடைத்து, மிசிசிப்பி நதிவழியாகச் சிறுபோர்க்கப்பல்களை அனுப்பினர். லீ (Lee), ஜோர்ஜ் (George) என்னும் தளபதிகள் தென்பகுதியினர்க்காக வெகு திறமையுடன் போர் புரிந்தனர். 1863ல் கெற்றிஸ்பேர்க் (Gettysberg) என்னுமிடத்தில் "லீ" தோற்

கடிக்கப் பட்டான். வடபகுதித் தளபதி கிறன்ற் (Grant) என்பவன் மற்றுஞ்சேனைகளுடன் மும்முரமான யுத்தம் நடத்தினான். துறைமுகங்கள் அடைக்கப்பட்டதால் தென்பகுதிக்கு அப்பம், வெண்ணெய், சீனி முதலிய உணவுப்பொருட்கள்தானும் கிடைக்கவில்லை. கடைசியில் தென்மாகாணத் தலைநகரமாகிய றிச்மன்ட் (Richmond) பிடிக்கப்படவே, வடபகுதியினரின் சேனை வெற்றி அடைந்தது.

சமாதானம் ஏற்படுதற்குச் சிறிது முன்னே இரண்டாம்முறையும் (1865) தலைவராகத் தெரியப்பட்டவரான லிங்கன் தென்பகுதியைச் சேர்ந்தவோர் பித்தனால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஐக்கியமாகாணங்களினின்றும் அடிமை ஊழியம் நீக்கப்படலானது. திரும்பவும் ஐக்கியமும் ஒற்றுமையும் உண்டாயின. இக்காலம் தொடக்கம் ஐக்கியநாடுகள் கமத்தொழில், கைத்தொழில், வியாபாரம் முதலியவற்றின் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி பெற்றுவந்தன. தற்காலத்திலோ "அமெரிக்க ஐக்கியநாடுகள்" என்னும் பிரதேசம் உலகத்திலே மிகுந்த வன்மையும் செல்வமும் நிறைந்த நாடுகளுளொன்றாக விளங்குகின்றது.

1817-1825 ம் ஆண்டுகளிலே அமெரிக்க ஐக்கிய குடியரசுநாட்டின் தலைவனாயிருந்த மொன்றோ (Monroe) என்பவர் ஐரோப்பிய கருமங்களில் ஐக்கியநாடு எக்காலத்திலும் சிக்காமலிருக்கவேண்டு

மெனவும், அத்திலாந்திக்சமுத்திரத்தின் இக்கரை விஷயங்களில் ஐரோப்பா தலையிட எக்காலமும் இடங்கொடாதிருக்க வேண்டுமெனவும் அமெரிக்க அரசியற் தந்திரத்தின் அடிப்படையான கொள்கையை விளக்கமாகக் கூறினார். அவருக்குப்பின் பிரசாதிபதிகளாயிருந்தவர்கள் இக்கொள்கையைக் கடைப்பிடித்து ஆட்சி புரிந்து வந்தமையே ஐக்கிய நாட்டிற் சமாதானம் மேலோங்குதற்குக் காரணமாகும். நெடுங்காலமாகப் பின்பற்றிய கொள்கையை 1917 ம் ஆண்டில் ஒதுக்கிவைத்து ஐரோப்பியப் பெரும்போரில் ஐக்கியநாடு பங்குபற்றியமை தற்பாதுகாப்புக்காகவென்றே கூறுதல் வேண்டும். சமோஆ (Samoa) கவாய் (Hawaii) பிலிப்பைன் (Philippines) தீவுகளை ஐக்கியநாடு பிடித்துக்கொண்டதும் அதன் பசுபிக்சமுத்திர வியாபார சம்பந்தமாகவே.

3. தென் அமெரிக்கா.

புதிய நாடுகள் கண்டு பிடிக்கப்பட்ட காலம் முதலாக அதற்கு வழிகாட்டின ஸ்பானியா, போர்த்துக்கால் என்பவற்றுக்குட்பட்ட குடியேற்ற சக்கராதிபத்தியத்தின் ஓர் பகுதியாகவே தென் அமெரிக்கா இருந்தது.

குடியேற்ற நாடுகளை ஆளுவதற்கு ஸ்பானியரால் அனுப்பப்பட்டவர்கள் ஆளும் திறமையற்றவர்கள். நாடுகளின் அபிவிருத்தி விரும்பி அவர்

கள் யாதேனும் செய்திலர். அவர்களின் சோம்பலும் சுயநல விருப்பும் குடியேற்ற நாட்டினர் அவர்களை வெறுப்பதற்குக் காரணமாயின. இதுவுமன்றி 19ம் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், அதற்குப் பின்னும் உலகம் முழுவதும் பரவிய பிரான்சிய அரசியற் புரட்சிக் கொள்கைகள் இங்கும் பரவத்தொடங்கின.

1808 ல் முதலாம் நெப்போலியன் ஸ்பானிய மன்னனைச் சிங்காதனத்தினின்று துரத்தித் தன் சகோதரனை யோசெவ் பொனெப்பாட்டை (Joseph Buonaparte) அரசனாக்கினான். தென் அமெரிக்க ஸ்பானிய குடியேற்றநாடுகள் யோசெவ்வுக்குக் கீழ்ப்படிய மறுத்து, எதிர்த்தெழுந்தன. சிறிது காலத்துக்குள் முந்திய ஸ்பானியவரசன் திரும்பவும் அரசுக்கு வந்தான். குடியேற்ற நாடுகளின் புரட்சி இன்னும் தொடர்ந்து நடத்தப்பட்டது. சைமன் பொலிவர் (Simon Bolivar) என்னும் சிறந்த போர்வீரன் புரட்சிக்காரரின் தலைவனான். யுவான் சன் மாட்டின் (Juan San Martin) என்பவரும் லோட் கொக்றேன் (Lord Cochrane) என்னும் துணிகரமுள்ள பிரித்தானிய மாலுமியொருவரும் பொலிவருக்குத் துணைபுரிந்தனர். கொடும்போர்களுக்குப் பின்னர் 1824 ல் ஸ்பானிய குடியேற்றநாடுகள் ஒன்பது சுயவரசுநாடுகளாகப் பிரிந்தன:— பொலிவியா, ஆர்ஜென்ரைன் சிலி, கொலம்பியா, யூக்கடோர், பறகுவ,

உறுகுவ, பீறு, வெனுசுவெலா, மெக்சிக்கோவும் மத்திய அமெரிக்காவின் ஐந்து பிரசாதிபத்திய நாடுகளும், (கொஸ்ராறிக்கா, குஆற்றிமாலா, ஹொண்டியுறஸ், சன்சல்வடோர், நிக்கறகுவா) சுவாதீனமடைந்தன.

பிறேசில் (Brazil.)

ஆறாம் டொம் யோண் (Dom John vi) என்னும் போர்த்துக்கால் அரசன் நெப்போலியனால் அரசினின்றும் துரத்தப்பட்டபோது அவன் பிறேசிலுக்கு ஓடிச்சென்று அங்கே பல வருஷங்களாக அரசு செய்துவந்தான். 1815 ல் அவன் போர்த்துக்காலுக்கும், பிறேசிலுக்கும் அரசனாகி ஆறுவருஷங்களாகப் பிறேசிலில் தங்கியிருந்த பின், தன் புத்திரன் டொம்பீட்றோ (Dom Pedro) என்பவனை பிறேசிலுக்குத் தேசாதிபதி ஆக்கிவிட்டுப் போர்த்துக்காலுக்குச் சென்றான். ஸ்பானியநாடுகளின் புரட்சியைப்பற்றி அறிந்தவர்களாகிய பிறேசில் நாட்டினர் இத்தருணத்தில் தாம் இன்னேர்முறை போர்த்துக்கேய அதிகாரத்துக்குக் கீழ்ப்படிவதில்லை எனக் கூறிப் புரட்சி செய்தனர். டொம் பீட்றோ, சனங்களின் விருப்புக்கிணங்கி, பிறேசிலைத் தனிநாடாக்கித் தானே அதற்குச் சக்கரவர்த்தியானான். 1889 ல் பிறேசில் குடியரசு நாடானது.

புதிதாக ஏற்பட்ட குடியரசுநாடுகள் எல்லாம் செல்வந் தரக்கூடிய அளவிலா இயற்கைப் பொருட்

களைப் பெற்றுள்ளன. உலக வாணிபத்தில் இந் நாடுகள் மேலான நிலைமையடையக்கூடுமென்பதை அவற்றிலுள்ள இயற்கையாதாரப் பொருட்கள் நிச்சயமாக்குகின்றன. ஆயினும் இவ்நாடுகள் ஒன்றோ டொன்று செய்யும் யுத்தங்களினாலும் உள்நாட்டுப் புரட்சிகளினாலும் மேனிலைக்கு வராதிருக்கின்றன.

10-ம் அதிகாரம்.

தூர கீழைத்தேசங்களும் ஆபிரிக்காவும்.

யப்பான்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புரட்சிகளும் சீர்திருத்தங்களும் ஆசிய மக்களையும் தாக்கி அவர்களுக்கும் புத்துயிர் அளித்தன. யப்பான், சீனா, இந்தியா என்பனவெல்லாம் மேனாட்டுப் புரட்சிகள் காரணமாகத் தாமும் மாறுதலடைந்தன.

யப்பானியர் பூர்வகாலந்தொட்டு மத்தியகாலம் வரையும் அந்நியர் சம்பந்தமற்றிருந்தனர். மத்திய காலத்தில் சீனருடன் தொடர்புபட்டு அவர்களின் நாகரிகத்தையும், புத்தசமயத்தையும் கைக்கொண்டனர். முதன்முதல் யப்பானியர் ஐரோப்பிய

ருடன் தொடர்புபட்டது பதினாறும் நூற்றாண்டிலெனலாம். 1542ம் ஆண்டில் முதன்முதல் போர்த்துக்கேய மாலுமிகள் யப்பானை அடைந்து வியாபாரம் செய்ய ஆரம்பித்தனர். அவர்களுக்குப் பின் பிரித்தானியர், ஒல்லாந்தர், ஸ்பானியர் அங்கு சென்று வியாபாரம் நடத்தி வந்தனர். போர்த்துக்கேயரின் வருகைக்குச் சிலவாண்டுகளின் பின் (1549) அர்ச். பிரான்சிஸ்கு சவேரியார் (St. Francis Xavier) என்று அறியப்படும் இயசு சபைக் குருவானவர் யப்பானுக்குச் சென்று கிறீஸ்துவ மதத்தைப் போதித்தார். இவரைப் பின்பற்றி ஒல்லாந்தரும் ஆங்கிலயரும் தங்கள் புரொட்டஸ்தாந்த கொள்கைகளைப் பரப்பலாயினர். யப்பானியர் இதனால் ஐரோப்பியர் தங்கள் தேசத்துக்கு வந்த நோக்கம் எதுவோவென ஐயமுற்றுச் சரித்திரத்தில் முன் ஒருபோதும் அறியப்படாத முறையில் கொடுங்கலாபனை நிகழ்த்திக் கிறீஸ்துவ மார்க்க போதகர்களைத் தேசத்தினின்றும் துரத்திவிட்டனர். இதன்பின் இருநூறு வருட காலத்துக்கு யப்பான் பிற தேசத்தவர்களின் தொடர்பின்றித் தனியதிகாரியினால் மானியமுறையில் ஆளப்பட்டு வந்தது.

1854ம் ஆண்டில் பெறி (Commodore Perry) என்னும் அமெரிக்க கப்பற் தளபதி ரோக்கியோவுக்குச் (Tokiyo) சென்று அமெரிக்கர் யப்பானுடன் வியாபாரம் செய்ய உத்தரவு பெற்றான்.

இதைக் கண்ட பிரித்தானியர், பிரான்சியர், ஒல்லாந்தர், ஜேர்மனியர் கடற்படைகளைத் தாமும் யப்பானுக்கு அனுப்பி வர்த்தகம் செய்துவந்தனர்.

இதன்பின் யப்பானில் அதி அற்புத புரட்சி ஒன்று ஏற்பட்டது (1868—90). யப்பானியர் மேனாட்டு முறைகளைப் பின்பற்றி ஆட்சி முறைகளைத் திருத்தினர். விஞ்ஞான சாஸ்திர அறிவும், கைத்தொழிலுமில்லாதிருந்த யப்பான் திடீரெனத் தற்கால வாழ்க்கையைப் பின்பற்றும் நாடாக மாறியது. மானியமுறை நீக்கப்பட்டது. கல்வி கற்பதன்பொருட்டு இளைஞர் பிறநாடுகட்கு அனுப்பப்பட்டனர். புகையிரதப் பாதை, தந்தி, தபாற் சேவை கைத்தொழிற்சாலைகள் கட்டாயக் கல்வி முறை, பாராளுமன்றம் என்பன தாபிக்கப்பட்டன.

இதுவரை யப்பானில் "மிக்காடோ" என்னும் அரசர் ஆண்டுவந்தனர். இவர்களைப் பிரசைகள் கடவுட்களாக மதித்தனர். இவர்களுக்கு மந்திரிகளாக 'ஹோகன்' (Shogun) என்பவர்கள் பரம்பரையாக வேலைபார்த்தனர். ஆட்சி விஷயத்தில் அதிகாரம் முழுவதும் மந்திரியிலேயே தங்கியிருந்தது. 1868 ல், ஷோகன் மந்திரி பதவியினின்றும் நீக்கப்பட்டான். முத்சோ ஹிற்றோ (Mutso Hito) என்பவன் அரசனானான். இவன் முந்திய கால முறைகளை ஒதுக்கிவிட்டு மேல்நாட்டு முறைகளைப் பின்பற்றி ஆளத்தொடங்கினான். இவன் அர

சுக்கு வரும்பொழுது 17 வயதுடையவனாயினும் வெகு திறமையுடன் 45 வருஷங்களாக (1868—1912) ஆட்சி செய்து புதிய யப்பானைத் தோற்றுவித்தான்.

மார்க்குவிஸ் இத்தோ (Marquis Ito) இவனுடைய மதியூக மந்திரியாயிருந்தான். இத்தோ ஐரோப்பா முழுவதுக்கும் பிரயாணம் செய்த ஒருவன். இவன் யப்பானில் செய்த திருத்தங்களில் ஜேர்மனியரையும் அவர்களின் அரசியல்முறைகளையும் கண்டு பாவித்தமையால் இவனைச் சிலர் "யப்பானிய பிஸ்மார்க்" என்றழைத்தனர். இவன் பூர்வநிலமானிய முறைகளை நீக்கிப் புதிய ஆட்சி முறைகளைத் தொடக்கினான். பாராளுமன்றம் முதன்முதல் இவன் காலத்தில் கூட்டப்பட்டது. தொழில்கள் விர்த்தியடைந்தன. போக்கு வரவுப் பாதைகளும் புகையிரத வீதிகளும் நாடெங்கும் திறக்கப்பட்டன. கலாசாலைகள் தாபிக்கப்பட்டன. இவைபோன்ற திருத்தங்களால் இத்தோ யப்பானை ஜேர்மனிபோன்றவோர் வலிமைகொண்ட நாடாக்கினான்.

2. சீனா.

சீனா பூர்வ சீர்திருத்த நாடுகளுளொன்று. மிகவும் ஆதிகாலத்திலேயே சீனர்கள் பட்டுநூலை நெய்யவும், மூலாம் பூசியனவும் மிகவும் அழகியனவுமான வெண் மண் கோப்பைகளைச் செய்யவும்,

விசித்திரமான படங்களை வரையவும் அறிந்துகொண்டனர், ஐரோப்பாவில் புத்துயிர் தோன்றுவதற்கு வெகு காலத்துக்கு முன்னமே, சீனர்கள் அச்சடித்தும், வெடி மருந்தையும் மீகாமனது திசையறி கருவியையும் உபயோகித்தும் வந்தனர். மத்திய காலத்திலே மஞ்சள்நிறக் கொள்ளைக்காரரான தாத்தாரியரின் படையெழுச்சிகளினால் சீனம் மிகவும் துன்பமடைந்தது. அவர்களுள் கீர்த்திவாய்ந்தவனான குப்ளக்கான் அரசுசெய்த காலத்தில் மார்க்கோ போலோ என்னும் பெயர்பெற்ற வெனீசிக யாத்திரிகன் பீக்கிங் நகரையடைந்து அரசனது சபையில் பதினேழு வருட காலம் வசித்திருந்து சுயதேசத்துக்குத் திரும்பிச் சென்றான். பதினாறும் நூற்றாண்டிலே போர்த்துக்கேயர் சீனரோடு வியாபாரஞ் செய்யவும், இயேசு சபைக் குருமார் அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் போதிக்கவும் சென்றனர்.

ஆனால் வியாபாரிகளும், யாத்திரிகரும், குருமாரும் வந்தமையினால் சீனரின் சீவியமும் கொள்கைகளும் அக்காலத்தில் அதிக மாறுதலடையவில்லை. சீனர் பிறசாதியாருடன் கலந்துகொள்ள விரும்பாததினால் ஆட்சி முறைகளிலும் மற்றும் துறைகளிலும் முன்னேற்றமடையாதிருந்தனர்.

சீன-யப்பானிய யுத்தம்.

கோறியாக் (Korea) குடாநாடு மஞ்சட் கடலுக்கும் யப்பான் கடலுக்கு மிடையேயுள்ளது.

1868ல் யப்பானியர் கோறியருக்குச் சிநேகங் காட்டிக் கோறியாவை இணைத்துக்கொள்ளத் தெண்டித்தனர். அவர்கள் அதற்கு இடங்கொடாததால் யப்பானியர் 1875ல் சியூல் துறைமுகத்துக்கு ஒரு படையை அனுப்பிக் கோறியாவின் விருப்புக்கு மாறாக அவர்களை வர்த்தகத் தொடர்புக்கு இணங்கச் செய்தனர்.

இதன்பின்னர் 1894ல் கோறியாவில் ஏற்பட்ட பிரசைகள் கலகத்தையடக்கக் கோறியாவின் அரசன் சீன அரசாங்கத்திடம் உதவி கேட்டான். சீனா உடனே சியூல் துறைமுகத்துக்கோர் படையனுப்பியது. கோறியாவைப்பற்றிய விஷயத்தில் பிரவேசிப்பதற்குச் சீனாவுக்கு உரிமையில்லையெனக் கண்டித்து யப்பானியர் போருக்கெழுந்தனர். யுத்தம் யப்பானியருக்கு வெற்றியாக முடிந்தது. ஷிமொனோஸெகி (Shimonoseki) உடன்படிக்கையின்படி வோர்மோசா, பெஸ்கடோறெஸ் தீவுகளும் லியோதுங் குடாநாடும், ஐந்துகோடி பவுண் நட்ட ஈடும் யப்பானியருக்குக் கொடுக்கப்பட்டன. யப்பானியருக்கு வியாபார சலாக்கியங்களும் அளிக்கப்பட்டன. கோறியா சுயவரசு நாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் வெகு சீக்கிரத்தில் யப்பானியர் மறுபடியும் கோறியாவில் தங்கள் செல்வாக்கை நாட்டத் தொடங்கினர்.

இந்த யுத்தத்தில் நடந்த தோல்வியால் சீனா நிலைகுலைந்திருப்பதைக் கண்ணுற்ற ஐரோப்பிய

தேசங்களும் யப்பானும் அதைத் தம்முள் பங்கீடு செய்ய எத்தனித்தன. இத்தருணத்தில் அதிர்ஷ்ட வசமாக அமெரிக்காவின் கேள்விப்படி ஐரோப்பிய தேசங்கள் இஷ்டப்படி வியாபாரம் செய்வதற்குத் துறைமுகங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டு சீனவைத் தாக்காதுவிட்டனர். ருஷியா போட் ஆர்தரையும், ஜேர்மனி கியொச்சௌவையும், பிரான்ஸ் ரொங்கினையும், பிரித்தன் வெய்-ஹைய்-வெய்யையும் பெற்றன. இந்த ஒழுங்குகளுக்கு ருஷியா மாத்திரம் சம்மதிக்கவில்லை. ஏனெனில் ருஷியா தன் இராச்சியத்தைக் கீழ்ப் பக்கமாக விசாலிக்கச் செய்யவும் மஞ்சூரியாவை அடிப்படுத்தவும் எண்ணங்கொண்டிருந்தது.

போக்சர் கலகம்.

ருஷியர், பிரான்சியர், பிரித்தானியர், ஜேர்மனியர் தங்கள் இடங்களைப் பிடித்துப் பங்கு போட்டதையிட்டுச் சீனர் மிகவும் கோபங்கொண்டனர். இதுவே போக்சர் கலகத்துக்குக் காரணமானது. போக்சர் என்னும் பெயர் முதன்முதல் சீனவில் கிறீஸ்துவ மிஷனரிமாரை எதிர்த்துநின்ற ஓர் இரகசிய குழுவினரைக் குறிக்கும். ஆரம்பத்திலே இவர்கள் கிறீஸ்தவர்களையும், காலஞ் செல்லச்செல்ல, பிறசாதியார் யாவரையும் சீனவிலிருந்து துரத்த முயன்றனர்.

1898ல் ஷான்ருங்கிலிருந்த கிறீஸ்துவ குருமாருக்குச் சீன அரசாங்கம் சில உரிமைகளை அளித்தது. இதனல் போக்சர் முன்னிலும் கூடிய ஊக்கத்துடன் பிறசாதியாரைத் துரத்த முன் வந்தனர்.

ஷான்ரங் சிலி மாகாணங்களில் 1900 ல் பிறசாதியார் மிகவுங் கொடூரமாய் நடத்தப்பட்டனர். பீக்கிங் நகரில் வசித்த ஐரோப்பியர் இரகசிய கூட்டங்களைக் குலைக்குமாறு சீன அரசாங்கத்திடம் மனுப்பண்ணினர். ஆனல் அவர்கள் அவ்வாறு செய்யாதது கண்டு ஐரோப்பியர் தமது சொந்த அரசாங்கத்துக்கு அறிவித்துச் சண்டைக் கப்பல்களை அழைப்பித்தனர். இச்செய்தியையறிந்த போக்சர் பீக்கிங் நகரில் சில அன்னியரைக் கொலைசெய்தனர். இது ஐரோப்பியருக்கு அதிகம் ஆத்திரத்தையுண்டுபண்ணியது. பிரித்தானிய கடற்படையொன்று “சேர் எட்வேட் செய்மூரின்” கீழ் பெய்கோநதி முகத்துவாரத்தை யடைந்தது. யுத்தம் தொடங்கவே சீன அரசு “அன்னிய பிசாசுகளைத்” துரத்தும்படி கட்டளைச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்துப் போக்சருக்குத் துணைசெய்தது. ஐரோப்பியரின் நிலைமை ஆபத்துக்கிடமாயிற்று. இவ்வேளையில் பிரித்தானிய, அமெரிக்க, பிரான்சிய, ஜேர்மனிய, யப்பானிய துருப்புக்களடங்கியவோர் படை “வொன்வல்டர்சி” என்னும் தலைவனின் கீழ் பீக்கிங்குக்கு அனுப்பப்பட்டது. சீன அரசனும் அவன் சபையினரும் பீக்கிங்கினின்றும் ஓட்டம் பிடித்தனர். இதன்பின் ஒரு வருஷ காலமாக பீங்கிங்நகர் அமெரிக்கர் யப்

பானியர் ஐரோப்பியருக்காயிருந்தது. 1901 ல் புரட்டாதி மாதத்தில் சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டது.

பொக்சர் கலகத்தினுலே யப்பான் ஐரோப்பிய வல்லரசுகளின் பதவியைப் பெற்றது. பிரித்தானியாவும் யப்பானும் 1902 ல் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டன. கீழ்த்தேசத்தில் யப்பான் பிரித்தானியாவுக்கோர் துணையானது.

இவையன்றிச் சீனுவின் உள்நாட்டுக் கருமங்களையும் இக்கலகம் பெரிதும் தாக்கியது. சீனர் தங்கள் கடற்படையையும், தரைப்படையையும், ஸ்தாபனங்களையும் திருத்தத் தொடங்கினர். சீனரின் பழக்கவழக்கங்களும் சீவிய முறைகளும் தற்காலத்துக்கேற்ப மாறின. 1911 ல் பாராளுமன்ற முறையான ஆட்சி தொடக்கப்பட்டது. அடுத்த வருடத்தில் 17 ம் நூற்றுண்டு முதலாக ஆட்சி புரிந்த மஞ்சூகோ வம்சத்தரசன் பதவியினின்றும் நீக்கப்பட்டான். சீனுவில் குடியரசு முறை தொடக்கப்பட்டது. இது முதலாகச் சீன சரித்திரமானது அனேகமாய் இடைவிடாது நடைபெறும் உள்நாட்டுப் போரின் சரித்திரமாகவேயிருக்கின்றது. 1928 ல் குவோமிந்தாங்கு என்னும் தேசியக் கட்சியினர் நாங்கின் பட்டினத்தில் ஓர் துரைத்தனத்தை ஏற்படுத்தினர். இதுவே சீனம் முழுவதுக்கும் நிலையானதும் முன்னேற்றமுள்ளதுமான ஆட்சிஏற்படுவதற்கு நிச்சயமான முதற்படிபோலத் தோற்றுகின்றது.

3. ஆபிரிக்கா.

ஆபிரிக்காப்படத்தில் பலநிறங்களும் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு நிறமும் அவ்வத் தேசப்பிரிவை ஆளும் சாதியைக்குறிக்கும். பெரும்பகுதியான இடங்கள் ஐரோப்பியரின் குடியேற்ற நாடுகளாயிருக்கின்றன. இவை ஐரோப்பியரால் 1800க்கும் 1914க்கும் இடையே கைப்பற்றப்பட்டவை. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதிவரையும் ஆபிரிக்கா இருள்நிறை கண்டமாகவிருந்தது. எகிப்தும் வட ஆபிரிக்காவிலுள்ள வேறு சில பாகங்களும் மாத்திரம் பூர்வகாலத்தில் சீர்திருத்தம் பெற்றவை. எஞ்சிய பிரதேசம் முழுவதும் அநேக காலமாக முற்றுக அறியப்படவில்லை.

பத்தொன்பதாம் நூற்றுண்டுக்கு முன் ஐரோப்பியர் ஆபிரிக்காவில் ஒரேயொரு குடியேற்ற நாட்டைப் பிடித்திருந்தனர். அதுவே ஒல்லாந்தர் பதினேழாம் நூற்றுண்டிற் கைப்பற்றியதும் தென் அந்தத்திலுள்ளதுமான கேப் கலனி (Cape Colony). 1815ம் ஆண்டில் கேப்கலனியைப் பிரித்தானியர் ஒல்லாந்தரிடமிருந்து விலைக்கு வாங்கினர். இதன் பின்னர் பிரான்ஸ் 1830ல் வடக்கேயுள்ள அல்ஜீறியாவை (Algeria) அடிப்படுத்திப் பையமெல்ல அங்கிருந்து வடக்குப்புறமாயும் மேற்குப்புறமாயும் இடம் பிடித்துக்கொண்டது. ஸ்பானியா மொறொக்கோவுக்

குத் தெற்கேயுள்ள றயோடிஒரோ (Rio-de-oro) வையும் இத்தாலி சொமாலிலாந்தின ஓர் பாகத்தையும் லீபியாவையும் இணைத்தன.

ஆபிரிக்கஉள்நாடுகளிற்குடியேறவும் அவற்றை வெல்லவும் ஐரோப்பியர் 1880ம் ஆண்டுக்குப் பின்னதாகவே எண்ணங்கொண்டனர். மத்திய ஆபிரிக்கா பிரித்தானிய ஆராய்ச்சியாளர், வேட்டை விரும்பிச்செல்வோர், வியாபாரிகள், பாதிரிமார் என்பவர்களாலே ஆராய்ச்சி செய்யப்பட்டது. கைத்தொழிலுக்கேற்ற வேலைதீராத பொருட்களும் வர்த்தகத்துக்குதவக்கூடிய விலைபொருட்களும் இங்கிருப்பதையறியவந்த ஏனைய ஐரோப்பியரும் இவ்விடம் நோக்கி விரைந்து சென்றனர். குடியேற்ற நாடுகள் பிடிப்பதில் இவர்களுக்கிடையே போட்டியும் கலகமும் உண்டாயின. கலகங்களை யடக்குவதற்கும் மத்திய ஆபிரிக்காவைப் பங்குபோடுவதற்குமென பேர்லின் சங்கம் கூட்டப்பட்டது (1884). சங்க நிர்மானங்களின்படி, பிரான்சியர் வடக்காபிரிக்காவிலும் பிரித்தானியர் தென்னாபிரிக்காவிலும் அதிகாரம் பெற்றனர். மத்திய பாகம் போர்த்துக்கேயர், பெல்ஜியர், பிரித்தானியர், ஜேர்மனியருக்குப் பங்கிடப்பட்டது. போர்த்துக்கேயர் முன் கரையோரமாகக் கைப்பற்றியவிடங்களுடன் மொசாம்பிக்கையும் அங்கோலாவையும் அடைந்தனர். பெல்ஜியருக்கு பெல்ஜியன் கொங்கோவும் ஜேர்மனியருக்குக் கிழாபிரிக்காவும் கமறூன்களும்

அளிக்கப்பட்டன. ஜேர்மனியர் இவ்விடங்களை ஐரோப்பிய மகா யுத்தத்துக்குப்பின் இழக்கலாயினர்.

ஐரோப்பியரின் ஆளுகையில் தென்னாபிரிக்காவும் மத்திய ஆபிரிக்காவும் இதுவரை அநேக நன்மைகளைப் பெறலாயின. சமாதானமாகச் சீவிக்கவும் தேச பிரமாணங்களுக் கமையவும் அங்குள்ளார் கற்றுக்கொண்டனர். கல்வி, கிருஷிகம், கைத்தொழில் என்பவற்றில் ஊக்கங்கொள்ளத் தொடங்கினர். ஆயினும் அரசியல் விஷயங்களில் பங்கு பெறுவதற்கு வேண்டிய நிலைமையை இன்னமும் அவர்கள் அடைந்திலர்.

தென்னாபிரிக்கா.

பாத்தலமியூடயஸ் (Bartholomew Diaz) என்பவன் 1486ல் ஆபிரிக்காவில் நன்னம்பிக்கைமுனையைக் கண்டுபிடித்தான். 1620ல் சில ஆங்கிலேய மாலுமிகள் தென்னாபிரிக்காவிற் சில இடங்களைக் கண்டுபிடித்தனர். கேப்ரவுண் (Cape town) என்ற பட்டினமும் அதையடுத்த கிராமங்களும் 1659ல் ஒல்லாந்த கமக்காரராற் குடியேறப்பெற்றன. இக் கமக்காரர்போவர் (Boers) என்றழைக்கப்பட்டனர்.

பிரான்சிய பிரசைகள் கலக காலத்தில் கேப்ரவுண் ஒல்லாந்தரால் ஆங்கிலேயருடைய பொறுப்பில் விடப்பட்டிருந்தது. நெப்போலியனுடைய யுத்தங்களுக்குப் பின், 1815 ல், அது ஆங்கிலேய

ருக்கானது. அங்கு வசித்த போவர் ஆங்கிலேயரோடு சிறிதுகாலம் சமாதானமாய் வாழ்ந்துவந்தனர். ஆனால் 1833 ல் ஆங்கிலேயர் அடிமைத்தொழிலை நீக்கியதால் போவர் அநேக கஷ்டங்களுக்குள்ளானார்கள். போவர் குடியேறிய நாடுகளிற் சிலவற்றைச் சுதேசிகளுக்குக் கொடுக்கும்படியும் ஆங்கிலேயர் கட்டளையிட்டனர். உடனே போவர் தாம் குடியிருந்த இடங்களைவிட்டு, ஆடுமாடுகளுடனும் மனைவி மக்களுடனும் ஆங்கிலேயரின் ஆஞ்ஞைக்கப்பால், வடக்கு நோக்கிச்சென்று, நற்றால் (Natal), ஒறேஞ் விறீஸ்ரேற் (Orange Free State), திறான்ஸ்வால் (Transvaal) என்ற நாடுகளிற் குடியேறினர். இப்புதிய இடங்கட்குப் போவர் சென்றமை அவர்களின் மகா யாத்திரை (Great Trek) எனப்படும். நற்றாலையும் சில வருஷங்களுக்குப் பின் ஆங்கிலேயர் கைப்பற்றிக்கொள்ள, போவர் ஒறேஞ் நாட்டையும் திறான்ஸ்வாலையுமடைந்து குடியேறினர். அங்கே சுதேசிகளான சூலுக்களுடன் (Zulus) போவர் செய்த யுத்தமொன்றில் ஆங்கிலேயர் போவருக்குதவியாக நின்று திறான்ஸ்வாலையும் பிடித்தனர் (1877). யுத்த முடிவில் சூலுக்கள் தோற்கடிக்கப்பட்டனர். போவருக்கு ஒருவித பொறுப்பாட்சியளிக்கப்பட்டது.

இதற்குச் சில வருஷங்களுக்குப் பின்னர் திறான்ஸ்வாலுக்கு வடக்கே றொடேசியா (Rhodesia) என்றதோர் ஆங்கிலேய குடியேற்றநாடு

தாபிக்கப்பட்டது. திறான்ஸ்வாலில் பொன்னும் கண்டுபிடிக்கப்பட்டது. ஆங்கிலேயரும் பிறரும் இங்கு விரைவிற் குடியேறினர். போவர் அந்நியரைத்துரத்தவும் றொடேசிய குடியேற்றத்தைத்தடுக்கவும் எண்ணிப் போருக்கெழுந்தனர். போவரின் யுத்தம் 1899 தொடங்கி 1902 வரையும் நிகழ்ந்தது. ஈற்றில் போவர் தம்மை ஆங்கிலேயருக்கு ஒப்படைத்தனர். இதன்பின் 1907 ல் திறான்ஸ்வாலும் ஒறேஞ்விறீஸ்ரேற்றும் சுவாதீனமடைந்தன. கேப்ரவுண் 1872 லும், நற்றால் 1893 லும் சுயவரசுகளாயின. இவ் நான்கு நாடுகளும் 1909 ல் தென்னாபிரிக்க ஐக்கிய இராசாங்க நாடுகளாகவமைந்தன.

எகிப்து.

இது பூர்வ சீர்திருத்தநாடுகளுளொன்றாகவிருந்தது. ஓர்காலம் மகமதியரின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. நெப்போலியனும் சிறிதுகாலம் இதைப் பிடித்திருந்தான்.

சுவெஸ்கால்வாய் 1869ல் பிரான்சிய கொம்பனியொன்றால் வெட்டப்பட்டது. பிரான்சியர் கால்வாயை வெட்டியவர்களாதலாலும் ஆங்கிலேயர் கால்வாயை அதிகமாக உபயோகப்படுத்துவோராதலாலும் இருசாதியாரும் எதிப்தின் அரசியல் விஷயங்கள் சீராக நடைபெறவேண்டுமென விரும்பினர். 1879ல் இஸ்மேல் (Ismail)என்னும் எகிப்தியவரசன்

பணமுடைகாரணமாக ஆங்கிலேயருக்கும் பிரான்சியருக்கும் கால்வாயின் பங்குகளை விற்றான். இதனால் கால்வாயின் கருமாதிகாரமும் இருசாதியாருக்கும் கிடைக்கலானது. இருசாதியாரும் எகிப்தில் நல்லாட்சி நடைபெறவேண்டுமென்பதை மென்மேலும் கவனித்து வந்தனர்.

இஸ்மேலின் ஆட்சியினால் எகிப்து தாழ்வடைவதைக்கண்ட துருக்கிய சுல்த்தான் இத்தருணத்தில் (1879) தன்அதிகாரத்தை அங்குநாட்டி, இஸ்மேலை நீக்கி, தன் மகன் தியூவிக் என்பவனை அரசனாக்கினான். மூன்றுவருஷங்களின் பின்னர், எகிப்திலுண்டான புரட்சியொன்றை அடக்குவதற்கு, தியூவிக் ஆங்கிலேயரின் உதவியைக் கேட்டுநின்றான். ஆங்கிலேயர் கொடுத்த துணையைக்கொண்டு அவன் எகிப்தில் மறுபடியும் சமாதான ஆட்சியை வருவித்தான்.

மகாயுத்த காலத்தில் துருக்கி மறுபடியும் எகிப்தைக் கைப்பற்ற முயன்றது. ஆனால் எகிப்து, யுத்த முடிவில், ஆங்கிலேயரின் பாதுகாப்பின்கீழ் ஓர் சுயவரசுநாடானது.

அபிசீனியா.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆபிரிக்கா முழுவதும் ஐரோப்பியராளுகைக்குட்பட்டபோது, எத்தியோப்பியா (Ethiopia) என்னும் மறுபெயர் கொண்ட புராதனஇராச்சியமான அபிசீனியா

மாத்திரமே சுதந்தரம் பெற்றிருந்தது. அபிசீனியர் கிறீஸ்துவ சமயத்தினர். அபிசீனியவரசர் யூதேயா நாட்டையாண்ட சலமோன் (Solomon அரசனுக்கும் புகழ்பெற்ற ஷீபா (Sheba) அரசிக்கும் புத்திரனான மெனெலெக் (Menelek) என்பவனின் வம்சத்தவராவர்.

இத்தாலி கீழாபிரிக்காவில் 1882-1890ம் ஆண்டுகளுக்கிடையே எரித்திரியா, சொமாலிலாந்து என்னும் இரு குடியேற்ற நாடுகளைத் தாபித்தது. இதே சமயத்தில் செழுமைவாய்ந்த அபிசீனிய மேட்டுப் பிரதேசத்தையும் பிடிக்கமுயற்சித்தமை இத்தாலிக்கும் அபிசீனியாவுக்கும் போருண்டாவதற்குக் காரணமாயிற்று. இப்போரில் (1896) அடோவா என்ற இடத்தில் இத்தாலியர் தோல்வியடைந்தனர். இத்தாலிய சேனாபதி பருதியரி (Baratieri) தன் சேனையின் மூன்றிலொருபகுதிக்கு மேலான தொகையினரையும் பீரங்கிகளனைத்தையும் இழந்ததோடு அபிசீனியாவின் சுதந்தரத்தையும் அங்கீகரித்துச் சமாதானத்துக்குடன்பட்டான்.

இச்சம்பவத்துக்காகப் பழிவாங்குவதற்கு இத்தாலியர் அநேகாண்டுகளாய்த் தருணம் பார்த்திருந்தனர். இத்தாலியின் தற்போதைய சர்வாதிகாரி முசொலினி அபிசீனியாவைக் குடியேற்ற நாடாக்கும் நோக்கமாக 1935ல் யுத்தம் தொடக்கினான். எத்தியோப்பியவரசன் ஹெயிலி செலாசி (Haile

Selassie) என்பவன் சர்வதேச சங்கத்தின் துணையைக் கேட்டுநின்றான். பிரான்சும் இங்கிலாந்தும் இத்தேசங்களைச் சமாதானப்படுத்தத்தெண்டித்தன. முசொலினி தரைப்படையும் ஆகாயப்படையும் கொண்டு மும்முரமாக யுத்தம் நடத்தினான். மலைகளும் சுவாத்தியமும் ஆயிரக்கணக்கான அபிசீனியரும் இத்தாலியரை எதிர்த்துப் போராடின. மாரிகாலத்தில் இத்தாலியர் சிறிது வெற்றியடைந்தனர். இத்தருணத்தில், இத்தாலியர் அபிசீனியர்மீது யுத்தம் தொடுத்தமை அநீதியான செயலென்றும் இத்தாலியருக்கு யுத்த ஆயுதங்களாவது வேறு பொருட்களாவது எத்தேசமும் விற்கப்படாதென்றும் சர்வதேசசங்கம் தெரிவித்தது. சங்கத்திலிருந்த ஐம்பத்திரண்டு தேசப் பிரதிநிதிகள் இத்தீர்மானத்துக்குச் சம்மதமளித்திருந்தனர். முசொலினி யுத்தத்தைத் தொடர்ந்து நடத்திச் சர்வதேசங்களின் விருப்புக்கு மாறாக அபிசீனியாவை இத்தாலியின் குடியேற்ற நாடாக்கினான்.

11ம் அதிகாரம்.

இலங்கை: ஆங்கிலர் காலம்.

1850க்குப் பிந்திய காலம்.

ஆங்கிலேயர் இக்காலத்தில் செய்த நன்மைகளோ அளப்பில. அன்னார் தம் அயரா உழைப்பினாலும், விடா முயற்சியினாலும் இலங்கையிற் போக்குவரவு, கிருஷிகம், கல்வி, அரசியாலாந் துறைகளில் ஏற்படுத்திய எண்ணரும் பலன்களினால் இலங்கையில் சீர்திருத்தமாம் சூரியனை உதயமாக்கினரெனின் மிகையாகாது.

கல்வி.

1836ம் ஆண்டில் சேர் றபேட்கோட்டன் (Sir Robert Horton) என்பவரின் அரிய முயற்சியால் கொழும்பில் "அக்கடேமி" எனப் பெயரிய இராச கல்லூரி ஆரம்பமானது. அதன்பின் வந்த தேசாதிபதிகளெல்லோரும் ஆங்காங்கு பல பாடசாலைகளை ஸ்தாபிக்கலாயினர். சங். ஸ்ருவாட் மெக்கன்சி தம் அரசைக் கைக்கொண்ட முதல்வருடத்திலேயே (1837) பேர்க்கர், சிங்களவரென இருசாதியாரும் தத்தமக்கெனப் புத்தகசாலைகளை ஸ்தாபித்தற்குத் துணைச் செய்தார். 1839ல் தலைநகரியில் பெண்

பாடசாலையொன்றையும், ஆங்காங்கு பல அரசாட்சிப் பாடசாலைகளையும் ஸ்தாபித்தார். வேடரின் நாட்டுக்குச்சென்று அவர்களைத்தரிசித்து, அவர்கள் தன்மைகளைக் கிரகித்துணர்ந்து, அவர்கட்கெனப் பாடசாலைகளைத் திறந்தார். இவரின்பின் வந்த சேர்கொலிங்கமெல் (Sir Colin Campbell) கல்வியை வளர்த்தற்கான முயற்சிகளைச் செய்துவந்தார். இவர்காலத்தின் பின் சில ஆண்டுகளாகக் கல்வி விஷயத்தில் யாதும் திருத்தப்பாடுகள் நடைபெற வின்று. ஆயின் கல்வி விருத்திக்காதாரமான சில பத்திரிகைகள் 1860ம் 1862ம் ஆண்டுகட்கிடையில் வெளிவரலாயின. இதுவரையுங் கலா சங்கத்தார் பொறுப்பிலிருந்த பாடசாலைகள் 1869ல் சேர் றொபின்சன் (Sir Robinson) என்னும் தேசாதிபதி காலத்தில் வித்தியாபகுதியாரின் பொறுப்பில் விடப்பட்டன. ஏட்டுப்பிரதிகளிற் கிடந்து செல்லுக்கிரையாகும் பாலிபாஷை நூற்களைச் சேர்த்துத் திரட்டும்படி சங். யேம்ஸ் அல்விஸ்என்பவர் நியோகிக்கப்பட்டார். இத்தேசாதிபதியின் அரிய முயற்சியால் 1870ம் ஆண்டிற் கொழும்பில் ஓர் வைத்திய கல்லூரியும் ஸ்தாபிக்கப்பட்டது. 1875ல் இம்முயற்சிகளை அனுகூலப்படுத்துவதற்கோர் நூதனசாலையும் ஸ்தாபிக்கப்பட்டது. கல்விவிஷயத்தில் விசேஷ திருத்தங்கள் செய்ய மேலுத்தியோகஸ்தர் வேண்டுமென்னும் நோக்கங்கொண்ட சேர் யேம்ஸ் லோங்டன் (Sir James Longden) என்பவர் 1879ல் புறாஸ்

துரையை வித்தியாகர்த்தராகவும், பிளேயர் துரையை வித்தியாதரிசியாகவும் நியமித்தார். இவ் வித்தியாகர்த்தர் தம் வேலையைச் செவ்வனே செய்தற்பொருட்டு உதவி நன்கொடைப் பாடசாலைகளினதும், போதனு வித்தியாசாலைகளினதும் ஒழுங்குச்சட்டங்களை இயற்றினர். இதன்பின்னர் முன்னே அழிக்கப்பட்ட கலாவிர்த்திச் சங்கத்தை சேர் ஆதர் கவ்லொக் (Sir Arthur Havelock) என்பவர் 1895ம் ஆண்டு திரும்பவும் புதுப்பிக்கலாயினர். கல்வியன்றிச் சுகாதார விஷயத்திலும் தேர்ச்சி பெறவேண்டுமென்னும் நோக்கங்கொண்டு சேர் கென்றிபிளேக் (Sir Henry Blake) என்பவர் 1906ம் ஆண்டில் நம் யாழ் நகரிலேயே ஓர் சுகாதார சங்கத்தை ஆரம்பித்துவிட்டார். இக்காலத்தின் பின்னர் இலங்கையிற் பஞ்சங்களும் யுத்தங்களும் ஏற்பட்டமையால் தேசாதிபதிகள் கல்வியை விருத்தி செய்வதில் கவனஞ்செலுத்த முடியாதிருந்தனர். ஆயினும் மனிங்மன்னவர் Sir Wm. Manning) காலத்தில் வித்தியாகர்த்தரான மெஸ் மக்கறே துரையின் சிபாரிசுப்படி ஆங்கில சுவ பாஷா பாடசாலைகளுக்கு உதவி நன்கொடைப் பணம் கூட்டிக் கொடுக்கப்பட்டது. அதனுல் இரு திற உபாத்திமாரும் சம்பள ஏற்றம் பெறலாயினர். 1925ம் ஆண்டு மனிங் மன்னவர் இலங்கையால் நீங்கிவிட அவரிடமாகவந்த சேர்கியூகிளிவோட் (Sir Hugh Clifford) தேசாதிபதியால் இலங்கையடைந்த சுகநலங்கள் பல. இம்மகான் 1926ம்

ஆண்டு சிங்கள சாதியாருக்குத் திருத்தமான அகராதி ஒன்றை இயற்றவேண்டிய செலவின் பெரும்பகுதியை அரசிறை வருமானத்திலிருந்து கொடுத்துதவினர். அடுத்த ஆண்டில் சுயபாஷா பாடசாலை உபாத்திமாரின் வேதனத்தை நூற்றுக்கு இருபத்தைந்துவீதம் உயர்த்தியும் அரசாட்சிப் பாடசாலைகளின் ஆசிரியருக்கு இளைப்பாற்றிச் சம்பளம் நியமித்தும் ஆசிரியரைத் தம் தொழிலில் ஊக்கப்படுத்தலானார். ஸ்ரான்லி மன்னவரின் காலத்தில் இலங்கைச் சர்வகலாசாலையைக் கட்டியெழுப்புவதற்கென ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த பணத்தைக் கொண்டு தும்பறைப் பள்ளத்தாக்கிலதைக் கட்டிமுடிக்கவேண்டுமென்று சட்டநிரூபண சபையால் தீர்மானிக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் தேசாதிபதி முஸ்லிம் பெண்பிள்ளைகளுக்கு ஆங்காங்கு பல பாடசாலைகளைத் திறந்து வைத்தார். கொழும்பில் அரசினர் பொறுப்பில் ஸ்தாபிக்கப்பெற்ற ஆயுர்வேத வைத்திய கல்லூரியை இவ்வாண்டு ஆனிமாதம் 12-ந் திகதி ஆரம்பித்துவிட்டார். இம்மன்னவர் சாதி, சமய பேதம் பாராது சகலரும் கல்விகற்க வேண்டுமென்னும் நோக்கத்தை நிலைநாட்ட எண்ணி 1931-ம் ஆண்டு சமாசனங்கொடுக்க மறுக்கும் பாடசாலைகளுக்கு உதவி நன்கொடைப் பணம் உதவப்பட மாட்டாதெனப் பிரமாணம் விதித்தார்.

மேற்கூறப்பட்டவை போன்ற வேறு பல திருத்தங்களாலும், இலங்கையில் இக்காலங்களில்

கல்வி மென்மேலும் வளர்ச்சியுற்றது. எல்லாச் சாகியத்தவரினதும், சமயத்தவரினதும் உயர்தரப் பாடசாலைகள் பிரதான பட்டினங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. ஆங்கிலமும் சுய பாஷைகளும் அதிகமதிகமாகப் படிப்பிக்கப்பட்டன. சாதி சமய உணர்ச்சிகள் அதிகரிக்கலாயின. இவற்றின் பயனாகத் தற்போது எல்லாச் சாகியத்தரும், எல்லாச் சமயத்தவரும் இலங்கையின் அரசியல் விஷயங்களில் பங்குபெறக் கூடியவர்களாயிருக்கின்றனர்.

கிருஷிகம்

சிங்கள மன்னரின் காலத்திற்குப்பின் இலங்கையிற் கிருஷிக விருத்தி குன்றிப்போக குளங்கள் சலசூத்திரங்கள் எல்லாம் பழுதடைந்துபோயின. ஆயின் ஆங்கிலர் இலங்கையை அடைந்த பின்னர் முன்னிலுங் கூடிய கிருஷிக விருத்தி ஏற்படலாயிற்று. அஃது எங்ஙனமென்பதை ஆராய்வாம். சேர் எட்வேட் பாண்ஸ், சேர் றபேட் கோட்டன், சேர் கொலிங்கமெல் ஆதியோர் காப்பிச் செய்கையை ஊக்கப்படுத்திய வரலாறுகள் முன்னரே கூறப்பட்டன. இவர்களுக்குப் பின்னர் சனங்களால் நேசிக்கப்பட்ட சேர் கென்றி உவாட் (Sir Henry Ward), என்பவர் பல குளங்கள் கட்டுவித்தும் புதுப்பித்தும் கமச்செய்கைக்கு உதவிபண்ணினார். இம்மகான் சென்னை மீண்டதும் 1860—1875 வரையுமுள்ள பதினைந்து வருட

காலத்திலும் கமச்செய்கைக்காக எவ்வித பிரயாசையும் எடுக்கப்படவில்லை. 1873ல் லைபீரியன் காப்பி இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. சங். வில்லியம் கிறகோரி மன்னவர் காலத்தில் தேயிலை, சுரநாயன், கொக்கோவா, இந்திய றபர் முதலிய பயிர்கள் செய்கைபண்ணப்பட்டன. ஆயினும் இவர் இலங்கையால் நீங்கிய 1877-ம் ஆண்டில் காப்பிச் செடிகள் ஓர்வித புழு மேய்ச்சலினால் நாசமாயின. அதனால் லோங்டன் மன்னர் காலத்திற் தோட்டத் துரைமார் தேயிலை, கொக்கோவா, முதலிய செடிகளை அபரிமிதமாய்ச் செய்கைபண்ண முயற்சித்தனர். 1883-ம் ஆண்டில் சேர் ஜோண் டொக்லஸ் என்பவர் உபதேசாதிபதியாயிருந்த காலத்தில் இக்கிருஷிக விருத்தியை நாடி வித்தியாகர்த்தராகிய கிறீன் துரையின் முயற்சியினால் கொழும்பில் கிருஷிக சாலை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இம்முயற்சியை மென்மேலும் வளர்க்க உன்னி, சேர் ஆதர் கோட்டன் என்பவர் 1866ல் நீர்ப்பாய்ச்சுவேலைச் சட்டத்தை ஏற்படுத்தினார். சிங்கள மன்னனாகிய தாதுசேனனாற் கட்டுவிக்கப்பட்டுப் பாவிப்பற்றிருந்த காளாவிக் குளத்தையும் யோடியாலா வென்னும் வெட்டுவாய்க்காலையும் பழுதுபார்ப்பித்து உபயோகத்துக்குரியதாக்கினார். இவர் வேளாண்மையை விருத்திசெய்தற்பொருட்டுப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டார். கிருஷிகம் செய்வோர் காலத்துக்குக் காலம் பல நன்மைகளையடைந்து வந்தமையால் அத்தொழிலில்

மென்மேலும் ஊக்கமெடுத்து வந்தனர். அதனாற் சேர் ஆதர் கவ்லொக், (Sir Arthur Havelock) என்பவர் 1892ல் தானிய வரியையும் நீக்கிவிட்டார். அவரைத் தொடர்ந்து 1896ல் சேர் உவெஸ்ற் றிச்வே (Sir West Ridgeway) தேசாதிபதி நீர்ப்பாய்ச்சு விஷயத்தில் மிக்க திருத்தப்பாடு செய்தார். சேர் கிறேம் தொம்சன் என்பவர் மின்னேரியை அடுத்த காடுகளை வெட்டி விளை நிலங்களை இலவசமாகக் கொடுத்துக் கமத்தை விருத்தி செய்தார்.

இவ்வாறாகக் கிருஷிக முன்னேற்றத்துக்கான சாதனங்கள் அரசாட்சியாரால் குறைவின்றி அளிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இலங்கையார் பெரும்பாலும் உத்தியோகமே மேன்மையுள்ளதெனமதித்துக் கிருஷிகத்தைக் கைநெகிழ்ந்துவருவதினால் ஏனையநாட்டுப் பொருட்கள் அதிகம் இங்கு இறக்குமதி பண்ணப்படுகின்றன.

போக்கு வரவு வசதிகள்.

போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் தம் வர்த்தகத்தை வளர்க்கும் சாதனங்களைத் தேடி அவற்றையே விருத்திசெய்து வந்தனர். தன்னலங் கருதாத் தன்மைவாய்ந்த ஆங்கிலேயரோ இலங்கையில் எண்ணிலா நன்மைகளைச் செய்துவருகின்றனர்.

ஆங்கிலேயர் இலங்கையை அடைந்தபோது இத்தீவு காடடர்ந்து பாழாய்க்கிடந்தது. சேர் எட்

வேட் பாண்ஸ் என்பவர் 1824 ல் தமது உத்தியோகத்தைக் கையேற்றுக் காடடர்ந்த இடங்கள் யாவையும் சீர்ப்படுத்திப் பல பாதைகளைத் திறப்பித்து, பாலங்களைக் கட்டுவித்து, காட்டை நாடாகவும் மேட்டை ஒப்ப செப்பமான நிலமாகவுந் திருத்துவித்தார்.

அதன்பின் சேர் றபேட் கோட்டன் தேசாதிபதி 1832 ல் கொழும்புக்கும் கண்டிக்குமிடையே தபால் வண்டி ஓடச்செய்தார். இவர் காலத்தில், 1837 ம் ஆண்டில் கொழும்புக்கருகாமையில் 1200 வீடுகளும் கண்டியிற் பல பாலங்களும் வெள்ளப் பெருக்கால் அள்ளப்பட்டன. அதனால் போக்குவரவுப் பாதைகள் சில சேதமாயின. ஆயினும் இவர் பின் வந்த சங். ஸ்ருவாட் மெக்கன்சி என்பவர் 1839 ல் கொழும்பிலிருந்து காலிக்குத் தபால்வண்டி ஓடச் செய்தார். சேர் கொலிங் கமெல் 1846 ல் கொழும்புக்கும் கண்டிக்குமிடையிற் புகையிரதப்பாதை இடுவதைப்பற்றி யோசனை பண்ணும்பொருட்டு ஓர் சங்கத்தைக் கூட்டினார்.

அவருடையவேலையைத் தொடர்ந்து நடத்தமுடியாதமுறையில் அதேவருடத்தில்பேதிநோயுண்டாகிப் பலரை வாரிப்போயிற்று. ஆயினும் சேர் கென்றி உவாட் தேசாதிபதியின் வருகையோடு இலங்கைக்கு நற்காலம் உதிக்கலாயிற்று. இவர் 1857 ம் ஆண்டில் கொழும்புக்கும் காலிக்குமிடையில் மின்சாரக்கம்பியை இடுவித்தார். மாதமொருமுறை இலங்

கையைச் சுற்றிவரும்படி ஓர் நீராவி மரக்கலத்தை அரசினர் பொறுப்பில் ஏற்படுத்தினர். அதற்கடுத்த ஆண்டில் வெகுசனர் சமுகத்தில் தம் கையால் முதற் பொழி வெட்டிக் கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்லும் புகையிரதப்பாதையை ஆரம்பித்துவிட்டார். கம்பளையிற் தூங்குபாலத்தையும் கடுகாஸ்தோட்டையில் இரும்புப்பாலத்தையும் போடுவித்தார். இத் தேசாதிபதியின் நன் முயற்சியின் பயனாய் 1864 ல் ஜெனரல் ஒபிறியன் (Major General O'Brien) காலத்தில் அம்பம்புசைவரையும் புகையிரதம் ஓடலாயிற்று. அவரின் பின் றெபின்சன் தேசாதிபதி இலங்கையையடைந்து 1866 ல் கொழும்பிலிருந்து கண்டிவரையும் புகையிரதம் ஓடும்படி செய்தார். 1869 ல் கொழும்புக் கடலணை கட்ட முயற்சியுஞ் செய்யப்பட்டது.

இவர்காலத்திற்போலவே இவருக்குப்பின் வந்த சேர் கிறகோரி (Sir W. Gregory) மன்னவர் காலத்திலும் இலங்கை சீருற்று ஓங்கியது. சேர் கிறகோரி 1872ல் கொழும்பில் வாயுத் தீபத்தை ஏற்றுவித்து அவ் வருடத்திலேயே கம்பளைப் புகையிரத வீதியையும் முற்றுப்பெறுவித்தார். 1874ல் நாவலப்பிட்டிக்கும் புகையிரதப் பாதையைத் திறப்பித்தார். கடலோரமாகச் செல்லும் புகையிரதப் பாதையையும் ஆரம்பித்துவிட்டார். இவர் காலத்திலேயே உவேல்ஸ் இளவரசர் இலங்கைக்கு வந்து கொழும்புக் கடலணைக்கு அஸ்திவாரமிட்டு, தேசாதிபதிக்கும்

னைற் பட்டமிட்டேகினார். தேசாதிபதி அதன்பின் பாணந்துறைப் புகையிரத வீதியையும் திறந்தார் இவர்பின் வந்த லோங்டன் தேசாதிபதி 1880ல் மாத்தளைப் புகையிரத வீதியை முற்றுப் பெறுவித்தும் நானுஓயாப் புகையிரத வீதியை ஆரம்பித்தும் விட்டார். நானுஓயாப் புகையிரத வீதி 1884ல் முற்றுப் பெற்றது.

அதன்பின் சேர் ஆதர் கவ்லொக் 1894ல் பண்டாரவளை, மாத்துறை, குருநாகலென்னும் இடங்களின் புகையிரதப்பாதைகளை முற்றுப்பெறுவித்தார். 1895ல் கொழும்புக்குச் சமீபமாய்க் களனிகங்கையின் மேலோர் இருப்புப்பாதையையும் இடுவித்தார். சேர் உவெஸ்ற் றிச்வே மன்னவர் 1900ல் களனிவெல்லைப் புகையிரத வீதியையும் 1902ல் யாழ்ப்பாணப் புகையிரத வீதியையுந் திறப்பித்தார். இதற்கு ஐந்துவருடங்களின் பின் கென்றி பிளேக் தேசாதிபதியால் நீர்கொழும்புப் புகையிரத வீதிக்கு முதற்பொழி வெட்டப்பட்டது. இவ்வருடத்தோடு இவரரசு முற்றுப்பெற, சேர் மக்கலம் என்பவர் இலங்கையின் தேசாதிபதியானார். 1908ல் உலகம் முழுவதையும் சுற்றிப் பார்வையிடும் நோக்கமாய் வந்த அமெரிக்க கப்பற்குழாம் கொழும்பைத் தரிசிக்கலானது. அடுத்த ஆண்டு நீர்கொழும்புப் புகையிரதப் பாதை திறக்கப்படலாயிற்று. அப்பால் 1912ல் களனிப் பள்ளத்தாக்குப் புகையிரதப் பாதை இரத்தினபுரி வரையும் திறக்கப்பட்டது. 1913ல் களனிகங்கையி

னிருகரையும் பெருக்கெடுத்ததால் பட்டினங்களும், கிராமங்களும் நீரில் மூழ்கின. இலங்கையை இந்நிலை பரத்தில் விட்டு மக்கலம் தேசாதிபதி சுயதேசம் சென்றார். அவருக்குப் பின் சேர் சாமேஸ் (Sir R. Chalmers) என்பவர் தேசாதிபதியானார். இவர் 1914ல் இலங்கை- இந்தியாப் புகையிரத வீதியைத் திறந்து வைத்தார். இவ்வருட நடுக்கூற்றில் உலகம் முழுவதையும் நடுக்குறச் செய்த ஐரோப்பிய மகா யுத்தம் ஆரம்பமாயிற்று. இதனால் இலங்கையின் வர்த்தகம் குறைவுபட்டு வறுமையேற்பட்டது. யுத்த காரணமாய்ப் போக்குவரவுப் பாதைகள் திருத்தப்படாவிட்டாலும், 1917ம் ஆண்டில் சேர் ஜோன் ஆண்டேர்சனால் நீர்கொழும்பிலிருந்து சலாபத்துக்குப் போகும் புகையிரதப் பாதை முற்றுவிக்கப் பெற்றது. யுத்தம் முடிவெய்தியபின்னர் மனிங் மன்னவர் 1925ம் ஆண்டில் திரிகோணமலைக்குச் செல்லும் புகையிரதப் பாதையில் கெக்கிராவ வரையும் புகையிரதம் ஓட ஒழுங்குசெய்தார். இவ் வருடத்திலேயே சலாபத்திலிருந்து புத்தளம் வரையிலுமுள்ள புகையிரதப் பாதையில் முந்தல் வரையும் புகையிரதம் ஓடலாயிற்று.

இப்பாதை 1926ல் கிளிவோட் மன்னவர்காலத்தில் முற்றுப்பெற்றது. இவர்காலத்தில் புகையிரதப் பிரயாணவசதிகளும் வியாபார வசதிகளும் வெகு திருத்தமடைந்தன. 1928ல் ஸ்ரான்லி மன்னவர் காலத்தில் மாகோவிலிருந்து புகையிரதம் மட்டக்களப்பு வரையும் ஓடியது.

இலங்கையின் பொருளாதாரநிலை தளர்ச்சியுறுதிருப்பதற்கு மேற்காட்டிய வசதிகள் பெரிதும் துணைச்செய்கின்றன. இத்தீவின் பிரதான பட்டினங்களெல்லாம் புகையிரதப் பாதைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் தேயிலை, றபர் முதலிய வர்த்தகப் பொருட்களைக் கொழும்புத் துறைமுகத்துக்குக் கொண்டு செல்வதும் உள்நாட்டு வியாபாரம் நடத்துவதும், பிரயாணங்கள் செய்வதும் இலகுவாயின. ஆயினும் இந்நாட்களில் இலங்கையின் எல்லாத் தெருக்களிலும் மோட்டோர்பஸ் வழியாகப் பிரயாணஞ் செய்யவும் மோட்டர்லொறிகளில் பொருட்கள் ஏற்றிச் செல்லவுங் கூடியதாயிருக்கின்றது. இதனால் புகையிரதப் பகுதியார் வருடாந்தம் அதிக பண நட்டத்துக்குள்ளாகின்றனர்.

அரசியல்.

1833ம் ஆண்டில் சேர் றபேட் கோட்டன் காலத்திலிருந்த சட்ட நிரூபண சபையில் 9 உத்தியோகஸ்தரும் 6 சனப் பிரதிநிதிகளுமாக 15 அங்கத்தவர்கள் இருந்தனர். தேசாதிபதியே சபையின் அக்கிராசனராகக் கடமைபார்த்தனர். உத்தியோகஸ்தரல்லாத பிரதிநிதிகளுக்குச் சட்டசபையில் செல்வாக்கு முற்றாக இருக்கவில்லை. விசேஷமாக ஐரோப்பியரே படிப்பாளிகளாயிருந்தமையால் அவர்களுக்கே உத்தியோகங்களும் கிடைக்கலாயின. காலத்துக்குக்காலம் அவர்கள் தங்கள் தேவைகளைப் பத்திரிகைகள் மூலமாகவும் மனுப்பத்திரங்கள் வழி

யாகவும், பாராளுமன்றத்துக்குத் தெரிவித்து, இடையிடையே சில சலாக்கியங்களைப் பெற்றுக்கொண்டனர். 1855ம் ஆண்டில் சேர் ஹென்றி உவாட் காலத்தில் ஐரோப்பியர் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் உரிமையையும், 1859ல் சனப் பிரதிநிதிகள் புதிய விஷயங்களை வாத விவாதத்திற்காகச் சங்கத்துக்குக் கொண்டுவரும் உரிமையையும் பெற்றனர். இதன்பின் சட்டசபை நாட்டின் செலவுவரவுத் திட்டத்தைத் தயாரிக்கும் உரிமையைப் பெறுவதற்காக அநேககாலம் பேரரசாங்கத்தோடு வாதாடி நின்றது. ஈற்றில் அப்பொறுப்பு அவர்களில் விடப்பட்டதாயினும் குறித்த ஓர்தொகைப் பணம் இலங்கையின் வருமானத்திலிருந்து பட்டாள பாதுகாப்புக்குக் கொடுபட வேண்டுமென்றும், குடியேற்றநாட்டுமந்திரியாரால் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அதன்பின் சட்டசபை அமைப்பில் மாற்றங்கள் செய்யப்படவேண்டுமென்ற வேண்டுகோள் அநேககாலமாய்க் கேட்கப்பட்டபின், சேர் ஆதர் கோடன் காலத்தில் 1889ம் ஆண்டில் கண்டிநாட்டார்க்கொருவரும் மகமதியர்க்கொருவருமாக இரு பிரதிநிதிகள் சேர்க்கப்பட்டனர். சபையில் இப்போ 9 உத்தியோகஸ்தரும் 8 சனப்பிரதிநிதிகளுமாக 17 பேர் இருந்தனர். 1909ம் ஆண்டின்பின், சேர் கென்றி மக்கலம் காலத்தில், பிரதிநிதிகள் தொகை கூட்டப்படவேண்டுமென்றும், அவர்களைத் தெரிவுசெய்யும் உரிமை சனங்களுக்குக் கிடைக்கவேண்டுமென்றும் பேரரசுக்கு மனுப்பண்ணப்பட்டது. அதன் பேறாக

1911ல் உத்தியோகஸ்தர் தொகை 11 ஆக்கப்பட்டது. சனப்பிரதிநிதிகளில் அறுவரைத் தேசாதிபதி நியமிக்கவேண்டுமென்றும், நால்வரைச் சனங்கள் தெரிவுசெய்யலாமென்றும் உத்தரவளிக்கப்பட்டது. கண்டிநாட்டுச் சிங்களர் ஒருவரும் சோனகர் ஒருவரும் கரைநாட்டுச் சிங்களர் இருவரும் தமிழர் இருவரும் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். பட்டினப்பகுதி ஐரோப்பியர் ஒருவரும் கிராமப் பகுதி ஐரோப்பியர் ஒருவரும், பறங்கியர் ஒருவரும், கல்வியறிவுள்ள தமிழர் ஒருவரும் சனங்களாற் தெரியப்பட்டனர். இவ்வாறு காலத்துக்குக் காலம் இலங்கைச் சட்டசபையின் நிலைமை விரைவான மாற்றமடைந்துகொண்டு வந்தது. இன்னும் கல்வி, வியாபாரம், ஐசுவரியம் என்பவைகளும், 1915ல் நடந்த சிங்களர் சோனகரின் கலகமும், அரசியல் விஷயத்திற் திருத்தம் கேட்கச் சனங்களைத் தூண்டின. நாட்டின் முன்னேற்றத்திற்காக ஸ்தாபிக்கப்பட்ட சில சபைகளின் மன்றாட்டின் பயனாக 1920ல் சேர் உவில்லியம் மனிங் காலத்தில், இன்னோர் திருத்தம் செய்யப்பட்டது. இதனால் சபையில் 14 உத்தியோகஸ்தரும் 23 சனப்பிரதிநிதிகளுமாயினர். சனப்பிரதிநிதிகளிற் 11 பேர்தேசப்பிரிவுகளாலும் 8பேர் சாதிகளாலும் தெரியப்பட்டனர். 4 பேர் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். ஆயினும் இந்தத் திருத்தங்களை இலங்கையார் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளவில்லை. அதினால் 1924ல் இன்னோர் திருத்தம் செய்யப்பட்டது. இதின்படியும் சாதிகளும்

தேசப்பிரிவுகளும், தம் பிரதிநிதிகளைத்தெரிவுசெய்ய இடங்கொடுக்கப்பட்டது. இவ்வாண்டுத் திருத்தத்தின்படி 37 சனப்பிரதிநிதிகளில் 3 பேர் தேசாதிபதியாற் தெரியப்பட 23 பேர் தேசப்பிரிவுகளாலும் 11 பேர் சாதிகளாலும் தெரிவுசெய்யப்படுவர். இதுவரையும் இச்சபைக் கூட்டத்திற்குத் தேசாதிபதியே அக்கிராசனம் வகித்தனர். ஆயின் 1924க்குப் பின் பிரதிநிதிகள் தெரிவு செய்யும் உப அக்கிராசனர் ஒருவர் தலைவராயினர். 1927ம் ஆண்டு சேர் கியூ கிளிவோட் மன்னவரின் வேண்டுகோட்படி இலங்கையாரின் குறைமுறைகளை விசாரணை செய்யுமாறு டொனமூர் என்பவரைத் தலைமையாகக்கொண்ட "ரோயல் கொம்மிஷன்" என்னும் சபையார் இலங்கைக்கு வந்து, கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் மட்டக்களப்பு முதலாமிடங்களுக்குச்சென்று, காரியாதிகளைத் தீர்க்கவிசாரணை செய்து போயினர். இவர்கள் செய்த தீர்ப்பின்படியும், தேசாதிபதி தமது தீர்மானத்தைத் தெரிவித்து மந்திரியாருக்கனுப்பிவைத்த அறிக்கையின்படியும், ஏற்படுத்தப்பட்ட புதிய அரசியல்முறை இலங்கைச் சட்டநிருபணசபையால் 1930ம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது. ஸ்ரான்லி மன்னவர் இலங்கையால் நீங்கிவிட, 1931ல் சேர் கிறேம்தொம்சன் இலங்கை அரசியற்பொறுப்பைக் கையேற்று இலங்கையின் புதிய அரசாங்கசபையை நிறுவுவதற்கான ஒழுங்குகளைப் பிரசித்தஞ் செய்தனர். இப் புது ஒழுங்கின்படி இச்சங்கம் மூன்று அரசாங்க உத்தியோகஸ்

தரையும், 50 சபைப் பிரதிநிதிகளையும், தேசாதிபதியால் நியமிக்கப்படும் வேறு 8 பிரதிநிதிகளையும் கொண்டது. இவ்வங்கத்தவருள் சபை அக்கிராசனம் வகிக்குமாறு ஒரு ஸ்பீக்கர் தெரிவு செய்யப்படுவார். ஏனையோர் அரசியற் பரிபாலன விஷயமாய் வித்தியாபகுதி, சுகாதாரப் பகுதி, அரச மேற்பார்வை, தரைப்பகுதி, போக்குவரவுப்பகுதி, தொழிற்பகுதி, இடஅரசு என 7 நிர்வாக சபைகளாகப் பிரிக்கப்படுவர். ஒவ்வொரு சபைக்கும் தலைவராகத் தெரியப்படுபவர்கள் மந்திரிமாராக நியமனம்பெறுவர். மந்திரிமார் எழுவரும் தாம் செய்கின்ற சகல கருமங்களுக்கும் அரசாங்க சபைக்கு உத்தரவாதிகளாவர். அரசாங்க சபையாரால் அனுமதிக்கப்படும் சகல சட்டங்களும் தேசாதிபதியின் முழு அனுமதியுடன் அநுசரணைக்குக் கொண்டுவரப்படும். தேசாதிபதி தமது மேலதிகார வல்லமையை 'அத்தியாவசியக விஷயம்' என்னும் நியாயம்பற்றிப் பிரயோகிக்க உரித்துடையவர். அரசாங்கசபை நாலு வருஷங்களுக்குக் கடமையாற்றும். நாலுவருஷ முடிவில் சபைகுலைக்கப்படும். அதன்பின் புதிய பிரதிநிதிகளைக் கொண்ட வேறொருசபை நிறுவப்படும்.

ஆங்கிலவரசின் கீழ் நாம் அனுபவித்துவரும் சலாக்கியங்களுள் தல ஆட்சிமுறையும் ஒன்றாகும். கொழும்பு, கண்டி, காலி, முதலிய பெரிய பட்டினங்களில் நகரபரிபாலன சங்கங்களும், யாழ்ப்

பாணம், திரிகோணமலை, நீர்கொழும்பு முதலிய பட்டினங்களில் பட்டின பரிபாலன சங்கங்களும், மிகச் சிறிய பட்டினங்களில் "லோக்கல்போட்" எனப்படும் சங்கங்களும் தலஆட்சி செய்து வருகின்றன. பட்டினங்களின் குடிநீர், சுகாதாரம், வெளிச்சம், போக்குவரவு ஆதியாங்கருமங்கள் இச்சங்கங்களின் பொறுப்பிலிருக்கின்றன.

இவையன்றி, 1856ம் ஆண்டின் நீர்ப்பாய்ச்சுச் சட்டத்தின்படி புதுப்பிக்கப்பட்ட 'கன்சபாவாஸ்' எனப்படும் கிராமக்கோடுகளும் உண்டு. இவை ஆரம்பத்திலே நீர்ப்பாய்ச்சுதல் சம்பந்தமான விஷயங்களைமாத்திரம் பார்வையிட்டு வந்தனவெனினும், தற்போது கிராமங்களின் முன்னேற்றம் நோக்கிச் செய்யப்படக்கூடிய திருத்தங்கள் யாவையும் செய்துவருகின்றன.

12ம் அதிகாரம்.

பிரித்தானிய சக்கராதிபத்தியம்.

ஒரு சக்கராதிபத்தியம் பல இராச்சியங்களை யடக்கியதாகவும் ஒரேயரசனால் ஆளப்படுவதாகவும் போரின் பயனாயேற்பட்டதாகவும் இருக்கும். பிரித்தானிய சக்கராதிபத்தியத்தினுள் மானிடவர்க்கத்தினரில் கால்வாசிக்கு மேற்பட்டவர்கள் காணப்படுகின்றனர். உலகின் நிலப்பிரதேசத்தில் ஏறக்குறைய காற்பங்கு இப்பெருஞ் சக்கராதிபத்தியத்தினுள் அடங்கும். பிரித்தானியவரசரே இச்சாதிகளுக்கும் நாடுகளுக்கும் தனியரசராவர். ஆனால் இப்பெருஞ் சக்கராதிபத்தியம் போரினாலேற்பட்டதொன்றல்ல. படை வன்மையினாலும் வெற்றியினாலும் கட்டப்பட்ட சக்கராதிபத்தியங்கள் விரைவிலே சிதைவடைந்ததை நாமறிவோம். பிரித்தானியர் ஆரம்பத்தில் கடற்கரையோரத்தில் அன்றேல் தீவுகளில் வியாபார தலங்களை அல்லது குடியேற்ற தாபனங்களை ஸ்தாபித்தனர். கண்டப் பகுதியில் அவர்கள் பெற்ற இராச்சியங்கள் பிற்காலத்திலே படிப்படியாகவும் இயற்கையாகவும் விருத்தியடைந்தன. ஆரம்பத்தில் அவர்கள் கனடாவில் லோறென்ஸ் பள்ளத்தாக்கை மாத்திரம் பிடித்தனர். கனடாவைப்போலவே அவுஸ்திரேலியாவில் அவர்கள் சிட்னி துறைமுகத்தையும் கடற்கரையிலுள்ள

இருதுறைமுகங்களையும் தஸ்மேனியாவையும் மாத்திரம் பிடித்தனர். இவ்வாறே இந்தியாவிலும் தென்னாபிரிக்காவிலுமென்க.

பிரித்தானிய சக்கராதிபத்திய நாடுகள் ராஜபக்தியும் அந்நியோன்னிய ஐக்கியமு முள்ளவை. ஐரோப்பிய மகா யுத்தத்தில் அவுஸ்திரேலியரும், நியூசிலாந்தரும், தென்னாபிரிக்க போவரும், இந்திய சீக்குகளும், கனடாவிலுள்ளாரும், இலங்கையாரும், உகண்டாவிற் குடியேறியோரும், ஹொங்கோங்கிலுள்ள சீனரும், மேற்கிந்திய நீக்கிரோவரும் பிரித்தானியருக்குப் போருதவி புரிந்தனர். சக்கராதிபத்திய நாடுகளிற் குடியேறினோர் தாய்நாட்டின் மீது அபிமானமுள்ளவர்களாயும் அங்குள்ள சுதேசிகள் பேரரசிடமிருந்து தாம் பெற்றுக்கொள்ளும் பல வேறு நன்மைகளுக்காக நன்றியுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். ஒருநாட்டின் விளைபொருளை இன்னொரு நாட்டிலும், பிந்தியநாட்டின் கைத்தொழிற் பொருளை மற்றோர் நாட்டிலுமாக பிரித்தானிய சக்கராதிபத்திய நாடுகள் தம்முள் வியாபாரஞ்செய்து சமாதானத்தை வளர்த்து வளருகின்றன.

பிரித்தானியாவுக்குக் கீழ்ப்பட் நாடட்டினர்தத்தம் இயற்கைக்குத் தக்கபடி விருத்தியடைதற்கான முறைகளில் ஆளப்படுகின்றனர். அவர்களின் சமயக் கொள்கைகளிலும் பழக்க வழக்கங்களிலும் பிரித்தானியர் தலையிடாது அவர்களை நாகரிகமடையச் செய்கின்றனர். கனடா, நியூபவுண்லாந்து,

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னுபிரிக்கா என்பன சுயராச்சியம்பெற்ற நாடுகளாக அமைந்துள்ளன. இவை ஒவ்வொன்றும் அததன் பாராளுமன்றத்தினுலும் மந்திரிமாரினுலும் ஆளப்படுகின்றது. ஒவ்வோர் நாட்டிற்கும் அரசரின் பிரதிநிதியாக ஒரு மகாதேசாதிபதி அனுப்பப்படுவர். மகாதேசாதிபதி அரசியல் விஷயங்களில் மிகவும் அருமையாகவே தலையிடுவர். இலங்கை, தொடுவாய்ப் பகுதிகள்போன்ற குடியேற்ற நாடுகள் குறைந்த அதிகாரமுடைய பிரதிநிதிகள் சபைமூலம் தேசாதிபதியால் ஆளப்படுகின்றன. சென்ற் கெலனு, ஜிப்ரேல்ரர், போன்ற நாடுகளில் தேசாதிபதி யதேச்சாதிகாரஞ் செலுத்துகின்றனர். பிரதிநிதித்துவ துரைத்தனம் பெற்றுப் பொறுப்பாட்சிபெருத நாடுகளிற் சில பேர்மியுடல், பகமாஸ், பார்படொஸ், பிரித்தானிய கயனு என்பவையாம். இவ்வாறு பிரித்தானிய சக்கராதிபத்தியத்துளடங்கிய நாடுகளில் விவித அரசியல் முறைகள் கையாடப்படுகின்றன. இன்னும் இச்சக்கராதிபத்தியத்தினுள் சுதேச மன்னராலாளப்படும் நைஜீரியா, சொமாலிலாந்து, ஸ்வாசிலாந்து, உகண்டா எனும் பாதுகாப்பு நாடுகளும், சர்வதேச சங்கத்தாரின் கட்டளைக்கிணங்கப் பிரித்தானியாவால் பரிபாலிக்கப்படும் பலஸ்தீனு, தென்னுபிரிக்க ஐக்கியநாட்டால் பரிபாலிக்கப்படும் தென்மேற்காபிரிக்கா போன்ற கட்டளைப் பிரதேசங்களும் வேறு சில செல்வாக்குப் பிரதேசங்களும் காணப்படும்.

இப்பெருஞ் சக்கராதிபத்தியத்துக்குச் சேர்ந்த நாடுகள் பின்வருமாறு:—

I. அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னுபிரிக்கா, கனடா, நியூபவுண்லாந்து, 'அயர்லாந்தின் இஷ்டநாடு' (Irish Free State) என்னும் சுயராச்சியங்கள். II. இந்தியா. III. பிரித்தானியகயனு, பிரித்தானிய கொண்டியூறஸ், மேற்கிந்தியதீவுகள், (ஜமேய்க்கா, ரிறினிடாட், பகமாஸ்) முதலிய அமெரிக்க குடியேற்றநாடுகள். IV. ருெடேசியா, ரங்கனிக்கா, கெனியா, உகண்டா, பிரித்தானிய சொமாலிலாந்து, நைஜீரியா, கோல்ட்கோஸ்ற், சியெருலெயோன், ஆங்கில எகிப்திய சூடன் ஆகிய ஆபிரிக்க குடியேற்ற நாடுகள். V. இலங்கை, மலாயநாடு, ஹொங்கொங், முதலிய ஆசிய குடியேற்ற நாடுகள். VI. விஜிதீவுகள், பிரித்தானிய வடபோர்னியோவும் சறவாக்கும், சலமோன்தீவுகள், பிரித்தானிய புதியகினி, முதலிய பசுபிக் குடியேற்ற நாடுகள்.

அவுஸ்திரேலியா

கப்ரின் குக் (Captain Cook) என்பவர் 1770-ம் ஆண்டில் பொற்றனி விரிகுடா எனுமிடத்தையடைந்து அவுஸ்திரேலியா பிரித்தானியருக்குரியதெனப் பிரசித்தப்படுத்தினர். 1787-ம் ஆண்டு தொடக்கமாக இங்கிலாந்திலிருந்து கைதிகள் அங்கு

அனுப்பப்பட்டார்கள். அவுஸ்திரேலியாவின் தென்கீழ்க் கரையிலுள்ள நியூசவுத் உவேல்ஸ் என்னுமிடத்தில் அவர்கள் குடியேறினர். வருடாந்தம் சிட்னிப் பட்டினத்திற்கும் அதன் சுற்றுக் கிராமங்களுக்கும் கைதிகள் அனுப்பப்பட்டனர். கைதிகளல்லாதோரும் சிலவருஷங்களின்பின் அங்கு செல்லத் தொடங்கினர். காலகதியில் அவுஸ்திரேலியாவோர் சிறந்த இராச்சிய நாடாக வருமெனபதை யுணர்ந்த ஆங்கிலேயர் 1840 ல் குற்றவாளிகளை அங்கு அனுப்பும் வழக்கத்தைக் கைவிட்டனர். ஆனல் குடியேற்றமோ குறைந்துபோகவில்லை. தென் பாகங்கள் குடியேறப்பெற்று தென் அவுஸ்திரேலியா, விக்ரோறியா எனும் இருபெரும் குடியேற்றப் பிரிவுகள் உண்டாயின. வடகீழ்ப் பாகம் குடியேறப்பெற்று, குவீன்ஸ்லாந்து என ஓர் பெரும் பிரிவானது. 1850ல் பொன் விளைவுள்ள நிலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அத்துடன் அநேக பிரித்தானியர் அவுஸ்திரேலியாவிற் குடியேற முன்வந்தனர். இவ்வாருக அவுஸ்திரேலியாவில் நியூசவுத் உவேல்ஸ், தென் அவுஸ்திரேலியா, விக்ரோறியா, குவீன்ஸ்லாந்து, மேற்கு அவுஸ்திரேலியா, ரஸ்மேனியா எனும் ஆறு குடியேற்றப் பிரிவுகள் தோன்றின. ஆரம்பத்திலே குடியேற்றம் பெற்றவையாகிய தென்பிரிவுகள் நாலும் 1856 ல் சுயஆட்சிப் பொறுப்பேற்கலாயின. மேற்கவுஸ்திரேலியாவும் குவீன்ஸ்லாந்தும் சில வருடங்களின்பின் பொறுப்பாட்சி பெற்றன.

அவுஸ்திரேலியாவில் பொன் கண்டுபிடிக்கப்பட்ட காலந்தொடக்கம் சீனரும் ஏனைய ஆசியவாசிகளும் அங்கு குடியேற முயன்றனர். ஜேர்மனியரும் பிரான்சியரும் அவுஸ்திரேலியாவுக்குக் கிழக்காகவும் வடக்காகவும் சில தீவுகளைக் கைப்பற்றினர். சீனர், பிரான்சியர், ஜேர்மனியர் அவுஸ்திரேலியாவை அபகரிக்கப் பார்ப்பரென்ற பயம் உண்டானது. ஆதலால் எல்லாப் பிரிவுகளுக்கும் ஓர் மத்திய அரசாங்கம் இருப்பது நலமென்ற எண்ணம் உதித்தது. 1900 ல் தற்பாதுகாப்பின் நிமித்தம் குடியேற்றப் பிரிவுகள் ஒன்று சேர்ந்தன. அவுஸ்திரேலியா ஓர் ஐக்கிய பிரசாதிபத்திய நாடானது.

நியூசிலாந்து.

நியூசிலாந்து அவுஸ்திரேலியாவுக்குத் தென்கீழ்த்திசையிலுள்ளது. அது மூன்று பெருந்தீவுகளையும் வேறு பல சிறுத்தீவுகளையுங் கொண்டது. 1642 ல் நியூசிலாந்தை ரஸ்மன் (Tasman) என்பவர் கண்டுபிடித்தார். கப்ரின் குக் 1769 ல் அங்கு சென்றதன் பின்னரே குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டது. புதிய தென் உவேல்ஸின் தேசாதிபதியாயிருந்த சேர் எட்வேட் கிப்ஸ் (Sir Edward Gipps) என்பவர் 1839 ல் அதை ஆங்கிலருக்குரியதாக்கினர். அப்பால் அடுத்த இருபது வருடங்களாய் அநேக ஆங்கிலர் நியூசிலாந்தையடைந்து குடியேறினர். அங்கு வசித்த சுதேசிகளான மாஒறிஸ்

சாதியார் ஆங்கிலரை எதிர்த்து 1844—1848 ம் ஆண்டுகளுக்கிடையேயும் 1860—1871 ம் ஆண்டுகளுக்கிடையேயும் போர் பொருதினர். ஆனால் ஈற்றில் மா ஒறிச்சாதியார் ஆங்கிலேயருடன் சமாதானஞ் செய்துகொண்டனர். இப்போது அவர்களிலும் இராசபக்தியுள்ள பிரசைகளைப் பிரித்தானிய சக்கராதிபத்தியத்தில் காண்பதரிது. நியூசிலாந்து ஆங்கிலேயருக்கான சிறிது காலத்தில் முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்பட்டு, 1848 ல் பிரதிநிதித்துவ அரசியல்முறையும் அளிக்கப்பட்டது. 1852 ல் நியூசிலாந்து சுயஆட்சிப் பொறுப்பைப் பெற்றது. 1907 ல் ஓர் சுயராச்சியமாக்கப்பட்டது.

கனடா.

அமெரிக்க சுவாதீன யுத்தத்தில் ஐக்கியநாட்டினருடன் சேரவும் ஆங்கிலவரசினின்று பிரியவும் மனங்கொள்ளாத சில அமெரிக்கர் கனடா தேசத்தின் வடபாகங்களிலும் நோவாஸ்கோஷியாவின் ஓர் பாகத்திலுஞ் சென்று குடியேறினர். நோவாஸ்கோஷியாவை அவர்கள் நியூபிறன்ஸ்விக் (New Brunswick) என அழைத்தனர். கனடாவின் தென்பாகங்களில் வசித்தோர் பிரான்சியராவர். ஆங்கிலேயர் கனடாவை இருபகுதிகளாகப் பிரித்து வடபாகத்தை அங்கு வசித்த ஆங்கிலேயருக்கிணங்கவும் தென்பாகத்தை அங்கிருந்த

பிரான்சியருக்கிணங்கவும் ஆண்டுவந்தனர். ஆனால் இருசாதியாருக்குமிடையில் அநேக சச்சரவுகளேற்பட்டன. ஆங்கிலவரசாங்கத்துக்கும் கனடாவை ஆளுவதில் கஷ்டம் தோன்றியது. அதன்பின் லோட் டேர்காம் (Lord Durham) என்பவரைத் தலைமையாகக் கொண்ட ஓர் விசாரணைச்சபை கனடாவுக்கு அனுப்பப்பட்டது. அச்சபை கனடாவின் இருபகுதிகளையும் ஒன்றுசேர்க்க வேண்டுமென்றும் கனடியருக்குப் பொறுப்பாட்சி கொடுக்கப்பட வேண்டுமென்றும் அந்த ஆட்சியை அவர்கள் சனங்களாற் தெரியப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் பாராளுமன்றத்தால் நடாத்த வேண்டுமென்றும் அறிக்கையிட்டது. இந்த அறிக்கையின்படி 1840ல் கனடாவுக்குப் பொறுப்பாட்சியளிக்கப்பட்டது. நியூபவுண்லாந்து, நியூபிறன்ஸ்விக், நோவாஸ்கோஷியா முதலிய குடியேற்றநாடுகளும் சில வருடங்களில் சுயராச்சியங்களாயின. 1867ம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டப்படி கனடாவோர் ஐக்கிய ராச்சியமாக்கப்பட்டது. 1878ம் ஆண்டளவில் நியூபவுண்லாந்து நீங்கலாக ஏனைய பிரித்தானிய வட அமெரிக்க மாகாணங்களனைத்தும் ஐக்கியராச்சியத்துடன் சேர்க்கப்பட்டன. நியூபவுண்லாந்து இன்றுமோர் சுயராச்சியம் பெற்ற குடியேற்ற நாடாயிருக்கின்றது.

அயர்லாந்தின் இஷ்டநாடு.

அயர்லாந்து அநேக நூற்றாண்டுகளாக ஒற்றுமையற்ற சிற்றரசு நாடுகளை யுடையதாக விருந்தது.

நோர்மானியர் இங்கிலாந்தைக் கைப்பற்றியபோது (1066) அயர்லாந்துக்குஞ் சென்று சுதேசவரசரை வென்று தேசத்தைத் தமதாக்கினர். ஆயினும் நோர்மன் அரசர் தம் அதிகாரத்தை அயர்லாந்தில் நாட்ட முயற்சிக்கவில்லை.

மார்க்க சீர்திருத்தகாலங்களில் அயர்லாந்து வாசிகள் புதிய புரொட்டெஸ்தாந்து மதத்தை ஏற்க மறுத்து நின்றனர். ஸ்பானியர், பிரான்சியர் ஆகிய பிறசாதியாரும் அயர்லாந்தைக்கைப்பற்ற எத்தனித்தனர். இக்காரணங்கள்பற்றி ஆங்கிலவரசர் ஆங்கு அதிகாரஞ் செலுத்த எண்ணங்கொண்டனர். எலிசபேத் ராணி, மேற்கூறிய நோக்கங்கள்பற்றி, அயர்லாந்தின் பல வகுப்பினரையும் அடக்குவதற்கென வோர் சேனையை யனுப்பிவைத்தாள். அது பலிக்கவில்லை. ஆதலால் ஆங்கிலேய புரொட்டெஸ்தாந்தரையும் ஸ்கொற்றிய புரொட்டெஸ்தாந்தரையும் அனுப்பி அயர்லாந்திற் குடியேற்றஞ் செய்ய முயற்சித்தாள். குடியேறச் சென்றோர் அயர்லாந்துக் கத்தோலிக்கரை நெருக்கி அவர்களின் தோட்டங்களையேனும் கமங்களையேனும் பறித்தெடுத்துக்கொள்ள முடியவில்லை.

சில வருஷங்களின் பின் ஆங்கிலேய புரொட்டெஸ்தாந்தரும் ஸ்கொற்றிய புரொட்டெஸ்தாந்தரும் வடபாகம் சென்று கைத்தொழில்முயற்சிகளில் ஈடுபட்டனர். தெற்கிலும் மேற்கிலும் அயர்லாந்துக் கத்தோலிக்கர் கமத்தொழில் செய்துவந்தனர்.

1690ல் பிரான்சியவரசன் 14ம் லூயிஸ் (Louis XIV) ஓர் சேனையை அயர்லாந்துக்கு அனுப்பியபோது தென்பகுதியினர் சேனையின் சார்பாக நின்று வடபகுதியினரைத் தாக்கினர். இத்தருணத்தில் ஆங்கிலேய மன்னன் மூன்றும் உவில்லியம் (William III) பிராஞ்சிய சேனையைத் துரத்தி வட பகுதியினரை மீட்டான். வட தென் பகுதிகட்கிடையே தோன்றிய ஒற்றுமையின்மை இவ் யுத்தத்தினால் அதிகரித்தது.

1801ல் இங்கிலாந்து, ஸ்கொத்திலாந்து, உவேல்ஸ் என்பவற்றின் ஐக்கிய ராச்சியத்துள் அயர்லாந்தும் இணைக்கப்பட்டு அயர்லாந்துப் பிரதிநிதிகளும் பாராளுமன்றத்திற் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். ஐக்கிய ராச்சியத்தினின்றும் பிரிந்து சுயராச்சிய நாடாகவேண்டுமென்பது அக்காலந்தொடக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதும் அயர்லாந்தின் ஓர் பகுதியாரின் எண்ணமாயிருந்தது. மகா யுத்தகாலத்தில் (1916) "ஸின்வேன்" என்ற நாமங்கொண்ட (இச்சொல்லுக்கு "நாங்கள்" என்பது அர்த்தம்) ஓர் சபை அயர்லாந்தில் புரட்சிசெய்தது. உடனே இப்புரட்சி அடக்கப்பட்டதாயினும் மகா யுத்தத்தின்பின் மறுபடியும் உண்டானது. ஈற்றில் 1921ம் ஆண்டில் தென் அயர்லாந்து சுவாதீனமடைந்து, "அயர்லாந்தின் இஷ்டநாடு" என்ற பெயருடன் ஐக்கிய ராசாங்க நாடுகளின் நிலைமையைப் பெற்றது. வட அயர்லாந்து பிரித்தானிய ஐக்கிய இராச்சியத்துடன் சேர்ந்துகொண்டது.

இந்தியா.

சேனைக் கலகத்தின் பின் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தினின்று இந்தியாவை ஆளும் பொறுப்பு முற்றாக எடுக்கப்பட்டது. இந்தியா பேரரசாங்கத்தின் நேராளுகைக்குட்பட்டது. முந்திய மகா தேசாதிபதியினிடமாக வைஸ்றோய் (Viceroy) ஒருவர் விக்றோறியா இராணியால் நியமிக்கப்பட்டனர். வர்த்தக கொம்பனியின் இராசாங்க உத்தியோகஸ்தரும் பட்டாள உத்தியோகஸ்தரும் இராணியின் சேவையிலமர்ந்தனர். வியாபார விஷயத்தில் எவர்க்கும் இஷ்டம் கொடுக்கப்பட்டது. இராணியும் இந்திய சக்கரவர்த்தினியெனப் பட்டஞ் சூடினாள் (1879). இந்தியவரசரும் இளவரசரும் இம் மாற்றங்களால் பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர்.

இக்காலந் தொடக்கம் இந்திய வைஸ்றோய்கள் நல்லாட்சியையே இலக்காகக்கொண்டு அரசு நடத்தினர். முதலாம் வைஸ்றோய் லோட் கன்னிங் என்பவர் அநேக திருத்தப்பாடுகளைச் செய்துவைத்தார். தண்டநீதியொன்றும் நீதிவிசாரணைக்கான மேற்கோடுகளும் கல்குத்தா, பம்பாய், சென்னை முதலாம் பட்டினங்களில் சர்வகலாசாலைகளும் இவரால் ஸ்தாபிக்கப்பட்டன. லோட் மேயோ (Lord Mayo 1869—1872) என்பவர் இந்திய சுதேசவரசருக்கும் ஆங்கிலேய வரசாங்கத்துக்குமிடையே நெருங்கிய ஐக்கியமுண்டாகச்செய்தார். அரசாட்சியார் பொறுப்பில் புகையிரதப் பாதைகளைத் திறந்தார்.

மாகாணங்களுக்கு ஓர்வித பொறுப்பாட்சியுமளித்தார். லோட்லிற்றன் (Lord Lytton 1876—1880) என்பவர் றாஷியருக்கு நட்புக்காட்டி நின்ற ஆபுகானிஸ்தான் அரசனையகற்றுவதற்கோர் சேனையை யனுப்பினார். லோட் றிப்போன் (Lord Ripon 1880—1884) என்பவர் 1883ல் நகரபரிபாலனசங்கம் போன்ற தல ஆட்சி ஸ்தாபனங்களைத் தொடக்கி, உத்தியோகஸ்தரல்லாத இந்தியரும் தேச ஆட்சி விஷயத்தில் பங்குபற்றச் செய்தார். டவ்வறின் பிரபு (Lord Dufferin 1884—1888) றாஷியர் ஆபுகானிஸ்தானுக்குப் படையெடுத்துச் செல்வதைத் தடுத்தார். மேல் பர்மா இவர் காலத்திலேயே இணைக்கப்பட்டது. லோட் கேர்சன் (Lord Curzon 1899—1905) என்பவர் கல்வி, கிருஷிகம், கைத்தொழிலாதியாம் துறைகளில் முன்னேற்றத்துக்கு வழி திறந்தார்.

இந்தியாவின் நன்மை கருதி வைஸ்றோய்கள் அரசு நடத்திவந்த இக்காலங்களிற்றானே தேச மக்களின் அதிருப்தியும் வளரத் தொடங்கியது. இந்தியர் 1833ம் ஆண்டு தொடக்கம் அரசாங்க உத்தியோகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டு வந்தாலும், றிப்போன் பிரபுவினால் ஆரம்பிக்கப்பட்ட தலஆட்சி முறையின்படி தங்கள் கருமங்களை நடாத்தப் படித்ததாலும், தேசாட்சிவிஷயத்திற் கூடினபங்கும் பதவியும் பெற முயற்சித்தனர். அவர்களுள் கல்வியறிவில் மேம்பட்டவர்களின்

உழைப்பினால் 1885ல் "இந்தியதேசமக்கள் மகாசபை" (Indian National Congress) ஸ்தாபிக்கப்பட்டது. மகாசபை வருடாந்தம் நடைபெற்றுவருகின்றது. மகாசபையின் தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும் அதிகாரிகளும் ஆங்கில பாராளுமன்ற அங்கத்தவரும் கவனிக்கத் தொடங்கினர், முஸ்லீம்களின் ஐக்கியசபையும் மகாசபையோடு ஒத்துழைத்தது. மகாசபையின்முயற்சிகளால் காலத்துக்குக் காலம் இந்திய சட்டசபைகளும் ஆங்கில வைஸ்ரேய்களின் அரசியல் நோக்கங்களும் மாற்றமடைந்து திருத்தப்படலாயின. கடைசியாக ஆங்கில பாராளுமன்றத்தில் இந்திய மந்திரியாயிருந்த மெஸ்மொன்ரேகு (Mr. Montagu) என்பவர் 1917ல் இந்தியாவுக்குச் சென்று அங்கே வைஸ்ரோயாயிருந்த லோட்செம்ஸ்வோட் (Lord Chelmsford) என்பவருடன் ஆலோசித்து, ஆட்சிமுறைத் திருத்தங்களைத் திட்டஞ்செய்தார். இதன் பேறாக, கல்வி, கைத்தொழில், நகரசங்க ஆட்சிமுறை முதலிய துறைகளில் இந்தியருக்குப் பூரண பொறுப்பாட்சிச் சுதந்தரம் கொடுக்கப்பட்டது. தனபரிபாலனம், நீதிவிசாரணைபோன்ற கருமங்கள் பேரரசாங்கத்தின் பொறுப்பிலேயே விடப்பட்டன.

இத் திருத்தங்கள் போதியனவல்லவென்றும் பூரண சுய ஆட்சி யளிக்கப்படவேண்டுமென்றும் இந்திய மேதாவிகள் அநேகாண்டுகளாக வாதாடுகின்றனர். சத்தியாகிரகம், ஹர்தல், கதர்நெசவு

முதலிய துறைகளைக் காலந்தோறும் வகுத்து, தேசாபிமானத்தையும் தேச கைங்கரியத்தையும் விருத்தி செய்து வருகின்றனர்.

இந்தியாவின் விஸ்தாரமும், குடிசன நெருக்கமும், சாதிசமயங்களின் தொகையும் இந்தியா ஓர் சுயராச்சியமாவதற்குப் பெரும் தடைகளாயிருக்கின்றன.

ஏனைய குடியேற்ற நாடுகள்.

அமெரிக்க குடியேற்ற நாடுகள் உட்டணமண்டலத்திலுள்ளவை, இங்கே கரும்பு, பருத்தி, புகையிலை முதலியன விளைவிக்கப்படுகின்றன. ஒரு சில ஐரோப்பியரும் அடிமை நிலைமையினின்று மீட்கப்பட்டோரின் சந்ததியாரும், வேறு கலப்புச் சாதிகளும் இங்கே வசிக்கின்றனர். மிகச் சிறிய தீவுகள் பாராளுமன்றத்தால் நியமிக்கப்படும் அதிகாரிகளால் ஆளப்படுகின்றன. ஏனைய தீவுகளில் பிரதிநிதித்துவ அரசாட்சிமுறை நடைபெறுகின்றது.

ஆபிரிக்க குடியேற்ற நாடுகளுட் சிலவற்றில் வசிப்போர் சீர்திருத்தம் குறைந்தவர்கள். அவர்கள் ஆங்கிலரின் கண்காணிப்பின் கீழுள்ள சுதேச தலைவரால் ஆளப்படுகின்றனர். கெனியா, ரொடேசியா முதலியவிடங்களில் ஐரோப்பியரும், இந்தியரும், அராபியரும் காணப்படுகின்றனர்.

சட்டசபைகளுக்குத் தம் பிரதிநிதிகளைத் தெரிந்தனுப்பும் உரிமை அவர்களுக்கு உண்டு.

ஆசிய குடியேற்ற நாடுகளுள் இலங்கையைப் பற்றிய சரித்திரம் வேறு அதிகாரங்களில் கூறப்பட்டது. தொடுவாய்ப்பகுதி இந்திய அரசாங்கத்தினின்று பிரிக்கப்பட்டு, 1867 ல் முடிக் குடியேற்ற நாடானது. ஹொங்கோங் 1842 ல் ஆங்கிலருக்களிக்கப்பட்டது. இவையிரண்டும் ஒவ்வோர் தேசாதிபதியால், தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சபையின் உதவியுடன் ஆளப்படுகின்றன.

பசுபிக்சமுத்திரக் குடியேற்ற நாடுகள் சீர்திருத்தத்தில் மிகக் குறைந்தவை. இவை பேரரசாங்கத்தாலனுப்பப்படும் உத்தியோகஸ்தரால் ஆளப்பட்டுவருகின்றன. சறவாக் 1841 ல் போர்னியோ அரசனால் யேம்ஸ் புறாக் (James Brooke) என்னும் ஆங்கிலேயனுக்குக் கொடுக்கப்பட்டது அவன் சந்ததியாரால் இது தற்போதும் ஆளப்படுகின்றது. 1888 ல் சறவாக்கின் பிறதேச கருமாதிகாரத்தை அரசன் ஆங்கிலருக்குக் கையளிக்கவும் சக்கராதிபத்தியத்திற் சேரவும் உடன்பட்டான்.

13 ம் அதிகாரம்.

ஐரோப்பா: மகா யுத்தத்துக்குப் பிந்திய காலம்.

உலகப் பெரும் போரினாலே இடாம்பீக மன்னரின் ஆட்சி மிகவும் நீடித்திருந்த அவுஸ்திரிய, றூஷிய, துருக்க, ஜேர்மனியச் சக்கராதிபத்தியங்கள் நான்கும் சிதைவடைந்தன. இவற்றுளெல்லாம் மிகவும் புராதனமான அவுஸ்திரிய சக்கராதிபத்தியம், செக்கிய, சேர்விய, ஹங்கேரிய, அவுஸ்திரிய நாடுகளெனப் பல தேசிய உணர்ச்சிபெற்ற புது நாடுகளாகப் பிரிந்துபோயிற்று. இந்த நாடுகளும் போலாந்து, லித்துவேனியா, லற்வியா, எஸ்தோனியா, பின்லாந்து என்பனவும் குடியரசுகளாயின. ஒரு சில தேசங்களில் மாத்திரம் இன்னமும் முடியரசு நிலைத்திருந்தது.

புதிதாகத் தோன்றிய குடியரசுகள் சிலவற்றில் உண்மையான குடியரசு முறை பின்பற்றப்படவில்லை. கிறீஸ் ஓர்காலம் குடியரசு முறையாகவும் இன்னோர் காலம் சர்வாதிகாரியாலும் ஆளப்பட்டது (1924—1935). பல்கேரியாவில் மந்திரியொருவன் அதிகாரம் முழுவதையும் தனதாக்கி, நாட்டைத் தனித்தாள முற்பட்டான். ஹங்கேரியும் (1919) போலாந்தும் (1926) சர்வாதிகாரிகளின் ஆட்சிக்குட்பட்டன. றூஷியாவி லேற்பட்ட

குடியரசு முறை சிறிது காலத்தில் மாற்றமடைந்து அங்கேயும் சர்வாதிகார ஆட்சி தொடங்கியது. 1922ல் இத்தாலி பெனிற்ரோ முசோலினியைச் (Benito Mussolini) சர்வாதிகாரியாக ஏற்றுக் கொண்டது. அடோல்வ் ஹிற்லர் (Adolf Hitler) 1934ல் ஜேர்மனியின் சர்வாதிகாரியானுன்.

றாஷியா.

இரண்டாம் நிக்கொலஸ் மன்னன் அரசபதவியை விட்டு நீங்கியபின் ஸ்தாபிக்கப்பட்ட குடியரசுக்குத் தலைவனாக ஜோர்ஜ் ல்வொவ் (George Lvov) இளவரசன் தெரியப்பட்டான். இவன் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்ற எண்ணமுடையவனுயிருந்தான். சனங்கள் இதற்கு மாருக நின்றனர். ல்வொவ் சனங்களுக்குத் தலைவனுயிருந்த கெறென்ஸ்கி (Kerensky) என்பவனின் துணையைப் பெற்றுன். கெறென்ஸ்கி சர்வாதிகாரியாவதற்குத் தெண்டித்ததால் தேசத்திற் திரும்பவும் புரட்சியுண்டானது. பொல்ஷெவிக் கட்சியார் இப்போ செல்வாக்கடைந்தனர். லீயோ ரிறெுஸ்கி (Leo Trotsky), நிக்கொலஸ் லெனின் (Nicholas Lenin) என்பவர்கள் பொல்ஷெவிக் கட்சியின் தலைவரானுர்கள். இவர்களுடைய நோக்கங்கள் பின்வருமாறு: i. ஜேர்மனியோடு சமாதானஞ் செய்தல், ii. தொழிலாளிகள் வல்லபமடையச் செய்தல், iii. தேச முன்னேற்றத்துக்கான

திருத்தங்கள் செய்தல், iv. பிறதேசங்கள் றாஷியாவோடு தொடர்புறுது தடுத்தல். இருவரும் அதிகாரிகளாயிருந்த காலத்தில் ஜேர்மனியோடு சமாதானஞ் செய்யப்பட்டது. றாஷியாவினின்று பிரிந்த நாடுகள் சுதந்தரம் பெற்றன. தேசத்தில் ஊழியஞ் செய்தல் கட்டாயமானது. நிலங்கள், புகையிரதங்கள், தொழிற்சாலைகள், பாடசாலைகள், சுரங்கங்கள் முதலியவை அரசாங்கத்தால் பறித்தெடுக்கப்பட்டன. மொஸ்கோ தலைநகரமானது. கத்தோலிக்க சமயத்தவர்கள் நெருக்கிடை செய்யப்பட்டனர். உலகம் முழுவதற்கும் கொம்மியூனிஸ்த கொள்கையைப் பரப்பவேண்டுமென்ற தீர்மானம் ஏற்பட்டது.

1924ல் லெனின் இறந்துபோக, பெற்றிறேகிருட் பட்டினம் அவன் நாமத்தைப் பெற்று லெனின்கிருட் என்றழைக்கப்பட்டது. யோசெவ் ஸ்தாலின் (Joseph Stalin) என்பவன் 1928ல் கொம்மியூனிஸ்த றாஷியாவின் தலைவனுனன். இவன், தேசத்தின் பொருளாதார நிலையைப் பெருக்கும் நோக்கமாக, ஐந்து வருடத்திட்டமொன்றைத் தயாரித்தான். கமத்தொழிற் பெருக்கத்துக்கும் கைத்தொழில் விருத்திக்கும் வேண்டியன செய்யப்பட்டன. இரண்டாம் முறையும் 1933ம் ஆண்டில் இன்னேர் ஐந்து வருடத்திட்டம் ஆக்கப்பட்டது.

றாஷியாவில் கைத்தொழிற்சாலைகளும் கைத்தொழிற் பொருட்களும் அதிகரித்து வருகின்றன. புதிதாகத் திறக்கப்பட்ட பாடசாலைகளில், பள்ளிச்சிறாருக்கு எண், எழுத்து, முதலிய கருவிப்பாடங்களும் தொழிற்பயிற்சிகளும் படிப்பிக்கப்படுகின்றன. கொம்மியூனிஸ்த கொள்கைகள் இங்கேயே யூட்டப்படும். உலகின் எல்லாத் தேசங்களிலும் கொம்மியூனிஸ்த கொள்கைகள் பரவச் செய்வதற்கான முயற்சிகளும் செய்யப்படுகின்றன.

கொம்மியூனிஸ்தர் எனப்படுவோர் இக் கொள்கையை ஆதரிப்போர். தேசத்திலுள்ள உயர்ந்த, மத்தியவகுப்பினரைப் பயங்கர ஆட்சியால் அடக்குவதும், கூடியதொகையினரான தொழிலாளராற் தெரிவுசெய்யப்பட்ட தலைவரால் ஆளப்படுவதும், சனங்களின் பொருட்களையும் உழைப்பையும் தேசத்தின் பொதுவுடமையாக்குவதும், எவ்வித சமயக் கொள்கைகளையும் ஏற்காதிருத்தலும் இவர்களின் பிரதான நோக்கங்களாகும்.

இத்தாலி.

மகா யுத்தத்தில் பிடிக்கப்பட்ட நாடுகளில் இத்தாலிக்குப் பங்கு கிடைக்கவில்லை. யுத்தத்தினாலேற்பட்ட கடன் அதிகமாயிருந்தது. சனங்கள் சீவிப்பதற்குக் கஷ்டப்பட்டனர். தொழிற் சாலைகளிற் குழப்பங்கள் உண்டாயின. தேசத்தின் நிலைமையைத் திருத்துவதற்கு அரசாங்கத்துக்கு

யாதுபெலனுமிருக்கவில்லை. இத்தருணத்தில் இளைஞரும், யுத்தத்திற் பங்குபற்றியோரும், தொழிலாளரும், கமக்காரரும் பெனிற்றோ முசொலினி என்னும் ஒருவனைச் சேர்ந்தனர். அவனுடைய கொள்கைகளை ஆதரித்தனர். அவன் தேசியக் கட்சியொன்றை ஸ்தாபித்து, அதிலுள்ளோர் கறுத்தச்சட்டையையணியவும், தேசாபிமானத்தை வளர்க்கவும், யுத்தப்பயிற்சிபெறவுஞ் செய்தான். இக்கட்சி தொகையிலும் பலத்திலும் வளர்வுற்றது. ஓர்முறை முசொலினி இவர்களை றோம் பட்டினத்துக்கூடாக நடத்திச்சென்றான். அத்துடன் அரசன், அரசாங்கத்துக்கு மோசம் வரக்கூடுமென்றஞ்சி, அவனைத் தன் மந்திரியாக்கினான். பாராளுமன்றம் அவனுக்குச் சர்வாதிகாரிக்குரிய அதிகாரத்தையுமளித்தது. இத்தாலி பாசிஸ்த தலைவனின்கீழ்ப்பட்டது. பாசிஸ்த கொள்கையின்படி, ஓர் தேசம் பயிற்றப்பட்ட சேனையின் உதவியோடும், கூடியதொகையினரின் சம்மதத்துடனும், அவர்களால் தெரியப்படும் அதிகாரியொருவனால் ஆளப்படும்.

சர்வாதிகாரியானதும், முசொலினி பத்திரிகைகள், பாடசாலைகள், சங்கங்கள், நாடகசாலைகள் என்பனவற்றைத் தனக்குச் சார்பாகநிற்கக் கட்டளையிட்டான். தேசமக்கள் யாவரையும் தன்னுடைய இரும்புபோன்ற சித்தத்துக்கு அமையச் செய்தான். உணவுப்பொருட்களை அதிகமாக விளை

வித்தற்கான ஒழுங்குகளைத் திட்டப்படுத்தினான். முதலாளி, தொழிலாளி, என்பவர்கட்கிடையிலுண்டாகும் சச்சரவுகளை நீக்குவதற்கான உபாயங்கள் கையாடப்பட்டன. தொழிற்சாலைகள் பற்றிய சட்டங்கள் திருத்தம் பெற்றன. 1870 ல் பாப்பரசரிடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட இராச்சியத்துக்குப் பதிலாக அவருக்கு வர்த்திக்கான் இராச்சியம் கொடுக்கப்பட்டது (1929).

பிராஞ்சியர், பிரித்தானியரின் உதவியோடு, முசோலினி ஆபிரிக்காவிற் சிலவிடங்களையும், யூகோசிலாவியவுடன் செய்துகொண்டவுடன்படிக்கையின்பேறாக, அதிரியாற்றிக் கடலிலுள்ள வியூம் (Fiume) துறைமுகத்தையும் பெற்றான். அபிசீனியாவை அநீதியானமுறையில் அடிப்படுத்தினான். தற்போது ஜெர்மனியுடன் சிநேகம் பாராட்டிவருகின்றான். இத்தாலி குடியேற்றநாடுகளையுடைய ஐரோப்பிய வல்லரசாயிருக்கவேண்டுமென்பது முசோலினியின் பேராசை.

ஜேர்மனி.

இரண்டாம் உவில்லியம் மகா யுத்த முடிவில் ஒல்லாந்துக்குச் செல்லவே, ஜேர்மனியில் குடியரசு முறை ஸ்தாபிக்கப்பட்டது. தேசீயக் கட்சியைச் சேர்ந்த ஈபேட் (Ebert 1919—1925) என்பவன் தலைவனானான். இவன் காலத்திலும் இவனுக்

குப்பின் தலைவனான வொன்ஹின்டன்பேக் (Von Hindenburg (1925—1932) என்பவன் காலத்திலும் ராசாங்கம், தேசத்திற் றோன்றிய கொம்மியூனிஸ்த கட்சியினதும், அரச கட்சியினதும் எதிர்ப் பிரயத்தனங்களை மடக்குவதிலும் தேச நிலைமையைத் திருத்துவதிலும் கவனத்தைச் செலுத்தியது. 1931-ம் 1932-ம் ஆண்டுகளில் மற்றும் தேசங்களிற்போலவே, ஜேர்மனியிலும் வர்த்தகம் குறைவுற்றது. இவ்வேளையில் நாஸ்திகக் கட்சி வலிமை பெறவே, அதன் ஸ்தாபகனான ஹிற்லர் வொன் ஹின்டன்பேக் என்பவனால் குடியரசுத் தலைவனாக நியமிக்கப்பட்டான். இவன் அரசாங்க சபைகளின் அதிகாரத்தைத் தனக்குரியதாக்கி ஆட்சி நடத்திவந்தான். வொன் ஹின்டன்பேக்கின் மரணத்தின்பின் (1934) ஹிற்லர் ஜேர்மனியின் சர்வாதிகாரியானான்.

சர்வாதிகாரியானபின், ஹிற்லர் தன்னையெதிர்த்துநின்ற கட்சிகளை யடக்கினான். படக்காட்சிச் சாலைகள், புதினப்பத்திரிகைள், பாடசாலைகள் முதலியவை நாஸ்திக மேற்பார்வைக்குட்பட்டன. யூதர் ஜேர்மனியினின்றும் துரத்தப்பட்டனர். கிறீஸ்தவர்களின் சமய சுயாதீனம் அழிக்கப்பட்டது. வியாபார சங்கங்கள் குலைக்கப்பட்டன. சர்வதேச சங்கத்தினின்றும் ஜேர்மனி நீங்கியது. ஹிற்லர், வேர்சேல்ஸ் உடன்படிக்கையிற் செய்துகொள்ளப்பட்ட ஒழுங்குகளாற் கட்டுப்பட

மறுத்து, யுத்த நஷ்ட ஈடு கொடுப்பதையும் நிறுத்தினான். ஜேர்மனியில் முதற்றரமான கடற் தரைப் படைகளையும் ஆகாயப் படையையும் வைத்திருக்க முயற்சிகள் செய்தான்.

சார் (Saar) பள்ளத்தாக்கு 1934ல் திரும்பவும் ஜெர்மனிக்கானது. அவுஸ்திரியா ஆச்சரியத்தக்குரிய விதமாக யாது யுத்தமுமின்றி 1938ல் நாஸ்திக சர்வாதிகாரியால் கைப்பற்றப்பட்டது. அவ்வாறே செக்கேசிலவாக்கியாவின் சுடெற்றன் பகுதி சென்றவருடத்திலும் (1938, புரட்டாதி) பொகிமியா, மொறேவியா இவ்வாண்டின் பங்குனி மாதத்திலும் ஹிற்லரால் பிடிக்கப்பட்டன. ஜேர்மனியின் இராச்சியப் பெருக்கம் எவ்விதம் முடிவாகுமோ? பண்டைய பரிசுத்த றோமானிய சக்கராதிபத்திய நாடுகளைத் தன்னாணைக்குட்படுத்துவதும் மகா யுத்தத்தில் ஜேர்மனி இழந்த குடியேற்ற நாடுகளைத் திரும்பவும் கைப்பற்றுவதும் ஹிற்லருடைய பேரெண்ணமாயிருத்தல் கூடும்.

முற்றிற்று.

பயிற்சி வினாக்கள்.

I

1. பத்தொன்பதாம் நூற்றாண்டிலேற்பட்ட புரட்சிகளெவை?
2. கைத்தொழிற் பெருக்கத்தினாலுண்டான மாறுதல்களை ஒவ்வொன்றாக விளக்குக.
3. இலங்கை ஒல்லாந்தரின் ஆளுகையாலடைந்த பயன்களெவை?
4. பிலாமையின் சரிதையைச் சுருக்கமாக எழுதுக
5. இந்தியாவில் ஆங்கிலராட்சியைப் பெலப்படுத்திய இரு தேசாதிபதிகளின் ஆட்சியை விபரிக்குக.
6. இத்தாலி ஒற்றுமை பூண்ட தேசமாவதற்கு (a) மஸ்ஸினி, (b) கரிபால்டி, (c) கவூர், என்பவர்கள் செய்தவற்றை விரிவாகக் கூறுக.
7. பிஸ்மார்க் நடத்திய யுத்தங்கள் எவை? அவை எவ்வெவ் நோக்கங்களுக்காக நடத்தப்பட்டன?
8. சர்வதேச சங்கம் என்ன நோக்கத்துக்காக ஸ்தாபிக்கப்பட்டது?
9. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சீனாவில் ஏற்பட்ட மாறுதல்களெவை?
10. இலங்கை ஆங்கிலர் ஆட்சியால் எவ்வித முன்னேற்றமடைந்தது? நியாயங் கூறுக.

II

1. அமெரிக்கர் சுவாதீனமடைந்த தெவ்வாறென் பதை விவரிக்க?

2. கண்டியரசனேடு ஆங்கிலர் யுத்தத்துக்கெழுந்த காரணம் யாது?

3. இலங்கையின் அரசியற் சபையின் வகுத்தல், ஆற்றல், அதிகாரம் என்பனவற்றை விளக்குக.

4. உலகப் பெரும்போரின் காரணங்களெவை?

5. யப்பானின் சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறுக.

6. தென்னமெரிக்க குடியேற்ற நாடுகள் பேரரசுகளினின்று எவ்வாறு பிரிந்தன?

7. ஆங்கிலரின் ஆட்சியால் இந்தியா வடைந்த நயன்கள் எவை?

8. பிரித்தானிய சக்கராதிபத்தியத்தினுளடங்கிய நாடுகள் எவை?

9. ஜேர்மனியின் தற்போதய நிலைமையைப் பற்றிச் சுருக்கமான கட்டுரையொன்றுவரைக

10. வேர்சேல்ஸ் உடன்படிக்கையைப்பற்றி யாது அறிவீர்?

III

1. கீழ்க்காணும் ஒவ்வொன்றையும்பற்றி நீர் யாது அறிவீர்:—பேர்லின் கட்டளைகள், பயங்கர ஆட்சி, செடான், கண்டிக்கலகம், இந்தியசேனைக்கலகம்.

2. கி. பி. 1796 தொடக்கம் 1850 வரையுமுள்ள உலக, இலங்கைச் சரித்திர சம்பவங்களை அட்டவணைப்படுத்துக.

3. ஜேர்மனிய நாடுகள் ஒன்றித்தற்கு பிஸ்மார்க் எவ்வித துணைச்செய்தான்.

4. பிரித்தானிய சக்கராதிபத்தியத்தில் அமைந்த நாடுகளின் ஆட்சிமுறையை விளக்குக.

5. இலங்கையில் போக்குவரவு வசதிகள் எத்தேசாதிபதியால் முதன் முதல் செய்யப்பட்டன. அவர்கால வேறுதிருத்தங்கள் கூறுக.

6. இத்தாலியின் தற்போதய சர்வாதிகாரியின் ஆட்சியைப்பற்றி யாது அறிவீர்

7. ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் கண்டியை அரசு செய்தமுறையை விவரிக்க.

8. கோண்வாலிஸ், உவெல்லெஸ்லி, கன்னிங் தேசாதிபதிகளின் இந்திய ஆட்சியை விவரிக்க.

9. வியென்னச்சங்கம் ஐரோப்பாவை என்ன நிலைமைக்கு மாற்றியது? எப்படி?

10. றாஷியாவில் 1917ம் ஆண்டு ஏற்பட்ட புரட்சியின் காரணங்களைக் கூறுக.

IV

1. நெப்போலியனுடைய குணதிசயங்களையும், வீரச்செயல்களையும், யுத்தங்களையும் விரிவாக எடுத்துக்காட்டுக.

2. அமெரிக்காவில் அடிமை ஆட்சி எவ்வாறு நீக்கப்புட்டது.

3. பதினாரும் நூற்றாண்டுதொடக்கம் இன்றுவரையுள்ள சீனாவின் சரித்திரத்தைச் சுருக்கியெழுதுக.

4. இத்தாலியின் பூர்வ இராச்சியங்களைக் காட்டும் படமொன்றுவரைக.

5. இலங்கையில் கல்விவளர்ச்சி சம்பந்தமாகத் தேசாதிபதிகளால் எவையெவை செய்யப்பட்டன.

6. சென்ற 150 ஆண்டுகளில் இலங்கையில் நடைபெற்ற விசேஷ சம்பவங்களுள் பத்தைத் தெரிந்து அவற்றைக் காலஒழுங்கின்படி நிரைப்படுத்துக.

7. ஆபிரிக்காவில் ஐரோப்பியர் குடியேறிய வரலாற்றைக்கூறுக.

8. பிரான்சில் அரசியற்புரட்சி ஏற்பட்டதன் காரணங்களை ஆராய்க.

9. ஆபிரகாம் லிங்கன், இரண்டாம் உவில்லியம் சேர் ஹென்றி உவாட் என்பவர்களைப்பற்றிய சுருக்க குறிப்புகள் அமைக்க.

10. கி. பி. 1796ம் ஆண்டுக்கும் 1889ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட இலங்கை, இந்திய சரித்திர சம்பவங்களை ஒப்பிட்டு நோக்குக.

V

1. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் அதன்பின்னும் உலகின் போக்குவரவு வசதிகள் எவ்வித மாற்றமடைந்தன.

2. நெப்போலியனுடைய யுத்தங்களைக் காட்டும் படமொன்றுவரைக.

3. 1815ல் ஆங்கிலர் இலங்கையைக்கைப்பற்றிய போது என்ன நிபந்தனைகள் செய்யப்பட்டன.

4. கிறீஸ் சுயவரசான வரலாற்றைக்கூறுக.

5. றூஷியாவில் பொல்ஷெவிக்கரின் ஆட்சி எவ்விதம் தொடங்கியது. எவ்வாறு நடைபெறுகின்றது?

6. தென்னாபிரிக்க ஐக்கியராச்சியத்தின் சரித்திரத்தைச் சுருக்கியெழுதுக.

7. இலங்கையில் கோப்பி, தேயிலை, றபர் என்பன வளர்த்தல் எவ்வெக்காலங்களில் எவ்வாறு தொடக்கப்பட்டது.

8. மகாயுத்தத்தில் (a) இங்கிலாந்து (b) அமெரிக்கா பங்குபற்றிய காரணங்கள் எவை?

9 1833ல் ஸ்தாபிக்கப்பட்ட பிரமாணதிதிசபை பிற்காலங்களில் எவ்விதமாற்றமடைந்தது.

10. குடியேற்றநாடுகள் பிடிக்கும் விஷயமாக ஐரோப்பிய தேசங்களுக்கிடையே யேற்பட்ட பிணக்குகளையும் சமாதானங்களையும் விவரிக்க.

VI

1. உமது அபிப்பிராயத்தின்படி இந்தியாவின் சரித்திரத்தில் பிரதான விஷயங்கள் எவை?

2. கிருஷிக வளர்ச்சி நோக்கி ஆங்கிலர் காலத்தில் இலங்கையிற் செய்யப்பட்டுள்ளவற்றை விபரிக்குக.

3. நாஸ்திக, பாசிஸ்த, கொம்மியூனிஸ்த கொள்கைகளை விளக்குக. இக்கொள்கைகளை ஆதரிக்கும் தேசங்கள் எவை?

4. உலகப் போரின் பின் புதிதாகத் தோன்றிய இராச்சியங்கள் எவை?

5. அபிசீனியாவைப்பற்றி யாது அறிவீர்? இத்தாலியோடு ஐரோப்பிய தேசங்கள் யுத்தஞ் செய்யாததற்குக் காரணம் என்ன?

6. அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் வளர்ச்சியைப்பற்றிய சிறு குறிப்பு வரைக.

7. பிஸ்மார்க்கையும் முசொலினியையும் அவர்களின் ஆட்சி நோக்கி ஒப்பிடுக.

8. இரண்டாம் நிக்கொலஸ் என்பவன் ருஷியாவை எவ்விதம் ஆட்சி செய்தான்?

9. சீனாவில் பொக்சரால் எவ்வித திருத்தங்கள் வருவிக்கப்பட்டன?

10. 1830-ம் 1848-ம் ஆண்டுப் புரட்சிகளை விவரிக்க

VII.

1. 19-ம் நூற்றாண்டின் பல தேசங்களிலுந்தோன்றிய தேசீய உணர்ச்சிக்குக் காரணம் என்ன. இவ்வுணர்ச்சியால் ஏற்பட்ட மாறுதல்கள் எவை?

2. மின்ரோ, எலன்பரோ, டல்ஹவுசி என்னும் தேசாதிபதிகளின் ஆட்சிக்கால விசேஷசம்பவங்களைக் கூறுக.

3. இலங்கையில் நோர்த்மன்னவர் ஆட்சியாலுண்டான மாற்றங்களைக் குறிப்பிடுக.

4. மூன்றாம் நெப்போலியனைப்பற்றிய கட்டுரையொன்றுயெழுதுக.

5. ருஷியர் துருக்கியரை ஐரோப்பாவினின்று துரத்துவதற்கு முயற்சிகள்செய்த காரணங்களை ஆராய்க.

6. மகாயுத்தத்துக்குமுன் ஐரோப்பாவில் இரண்டு கட்சிகள் எப்படி உண்டாயின?

7. ஹொங்கொங், சறவாக், பலஸ்தீன என்பவற்றைப்பற்றி நீர் அறிந்ததைக் கூறுக.

8. அவுஸ்திரேலியா எப்படிக் குடியேற்றப்பட்டது. ஐக்கிய இராச்சியம் ஏற்பட்ட வரலாற்றை எழுதுக.

9. தூரகீழைத்தேசங்களின் பூர்வ சரித்திரத்தைப் பற்றி நீர் யாது அறிவீர்?

10. இந்தியா சுயராச்சியமாவதற்கு என்ன பிரயத்தனங்கள் செய்யப்படுகின்றன?

VIII

1. பத்தொன்பதாம் நூற்றுண்டிலே சீனத்திலும் யப்பானிலுமேற்பட்ட மாறுதல்களுக்குக் காரணமாயிருந்தவை இலங்கையிலும் மாறுதல்களை யுண்டாக்கின. இதனை ஆராய்க.

2. கண்டி இராச்சியம் தோன்றி மேலோங்கினமைக்கும், அது 1815ம் ஆண்டில் அழிந்தமைக்குமான காரணங்கள் எவை?

3. பிறவுண்றிக் மன்னர் காலத்தில் இலங்கையில் என்ன திருத்தங்கள் செய்யப்பட்டன?

4. இந்தியாவில் முதலாம், இரண்டாம் மருட்டிய யுத்தங்கள் எக்காரணங்களால் நிகழ்த்தப்பட்டன? முடிபுகள் கூறுக.

5. கனடா, நியூசிலாந்து, என்பவற்றின் சரித்திரத்தைச் சுருக்கியெழுதுக.

6. முடிக்குடியேற்றநாடுகள் எவை? அவை இப்பெயர்பெற்றகாரணம் என்ன?

7. பிரித்தானிய சக்கராதிபத்தியநாடுகளின் பொருளாதார நிலையை ஆராய்க.

8. முசோலினியை ஏன் யூலியஸ் சீசருக்கு ஒப்பிடலாமெனக் கூறுக.

9. சோவியெற், பொல்ஷெவிக், பொதுவுடமை— இவற்றை விளக்குக.

10. ஹிற்லர், ஸ்தாலின் என்னுமிருவரின் ஆட்சி முறைகளை ஒப்பிட்டு நோக்குக.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
8	25	விழித்துக்	விழித்துத்
21	10	எங்ஙனும்	எங்ஙணும்
64	25	யெழூப்பும்	யெழுப்பும்.
71	24	சேனை	சேனையை
77	25	நிறைவேற்ற	நிறைவேற
91	16	பொக்ஷாதிபனை	பொக்கிஷாதிபரை
95	12	துனைமக்களே	துரைமக்களே
99	10	ஆளுகைகயின்	ஆளுகையின்
99	13	காட்டினர்	காட்டின.
99	16	ஆழுகையின்	ஆளுகையின்
109	19	அவுஸ்திரியரோடு	அவுஸ்திரியரோடு
113	20	முடிபில்	முடிவில்
118	14	சாதிகளிலும்	சாதிகளுக்கும்
127	4	கொள்ளப்பட்ட.வை	கொள்ளப்பட்டன
137	15	பெனரிங்க்	பென்ரிங்க்
141	5	காடுகளும்	நாடுகளும்
149	10	பட்டணங்களூடாக	பட்டணங்களுக்கூடாக
150	15	பதிய	புதிய
152	26	முந்தியசபைக்குத் தேசாதி	இரு சபைகளுக்கும் தேசாதிபதி தலைவரானுர்.
156	14	குழப்பக்காரனின்	குழப்பக்காரரின்
190	4	19-ம் பத்தொன்பதாம்	(19-ம்)
211	10	கல்வியன்றி	கல்வியிலன்றி
221	14	வேண்டுமென்றும்	வேண்டுமென்று
227	21	கீழ்ப்பட் நாடட்டினர்	கீழ்ப்பட்ட நாட்டினர்
228	12	செலுத்துகின்றனர்	செலுத்துகின்றுர்
248	10	புரட்டாதி	புரட்டாசி

	1795	1805	18
இலங்கை	1798.....................1805 சங். "விறெடெறிக் நோர்த" (முதற் தேசாதிபதி) 1796 ஆங்கிலர் ஆட்சி தொடக்கமானது. 1797 கலகம் இராசாதி இராசசிங்கன் மரணம் 1798 இலங்கை ஆங்கிலவர சோடு சேர்க்கப்பட்டது ஸ்ரீவிக்கிரம ராசசிங்கன் அரசு 1799 சித்திரவதை நீக்கம். 1803 ஆங்கில வீரர்சங் காரம்.	1806.........1811 1812.......... சேர் "தோமஸ் சேர் "ரொபேட் மெயிற்லண்ட்" பிலாமை 1806 கடைவரி நீக்கம். 1812 யூரி பொலிஸ் விதானை மார் நியமனம் 1814 எ தெப்பக்குளம்.	..... பிற முடி மார் கே ச 181
ஐரோப்பா	1799 நெப்போலியன் பிரான்சிய வரசனுதல் எமியென்ஸ் உடன்ப. 1802 ரிறவல்கார் யுத்தம் 1805	1806 பேர்லின் கட்டளைகள் நெப். மொஸ்கோசெல்லல் 1812 லீப்சிக் யுத்தம் 1813 உவாட்டர்லூ யுத்தம் 1815 வியென்னு உடன்படிக்கை ,,	அ 10ம்
பிறதேசங்கள்	1795 மருட்டிய இராச்சியம் சிதைவுறல் 1798 லோட் உவெல்லெஸ்லி (இந்தியா)	நேர்பாள யுத்தம் 18i4	181 சிங் தெ

காலஅட்டவணை.

	1795	1805	1815	1825
	1798……………………1805	1806………1811 1812…………	……………1820……22……1824	……………………1831…… …
இலங்கை	சங். "விறெடெறிக் நோர்த" (முதற் தேசாதிபதி) 1796 ஆங்கிலர் ஆட்சி தொடக்கமானது. 1797 கலகம் இராசாதி இராசசிங்கன் மரணம் 1798 இலங்கை ஆங்கிலவரசோடு சேர்க்கப்பட்டது ஸ்ரீவிக்கிரம ராசசிங்கன் அரசு 1799 சித்திரவதை நீக்கம். 1803 ஆங்கில வீரர்சங்காரம்.	சேர் "தோமஸ் மெயிற்லண்ட்" சேர் "ரூபேட் பிலாமை 1806 கடைவரி நீக்கம். பொலிஸ் விதானைமார் நியமனம் தெப்பக்குளம். 1812 யூரி 1314 எ	பிறவுண்டிறிக்" முடிவு சேர். எட். பாண்ஸ் சேர். எட். பச் செற் மார் விளக்கம் கேலபலேக்குடும்ப சங்காரம் 1824 கா 1815 ஆங்கிலர் கண்டியை வெற்றிகொள்ளல் ஸ்ரீ. விக். ரா. சி. முடிவு 1816 வேலூர் வாசம் 817—18 கலகம்	சேர். "எட்வேட் பாண்ஸ்" சேர் "றபேட்" 1829 கத்தோலிக்கருககுச் சமய சுயாதீனம். ப்பிச்செய்கை. 1826 பெண். நீரிலாழ்த்தல் விலக்கம் 1832 கொழு. தபால் வண்டி. கொழும்பு வர்த்தமானி. 1833 கறுவாச் செய்கை 5 மாகாணங்கள். சுப்பிறிங், டிஸ்திறிக் கோடுகள். பிரமாணவிதி, திதி சபைகள். 1834 கலாவிர்த்திச்சங்கம்.
ஐரோப்பா	1799 நெப்போலியன் பிரான்சிய வரசனுதல் எமியென்ஸ் உடன்ப. 1802 ரிறவல்கார் யுத்தம் 1805	1806 பேர்லின் கட்டளைகள் நெப். மொஸ்கோசெல்லல் 1812 லீப்சிக் யுத்தம் 1813 உவாட்டர்லூ யுத்தம் 1815 வியென்ஞ உடன்படிக்கை "	அலிபாஷா கலகம் (கிறீஸ்) 1821 10ம் சாள்ஸ் பிரான்சியவரசன் 1824	புரட்சி வருடம் 1830 அல்பேட் இத். மன்னன் 1831 கிறீஸ் சுயவரசு 1832
பிறதேசங்கள்	1795 மருட்டிய இராச்சியம் சிதைவுறல் 1798 லோட் உவெல்லெஸ்லி (இந்தியா)	நேர்பாள யுத்தம் 1814	1817 பிந்தாரிச்சாதியர் தோர்வி சிங்கப்பூர் கைப்பற்றப்பட்டது 1819 தென்னமெரிக்ககுடியரசுகள் 1824	லோட் உவில். பென்ரிங் (இந்தியா) இந். அரசாங்க உத்தி. 1833.

கால அட்டவணை.

	1835	1845	1855	1865
	............1837............41.........	.........1847............50	1855.........1860.........1863	65.................. 1872..............
	கோட்டன். சேர். "கொலிங் சங். "ஸ்ருவாட் மெக்கன்சி."	கமெல்" லோட் சேர் "ஜோ 'ரொறிங்ரன்" ட்ஜ் ஆண் டேர்சன்"	சேர்'ஹென்றி "சாள்ஸ் மே"ஜெ உவாட்" மெக்கார்தி" ஒபிறி	னறல் சேர் 'ஹேர்கி சங் உவில் யன்" யுல்ஸ் றொபின்சன்"
இலங்கை.	1835 பாடசாலை விஷயஇஷ்டம் 1836 அக்கடேமி ஸ்தாபகம் 1837 வெள்ளப்பெருக்கு. பைத்திய வைத்தியசாலைகட்டல். 1838 கொழும்பு,காலிதபால் வண்டி. 1841 பெண் பாடசாலை, வேடுவர் பாடசாலை. 1844 வடமேல் மாகாணப் பிரிவு	1845 நிக்குவெஸ்ற் கோடு 1846 பேதிநோய் 1847 தலைவரி, முத்திரைவரி 1848 கலகம் 1850 புத்தஆலயம் புத்த தந்தம் அரசர் பொறுப்பு நீங்கல்	1855 யாழ்ப்பாணத்தில் பேதிநோய். மதுபானக்கடைகள் குறைத்தல். 1857 கொழும்பு-காலி மின்சாரக் கம்பி, நீராவி மரக்கலம் இலங்கை சுற்றல். 1863 முதற் புகையிரதம் 1864 பெல்சிய இளவரசர் இலங்கை தரிசனை.	1865 முனிசிபல் சங்கம் 1867 கொழு. கண்டி புகை ஓடல். 1869 பாடசாலை வித்தியாபகுதிப் பொறுப்பில் 1870 வைத்தியக்கல்லூரி 1871 குடிசனமதிப்பு 1872 கொழும்பில் வாயுத் தீபம். கப்பளைப் புகையிரதம். வடமத்தியமாகாணம் வகுத்தல். ரூ. ச. நா. வழங்கல்.
ஐரோப்பா.		1854—56 புரட்சிவருடம் 1848 3ம் நெப். முடிசூடல் 1852 கவூர் இத். மந்திரியாதல்	கிறிமியப்போர் 1861 இத்தாலியின் (1ம் உவி அரச 1862 ஒற்றே 1864	ஐக்கியம் ல்லியம் ஜேர்மனிய னுதல்) அரசபதவிநீக்கம் டேனிய-புறூஷியப் போர் 1866 அஸ்திரிய-புறூஷியப் போர் 1870 பிரான்சிய- புறூஷியப்போர் ஜேர்மனியின் ஒற்றுமை 1871 1873 றூஷிய பிரித்தானிய உடன்படிக்கை.
பிறதேசங்கள்	1839 நியூசிலாந்து ஆங்கிலருக்காதல். 1837 மின்சாரத் தந்தி (அமெரிக்கா) கொங்கோங் பிரித்தானியர் கைப்படல் 1842 கனடா பொறுப்பாட்சி 1840	1854 "பெறி" 1850 அவுஸ்திரேலியாவில் பொன்	யப்பானை அடைதல் லோட்கன்னிங் (இந்தியா) 1858 இங். ஆங். பேரரசாட்சி ஆபிரகாம் லிங்கன் அமெ. தலைவராதல் 1860	1867 கனடா ஐக்கிய இராச்சியம் 1868 யப்பான் புரட்சி தொடக்கம் 1869 சுயெஸ்கால்வாய் வெட்டப்படல்

கால அட்டவணை.

	1875	1885.	1895	1905
	............1879..............1883...	.................1890.................	......1996..................1903.....	......1907..................1913......
	கிறகோரி சேர் "ஜேம்ஸ் சேர் லோங்டன்"	"ஆதர் கோடன்" சேர் ஆதர் ஹவ்	லொக்" "சேர் உவெஸ்றிச்வே" சே	ர் "ஹென் சேர் "ஹென் "ரூபேட் றிபிளேக்" றிமக்சலம்" சால்மேஜ்"
இலங்கை	1815 7-ம் எற்வேட் அரசர் தரிசனை நூதனசாலை ஸ்தாபகம். 1880 மாத்தளைப் புகைரத வீதி ஆரம்பம். 1881 குடிசனமதிப்பு. 1884 முத்	1886 ஊவாமாகாணம் 1887 விக்ரோறியா இராணி யாரின் 50-ம் ஷூ யூபிலி. திரைவரி. 1889 சப்பிரம மாகாணம் 1891 குடிசன மதிப்பு 1892 தானியவரி.	1895 கலாவிர்த்திச் சங்கம் 1897 விக்ரோறியா இராணி 60-ம் வருட யூபிலி. 1900 யாழ்ப். புகை. ஆரம்பம். 1901 குடிசன மதிப்பு 1902 யாழ்ப். புகையிர தம் ஓடல்.	1907 நீர்கொழும்புப் புகையிரதம். 1910 7-ம் எட்வேட் மரணம். 1911 குடிசனமதிப்பு 1913 வெள்ளப் பெருக்கு. பூபனிக்கொள்ளைநோய். 1914 இலங்கை இந்திய புகைரதம்.
ஐரோப்பா	1878 பெர்லின் மகாநாடு	1888 1-ம் உவில்லியம் மரணம். 2-ம் உவில். அரசாட்சி. 1890 "பிஸ்மார்க்" உத்தியோக நீக்கம்.	விக்ரோறியா இராணிமரணம். 1901 1895 கம்பியில்லாத் தந்தி (ஜேர்மனி) எக்ஸ்றே (இத்தாலி) 1902 பிரித். யப்பான் உடன்படிக்கை	மகா யுத்தம் 1914
பிறதேசங்கள்	1879 சுலு யுத்தம். 1880 ஐரோப்பியரின் ஆபிரிக்க குடியேற்ற தொடக்கம்.	1885 இந்தியதேச 1894— மக்கள் மகாசபை ஸ்தாபனம். 1888 சறவாக். ஆங். உடன்படிக் கை. 1889 பிறேசில் குடியரசு. கொறியா பிரசைகள் கலகம் 1894.	5 சீன யப்பானிய யுத்தம். அவுஸ். ஐக். ராச்சியம் 1900 1903 அமெரிக்காவில் கண்டு 1896 அடோவா யுத்தம் 1899—1902 ஆங்கிலர் போவர் யுத்தம்.	1910 கொறியா யப்பானுக்காதல். ஆகாயவிமானம் பிடிக்கப்படல். 1909 தென்னாபிரிக்க ஐக்கிய இ ராச்சியம். அலென்பி எருசலேமைப்பிடித் தல் 1912—17. 1914 ஷக்கில்டன் தென் துருவத்தை அடைதல்.